கொற்றவன்குடி

உமாபதிசிவாசாரியாரின் இலக்கிய நூல்கள் - ஓர் ஆய்வு

ஆசிரியர் :

முனைவர் த. இராசவன்னியன்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

2000

ப.சு.6070

கொற்றவன்குடி

உமாபதிசிவாசாரியாரின் இலக்கிய நூல்கள்

ஓர் ஆய்வு

முனைவர் த. இராசவன்னியன்,
எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர்,
தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

2000

முதற் பதிப்பு : 2000
© அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

கொற்றவன்குடி
உமாபதி சிவாசாரியாரின் இலக்கிய நூல்கள்
ஓர் ஆய்வு

விலை ரூ.

நூல்கள் கிடைக்குமிடம் :
நூல் வெளியீட்டுத்துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.

அச்சிட்டோர் :
லெட்சுமி பிரிண்டர்ஸ்,
மயிலாடுதுறை.

பேராசிரியர் டாக்டர் **பி.வி. வைத்தியநாதன்,**
B.E., M.Tech., Ph.D. (U.K.), Dip. in French & German, M.I.S.T.E.,
துணைவேந்தர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அணிந்துரை

உலகத்தின் சுழுமுனைநாடியாகத் திகழ்வது தில்லை யம்பதி என்பர். இத்தலம் பஞ்சபூதத் தலங்களுள் ஞானா காசத் தலமாக விளங்குவது. அம்பலமென்று கூறப்பெறும் தலங்கள் ஐந்தனுள் தலைமையானது. வழிபட முத்தி தருவது. வரலாற்றுச் சிறப்புடையது. மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்புக்களையும் ஒருங்குடையது. சைவர்களால் ''கோயில்'' என்று கொண்டாடப் பெறுவது. ஆன்மநலம் வளர்த்த அருளாளர் பலர் வாழ்ந்த ஒப்புயர் வற்ற திருத்தலம். இத்தலத்தில் வாழ்ந்த தில்லைவாழ் அந்தணர்கள் தனித்தன்மை சான்றவர்கள். ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு அடியேன்'' என்று இவர்களைப் புகழ்ந்துரைப்பர் சுந்தரர். ''தில்லை மூவாயிரவர்'' என்று குறிப்பிடுவர் சேக்கிழார். மூவாயிரருள் நடராசரும் ஒருவர் என்ற கருத்து இவர்கள் பெருமையைப் புலப்படுத்தும்.

இத்தகு சிறப்பு வாய்ந்த தில்லைவாழ் அந்தணர் மரபில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் தோன்றியவர் உமாபதி சிவாசாரியார். சந்தான குரவர் நால்வரில் ஒருவர். சைவ சமயத் தத்துவங்களை விளக்கும் 14 சாத்திர நூல்களுள் ''சித்தாந்த அட்டகம்'' எனப்பெறும் எட்டு நூல்களை எழுதியவர். புராண நூல்கள், தருக்க நூல்கள், திரட்டு நூல்கள், கோவை நூல்கள் முதலியவகையில் பல்வேறு இலக்கிய நூல்கள் இயற்றியவர். குஞ்சிதாங்கிரித்தவம் முதலான வடமொழி நூல்கள் பலவும் நல்கியவர்.

இவர்தம் இலக்கிய நூல்களில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் பலவும் எளிய இனிய நடையில் இந்நூலில் தொகுத்தும் வகுத்தும் விளக்கப்பட்டுள்ளன.

தில்லையின் சிறப்புக்களையும், பெரியபுராணத்தின் பெருமைகளையும், தேவார மூவரின் நுணுக்கமான சிந்தனைகளையும் மையமாக வைத்தே உமாபதி சிவத்தின் இலக்கிய நூல்கள் எழுதப்பட்டுள்ளன என்ற கருத்து இவ்வாய்வு நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

உமாபதி சிவத்தின் இலக்கிய நூல்களுள் தலைமைச் சிறப்புடையது முதல் தலபுராண இலக்கியமான கோயிற் புராணம் ஆகும். பக்தி வைராக்கியத்திற்கும், குறிக்கோள் வைராக்கியத்திற்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்த புலிக்கால் முனிவரும், பதஞ்சலியும் முத்திபெற்ற வரலாறுகளை விரித்துரைக்கும் இந்நூலின் சிறப்பினை ஆசிரியர் பல்வேறு பகுப்புக்களில் விளக்கியுள்ளார். திருவைந்தெழுத்தின் விளக்கமாகஅமைந்த ஆனந்தக்கூத்தின் இயல்புகளை இந்நூல் எவ்வாறு விரித்துரைத்துள்ளது என்பதைத் தெளிவாகச் சித்தரித்துள்ளார். உருவம், அருவம், அருவுருவம் எனும் மூன்றும் ஒருங்கமைந்த தில்லைச் சிற்றம்பலத்தில் நிகழும் நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடு, வழிபாட்டு விதிமுறைகள், பல்வேறு விழாக்கள் குறித்த செய்திகளை இந்நூலின் வழி நின்று விரித்துரைத்துள்ளார். கோயிற்புராணம், திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம் ஆகிய மூன்று நூல்களையும் பல்வேறு பகுப்புக்களில் ஆராய்ந்துள்ள ஆய்வாளர் மூன்று வேறு கால கட்டங்களில் திருக்கோயிலில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை உமாபதி மூன்று புராணங்களாக இயற்றி வரலாற்றை அறியத் துணைசெய்துள்ளார் என நிறுவியுள்ளார் (பக். 107).

உமாபதிசிவம் சித்தாந்தச் செம்மல் என்பதால் அவர்தம் இலக்கிய நூல்களில் இடம்பெற்றுள்ள சித்தாந்தக் கருத்துக்களையும் எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வகையில், தேவாரப் பாடல்களில் எவ்வெப் பாடல்கள் சித்தாந்தக் கருத்துக்களுக்கு இலக்கியமாகத் திகழ்கின்றனவோ அவற்றைத் தொகுத்தமைத்த நூலே தேவார அருள்முறைத் திரட்டாகும் (பக். 116) என்பதை விளக்கிக்காட்டி இந்நூல்

"உமாபதிசிவத்தின் அறிவுக்கொடை" என்று மதிப்பிட்டுள்ளார். பெரியபுராணத்தின் வளர்நிலைகள் முற்றிலும் இடம்பெறும் வகையில் உமாபதி தம் புராணசாரம் என்ற நூலை அமைத்துள்ளார் என்பதைத் தக்க சான்றுகளோடு புலப்படுத்தியுள்ளார் (பக். 204). பெரியபுராணத்தின் பிழிவு இந்நூல் எனச் சொல்லலாம். உமாபதியார் அரிய சித்தாந்தக் கருத்துக்களையும் எளிய உவமைகள் மூலம் விளக்கியுள்ளார் என்பதையும், இறைத்தன்மையை வெளிப்படுத்தத் தன்மை அணியைப் பெரிதும் கையாண்டுள்ளார் என்பதையும் எடுத்துக்காட்டி இந்நூல்களின் அணிநலச் சிறப்பையும் மதிப்பிட்டுள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மரபு வழிப் புகழ்மிக்கது. புகழ் மிகுந்த இத்தமிழ்த்துறையில் பயின்று இணைப்பேராசிரியராக இப்போது பணி செய்பவர் இந்நூலின் ஆசிரியர் திரு. த. இராசவன்னியன் அவர்கள்.

பக்தியுலகிற்குப் பயன்மிக்க நூலைப் படைத்தளித்துள்ள நூலாசிரியரை உளமாரப் பாராட்டுகிறேன். அவர்தம் தமிழ்ப்பணி சிறக்க என் நல்வாழ்த்துக்கள்.

அண்ணாமலைநகர், பி.வி. வைத்தியநாதன்.

பேராசிரியர் டாக்டர் க. தியாகராசன்,
தமிழியல்துறைத் தலைவர்,
இந்திய மொழிப்புல முதன்மையர்,
ஆட்சிக்குழு உறுப்பினர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர் - 608 002.

அணிந்துரை

பெருங்கொடை வள்ளல் செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், பின்தங்கிய மக்களின் கல்விவளர்ச்சி கருதித் தோற்றுவித்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இன்று ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடி பல்லாயிரவர் கல்விபெற்றுப் பயனுறும் பெருங் கலைக் கோயிலாகத் திகழ்கிறது. இக்கலைக் கழகத்தின் தமிழியல்துறை தொடக்கக் காலத் தொன்மையும் மரபுவழிச் சிறப்பும் மிக்கது. விபுலாநந்தர், ச. சோ. பாரதியார், பண்டிதமணியார் போன்ற பெரும் பேராசிரியர்களின் அரவணைப்பில் வளர்ந்து வரும் இத்தமிழியல் துறை, மரபுவழி இலக்கிய இலக்கண நூல் ஆய்வில் இன்றுவரை தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

இந்நிலையில் உமாபதி சிவாசாரியார் இலக்கிய நூல்களை ஆராயும் போக்கில் இந்நூல் தமிழியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் த. இராசவன்னியன் அவர்களால் தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்கப் பெறுகிறது.

சைவசமய அன்பர்கள் போற்றும் ''மெய்கண்ட சாத்திரம்'' பதினான்கு நூல்களுள் ''சித்தாந்த அட்டகம்'' என்று பெயர் பெற்ற எட்டு நூல்களை இயற்றிய உமாபதி சிவாசாரியார், சந்தானாசாரியார்கள் நால்வரில் நான்காமவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பெரியவர் தில்லை வாழ் அந்தணர்களுள் ஒருவர். தமிழிலும் வட மொழியிலும் புலமைமிக்க பேரறிஞர். சித்தாந்த ஆசிரியர் என்னும் பெயரோடு இவர் மதிக்கப் பெற்றமையால் இவர் இயற்றிய இலக்கிய நூல்கள் போதிய அளவிற்கு ஆராயப் பெறவில்லை. இக்குறையை நீக்கும் நிலையில் இவ் ஆய்வு நூல், நூலாசிரியரால் செம்மையாக ஆராயப் பெற்று

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீட்டுத் துறையின் வழி வெளிவருகின்றது.

கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியாரின் கோயிற் புராணம், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் நாயனார் புராணம், திருத்தொண்டர் புராண சாரம், தேவார அருள்முறைத் திரட்டு, ஸ்ரீ சிவ க்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா, திருப்பதிக் கோவை, திருபதிகக் கோவை முதலிய எட்டு இலக்கிய நூல்கள், ஆய்வுக்கு உட்படுத்தப் பெற்றுள்ளன.

நூலாசிரியர் தம்முழுமையான ஆய்வால் இந்நூலில் உள்ளடக்கங்களைத் தெளிவு படுத்தியுள்ளார். இத்துடன் உமாபதி சிவாசாரியார் வரலாற்றினையும் அவர் தோன்றிய மரபு மற்றும் வாழ்ந்து பேறு பெற்ற முறைமைகளையும் கள ஆய்வு நிகழ்த்தி நிரல்படுத்தியுள்ளார்.

ஆய்வுக்கு உட்பட்ட நூல்கள் இலக்கிய நூல்களே எனினும் அவற்றில் அமைந்து கிடக்கும் சைவசித்தாந்தக் கருத்துக்களும், தில்லைப்பெருங் கோயிலின் எழில்மிகு சிறப்பும் நன்கு விளக்கப்பெற்றுள்ளன.

தெய்வ நலக் கூறுகளைக் காட்சிப்படுத்துவதற்கு உமாபதி சிவாசாரியார் உவமையைக் கையாண்டுள்ள திறம், இவ் ஆய்வில் வெளிப்படுத்தப் பெற்றுள்ளது. அடியார் நலம், அருள் நலம் ஆகிய நிலைக்களக் கூறுகளில் தனித் தன்மை தோன்ற உவமித்துள்ள பாங்கும் நன்கு மொழியப் பெற்றுள்ளது.

தில்லைப் பெருங்கோயில், ஆடல்வல்லானின் அருளானந்தத் திருநடனம், வியாக்ரபாதர் முதலிய நிழற் படங்களும், சந்தான சாரியார் வாழ்வியல் விளக்கம் முதலான பல பயனுள்ள பின் இணைப்புகளும் தரப் பெற்றுள்ளன.

தமிழ் அன்பர்களும் சைவசமய அன்பர்களும் இந்நூலை வாங்கிப்பயன் பெற வேண்டுகிறேன்.

க. தியாகராசன்.

நன்றியுரை

கடலூர் மாவட்டத்தில், எறும்பூர் கிராமத்தில், ஓர் எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை ஏற்றப் படுத்தியது அண்ணாமலைப் பல்கலைக்கழகமாகும். கோடி கொடுத்த கொடையரசர் அண்ணாமலையாரின் கல்விக் கொடையால் வாழ்வுபெற்ற பல்லாயிரவருள் அடியேனும் ஒருவன். கற்கவும், கற்பிக்கவும் வாய்ப்புத்தந்த அரச குடும்பத்தார்க்கும், இணைவேந்தர் மாண்பமை டாக்டர் மு.அ.மு. இராமசாமி அவர்கட்கும் என் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியது.

சந்தானாசாரியார்களில் ஒருவரான உமாபதிசிவம் அவர்களின் இலக்கிய நூல்களை என் முனைவர் பட்டத்திற்கு ஆய்வுப் பொருளாகக் கொண்டேன். 1993–ஆம் ஆண்டு ஆய்வை நிறைவு செய்தேன். அவர்தம் இலக்கிய நூல்களுள் தலைமைச் சிறப்புடைய கோயிற்புராணம் குறித்தும் ஏனைய நூல்கள் குறித்தும் இலக்கிய நோக்கிலும், சித்தாந்த நோக்கிலும் ஆய்ந்து கண்ட கருத்துக்கள் எளிய நடையில் இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளன. உமாபதிசிவத்தின் இலக்கிய நூல்கள் குறித்த முதல் முழுமையான ஆய்வாக இந்நூலே அமைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு புலப்படுத்த விரும்புகிறேன்.

இந்த நல்ல தலைப்பை ஆய்வுப் பொருளாகத் தேர்வதற்கு என்னை ஆற்றுப்படுத்தி, என் ஆய்வு வழிகாட்டியாக அமைந்து, எல்லாவகையிலும் பேருதவிகள் புரிந்த அமரர் பேராசிரியர் டாக்டர் சு. சாமிஐயா அவர்களுக்கு என் உளம் நிறைந்த நன்றி என்றும் உரியது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்பமை டாக்டர். பி.வி. வைத்தியநாதன் அவர்கள் பொறியியல் துறை அறிஞர். அறிவியலும், கலையியலும்

வளர்க்கும் ஆற்றலாளர். அவர்கள் தம் பல பணிகளுக்கு இடையே அரியதொரு அணிந்துரை வழங்கியதைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியும் வணக்கமும் உரியன.

அணிந்துரை வழங்கி அணிசேர்த்துள்ள இந்திய மொழிப்புல முதன்மையர், பேராசிரியர் டாக்டர் க. தியாகராசன் அவர்களுக்கும் என் பணிவார்ந்த நன்றி.

இந்நூல் நன்முறையில் வெளிவரத் துணைபுரிந்த வெளியீட்டுத்துறைப் பொறுப்பாளர்க்கும் என் நன்றி.

இந்நூலை வனப்புற அச்சிட்டுத்தந்த மயிலாடுதுறை லெட்சுமி அச்சகத்தார்க்கும் என் நன்றி உரியது.

30—10—2000,
அண்ணாமலைநகர்.

த. இராசவன்னியன்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகநா.	—	அகநானூறு
இரணிய.	—	இரணிய வன்மச் சருக்கம்
உ. ஆ.	—	உரை ஆசிரியர்
உண்மை.	—	உண்மை விளக்கம்
க. ஆ.	—	கட்டுரை ஆசிரியர்
கலி.	—	கலித்தொகை
காஞ்சி.	—	காஞ்சிப்புராணம்
கோயிற்.	—	கோயிற்புராணம்
சிலப்.	—	சிலப்பதிகாரம்
சிவ. சித்தி.	—	சிவஞானசித்தியார்
சிவ. போதம்	—	சிவஞானபோதம்
சிறுபா.	—	சிறுபாணாற்றுப்படை
சூ.	—	சூத்திரம்
செய்.	—	செய்யுள்
செய்யு.	—	செய்யுளியல்
சேக்கிழார். புராணம்	—	சேக்கிழார் நாயனார்புராணம்
தண்டி.	—	தண்டியலங்காரம்
திருத். அந்தாதி	—	திருத்தொண்டர் திரு அந்தாதி
திருத். சாரம்	—	திருத்தொண்டர் புராணசாரம்
திருத். தொகை	—	திருத்தொண்டத்தொகை
திருமு.	—	திருமுருகாற்றுப்படை
திருமுறை. புராணம்	—	திருமுறைகண்ட புராணம்

திருவருட்.	—	திருவருட்பயன்
திருவா.	—	திருவாசகம்
திருவிழா.	—	திருவிழாச் சருக்கம்
தேவா.	—	தேவாரம்
தொகு.	—	தொகுப்பு
தொல்.	—	தொல்காப்பியம்
நடராச.	—	நடராசச் சருக்கம்
நூ.	—	நூற்பா
ப.	—	பக்கம்
பக்.	—	பக்கங்கள்
பதஞ்ச.	—	பதஞ்சலிச் சருக்கம்
பதி.	—	பதிகம்
ப. ஆ.	—	பதிப்பு ஆசிரியர்
பரி.	—	பரிபாடல்
பா.	—	பாட்டு
புறம்.	—	புறநானூறு
பெரிய.	—	பெரியபுராணம்
வியாக்ர.	—	வியாக்ரபாதச் சருக்கம்
P.	—	Page
PP.	—	Pages

பொருளடக்கம்

		பக்கம்
	அணிந்துரைகள்	i
	நன்றியுரை	vi
	முன்னுரை	viii
	சுருக்கக் குறியீட்டு விளக்கம்	xvi
1.	உமாபதிசிவாசாரியார் வாழ்வும் வாக்கும்	1
2.	உமாபதிசிவமும் தில்லைப் பெருங்கோயிலும்	36
3.	இலக்கியங்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள்	117
4.	திருத்தொண்டர் புராணசாரம் - ஓப்பீடு	151
5.	அணிநலன்	213
	முடிவுரை	257
	பின்னிணைப்புக்கள்	263
	துணை நூற்பட்டியல்	309

முன்னுரை

தமிழில் அகநூல்கள், அறநூல்கள் போன்று சாத்திர நூல்களும் இன்றியமையா இடம் பெற்றுள்ளன. சாத்திர நூல் வரிசையில் சைவசமயத் தத்துவங்களை விளக்கும் பதினான்கு நூல்கள் ''மெய்கண்ட சாத்திரம்'' என்னும் பெயரோடு விளங்குவதைக் காணலாம். அத்தொகுதியில் ''சித்தாந்த அட்டகம்'' எனப்பெயர் பெறும் எட்டு நூல்களை உமாபதி சிவாசாரியார் இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சந்தானாசாரியார்கள் நால்வரில் நான்காமவராகிய உமாபதி சிவனார் பல இலக்கிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

தமிழ், வடமொழி ஆகிய இருமொழிப் புலமையும் பெற்ற உமாபதிசிவனார் இருமொழிகளிலுமே நூல்களை இயற்றியுள்ளார் என்பதை அவர் வரலாறு உணர்த்துகின்றது. எனினும் சித்தாந்த ஆசிரியர் என்னும் பெயரோடு மதிக்கப் பெற்றதால், இவர் இயற்றிய இலக்கிய நூல்கள் போதிய அளவிற்கு ஆராயப்பெறவில்லை என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

தலைப்புத் தேர்வு

உமாபதிசிவம் இயற்றிய இலக்கியவகை நூல்களில் கோயிற் புராணம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. இதுவே தமிழில் தோன்றிய முதல் தலபுராண இலக்கியம் என்னும் தகுதியோடு திகழ்கிறது. ''கோயில்'' என்பது தில்லையைக் குறிக்கும் சொல்லாகும். தில்லைப் புராணம் - சிதம்பரபுராணம் எனப்பெயர் பெறத் தக்கதே. ''கோயிற்புராணம்'' என்னும் பெயரோடு அவரால் இயற்றப்பட்டுள்ளது. இத்தலத்திற்கு உரியனவாகப் பின்னர் எழுந்த நூல்கள் சபாநாதர் புராணம், சிதம்பரபுராணம் என்னும் பெயர்களோடு விளங்குகின்றன. தமிழில் தலபுராணங்கள் தோன்றுவதற்கு முன்னோடியாகத் திகழ்வது கோயிற்புராணமே என்பது தமிழுலகம் அறிந்த செய்தியாகும்.

சைவத் திருமுறைகள் தொகுக்கப்பெற்ற முறை குறித்து விளக்கமாகக் கூறும் வரலாற்று நூலாக உமாபதிசிவம் இயற்றிய

திருமுறைகண்டபுராணம் விளங்குகின்றது. திருமுறைகளைத் தொகுத்தவர்-தொகுப்பித்தவர் பற்றிய செய்திகளை இந்நூல் விளக்கமாகக் கூறுகின்றது. இலக்கியம் பற்றிய வரலாறாகத் திகழ்கின்ற இந்நூல் தமிழில் அரிய படைப்பாக உள்ளது. இத்தகையதொரு நூலை இயற்றி, ஒரு காலகட்டத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியைப் பதிவுசெய்த ஆசிரியராக உமாபதிசிவனார் விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிற்காலச் சோழப் பேரரசின் அமைச்சுப் பணியில் இருந்த சேக்கிழார், தில்லைப் பெருங்கோயிலில் தங்கித் திருத்தொண்டர் புராணத்தை இயற்றி அரங்கேற்றினார் என்பது சேக்கிழார் நாயனார்புராணம் தரும் செய்தியாகும். திருத்தொண்டர் புராணம்தோன்றுவதற்குரிய சூழல், தோன்றியசூழல், அரங்கேறிய சூழல் ஆகியவற்றை விரிவாக ஆராய்ந்து உமாபதிசிவனார் இயற்றியுள்ள நூல் சேக்கிழார் புராணம் ஆகும். தனிப்பட்ட ஒரு நூலாசிரியரையும், நூலையும் பற்றி ஆராய்ந்து கூறுகின்ற முறை அரிதான ஒன்றாகும்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை பதினொரு பாடல்களைக் கொண்ட பதிகமாகும். அதன் விரிவாக நம்பியாண்டார் நம்பி எண்பத்தொன்பது விருத்தங்களைக் கொண்ட திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலை இயற்றியுள்ளார். இவ்விருநூல்களையும் அடியொற்றிச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தைக் காப்பியம் என்னும் முறையில் விளக்கமுறப் புனைந்துள்ளார். சேக்கிழாரின் பெரும்புராணத்தில் உள்ள செய்திகளின் சுருக்கமாகவும், பிழிவாகவும் திருத்தொண்டர் புராணசாரம் என்னும் சுருக்க நூலை எழுபத்தெட்டு விருத்தங்களால் உமாபதிசிவனார் இயற்றியுள்ளார். விரிந்த காப்பியத்தை அமைந்து கற்கும் வாய்ப்புப் பெறாதவர்கள் நாயனார் வரலாறுகளை அறிய இப்புராணசாரம் பயன்படுகின்றது.

சிவத்தலங்கள் பற்றியும் தலத்து இறைவன் – இறைவி திருப்பெயர்களையும் தலமுறையில் பாவடிவில் தொகுத்துக் கூறுகின்ற நூலாக உமாபதிசிவனார் இயற்றிய சிவக்ஷேத்திரத் திருநாமக் கலிவெண்பா அமைந்துள்ளது. இவ்வாறே சிவப்பதிகள் பற்றியும்

அவற்றிற்குரிய பதிகங்கள் பற்றியும் முறையே திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை என்னும் நூல்களில் உமாபதிசிவனார் அடைவு செய்து காட்டியுள்ளார். திருத்தலங்களை நாட்டமைப்பு முறையில் காவிரி வடகரை, காவிரித் தென்கரை எனப்பத்து வகையில் குறித்துள்ளபோக்கே தேவாரத் தலமுறைப் பதிப்புகள் உருவாகக் காரணமாகியுள்ளன. மேலும் திருமுறை ஆசிரியர்கள் பயணம்சென்ற வழித்தடம் பற்றிய ஆய்வு நூல்கள் தோன்றவும் இந்நூல்கள் வழிவகுத்துள்ளன.

தலபுராணத்திற்கு முன்னோடியாகவும் திருமுறைகளின் தோற்றம், தொகுப்பு, அமைப்பு பற்றிய ஆராய்ச்சிக்கு அடிப் படையாகவும் உமாபதிசிவனார் இயற்றிய இலக்கிய நூல்கள் அமைந்துள்ளன. இலக்கிய வகையில் இவை முன்னுதாரணமாகத் திகழ்வதால் இவற்றை ஆராய்வது இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கிறது. எனவே ''கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியாரின் இலக்கிய நூல்கள் - ஓர் ஆய்வு'' என்னும் தலைப்பு தேர்ந்து கொள்ளப்பெற்றுள்ளது.

ஆய்வு முன்னோடிகள்

உமாபதிசிவனாரின் ''சித்தாந்த அட்டகம்'' எனப்பெறும் சாத்திர நூல்கள் பற்றி காசிப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ந்து டி.பி. சித்தலிங்கம் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

கோயிற்புராணம், சேக்கிழார்புராணம், திருமுறைகண்ட புராணம் ஆகிய நூல்களுக்கு உரைகளும் பதிப்புகளும் வெளி வந்திருந்தாலும் இவை ஆராய்ச்சி நோக்கில் யாராலும் எடுத்துச் செய்யப்பெறவில்லை.

உமாபதிசிவனாரின் இலக்கிய நூல்களைத் தேர்ந்துகொண்டு முழுமையாக ஆராய்வது இதுவே முதல் முறையாகும். அவ் வகையில் இவ்வாய்வாளரே முன்னோடியாகத் திகழ்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆய்வு நோக்கங்கள்

சைவ சமயச் சந்தான குரவர் நால்வரில் ஒருவர் உமாபதி சிவனார். இவர் இயற்றிய நூல்களைச் சித்தாந்த நூல்கள்

என்றும், இலக்கிய நூல்கள் என்றும் பகுக்கலாம். இலக்கிய நூல்களைப் புராண நூல்கள், வழிகாட்டி நூல்கள், சுருக்க நூல்கள் என வகைப்படுத்தலாம்.

சிவசமயவல்லுநரான உமாபதிசிவனார் தில்லைத் திருக் கோயிலொடு பெரிதும் தொடர்புடையவர்; கூத்தப்பெருமானை அபிடேகம் செய்து வழிபடும் மரபு வழியினர்; பல்காலும் அக் கோயிலின் மரபறிந்து வாழ்ந்தவர் அவர் என்பதால் – அவர் வந்த மரபு காரணமாக ஆராய்ந்து காணவேண்டியது இதன் ஆய்வு நோக்கங்களில் ஒன்றாகும்.

சித்தாந்த நூல்களை இயற்றிய ஆசாரியர் ஒருவர் இயற்றிய இலக்கிய நூல்களில் இடம்பெற்றுள்ள சித்தாந்தக் கருத்துக்களை ஆராய்தல் என்பதும் இதன் மற்றொரு நோக்கமாகும்.

தில்லைக் கோயிலில் திருமூர்த்த வழிபாடு நிகழ்த்தி வந்த வராகிய உமாபதியார் தம் நூல்களில் வழிபாட்டு முறைகளைக் குறித்திருத்தல் இயற்கையாகும். பதஞ்சலி முனிவர், வியாக்ரபாதர் ஆகியோர் வழிபட்டு உய்ந்த தில்லையின் பெருமை பேசும் கோயிற்புராணம் வழிபாட்டு விதிமுறைகளைச் சுட்டிச் சென்றிருத்தல் இயலும் என்பது எதிர்நோக்குதற்கு உரியதாகும். அத்தகு நோக்கத்தோடும் ஈண்டு அவரின் இலக்கிய நூல்கள் ஆராயப்பெறுகின்றன.

சேக்கிழாரிடம் பெரிதும் ஈடுபாடு கொண்ட உமாபதிசிவனார் திருத்தொண்டர் புராணத்தோற்றம் பற்றியும் அப்புராணச்சாரம் பற்றியும் தனித்தனி நூல்களை உருவாக்கியுள்ளார். தமிழில் புராணம் என்னும் சொல்லுக்குப் பெருமை சேர்த்தவர் சேக்கிழார். அத்தகையவரின் வரலாற்றையும் படைப்புச் சாரத்தையும் பாடிய உமாபதியார், சேக்கிழாரின் இயல்புகளை எவ்வாறு நோக்கி யுள்ளார் என்று ஆராய்வது மற்றொரு நோக்கமாகும்.

சைவர்களின் கோயில் என்று குறிக்கப்பெறும் தில்லை, சைவர்களின் புராணம் என்று சுட்டப்பெறும் பெரியபுராணம், தேவார ஆசிரியர்களின் நுணுக்கமான சிந்தனைகள் – இவற்றை

மையமாக வைத்தே உமாபதிசிவனாரின் இலக்கிய நூல்கள் அமைந்துள்ளன. எனவே இந்நோக்கம் பிறழாமல் அவருடைய நூல்கள் ஆராய்வதற்கு எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன.

ஆய்வு மூலங்கள்

"கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியாரின் இலக்கிய நூல்கள் -ஓர் ஆய்வு" என்னும் தலைப்பில் மேற்கொள்ளப் பெற்றுள்ள இவ்வாய்வில் அவருடைய இலக்கிய நூல்களே முதன்மைச் சான்றாதாரங்களாக அமைந்துள்ளன. அவை : 1. கோயிற்புராணம், 2. திருமுறைகண்டபுராணம், 3. சேக்கிழார் நாயனார்புராணம், 4. திருத்தொண்டர்புராணசாரம், 5. தேவார அருள்முறைத்திரட்டு, 6. ஸ்ரீ சிவக்ஷேத்திர சிவநாமக்கலிவெண்பா, 7. திருப்பதிக்கோவை, 8. திருப்பதிகக்கோவை என்பனவாகும்.

"கோயிற்புராணம்" 1952-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகநாவலர் புத்துரையுடன் வெளிவந்துள்ளது. இந்நூல் திருவாவடுதுறை ஆதீன வெளியீடாகப் பழைய உரையுடன் 1965-ஆம் ஆண்டில் வெளிவந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

திருமுறைகண்டபுராணம், திருத்தொண்டர்புராணசாரம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை, சேக்கிழார்நாயனார் புராணம் ஆகிய ஐந்து நூல்களும் 1951 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்கள் வெளியிட்ட திருத்தொண்டர் புராணம் என்னும் நூலின் முகப்பில் முறையே வெளியிடப் பெற்றுள்ளன. பெரும்பாலும் இந்நூல்கள் பெரிய புராணப் பதிப்புகளில் முன்னிணைப்பாகவோ, பின்னிணைப்பாகவோ பதிப்பிக்கப்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயில் வெளியீடாக 1959 ஆம் ஆண்டு திருத்தொண்டர் புராணசாரம் என்னும் நூல் பொன். சுப்பிரமணியபிள்ளை உரையுடன் வெளி வந்துள்ளது.

இக்கோயில் வெளியீடாக 1968 ஆம் ஆண்டு பொன். சுப்பிரமணியபிள்ளை உரையுடன் திருமுறை கண்டபுராணம் வெளிவந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தேவார அருள்முறைத்திரட்டு என்னும் நூல் திருநெல்வேலி அருள்நந்திசிவம் அருள்பணிமன்ற வெளியீடாக 1986 ஆம் ஆண்டு கு. சுந்தரமூர்த்தியின் இயைபு விளக்கத்துடன் வெளிவந்துள்ளது.

ஸ்ரீ சிவக்ஷேத்திர சிவநாமக்கலிவெண்பா என்னும் நூலைச் சிதம்பரம் சிவராஜ தீட்சிதர் 1989 ஆம் ஆண்டு பாடற்பகுதியும் விளக்கமுமாக வெளியிட்டுள்ள நூல் ஆய்வு மூலமாக எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளது.

இவற்றோடு தொடர்புடைய கட்டுரைகள், முன்னுரைகள் போன்றவை துணைச் சான்றாதாரங்களாகக் கொள்ளப் பெற்றுள்ளன.

அணுகுமுறை

இவ்வாய்வு - உமாபதிசிவாசாரியார் வாழ்வும் வாக்கும், உமாபதிசிவமும் தில்லைப் பெருங்கோயிலும், இலக்கியங்களில் சைவசித்தாந்தக் கருத்துகள், திருத்தொண்டர்புராணசாரம் – ஒப்பீடு, அணிநலன் என்னும் முறையில் ஆய்வுக் களங்களை அமைத்துக் கொண்டுள்ளது.

உமாபதிசிவாசாரியார் வாழ்வும் வாக்கும் என்னும் தலைப்பில் பிறப்பும் இளமையும், மரபுவழித்தொண்டு, காலமும் சூழலும், புலமைத்திறம், மறைவும் மடம் அமைதலும் ஆகிய கூறுகள் வரலாற்று முறையிலும் திறனாய்வு நோக்கிலும் அணுகப் பெற்றுள்ளன.

உமாபதிசிவமும் தில்லைப்பெருங்கோயிலும் என்னும் தலைப்பு பேறுபெற்ற மூவர், ஆடல்வல்லானின் நாள் வழிபாடும் சிறப்பு வழிபாடும், திருமுறைக் கருவூலம், அருண்மொழித் தேவரின் அருட்பணி ஆகிய களங்களில் வரலாற்று முறையிலும் விளக்க முறைத் திறனாய்வு நிலையிலும் ஆராயப்பெற்றுள்ளது.

இலக்கியங்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் என்னும் தலைப்பில் கோயிற்புராணத்தில் சித்தாந்தக் கருத்துக்கள், பிற இலக்கியங்களில் சித்தாந்தக் கருத்துகள் ஆகியன விளக்கமுறைத் திறனாய்வு அடிப்படையில் ஆய்வுசெய்யப் பெற்றுள்ளன.

திருத்தொண்டர்புராண சாரம் - ஒப்பீடு என்னும் பிரிவு பெயர்நிலையில் அறிந்த அடியார்கள், பெயரும் ஊரும் தெரிந்த அடியார்கள், தொண்டும் விளங்கத் தோன்றும் அடியார்கள், குலப்பெயர் அமைந்த அடியார்கள், பேறுபெற்ற ஊருடன் பெயர் சுட்டப்பெற்ற அடியார்கள், பெயரும் ஊரும் குலமும் கொண்ட அடியார் என்னும் பகுப்புமுறையில் வரலாற்று அணுகுமுறை மற்றும் ஒப்பீட்டு அணுகுமுறை அமைய ஆராயப்பட்டுள்ளது.

அணிநலன் என்னும் பிரிவில் தன்மை, உவமை போன்ற அணிகளின் விளக்கங்கள் அடியார்நலம், அருள் நலம், நூல் நலம், சித்தாந்தம், இயற்கை இறந்த பாங்கு ஆகிய நிலைக்களங்கள் விளக்கமுறைத் திறனாய்வு, பாராட்டு முறைத் திறனாய்வு அமைய அணுகப்பெற்றுள்ளன. பிற அணிகளும் மரபுவழி நிலையில் ஆராயப்பெற்றுள்ளன.

ஆய்வேட்டின் அமைப்பு

"கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியாரின் இலக்கிய நூல்கள் ஓர் ஆய்வு" என்னும் இவ்வாய்வேட்டில் பின்வரும் தலைப்புகளில் ஆய்வு மேற்கொள்ளப்பெற்றுள்ளது.

முன்னுரை

1. உமாபதிசிவாசாரியார் வாழ்வும் வாக்கும்
2. உமாபதிசிவமும் தில்லைப்பெருங்கோயிலும்
3. இலக்கியங்களில் சைவசித்தாந்தக் கருத்துகள்
4. திருத்தொண்டர் புராணசாரம் - ஒப்பீடு
5. அணிநலன்

முடிவுரை.

பிற செய்திகள்

உமாபதிசிவனாரின் வரலாற்றையும் அவர் தோன்றிய மரபு நிலைகளையும் அவர் வாழ்ந்து பேறுபெற்ற முறைமைகளையும் ஆராய்வதற்காகத் தில்லைவாழ் அந்தணரிடமும் சைவப் பெரியோர் பிறரிடமும் ஆய்வாளர் கள ஆய்வை மேற்கொண்டு நேர்காணல் செய்துள்ளார்.

உமாபதிசிவனாரின் திருவுருவம், தில்லைத் திருக்கோயில் அமைப்பு, தில்லைத் தீர்த்தங்கள், கொற்றவன்குடி திருமடத் தோற்றம் ஆகியவை விளக்கம் கருதி நிழற்படங்களாக இணைக்கப் பெற்றுள்ளன.

இணைப்புக்கள் - விளக்கம்

சந்தானாசாரியர் நால்வர் தோன்றிய திருத்தலம் முதலான வாழ்வியல் விளக்கம் அட்டவணையாகத் தரப்பெற்றுள்ளது.

மெய்கண்ட சாத்திர நூல்கள் பதினான்கும் தோன்றிய காலமுறையில் பாடல் தொகையும் பாவகையும் அட்டவணை யிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

உமாபதிசிவனாரின் படைப்புகள் இலக்கியம், சாத்திரம், வடமொழி என்னும் பொருள் முறையில் பாவடிவம், பாடல் தொகை அமைய அட்டவணை செய்யப்பெற்றுள்ளன.

சைவமெய்த்திருத்தொண்டர்கள் பற்றித் திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம், திருத்தொண்டர் புராண சாரம் ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள சான்றுகள் பாடல் எண் முறையிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

தேவார அருள்முறைத் திரட்டில் இடம்பெற்றுள்ள தேவார மூவர் பாடல்களின் அகரநிரல் பட்டியல் தேவாரப்பதிகப்பாடல் எண்களோடு திருவருட்பயன் தலைப்பும் அமைய அட்டவணை யிடப்பட்டுள்ளது.

உமாபதிசிவனார் தரும் திருப்பதிகளின் பெயர்களும் திருநாமப்பெயர்களும் மூவர் தேவாரத் திருப்பதிகங்களின் தொகைகளும் தலமுறையில் பட்டியலிடப்பெற்றுள்ளன. உமாபதியார் குறித்துள்ள பதிகத் தொகை மாறுபடும் பதிகள் பற்றிய குறிப்பும் இதில் சுட்டப்பெற்றுள்ளது.

துணைநூற்பட்டியலும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

———

உமாபதி சிவாசாரியார் வாழ்வும் வாக்கும்

ஒருவரின் நூலை ஆராய்வதற்குமுன் அவர்தம் வரலாற்றை ஆராய்வது ஆய்விற்குப் பெரிதும் துணை செய்வதாகும். உமாபதி சிவாசாரியாரின் நூல்களை ஆராய்வதற்குத் துணை செய்யும் வகையில் அவருடைய வரலாறு ஈண்டு ஆராயப்படுகிறது. அதனைப் பிறப்பும் இளமையும், மரபுவழித்தொண்டு, காலமும் சூழலும், புலமைத்திறம், மறைவும் மடம் அமைதலும் எனப் பகுத்துக் காணலாம்.

1. பிறப்பும் இளமையும்

தில்லைப் பதியில் தில்லைவாழ் அந்தணர் மரபில் தோன்றியவர் உமாபதி சிவாசாரியார். இவருடைய தந்தையார் சம்புதீட்சதர் என அழைக்கப்படும் நடராச தீட்சதர். இவருடைய அன்னையார் கௌரி அம்மையார் என்பவர். இவர் தோன்றிய கோத்திரத்தைச் சீவத்சம் என்பர். தில்லைவாழ் அந்தணர்கள் நான்கு பெரியவர்களின் வழிவந்தவர்களாகவும் அப்பெரியவர்களுடைய மரபையே கோத்திரம் என்னும் பெயரால் குறிப்பிடுவதும் வழக்கமாக உள்ளது. அந்நான்கு மரபுகளாவன : கௌடிண்யம், ரவுட்சாயணம், விசுவாமித்திரம், சீவத்சம் என்பவை ஆகும். இந்நான்குவகை வழியினரே தில்லைவாழ் அந்தணர்கள். இவர்களுள் ஒருவகையான கோத்திரத்தினர் சீவத்சம் கோத்திரத்தினர் என்பர்.[1]

பிள்ளைத்திருநாமமாக இட்ட உமாபதிசிவன் என்னும் பெயரே இவருக்கு எப்பொழுதும் நிலைபெறுவதாயிற்று. இவருக்கு உமாபதிசிவன் என்று பெயரிடுவதற்குக் காரணம் ஒன்று உள்ளது என்று குறிப்பிடுவர். இவர் பிறந்த காலத்தில் இவரிடம் சிவப்பேரொளி மிகுந்திருந்த காரணத்தால் இப்பெயரிடப் பட்டதாகக் குறிப்பிடுகின்றனர்.[2] இளமைக் காலத்தில் ஒரு சராசரிக் குழந்தையாகவே உமாபதிசிவனார் விளங்கி வந்துள்ளார். தில்லைவாழ் அந்தணர்கள் மரபுப்படி உபநயனம் முதலிய இளமைக்காலச் சடங்குகள் முறைப்படி செய்விக்கப் பெற்றன.

வடமொழியிலும், தென் மொழியிலும் கல்விப் பயிற்சி செய்விக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இருக்கு முதலிய நான்கு வேதங்களையும் இவர் பயின்றுள்ளார் என்னும் செய்தி கருத்தில் கொள்ளத்தக்கதாகும். சக்தி வழிபாடுகளுள் முதன்மையானதும் குறிப்பிடத்தக்கதுமானதொன்று 'சீவித்திய' மூலமந்திரமாகும். இவ்வகை மந்திரத்தைக் குரு வாயிலாகப் பெறுவதே முறையாகும். அம்முறைப்படி இவ்வகை மந்திரத்தை மந்திரமூர்த்தி தீட்சதர் என்பவரிடம் உமாபதிசிவனார் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மந்திரம் பலகால் ஓதி உருவேற்றத்தக்கதாகும். அதனை உருவேற்றுகின்ற முறையைச் ''சீவித்தியாய பயங்ஞும்'' எனக் குறிப்பிடுவர். அவ்வாறு உருவேற்றி அன்னை சிவகாமசுந்தரியின் அருளைப் பெற்றார் என்னும் குறிப்புக் காணப்படுகிறது.[3]

யோகத்தைச் செய்பவர்கள் அணிமா முதலிய எட்டுச் சித்திகளை அடைவர் என்கின்ற குறிப்பினைத் திருமந்திரம குறிப்பிடுகின்றது.[4] சீவித்திய மூலமந்திரத்தை இலட்சக்கணக்கில் உருவேற்றினால் அணிமா முதலிய சித்திகளைப் பெறலாம் என்கின்ற குறிப்பும் காணப்படுகின்றது. அவ்வகையில் எட்டு வகைச் சித்திகளையும் உமாபதிசிவனார் பெற்றார் என்கின்ற குறிப்பு மனங்கொள்ளத்தக்கதாகும்.[5] சுவேதாச்சாரியர் என்னும் ஞானாசாரியாரின் அருளாசியும், ஒரு படிகலிங்கமும் இவருக்குக் கிடைத்தன. பிற்காலத்தே இவர்பெற்ற ஆன்ம அனுபூதிகளுக்கு இவை கால்கோளாயின. 'சிதம்பர மேரு மந்திரம்', 'வாஞ்சா கல்பலதா', 'கணபதி மந்திரம்' ஆகியவையும் இக்கால எல்லையில் இவருக்கு ஆசிரியர்கள் வாயிலாகக் கிடைத்தன என்பர்.[6]

தில்லைவாழ் அந்தணர்கள் திருமணம் செய்து கொண்ட பின்னர்தான், தில்லையம்பலவாணரை வழிபாடு செய்வதற்குரிய உரிமை பெறுவர் என்பது வழிவழி வழக்கமாகும். அதனால் இளமைமணம் என்பது அவர்கள் பின்பற்றும் திருமண முறை யாகும். இந்தச் சமுதாயத்தில் குழந்தைத் திருமணங்கள், குறிப்பாகப் பன்னிரண்டு வயதிற்குக் குறைவான சிறுவர்களுக்கும் ஏழு வயதிற்குக் குறைவான சிறுமியர்களுக்குமிடையே நடை பெறுவது என்பது மிகச் சாதாரணமாகக் காணப்படுகின்றன.

இந்த வழக்கமானது வழிவழியாக நடந்திருக்கிறதென்பதை 1909 ஆம் ஆண்டு தஸ்டன் என்பார் தந்துள்ள குறிப்பிலிருந்தும் புலனாகிறது.[7] அவ்வகையில் உரிய காலத்தில் பார்வதி என்னும் பெயரிய கன்னிகையை உமாபதிசிவனார் திருமணம் செய்து கொண்டார். 'அக்கினி கோத்திரம்' செய்தல் முதலிய இல்லற நெறிகளைப் பின்பற்றுகின்ற நடைமுறைகளை ஒழுங்குபடச் செய்து வந்தார். இல்லறவாழ்வில் பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் பேறு இவருக்குக் கிட்டியிருந்தது எனக் குறிப்பிடுகின்றனர்.[8] பிள்ளைகள் எத்துணையினரென்றோ, இன்னின்னாரென்றோ குறிப்பிடப்படவில்லை. சைவசமய சந்தானாசாரியார் புராணச் சருக்கம் என்னும் நூலில் காணப்படுகின்ற பிள்ளைப்பேற்றுச் செய்தி வேறு எந்த நூலிலும் காணப்படாமை கருத்தில் கொள்ளத் தக்கது. ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் இவர் இல்லற வாழ்வை நீத்துத் துறவறத்தை மேற்கொண்டமையால், இல்லறத் தொடர்பு விடுபட்டுப்போன நிலையில் இவர்தம் பிள்ளைகள் பற்றிய குறிப்பு நூல்களில் இடம்பெறாமல் போயிருக்கக்கூடும். தில்லையம்பதியை விட்டுக் கொற்றவன் குடிக்கு வந்ததும், இவருடைய பிள்ளைகள் பற்றிய செய்தி இவர் வரலாற்றில் இடம் பெறாமல் போனமைக்குக் காரணமாகவும் இருக்கலாம்.

சிதம்பரத்தில் தெற்குவீதிக்கு இணையாகக் கிழக்குப் பக்கத்தில் ஒரு வீதி அமைந்துள்ளது. அதனை மாலைக்கட்டித்தெரு என்று குறிப்பிடுவர். அத்தெருவில் மூன்றாம் எண்ணுள்ள கட்டிடம் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு சொந்தமானது. இக்கட்டிடத்தை உமாபதிசிவனார் வாழ்ந்த இடமாகக் கருதுகின்றனர்.[9] இக் கட்டிடத்தின் அருகே உள்முகமாக மெய்கண்டார் கோயில் ஒன்று அமைந்துள்ளது. உமாபதிசிவனார் அங்கு வாழ்ந்த காலத்தில் தம் ஆசிரியரை வழிபடுமிடமாக அக்கோயிலை அமைத்திருக்கக் கூடும் எனக் கருதலாம். உமாபதிசிவனாரின் ஞானமரபினர் திருவாவடுதுறை ஆதீனத்தவராக அமைந்தமையால், அவர் வாழ்ந்த இல்லம் ஒரு நினைவாலயமாக அவர்களால் போற்றப் பட்டிருக்கலாம் எனக்கருதுவதற்கு இடமிருக்கிறது.

2. மரபுவழித் தொண்டு

தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரவர் எனக் குறிப்பிடப்படு கின்றனர். "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"[10]

என்று சுந்தரரால் குறிப்பிடப்படுவதால் இவர்கள் சமுதாயத்தால் நன்கு மதிக்கப் பெற்றிருந்தமையை அறியலாம். தில்லைக் கூத்தனை வழிபாடு செய்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டமையால் இவர்கள் போற்றப்பெற்றனர். சோழ மன்னர்கள் இவர்கள் எடுத்துக் கொடுக்கும் அரச மணிமுடியையே சூட்டிக்கொள்ளும் வழக்கத்தைப் பின்பற்றி வந்தனர். தீட்சதர்கள் என அழைக்கப்படும் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒரு குழுவினரை ''பொதுவார்'' எனக் குறித்தனர். அதற்குச் சில விதி முறைகள் உள்ளன. தில்லைவாழ் அந்தணர்களாக உள்ள திருமணமான அனைவரும் பொதுக்குழு உறுப்பினராவர். மனைவியை இழந்தவர்கள் இதற்கு விதிவிலக்கானவர். குல அடிப் படையில் அமைந்த இவ்வமைப்புக்குப் ''பொது தீட்சதர்கள்'' என்பது பெயர். ''பொது'' என்றும் இப்பொதுவார் அழைக்கப் படுவர். இவர்களே கோயில் நிர்வாகத்தைக் கவனித்து வருவர். பொதுக்குழுஉறுப்பினர்கள் பட்டியல் அவ்வப்பொழுதுபுதுப்பிக்கப் பட்டு வரும். புதிதாகத் திருமணமானவர்கள் பெயர்கள் சேர்க்கப் பெறும்; இறந்தவர்கள், மனைவியை இழந்தவர்கள் பெயர்கள் இப்பட்டியலில் நீக்கப்பெறும். பொதுக்குழுப் பட்டியலில் உள்ள முதல் ஒன்பது பேர்கள் நிர்வாகக்குழு உறுப்பினர் ஆவர். அவர்களுள் ஒருவர் செயலராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். அவர் ஓராண்டுக் காலம் செயலராகச் செயல்படுவார். அடுத்த ஆண்டு அடுத்த ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்களாவர். இவ்வாறு ஒவ்வோர் ஆண்டும் பட்டியலில் உள்ளோர் இறுதிவரை கொண்டு செலுத்தப்படுவார் இந்தவகை அமைப்பில் பொருளாளர் இருபது நாட்களுக்கு ஒருமுறை மாற்றப்படுவர்; நிர்வாகச் சீர்கேட்டைத் தவிர்ப்பதற்கு இது வாய்ப்பாகும். கோவில் வளாகத்தில் நடை பெறவுள்ள கூட்டங்களை ஒரு பொது மனிதர் எல்லா உறுப்பினர் களுக்கும் வாய்மொழியாக அறிவித்து வருவார். கோயிலைப் பற்றிய செய்திகள் முடிவெடுக்குங்கால் குரல்வழி வாக்கெடுப்பு வாயிலாக அறிந்து முடிவெடுப்பர். உறுப்பினர் ஒவ்வொருவரும் தீர்மானங்களைக் கொண்டு வருவதற்கு உரிமை உடையவர். இதுபற்றிய விரிவான விதிமுறைகள், திறமையான நிர்வாகம் அமைவதற்கு கி.பி. 1849-க்கு முன்னரேயே இயற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.[11] பொதுவார்கள் கோயில்

நிர்வாகத்தைச் செம்மையாகச் செய்யும் கடமை உடையவர் களாகக் கருதப்பட்டனர். ஒவ்வொரு நாளும் நாள் வழிபாட்டைச் செய்வதற்கு அம்மரபினருள் ஒருவரைத் தேர்ந்தெடுப்பர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவோர் இரண்டு வகையான தகுதி களைப் பெற்றிருத்தல் வேண்டும். ஒன்று அவர் திருமண மானவராக இருத்தல் வேண்டும். மற்றொன்று வழிபாட்டு நெறியை அறியக்கூடிய ஆச்சாரிய அபிடேகம் பெற்றிருத்தல் வேண்டும்.[12]

திருமணமான ஒவ்வோர் ஆணும் கோயில் கட்டுபாட்டிற்கும் நிர்வாகத்திற்கும் உரியவராவர்; இத்தகைய உரிமை பிறப்பால் அவர்களுக்குக் கிடைப்பதாகும். இஃது ஒருவருக்குப்பின் ஒருவர் என்றில்லாமல் அக்குலத்தில் பிறந்த அனைவரும் பெறும் உரிமை யாகும். அவர்கள் இறக்கும் தறுவாய்வரை அவ்வுரிமை உண்டு. ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் தந்தை–மகன் இருவரும் ஒத்த உரிமையோடு நிர்வாகத்தில் பங்கு கொள்வர். திருமணமான ஒவ்வொரு தீட்சதரும் முதன்மை வழிபாட்டிற்கு உரிமை உடையவர்கள் என்று கொள்ளமுடியாது. தீட்சை என்னும் ஒரு வகையான சடங்கைச் செய்து கொண்ட பின்னரே அத்தகைய முதன்மை வழிபாட்டிற்கு உரியவராக ஆவர்.[13]

உமாபதிசிவனார் நாள் வழிபாட்டைச் செம்மையுறச் செய்யும் ஒருவராகப் பலமுறை தேர்ந்து கொள்ளப்பெற்றிருக்கிறார் என்பதிலிருந்து வழிபாட்டைச் செய்வதற்குரிய தகுதிகள் இரண்டையும் பெற்றிருந்தார் என அறியலாம். சிவகாமசுந்தரி உடனாய ஆனந்தநடராசப் பெருமானை முறைப்படி நாள் வழிபாடு செய்வதோடு, அவர் சிறப்பு வழிபாட்டுக் காலங்களிலும் முதன்மையாக இருந்து விழாக்களைச் சிறப்புற எடுத்துள்ளார். அதனால் பலராலும் போற்றப்பெற்ற ஒருவராக விளங்கியுள்ளார் எனலாம். இவர் தம்முடைய இருபத்தாறாம் ஆண்டில் ''மகா விருதம்'' என்னும் வேள்வி ஒன்றினை இயற்றினார். அவ் வேள்விக்கு முதன்மை ஆசிரியராக இருந்து ஆகுதிகளைத் தீயில் கொடுத்து வந்தார். அவ்வாறு கொடுக்கப்படுகின்ற அவிர் பாகத்தின் சிறப்பு நிலையை இந்திரன் நேரில் தோன்றித் தம் கையில் கொடுக்குமாறு கேட்டான். அதற்கு உமாபதிசிவனார்

அக்கினியில் கொடுக்குமாறுதான் வேதவிதிகள் கூறுகின்றனவே தவிர, கையில் கொடுக்குமாறு கூறப்படவில்லை என மறுத்து மொழிந்தார். அதனால் மகிழ்ந்த இந்திரன், அவரைப் பாராட்டி அன்றுடன் முடிவதாக இருந்த அவரது ஆயுளை மேலும் ஐம்பது ஆண்டுகள் நீட்டிக்க வரமளித்தான் என ஒரு செவிவழிச் செய்தி வழங்குகின்றது என்பர்.[14] சற்று மிகையாகக் கூறப்பட்டுள்ள இச்செய்தியால் ஒரு கருத்துப் பெறப்படுகின்றது. உமாபதிசிவனார் வேதவிதிகளை முறைப்படி பின்பற்றுவதில் கருத்து உடையவராக இருந்தார். அன்றியும் தமக்கு மேற்பட்ட ஒருவராக இருப்பினும் தாம் கற்றறிந்த விதிகளுக்கு முரணாக ஒன்றைக் கூறினால் மறுத்து மொழியும் இயல்பும் அவரிடம் இருந்ததாகக் கருதலாம். இச்செய்தியால் அவருடைய வயது எழுபத்தாறு ஆக இருந்திருக்கலாமெனக் கருதுவதற்கு வாய்ப்பு உள்ளது.

உமாபதிசிவனார் தம் துறவு நிலைக்கு முந்தைய நிலையில் கோயில் வழிபாடுகளில் ஈடுபாட்டுடன் பெரும்பங்கு கொண்டுள்ளார் என்பது கருதுதற்குரியதாகும். நாள் வழி பாட்டைச் செய்வதில் அவர் ஆர்வமுடன் ஈடுபட்டு வந்துள்ளார். மார்கழி, ஆனி ஆகிய மாதங்களில், நடைபெறும் சிறப்பு வழி பாடுகளில் முதன்மை ஏற்றுப் பணிபுரிந்து வந்துள்ளார். வேதத்தில் கூறப்பட்ட வேள்விகள் பலவற்றையும் விதிப்படிச் செய்யும் வழக்கமுடையவராகவும் இருந்துள்ளார்.[15]

3. காலமும் சூழலும்

உமாபதிசிவனார் சந்தானக் குரவர்களில் நான்காமவர், இவருக்குமுன் மெய்கண்டார், அருள்நந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர் என மூன்று பேர் சந்தான குரவர்களாகப் போற்றப்பட்டுள்ளனர். சந்தான குரவர் உமாபதிசிவனார் இயற்றிய சித்தாந்த நூல்களில் ஒன்று சங்கற்ப நிராகரணம். இந்நூலில் இவர் வாழ்ந்த காலத்தை அறிவதற்குக் குறிப்பு ஒன்று காணப்படுகின்றது.[16] அக்குறிப்பின் படி, சாலிவாகன சகம் 1235-இல் அந்நூல் செய்யப்பட்டதாகக் காணப்படுகின்ற குறிப்பு கி.பி. 1313-உடன் ஒத்ததாகும். இவருடைய காலம் பற்றிக் குறிப்பிடுகின்ற நூலாசிரியர்கள் பலரும் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு

என்றே குறித்துள்ளனர்.[17] வெள்ளைவாரணனார் சங்கற்ப நிராகரணக் குறிப்பையே வைத்து உமாபதிசிவனாரின் காலத்தை அறுதியிட்டுள்ளார்.[16] உமாபதிசிவனாரின் காலம் கி.பி. 1260 முதல் கி.பி. 1325 முடியவுள்ள காலமெனக் குறிப்பிட்டுக் காட்டுவர்.[19] இவர் பிறந்த ஆண்டு பற்றிய குறிப்பு எங்கும் கிடைக்கவில்லை. பொதுவாக, சந்தானக் குரவர்கள் காலத்தை 13, 14-ஆம் நூற்றாண்டு எனக் குறிப்பிடுவர்.[20] அபிதான சிந்தாமணி என்னும் நூலில் உமாபதிசிவனாரைக் குறிப்பிடுகின்ற அதன் ஆசிரியர் சாலிவாகனசகம் 1228 எனக் குறித்துள்ளார்.[21] அவர் குறிப்பின்படி கி.பி. 1306-இல் உமாபதிசிவனார் வாழ்ந்த வராகக் கருதப்படுகின்றார். இவர் தோன்றிய காலம், மறைந்த காலம் ஆகிய இரண்டின் எல்லை அபிதானசிந்தாமணியில் குறிக்கப் படவில்லை என்பது கருத்தில் கொள்ளத் தக்கது. அவர் ''மகாவிருதம்'' என்னும் வேள்வியைச் செய்த ஆண்டு அவரது 26-ஆம் ஆண்டாகும்; வேள்வித்தலைவனாகிய இந்திரன் அவருக்கு 50 ஆண்டுகள் நீட்டித்துக் கொடுத்ததாக ஒரு செவிவழிச் செய்தி முன்பு ஆராயப்பட்டது. உமாபதிசிவனாரின் காலம் கி.பி. 1328 என சோமசுந்தர தேசிகர் குறித்துள்ளார்.[22] சங்கற்ப நிராகரணம் இயற்றப்பெற்ற காலம் கி.பி. 1313 என்பது அந்நூலிற் காணப் படும் செய்தியாகும். சித்தாந்த நூல்களில் எட்டு நூல்களை இவ்வாசிரியர் இயற்றியுள்ளார். அவற்றுள் எட்டாவது நூலாகக் கருதப்படுவது சங்கற்ப நிராகரணம். உமாபதிசிவனாரின் இறுதிக் காலமாக கி.பி. 1325–ஐயும்,[23] கி.பி. 1328–ஐயும்[24] வரலாற்றாய்வில் குறித்துள்ளனர். இக்குறிப்புக்களில் சங்கற்ப நிராகரணம் இயற்றிய காலத்திற்குப் பின்னரும் சில ஆண்டுகள் உமாபதி சிவனார் வாழ்ந்துள்ளார் என்னும் குறிப்புப் புலப்படுகின்றது. ஆண்டுகள் வேறுபாடு இருந்தாலும், நூற்றாண்டில் வேறுபாடு காணப்பெறவில்லை. சங்கற்ப நிராகரணம் செய்த காலமும் கி.பி. 1313 என்பது உறுதியாகக் கொள்ள முடிகிறது. கி.பி. 1313-க்கு முன்னரும் பின்னரும் உமாபதிசிவனார் வாழ்ந்த கால எல்லை அமைந்துள்ளது என்றாலும் அறுதியிட்டுக் கூறத்தக்க வகையில் இல்லையென்பது மனங்கொள்ளத்தக்கது. கி.பி. 1320 முதல் கி.பி. 1328 க்கு இடைப்பட்ட காலத்தில் இவர் இயற்கை யெய்தி இருக்க வேண்டும் எனக்கருத இடமுள்ளது. சித்தாந்த

சாத்திரங்கள் பதினான்கு நூல்கட்கும் காலத்தை அறுதியிட்டுக் கூறுகின்ற மு. அருணாசலம், சிவப்பிரகாசம் முதலிய உமாபதி சிவனாரின் நூல்கள் இயற்றப்பெற்ற காலமாக கி.பி. 1306 முதல் கி.பி. 1313 வரை எனவும், கி.பி. 1300 முதல் கி.பி. 1325 வரை எனவும் கொள்ளலாம் என்பர்.[25] உமாபதிசிவனார் இயற்றிய நூல்களின் எண்ணிக்கையை வைத்து அவருடைய வயதை நினைக்குங்கால் நீண்டநாள் வாழ்ந்திருக்க வேண்டும் என்னும் உண்மை புலனாகிறது.

கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டு மன்னர்கள் ஒடுக்கம் பெற்றிருந்த காலமாகக் கருதலாம். விசயநகர மன்னர்கள் தமிழ்நாட்டில் பல இடங்களை ஆட்சி செய்தனர். சோழநாட்டில் மகாராட்டிர மரபினர் ஆட்சி செலுத்தத் தொடங்கிவிட்டனர். மற்றோர் பக்கம் முகமதியர்கள் செல்வாக்குப்பெறத் தொடங்கி இருந்தனர்.[26] தமிழ் மரபுகளும், சமய மரபுகளும் பிறழத்தொடங்கியுள்ள கால கட்டமாக இக்கால எல்லை அமைந்து இருந்தது எனலாம். மேலும் பலசமய வாதங்களும், தத்துவ வாதங்களும் பெரிதும் மேலோங்கி மக்கள் தமக்கு உறுதிபயப்பன இவையெனத் துணிய இயலாத காலமாக இருந்தது.

திருமந்திரம் போன்ற ஆகமநூல்களிலும், சமயகுரவர்கள் இயற்றிய தேவார, திருவாசகங்களிலும் காணப்பட்ட கருத்துக்களைத் திரட்டி யெடுத்துச் சாத்திர நூல்களாகச் சந்தான குரவர்கள் இயற்றினர். சந்தான குரவர்கள் காலத்துக்கு முன்னதாகத் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் என்பவரும், திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார் என்பவரும் தாம் கண்டறிந்த மெய்ப்பொருள்களைத் தொகுத்து உரைத்தனர். அவர்கள் செய்த நூல்கள் முறையே திருவுந்தியார் என்றும், திருக்களிற்றுப்படியார் என்றும் போற்றி உரைக்கப்பெற்றன. இவர்களை அடியொற்றியே பின்னர் எழுந்த பன்னிரண்டு சித்தாந்த நூல்களும் தோன்றியுள்ளன.[27] எனினும் எல்லா வகையிலும் செம்மைப்படுத்தப்பட்ட சிவஞானபோதமே முதல் நூல் என்று கூறும் வழக்கு உள்ளது.

சிவஞானபோதத்தையும், சிவஞானசித்தியாரையும் அடியொற்றி எழுந்த நூல் சிவப்பிரகாசமாகும். சிவப்பிரகாசம் உமாபதிசிவனார் இயற்றிய சாத்திர நூல்களில் முதன்மையானது என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. மரபு மாற்றங்களும், சமயத் தடுமாற்றங்களும் நேர இருந்த தருவாயில் பதினான்கு சாத்திர நூல்களை இயற்றி மரபை நிலைநிறுத்த சந்தான குரவர்கள் முயற்சி செய்துள்ளனர் என்பது உளங்கொள்ளத்தக்கதாகும்.

வழிபாடு செய்வோர்

தமிழகத்தில் வழிபாடு இயற்றுவோர் சிவாசாரியார் என்று கூறப்பெறும் ஆதிசைவர்கள் ஆவர். பெரும்பாலான கோயில்களில் ஆதிசைவர்களே வழிபாடு செய்கின்றாரெனினும் தில்லை, திருப்பெருந்துறை, திருச்செந்தூர், தஞ்சை, பழநி போன்ற கோயில்களில் வழிபாடு செய்வோர் சிலவேறுபாடுகளை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். தில்லைவாழ் அந்தணரென்றும், முப்போதும் திருமேனி தீண்டுவாரென்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வேறுபடுத்திக் கூறுவதாலும் இதனை உணரலாம்[28] தில்லைவாழ் அந்தணர்கள் ஒருவகைத்தனி மரபினர் என்று கோயிற்புராணம் குறிப்பிடுவது அறியத்தக்கது.[29] தில்லை அம்பலவாணரை நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடுகளால் போற்றுகின்ற மரபில் வந்த உமாபதிசிவனார் தம்மரபுக்கு ஏற்ற தொண்டுகளைத் தவறாது செய்து வந்தார். அந்நாட்களில் தில்லைப் பெருமானைப் பூசனை செய்வதற்குரிய பூசகர்கள் பல்லக்கில் செல்வது வழக்கம். அவ்வழக்கப்படி, தீவட்டி ஏந்திக் கொண்டு பணியாள் முன்னே செல்லப் பின்னே பல்லக்கில் உச்சிக்கால வழிபாட்டை முடித்துக்கொண்டு உமாபதிசிவனார் சென்றார். செல்கின்றவர் யாரென ஐயுற்றுநின்ற ஒருவருக்கு விளக்குமுகமாக மறைஞானசம்பந்தர் என்னும் முனிவர் ''பட்ட கட்டையில் பகற்குருடு ஏகுதல் பாரீர்''[30] என்று கூறினார். பல்லக்கைப் பட்ட கட்டை என்றும், பகலிலேயே தீவட்டியை ஏற்றிக்கொண்டு சென்றமையால் பகற்குருட்டின் பயணம் என்றும் குறிப்பிட்டார். உமாபதிசிவனார் காதில் மறைஞானசம்பந்தரின் கூற்று விழுந்தது. நடராசப்பெருமானை வழிபாடு செய்வதற்குச் செல்லும்போது பல்லக்கில் செல்லுவதைத் தவறாகும் என்று

சுட்டிக்காட்டிய மறைஞான சம்பந்தரை உள்ளத்துள் பாராட்டினார். அவர் இருந்த திசைநோக்கி இரங்கிச் சென்று அவரைக்கண்டு மகிழ்ந்ததோடு அவரைத்தன் ஞானாசிரியராக ஏற்றுக்கொண்டார். மெய்கண்டார், அருள்நந்தி சிவாசாரியார் ஆகிய இருவர்தம் மரபில் வந்த மூன்றாம் சந்தானகுரவர் மறைஞானசம்பந்தர் என்பது குறிப்பிடத்தக்கது. சிவஞான போதம், சிவஞானசித்தியார் முதலிய மெய்ம்மை நூல்களை மறைஞானசம்பந்தர் முறைப்படி உமாபதி சிவனாருக்குக் கற்பித்தார். உமாபதிசிவனாரின் பக்குவத்தை அறிவதற்காகச் சேணியர் ஒருவர் வைத்திருந்த பாவிற்கு வார்க்கும் கஞ்சியை மறைஞானசம்பந்தர் தாம் கையில் ஏந்திக் குடித்ததாகவும், அவர் முழங்கையில் வழிந்து வந்த கஞ்சியை உமாபதிசிவனார் ஏற்றுக் பருகியதாகவும் பின்வரும் பாடல் குறிப்பிடுகிறது.

பாரகம் புகழும் நல்ல பண்புடைத் தொழிலென் றுன்னிக்
காருக வினைமேற் கொண்ட கரிசிலார் வீதிசென்று
சீரகம் புகுநூற் பாவிற் செலுத்திய கூழின் சேடம்
வாருமல் விடைத்தாஞ் சென்று கரத்தினில் வாங்கி உண்டார்[31]

என்பதால் அறியலாம்.

மறைஞானசம்பந்தரிடத்தில் மெய்ப்பொருள் நூல்களைக் கேட்டுத் தெளிந்து கொண்டிருந்த நிலையை உணராத தில்லைவாழ் அந்தணர்கள் அவர் தங்களுடைய மரபிலிருந்து பிறழ்ந்ததாகக் கருதி உமாபதிசிவனாரை எள்ளி நகையாடினர்.[32] அதனால் அவர் சோழனால் கொடுக்கப்பெற்ற கொற்றவன்குடி என்னும் பகுதிக்குச் சென்று மடமமைத்து விதிப்படி சிவபூசை செய்தும், தியானமியற்றியும் தம்முடைய கடமைகளைச் செய்து வந்தார்.[33] அந்நாளில் நடராசப்பெருமானைப் பூசை செய்யும் முறை உமாபதிசிவனாருக்கு வந்தது. அக்கடமையைச் செய்ய வேண்டிய நிலையில் அவர் தில்லை அம்பலத்திற்குச் செல்ல முற்பட்டார்; தில்லைவாழ் அந்தணர்கள் மனம் வேறுபட்டு அவரைச் செல்லவிடாமல் தடுத்துவிட்டனர்.[34] அதனால் தளர்ச்சி எய்திய உமாபதிசிவனார் தம்மடத்திற்குச் சென்று இறைவனுக் குரிய பூசையைச் செய்து வந்தார். வெறுப்புணர்வோடு தடுத்த தில்லைவாழ் அந்தணர்கள், பொன்னம்பலத்தில் சிற்றம்பலவனின்

பெட்டகத்தைக் காணாது திகைத்தனர். அந்தணர்கள் மயங்கி நிற்குங்கால் ''முறைப்படி பூசை செய்யவந்த உமாபதி யாருடைய பெட்டகத்திலிருக்கிறோம்'' என்ற வாசகம் வான் வழியாக எழுந்தது.[35] தம்தவற்றை உணர்ந்த தில்லைவாழ் அந்தணர்கள், உமாபதிசிவனாரிடம் மன்னிப்பு வேண்டி அவரை மீண்டும் வந்து தில்லை வாணர்க்குப் பூசனை இயற்றுமாறு வேண்டிக்கொண்டனர். அவ்வாறே தில்லைப்பகுதிக்குச் சென்று பூசையாற்றித் திரும்பினர் என்பர்.[36]

சிவனடியாருடைய வேடப்பொலிவினையும், அரனுடைய கோயிலையும் காணுகின்ற காலத்து அரனாகவே கருதி வழிபடுதல் என்பது ஞானியருடைய இயல்பெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[31] இவ்வுலகில் மற்றைய மனிதர்களைப் போலவே ஞானியர்கள் வாழ்ந்தாலும் இவர்கள் இடையறாது மனத்தால் எண்ணுகின்ற சிறப்பு இயல்புடையவர்கள். இடையறாது மனத்தால் எண்ணு கின்ற ஞானியர்களைச் சீவன்முத்தர்கள் எனக் குறிப்பர். அவ்வகையில் உமாபதிசிவனார் சீவன்முத்தராகக் குறிக்கப் பட்டுள்ளார் என்பது கருததக்கது.[33]

பெற்றான் சாம்பான் என்பவர் வாழ்க்கை வரலாறு உமாபதி சிவனாரின் வரலாற்றோடு இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. சேரியிற் பிறந்த பெற்றான் சாம்பான், தம் சுற்றத்தை நீத்துத் தில்லை சென்று தங்கி, அங்கு ஒவ்வொரு நாளும் மடைத் தொழிலுக்குத் தேவைப்படும் விறகுகளை வெட்டிக்கொண்டு வந்து கொடுக்கும் வழக்கமுடையவராக இருந்தார். அவருடைய கனவில் தோன்றிய இறைவன், உமாபதியாரின் திருமடத்திற்குச் சென்று பணிசெய்யுமாறு பணித்ததை ஏற்றுப் பலநாட்கள் விறகுப் பணி செய்து வந்தார். ஒருநாள் பெருமழை காரணமாக அத்தொண்டு முட்டுப்பட்டது. அதனால் அடியார்களுக்கு இடுகின்ற அன்னம் தாமதப்பட, காரணங்கேட்டபொழுது பெற்றான் சாம்பானுடைய பணியைக் குறித்து மடத்து அடியவர்கள் உமாபதிசிவனாரிடம் கூறினர். மறுநாள் வரும்பொழுது பெற்றான் சாம்பானைத் தம்மிடம் அழைத்து வருமாறு உமாபதிசிவனார் பணித்தார். பெற்றான் சாம்பான் அவரிடம் அழைத்துவரப் பட்ட பொழுது, தில்லையம்பலவாணர் தந்த திருமுகத்தை

உமாபதிசிவனாரின் அடியில் வைத்துப் பணிந்து நின்றார். அவருடைய பக்குவ நிலையை அறிந்த உமாபதிசிவனார் இறைவன் கொடுத்த ஆணைப்படி[39] நிர்வாண தீட்சை என்னும் தீட்சையை அளித்தார். அதனால் அவர் வீடுபேறு பெற்றார் என்னும் செய்தி சந்தானாசாரியாரின் புராணத்தில் காணப்படுகின்றது.[40] அதனால் சினமுற்ற பெற்றான் சாம்பானுடைய மனைவியும் சுற்றமும் அரசனிடம் சென்று முறையிட்டனர். அரசன் உமாபதி சிவனாரின் நோ்மையை நினைந்து அத்தகையதொரு தீக்கை நிலையைத் தாமும் காண வேண்டுமென்று வினவினான். உமாபதிசிவனார் நாள்தோறும் இறைவனுக்கு ஆட்டுகின்ற மஞ்சனநீரில் வளர்ந்த முள்ளிச்செடிக்கு அத்தகைய தீக்கையை அளிக்க அது ஒளியோடு மறைந்ததாக மற்றோர் செய்தியும் காணப்படுகின்றது.[41] இப்புராணத்தில் பேசப்பெற்ற மன்னன் யார் என்பது குறித்த செய்தி வரலாற்று அடிப்படையில் தெரியவில்லை என்பது மனங்கொள்ளத்தக்கது.

பெற்றான் சாம்பானுக்கு முத்திப்பேறு கொடுத்த நிகழ்ச்சி குறிப்பிடதக்கதாகும். பெற்றான் சாம்பான் பஞ்சமர் என்று சொல்லக் கூடிய சேரியில் பிறந்தவர். அவருக்கு அந்தணர் ஒருவர் தீக்கை கொடுத்தார் என்று சொல்லுகின்ற நிலை அக்கால சூழலில் மிக அரிதான நிலையாகும். பெற்றான்சாம்பான் எரிக்கப்பட்டதாகக் கருதிப் பெற்றான் சாம்பானைச்சார்ந்த மக்கள் அரசனிடம் முறையிடவும், அரசன் ஆராய்ந்து பார்த்து அவ்அற்புதம் நடந்திருக்கக் கூடும் என முடிவு செய்ததும், இயற்கை இறந்த நிகழ்ச்சியாகக் காணப்படினும் சமய உலகம் ஏற்றுக் கொண்ட ஒன்றாக இந்நிகழ்ச்சி விளங்குகிறது என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

மெய்கண்டார் முதலாக உமாபதிசிவனார் ஈறாக நான்கு தலைமுறையினரைச் சந்தான குரவர் என்று கூறும் மரபு காணப் படுகின்றது. இவருக்குப்பின் இம்மரபு மாறிவிட்ட சூழலும் காணப்படுவது கருதத்தக்கது. உமாபதிசிவனாரிடம் அருள் உபதேசம் பெற்ற அருள் நமச்சிவாயர் தமக்குப்பின் ஏற்பட்ட மாணவர் பரம்பரையினரை அபிடேகப் பரம்பரையினராக மாற்றிச் சென்றுள்ளார். அவர் வழிவந்த திருவாவடுதுறை

ஆதீனத்தாரும், கமலை ஞானப்பிரகாசர் வழிவந்த தருமையா தீனத்தாரும் மடாலயங்களை அமைத்து மாணவர்களுக்கு ஞான நூல்களைக் கற்பிக்கும் முறையை மேற்கொண்டனர். உபதேசப் பரம்பரை, அபிடேகப் பரம்பரையினராக மாறுகின்ற கால கட்டத்தில் உமாபதிசிவனார் வாழ்ந்தார் என்கின்ற குறிப்புப் பெறப்படுகிறது. தீண்டத்தகாதவராயினும் தீக்கை கொடுக்கலாம் என்னும் துணிவுடைமையும், ஆசிரியர் உண்டமிச்சிலை உண்ணுகின்ற மனப்பக்குவமும் இவரிடத்து இருந்தமை போற்றுதற்குரியதாகும்.

4. புலமைத் திறம்

உமாபதிசிவனார் இளமையில் தாம் பிறந்த மரபிற்கு ஏற்ப வடமொழி நூல்களைக் கற்றுத் தேர்ந்தமையும், அருட்பாடல்களில் தேர்ச்சி பெற்றமையும் முன்பு ஆராயப்பெற்றது. வேதம், வேதாந்தங்கள் என்று சொல்லப்படுகின்ற நூல்களில் பயிற்சி பெற்றுங்கூட சிவஞானபோத நூல்களில் இவருக்கு ஈடுபாடு மிக்கிருந்தது. அவ்வாறு மிகுதியாவதற்கு மறைஞானசம்பந்தரின் கற்பிக்கும் ஆற்றலே காரணமாக இருந்திருக்க வேண்டும் எனலாம். சந்தான குரவர்கள் இயற்றிய சாத்திர நூல்களை "பதினான்கு" என்று குறிக்கும் வழக்கம் உள்ளது. அவற்றுள் திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம் என்னும் ஆறு நூல்கள் மறைஞானசம்பந்தரால், உமாபதிசிவனாருக்குக் கற்பிக்கப் பட்டனவாகக் கருதலாம். சித்தாந்த சாத்திரங்களில் இவர் பெற்ற பயிற்சி காரணமாகவும், வேதங்களிலும், அருட் பாடல்களிலும் இவருக்கு இருந்த பயிற்சி காரணமாகவும் பல சாத்திர நூல்களையும், இலக்கிய நூல்களையும், வடமொழி நூல்களையும் இவர் இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சாத்திர நூல்கள்

சாத்திர நூல்கள் பதினான்கனுள் இவருக்கு முன்னர் இயற்றப் பெற்ற ஆறு நூல்கள் போக எஞ்சியுள்ள சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப

நிராகரணம் என்பவை உமாபதிசிவனாரால் இயற்றப்பட்டவை என்று கூறுவர்.[42] இவற்றுள் சங்கற்ப நிராகரணம் என்னும் நூல் இவருடைய காலத்தை அறிய உதவுகிறது. உண்மைநெறி விளக்கம் நீங்கலாக உமாபதிசிவனார் செய்த சாத்திர நூல்கள் ஏழு என்ற கருத்தும் அறிஞர்களிடையே காணப்படுகிறது.[43]

"சித்தாந்த அட்டகம்"[44] என்று சொல்லப்படுகின்ற எட்டு நூல்களில் உண்மை நெறி விளக்கம் என்பது ஆறு பாடல்களைக் கொண்டதொரு சிறுநூல். இந்நூல் உமாபதிசிவம் இயற்றியதாக மரபுவழியில் சொல்லப்பட்டுவருகிறது. இதன் ஆசிரியர் சீர்காழித் தத்துவநாதர் என்று கூறுவர்.[45] இதனைத் தத்துவ நாதரே செய்தார் என்பதற்கு ஒரு தனிப்பாடல்[46] மட்டுமே சான்றாகக் காணப்படுகிறது. மெய்கண்ட நூல்களோடு இணைத்துப் பேசும் அளவிற்கு இந்நூல் தகுதி உடையதாய் இருக்கிறது. "சித்தாந்த அட்டகம்" என்னும் வழக்கு உமாபதிசிவனாரின் சித்தாந்த நூல்களைக் குறிக்கப்பயன்படுத்தும் தொடராகக் காணப் படுகிறது. இதனால் உமாபதிசிவனார் சாத்திரத் துறையில் உண்மைநெறிவிளக்கம் அடங்க எட்டு நூல்களைச் செய்தார் எனக் கொள்வதே ஏற்புடையதாகும்.

1. சிவப்பிரகாசம்:

சிவஞானபோதம், சிவஞானசித்தியார் என்ற இரு நூல் களையும் அடியொற்றி இயற்றப்பெற்ற நூல் சிவப்பிரகாசமாகும். இந்நூல் நூறு விருத்தப்பாக்களால் இயற்றப்பெற்றுள்ளது. இதனைச் சார்புநூல் என்று கொள்ளுதல் வேண்டும். பழமை பற்றி வருகின்ற எந்த ஒன்றும் நன்றாகும் என்று கூறுவதும், புதுமையான எந்த ஒன்றும் நன்றாகாது என்று கூறுவதும் பொருத்தமானவையல்ல என்று கூறுகின்ற இவர் கருத்து போற்றுதற்குரியதாகும். அதனைத்

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா ; இன்று
தோன்றியநூல் எனும் எவையும் தீதாகா"[47]

என்பதால் அறியலாம். சித்தாந்தத்தை வேதாந்தத்தின் தெளிவு என்று கூறுவதும்,[48] இவர்தம் ஆசிரியரை நூலில் வாழ்த்தி இருப்பதும்[49] மனங்கொளத்தக்கவையாகும். இந்நூல் பொது

என்றும், சிறப்பு என்றும் இரு பகுப்புக்களாக அமைக்கப் பட்டுள்ளது. இந்நூலில் பொது அதிகாரம் என்னும் பகுதியில் பதி, பசு, பாசம் என்ற முறையில் சமய முப்பொருள் இலக்கணங் களும் பேசப்பட்டுள்ளன. இவ்வுலக வாழ்வினைப் பெத்தநிலை என்றும், வீடுபேறு அடைகின்ற நிலையினை முத்திநிலை என்றும் கூறுவர். இவ்விருவகை நிலையாலும் உத்தேசம், பரிட்சை, இலட்சணம் என்னும் மூவகை முறையாலும் அவை கூறப் பெற்றுள்ளன. சிறப்பு என்னும் உண்மை அதிகாரத்தில் 51-ஆவது பாடல் அதன் பொருள் அடைவினைச் சுட்டுகின்றது. ஆன்மா, அஞ்சவத்தை, தன் உண்மை உணர்த்தும் தன்மை, ஞானவாய்மை, அதன்பயன், புனிதன்நாமம், அணைந்தோர் தன்மை என்னும் ஏழு தலைப்புகளில் இவ்வதிகாரம் அமைந்துள்ளது. இந்நூலில் 52 முதல் 59-வது பாடல் முடிய ஆன்மா பற்றிய செய்தியும், 60 முதல் 62 முடிய அஞ்சவத்தை பற்றிய செய்தியும், 63 முதல் 67 முடிய தன் உண்மை உணர்த்தும் தன்மையும், 68 முதல் 70 முடிய உள்ள பாடல்களில் ஞான வாய்மை பற்றியும், 71 முதல் 80 முடிய உள்ள பாடல்களில் அதன் பயன் பற்றியும், 90 முதல் 92 முடியவுள்ள பாடல்களில் புனிதன் நாமம் பற்றியும், 93 முதல் 98 வரையுள்ள பாடல்களில் அணைந்தோர் தன்மை பற்றியும் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. நூற்கருத்து, நூல் உபதேச முறை என்ற இரண்டையும் 99, 100-ஆம் பாடல்கள் கூறுகின்றன.

இந்நூலுக்குப் பல உரைகள் காணப்படுகின்றன.[50] அவற்றுள் மதுரை சிவப்பிரகாசம் எழுதிய பேருரை குறிப்பிடத்தக்கது. சிதம்பரநாத முனிவர் உரை, நல்ல சிவதேவர் சிந்தனை உரை, திருவுருகமாமலை அடிகள் உரை, திருவிளங்கம் புத்துரை போன்ற உரைகள் இந்நூல் பலகாலும் ஆராயப்பட்டு வந்துள்ளமையை வெளிப்படுத்துகின்றது. ஆங்கிலத்தில் இந்நூல் மொழி பெயர்க்கப் பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது.[51]

2. திருவருட்பயன் :

இந்நூல் நூறு குறட்பாக்களால் பத்து அதிகாரங்களில் சித்தாந்தக் கருத்துக்களைப் பேசுகின்ற நூலாக அமைந்துள்ளது. பதிமுதுநிலை, உயிர் அவைநிலை, இருள்மலநிலை, அருளதுநிலை,

அருள் உருநிலை, அறியும் நெறி, உயிர் விளக்கம், இன்புறுநிலை ஐந்தெழுத்து அருள்நிலை, அணைந்தோர் தன்மை என்பவை இந்நூலின் உட்பகுப்புகளாகும். சித்தாந்தப்பயிற்சிபெற விரும்புவோர் உண்மை விளக்கத்தையும், திருவருட் பயனையும் பயின்று சில அடிப்படை நெறிகளை அறிந்து கொள்ளும் வழக்கம் கடைப் பிடிக்கப்படுகின்றது. எனவே திருவருட்பயன் சித்தாந்த அடிப் படைகளைத் தெளிவு செய்யும் நூலாக அமைந்துள்ளமையைக் காணலாம். நிரம்ப அழகிய தேசிகர் உரை, சிந்தனை உரை முதலிய உரைகள் இந்நூலைப் பயில்வார்க்குத் துணை செய் கின்றன.[52] இதன் மிகுந்த பயிற்சிகாரணமாகக் காலத்திற்கு ஏற்ப எளிமையான உரைகளும் இக்காலத்தே தோன்றியுள்ளன என்பது அறியத்தகும். திருவருட்பயன் கூறுகின்ற உண்மைகளுக்கேற்ற உதாரணங்களைக் காட்டும் கலித்துறையால் செய்யப்பற்ற நூல் ஒன்றும் காணப்படுகின்றது. அதன் பெயர் திருவருட்பயன் உதாரணக் கலித்துறை என்பதாகும்.

3. வினா வெண்பா :

இந்நூல் பதின்மூன்று பாடல்களால் அமைந்துள்ளது. உமாபதி சிவனார் தம் ஆசிரியராகிய மறைஞானசம்பந்தரை வினவும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது. சித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றைத் தெளிவு படுத்தும் வகையில் இந்நூலின்கண் வினாக்கள் தொடுக்கப்பட்டுள்ளமையை உணரலாம். சித்தாந்த நூல்களில் அருள்நந்தி சிவாசாரியார் இயற்றிய இருபா இருபஃது, மனவாசகங் கடந்தார் இயற்றிய உண்மைவிளக்கம் என்னும் இரு நூல்களும் தம் ஆசிரியரை வினவுகின்ற அமைப்பில் இயற்றப் பெற்றமை என்பது ஈண்டு நினைக்கத் தக்கதாகும். இந்நூலுக்குத் திருவாவடுதுறை நமச்சிவாயத் தம்பிரான் இயற்றிய உரை ஒன்று உள்ளது.[53]

4. போற்றிப் பஃறொடை :

இந்நூல் தொண்ணூற்று ஐந்து கண்ணிகளைக் கொண்ட பஃறொடை வெண்பாவால் இயற்றப்பெற்றுள்ளது. இறுதியில் ஒரு வெண்பா அமைந்துள்ளது. இறைவன் குருவாக வந்து ஆட்கொள்ளும் அருட்திறத்தை இந்நூல் பலவடியாகப் போற்றுகிறது. சிவனை நினையாதோர் பட இருக்கும்

துன்பத்தைப் பலபடியாகச் சுட்டுகின்றது. மனித வாழ்க்கை மட்டுமல்லாமல் தேவ வாழ்க்கையும் நிலையாமை உடையது என்று கூறும் திறம் எண்ணத்தக்கது. இறுதியில் அமைந்துள்ள வெண்பா உமாபதிசிவனாரின் குருவாகிய மறைஞான சம்பந்தரைப் போற்றி உரைக்கின்றது.

5. கொடிக்கவி :

இது நான்கு வெண்பாக்களாலான சிறுநூலாகும். ஆயினும் துகளறு போதத்தின் நூறாவது பாடலாகவுள்ள ஒரு பாடல் இந்நூலின் இறுதிப் பாடலாக அமைக்கப்பெற்று ஐந்து பாடல் களாக இது பதிக்கப் பெற்றுள்ளமை கருத்திற்கொள்ளத்தக்கது. 'கொடிப்பாட்டு' எனவும் 'கொடிக்கவி' எனவும் வழங்குகின்ற இந்நூல் செய்தகாலம் ஒரு வரலாற்றுக் குறிப்பினை உடையது. தில்லையில் விழாவிற்கு அடையாளமாகிய முதல் நாளில் ஏற்றப்படுகின்ற கொடி ஏறாமல் போயிற்று. தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதிசிவனார் கொற்றவன் குடியில் சென்று தங்கியமை இவ்வாறு கொடியேறாமல் போனதற்குக் காரண மாகலாம் எனக் கருதி உமாபதிசிவனாரிடம் முறையிட்டனர். அவ்வாறு அவர்கள் சென்றமைக்குத் தில்லைப் பெருமானின் அசரீரி வாக்கே காரணமெனக் கூறப்படுகின்றது.[54] உமாபதி சிவனார் தில்லைத் திருக்கோயிலுக்குச் சென்று இந்நூலைப் பாட ஏற்றுவாரின்றியே கொடியேறியதாகக் கூறப்படுவது அறியத் தக்கது. இந்நூலில் சிவமந்திரங்களின் பொருளை ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'கொடி' என்னும் சொல் இடம் பெற்றுள்ளது.

6. நெஞ்சுவிடுதூது :

இந்நூல் நூற்று இருபத்தொன்பது கண்ணிகளைக் கொண்ட கலிவெண்பாவால் ஆகியுள்ளது. இந்நூலின் இறுதியில் வெண்பா ஒன்றும் அமைந்துள்ளது. உமாபதிசிவனார் தம்மை ஒரு பெண் ணாகவும், தம்மாசிரியரைக் காதலராகவும் உருவகித்து அகத் துறை அமைப்புக்களில் இந்நூலை இயற்றியுள்ளார். இலக்கியங் களில் கொடி, ஊர் முதலிய இயல்புகளைக் குறித்துப் பாட்டுடைத் தலைவரைப் போற்றுவதைத் 'தசாங்கம்' என்று குறிப்பிடுவர்.[55]

இறைவருக்கும் இத்தகைய தசாங்கங்கள் கூறப்படுவது வழக்கம், அவ்வகையில் தலைவனுடைய தசாங்கத்தை உமாபதியார் இதன்கண் சுட்டியுள்ளார். காதலியிடம் சென்று மாலை வாங்கி வா என்று நெஞ்சினைத் தூது அனுப்பும் முறையில் இந்நூல் அமைக்கப்பெற்றுள்ளது. யாரிடம் நெஞ்சுப் போகக் கூடாது எனச் சுட்டுமிடத்தில் 'அகம்பிரமம்' என்பவர் பால் செல்லாதே என்று கூறுவது கருத்தில் கொள்ளத்தக்கது[56] சமயநூற் பொருள்கள் பலவும் இதன்பால் அமைந்துள்ளமை எண்ணத்தக்கது. இதற்குப் பழைய உரை ஒன்று உள்ளது.[57]

7. உண்மை நெறி விளக்கம்:

தத்துவ ரூபம் முதலாகப் பத்துப்பொருள்கள் பற்றி ஆறு செய்யுட்களில் இந்நூல் விளங்குகிறது. முதற் செய்யுள் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி என்ற மூன்றையும் விளக்குகிறது. இரண்டாம் செய்யுள் ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி என்ற மூன்றையும் விளக்குகிறது. எஞ்சிய நான்கு செய்யுட்களும் முறையே சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் ஆகிய நாற்பொருளையும் விளக்குகின்றன. இதற்குப் பலரின் உரைகள் உள்ளன.[58]

8. சங்கற்ப நிராகரணம்:

பதின்மூன்று ஆசிரியப் பாக்களால் இருபது பகுதிகளாக அமைந்த நூல் சங்கற்ப நிராகரணம். காப்பு, பாயிரம் என்னும் இரண்டனையடுத்து ஒன்பது சமயவாதிகளின் கோட்பாடுகள் சுட்டப்பெற்றுப் பின்னர் அவை மறுக்கப்படுகின்றன. மாயாவாதம், ஐக்கியவாதம், பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்தவாதம், ஈசுவர வவிகாரவாதம், சைவவாதம், நிமித்தகாரணபரிணாமவாதம் என்னும் ஒன்பது வகையான கோட்பாடுகளும் சித்தாந்த சைவ சமயத்தினின்றும் சிறு சிறு வேறுபாடுகளைக் கொண்டவை. இவ்வாறான சமயங்களை அகச்சமயங்கள் என்றும் கூறும் வழக்கு காணப்படுகின்றது.[59] அகச்சமயங்கள் ஆறு என்று குறிப்பிடும் வழக்கும் உண்டு என்றாலும் இவர் குறிப்பிட்டுள்ள சமய வாதிகளின் எண்ணிக்கை ஒன்பதாகவுள்ளமை மனத்திற்கொள்ளத்தக்கது. கொள்கைகளை உள்ளபடி உணர விரும்புவோர் இவ்வாசிரியரால் செய்யப்பெற்ற

சிவபிரகாசத்தைக் கற்க வேண்டுமெனக் குறிப்பிடுவது நினையத் தகுவதாகும்.[60] தேவார திருவாசகங்களின் எடுத்துக்காட்டுகள் சான்றாகக் கொடுக்கப்பட்டுள்ளன என்பது இந்நூலுக்கு அகச் சான்றுகளாக அமைந்துள்ளன. ஞானப்பிரகாசதேசிகர் என்பவர் இதற்கு உரை செய்துள்ளார். பெயர் தெரியாத பழைய உரை ஒன்றும் காணப்பெறுகின்றது. உமாபதிசிவனாரின் காலத்தை அறியத்தக்க காலக்குறிப்பு இதன்பால் உள்ளமை முன்பு ஆராயப்பெற்றது.

சித்தாந்த நூல்களில் மரபு வழிவந்த நூல் நுவலும் உண்மைகளைப் பரந்துபடக் கற்றுள்ளார் என்பதும் பல சமயங்களின் உண்மைகளை அறிந்து தம் நூல்களில் ஆங்காங்கே குறித்துச் சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் சிவமந்திரங்களின் உண்மைப்பொருளை உணர்ந்தவராகக் காட்சியளிக்கின்றார். சமயக் கோட்பாடுகளை உள்ளவாறு உணர்ந்து அவற்றிற்குரிய மறுப்புக்களையும் கூறிச் செல்வது இவருடைய தத்துவ அறிவைப் புலப்படுத்துகின்றது.

ஆ. இலக்கிய நூல்கள் :

உமாபதிசிவனார் இயற்றிய இலக்கிய நூல்கள் என்னும் பகுப்பில் இலக்கிய நூல்களும் இலக்கியம் சாராத மற்றைய நூல்களும் உள்ளிட்டே ஆராயப்படுகிறது. பெரும்பான்மையான நூல்கள் அவற்றில் இலக்கிய நூல்கள் ஆகும். அவற்றைப் புராண நூல்கள், கோவை நூல்கள், திரட்டு நூல், சுருக்க நூல், விதிமுறைவிளக்க நூல், சிவநாமநூல் ஆகிய முறையில் ஈண்டுப் பகுத்துக் காணலாம்.

புராண நூல்கள் :

உமாபதிசிவனார் இயற்றிய புராண நூல்கள் மூன்று, அவை கோயிற்புராணம், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் நாயனார் புராணம் என்பனவாகும்.

1. கோயிற்புராணம் :

இது சைவ நல்லுலகில் 'கோயில்' என்று சுட்டிப்போற்றப் படும் சிதம்பரத்தலத்தின் பெருமைகளை விளக்கும் நூலாகும்.

தில்லைத் திருச்சபையில் திருநடம் அருளிப் புலிக்கால் முனிவருக்கும் பதஞ்சலிமா முனிவருக்கும் முத்தியளித்த வரலாறும் சிங்கவர்மர் பேறு பெற்ற வரலாறும் இந்நூலில் விளக்கப் பெற்றுள்ளன.

கோயிற்புராணம் வாழ்த்து (1), பாயிரம் (28), வியாக்கிர பாதச் சருக்கம் (29), பதஞ்சலிச் சருக்கம் (99), நடராசச் சருக்கம் (71), இரணிய வன்மச் சருக்கம் (133), திருவிழாச் சருக்கம் (53) ஆகிய முறையில் ஐந்து சருக்கங்களில் 415 செய்யுட்களில் இயற்றப்பட்டுள்ளது. கோயிற் பெருமை கூறுவது இந்நூலின் முதன்மை நோக்கமாகும்.

2. திருமுறைகண்ட புராணம் :

இது சோழப் பேரரசன் இராசராசன் சைவத் திருமுறை களைத்தேடித் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டதையும் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைத் தொகுத்து முறைப்படுத்தியதையும் நாற்பத்தாறு திருவிருத்தங்களால் விளக்கும் நூலாகும்.

சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர் – தொகுப்பித்தவர் என்ற வரலாற்றுக்குறிப்புகளைக் காண இந்நூல் பயன்படுகிறது. நம்பியாண்டார் நம்பி அமைத்த திருமுறைப்பகுப்பு முறையும் பன்முறை பகுப்பும் சிறப்பான முறையில் உமாபதிசிவனார் இந்நூலில் போற்றியுள்ளார்.

தேவார மூவரின் திருப்பாடல்களை முதல் ஏழு திருமுறை களாகவும் ஏனையோரின் திருப்பாடல்களை நான்கு திருமுறை களாகவும் நம்பியாண்டார் இரண்டு சமயங்களில் தொகைவகை செய்தார் என்னும் செய்தியை இதனால் அறியமுடிகிறது.

3. சேக்கிழார்நாயனார் புராணம் :

சைவ மெய்த் திருத்தொண்டர்களின் பெருமைகளை உலகறியச் செய்த பெருந்தொண்டர் சேக்கிழாரின் வரலாற்றை விளக்கும் முறையில் பாயிரம் (10) அடங்க நூற்றுமூன்று செய்யுட் களால் உமாபதிசிவனார் இப்புராண நூலை இயற்றியுள்ளார்.

மெய்ப்பொருள் நுவலும் நூல்களோடு மெய்யடியார் புகழும் தொண்டும் கூறும் நூல்களையும் இயற்றிப் பெருமைபெற்றவர் உமாபதிசிவனார் என்பதற்கு இவ்வகை நூல் அருஞ்சான்றாகத் திகழ்கிறது எனலாம்.

கோவை நூல்கள் :

கோவை ஒரு சிற்றிலக்கிய வகையாகும். பொருட்கோவை நூல்கள் தமிழில் இடம் பெற்றிருத்தல் போன்று, திருப்பதிகளையும் திருப்பதிகங்களையும் தொகுத்துக் கூறும் முறையில் உமாபதியார் இருநூல்களை இயற்றியுள்ளார்.

1. திருப்பதிக் கோவை :

கோயில் முதலாக நொடித்தான்மலை ஈறாக உள்ள சைவத் திருத்தலங்கள் இருநூற்றெழுபத்து நான்கினையும் காவிரி வடகரைக் கோயில்கள் முதலாக வகைப்படுத்திப் பதினான்கு திருவிருத்தங்களில் இந்நூல் தொகுத்துச் சுட்டியுள்ளது.

இவை தேவார மூவரின் அருட்பதிகங்களைப் பெற்ற தலங்கள் ஆகும். திருத்தலங்களை எண்ணினாலும், எழுதினாலும், இயம்பினாலும் முத்திபெறலாம் என்னும் கருத்தை வற்புறுத்தும் வகையில் இந்நூல் உள்ளது [61]

இந்நூலில் நினைப்போர்க்கும் துதிப்போர்க்கும் வினைகள் சாராவாம், பிறப்பகலும், சத்திய முத்தியுமே என்று பயன் கூறியிருப்பது ஈண்டு கருதத்தக்கது.

2. திருப்பதிகக் கோவை :

சிவத்தலங்கள் இருநூற்றெழுபத்து நான்கிலும் தேவாரமூவர் பாடிய பதிகங்களின் எண்ணிக்கையை அடைவு செய்யும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது.[62]

ஒரு பதிகம் பெற்ற திருத்தலங்கள் 153; இரு பதிகம் பெற்ற திருத்தலங்கள் 49; மும்பதிகம் பெற்ற திருத்தலங்கள் 28; நான்கு பதிகத் தலங்கள் 11; ஐந்து பதிகத் தலங்கள் 8; ஆறு பதிகத்

தலங்கள் 5; ஏழு பதிகத் தலங்கள் 5; எட்டுப் பதிகம் பெற்ற தலங்கள் 4; பதினொன்று பதிகம் பெற்ற தலங்கள் 4; பன்னிரண்டு பதிகத் தலங்கள் 2; பதினெட்டுப் பதிகத் தலங்கள் 2; திருவீழி மிழலை 24 பதிகம் பெற்ற தலம்; திருவாரூர் 31 பதிகம் பெற்ற தலம்; சீர்காழி 71 பதிகம் பெற்ற தலம்.

எழுநூற்று நாற்பத்தொன்பது பதிகங்களும் தலமுறையில் அமையும் பாகுபாட்டினை உமாபதியார் இக்கோவையில் பதினான்கு திருவிருத்தங்களில் செறிவாக அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

திரட்டு நூல்

தேவார அருண்முறைத் திரட்டு :

இஃது, உமாபதிசிவனார் தொகுத்த திரட்டு நூல் ஆகும். இதில் தொண்ணூற்றொன்பது திருமுறைப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன. உமாபதியார் இயற்றிய திருவருட்பயன் என்ற சித்தாந்த நெறி நூலுக்கு மேற்கோள் இலக்கியம் காட்டும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது.

சித்தாந்த நூலாகிய 'திருவருட்பயன்' 100 குறள் வெண் பாக்களை உடையது. பத்து அதிகாரங்களில் அமைந்துள்ளது. இவ்வருள் முறைத்திரட்டில் சம்பந்தர் தேவாரத்திலிருந்து 23 பாடல்களும், அப்பர் தேவாரத்திலிருந்து 64 பாடல்களும், சுந்தரர் தேவாரத்திலிருந்து 12 பாடல்களும் இடம்பெற்றுள்ளன.[63]

திருவருட்பயனிலுள்ள பத்து அதிகாரப் பொருள்களுக்கும் அப்பர் அருளிய பாடல்கள் சான்றிலக்கியங்களாகத் தேர்ந் தெடுக்கப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சுருக்க நூல் :

சுருங்கச் சொல்லல், விளங்க உரைத்தல், தொகுத்துக் கூறியதை விளக்கிக் கூறல், விளக்கிக் கூறியதைத் தொகுத்துக் கூறல் போன்றவை சில இலக்கிய முறைகளாகத் தமிழில் இருந்து வருகின்றன.

அறுபத்து மூன்று தொகையடியார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் சுந்தரர் பதினொரு பாடல்களில் ஒரு பதிகமாக அமைத்தார். அதனைத் தொண்ணூறு பாடல்களில் ''திருத்தொண்டர் திருவந்தாதி'' என்ற பெயரில் நம்பியாண்டார் நம்பி சிற்றிலக்கியமாகச் செய்தார். சேக்கிழார் பெருமான் 4286 பாடல்களில் திருத்தொண்டர்களின் வரலாறுகளை விரிவான முறையில் திரட்டிக் காப்பியமாக உருவாக்கினார்.

1. திருத்தொண்டர் புராண சாரம்:

திருத்தொண்டர்களின் பெருமைகளைச் சுருக்கமாக நினைவில் கொள்ளும் வகையில் உமாபதிசிவனாரின் 79 திருவிருத்தங்கள் அடங்கிய ''திருத்தொண்டர் புராண சாரம்'' அமைந்துள்ளது.

செய்தவர் வேண்டிய தியாதுங் கொடுப்பச் சிவன்றவனாய்க்
கைதவம் பேசிநின் காதலி யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை யீந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட் டினத்து ளியற்பகையே[64]

என்பது நம்பியாண்டார் நம்பியின் இயற்பகை நாயனார் பற்றிய பாடலாகும்.

சேக்கிழார் பாடிய 36 பாடல்களின் அடிப்படையில் இயற் பகையாரின் வாழ்வுச் சாரத்தை உமாபதியார் பின்வரும் பாடலாக அமைத்துள்ளார்.

எழிலாருங் காவிரிப்பூம் பட்டினத்து ளியல்வணிக
ரியற்பகையா ரிருவர்தேட
வழலாய பிரான்தூர்த்த மறையோனாகி யாயிழையைத்
தரவேண்டி யணையவையன்
கழலாரப் பணிந்துமனைக் கற்பின்மேன்மைக் காதலியைக்
கொடுத்தமர்செய் கருத்தால்வந்த
பிழையாருஞ் சுற்றமெலாந் துணித்துமீளப் பிஞ்ஞகனா
ரழைத்தருளப் பெற்றுளாரே[65]

காப்பியச் சுரிதகம் போன்று இப்பாடலுள்ளமை கருதற்குரியது.

2. சிவபுண்ணியத் தெளிவு :

ஆன்மாக்களை நோக்கிச் செய்யும் புண்ணியத்தைப் பசு புண்ணியம் என்றும், இறைவனை நோக்கிச் செய்யும் புண்ணியத்தைப் பதி புண்ணியம் என்றும் குறிப்பிடுவர். நூல்கள் பலவற்றில் காணப்படுகின்ற சிவபுண்ணியங்களைத் தொகுத்துப் பலரும் போற்றிப் பயன்பெறும் வகையில் "சிவபுண்ணியத் தெளிவு" என்னும் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

விதிமுறை விளக்கம் :

ஞானாசார சாத்திரப் பஞ்சகம்

உமாபதிசிவனார் இயற்றிய நூல்களின் வரிசையில் இந்நூலும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. "சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் நூலிலுள்ள இக்குறிப்பு வேறு நூல்களில் காணப்படவில்லை. தருமை ஆதீனம் 1934இல் வெளியிட்டுள்ள இந்நூலில் உள்ள 62 செய்யுட்களில் இடம் பெற்றுள்ள செய்திகள் ஐந்து வகையாகப் பகுத்துக் காட்டப் பட்டுள்ளன.[66] ஞானபூசாகரணம், ஞானபூசை, ஞான தீட்சை அல்லது ஞானதீட்சா விதி, ஞானாந்தியேட்டி, போசன விதி - ஆகிய இந்நூற்பொருள்கள் பூசைமுறைகளை விளக்கும் முறையில் அமைந்துள்ளன. இந்நூல் கிடைத்தல் அருமைபற்றி ஆய்வில் இடம் பெறவில்லை என்பது கருதற்குரியது.

சிவநாம நூல் :

சிவசேத்திர சிவநாமக் கலிவெண்பா

திருப்பதிகளையும் திருப்பதிகங்களையும் தொகுத்தாற் போன்று பாடல் பெற்ற திருத்தலங்களிலமைந்துள்ள அம்மையப்பரின் திருநாமங்களைத் தொகுத்தளிக்கும் முறையில் இந்நூல் கலிவெண்பா யாப்பில் 301 கண்ணிகளில் இயற்றப் பட்டுள்ளது.

காவிரி வடகரைத் தலங்கள் 63; தென்கரைத் தலங்கள் 127; ஆக சோழமண்டலத் தலங்களின் எண்ணிக்கை 190; ஈழநாட்டுத் தலம் 2; பாண்டிய நாட்டுத் தலம் 14; மலைநாட்டுத் தலம் 1;

கொங்குநாட்டுத் தலம் 7; நடுநாட்டுத் தலம் 22; தொண்டை நாட்டுத் தலம் 32, துளுவநாட்டுத் தலம் 1, வடநாட்டுத் தலம் 5; ஆக, தேவார மூவரால் பாடப்பெற்ற திருத்தலங்கள் 274.

மூவரால்பாடப் பெறாவாயினும் மாணிக்கவாசகரால் பாடப் பெற்ற பதினான்கு திருத்தலங்களையும் இந்நூலில் உமாபதியார் இணைத்துள்ளார்.[67] சிவ மதத்தார் கருத்திற்கொள்ள வேண்டிய ஆறு முருகத் தலங்களையும் இத்திருப்பெயர்நூல் சுட்டியுள்ளது.[68]

திருப்பதி, திருப்பதிகம், திருநாமம் ஆகிய மூன்று நூல்களும் ஒருங்கு வைத்துக் கற்பதற்குரியவை.[69] மூவர் தேவார அடங்கல் முறைக்கு இந்நூல்கள் உறுதுணை செய்வது ஈண்டு குறிக்கத் தக்கதாகும்.

''சிவத்தல மஞ்சரி'' போன்ற நூல்வகை தோன்றுவதற்கு இந்நூல்கள் முன்னோடியாக அமைந்துள்ளன எனலாம். தமிழில் இயற்றப்பட்டுள்ள ஓர் அரிய படைப்புமுறை நூல் என்று இந்நூலைக் குறிப்பிடலாம்.

இ. வடமொழி நூல்கள்

இளம் வயதிலேயே உமாபதிசிவனார் வடமொழி கற்றுப் புலமை மிக்கவராகத் திகழ்ந்தார் என்பது முன்னர் ஆராயப் பெற்றது. அவ்வகையில் வடமொழியில் இரு படைப்பு நூல் களையும் ஓர் உரை நூலையும் இயற்றியுள்ளார் என்பது ஈண்டு எண்ணற்குரியது.

வடமொழியில் குஞ்சிதாங்கிரித்தவம், நடராசர் சகஸ்ரநாமாவளி, நடராஜத்வனி மந்திரஸ்தலம், சதரத்தின சங்கிரகம் ஆகிய நூல்களை உமாபதியார் இயற்றியுள்ளார் என்று குறிப்பிடுவர்.[70]

இப்படைப்பு மற்றும் உரை நூல்களில் பல இன்று கிடைக்கப் பெறவில்லை. குஞ்சிதாங்கிரித்தவம், சதரத்தின சங்கிரகம் ஆகிய நூல்களும் பௌஷ்கர பாஷ்யம் என்னும் உரை நூலுமே இன்று கிடைக்கப்பெறுவது குறிப்பிடத்தக்கது.

1. குஞ்சிதாங்கிரித்தவம்

இந்நூல் திருச்சிற்றம்பலவாணரைப் போற்றும் அரிய வட மொழி நூலாகும். இந்நூல் 313 சுலோகங்களில், சிறப்பாகத் தூக்கிய திருவடியின் பெருமைகளைப் பேசுகிறது. இவ்விருத்த சுலோகங்கள் யாவும் பாதம் ஒன்றுக்கு 21 எழுத்துகள் அமைய இயற்றப்பட்டிருப்பது கருதத்தக்கது. இந்நூல் பாக்கள் யாவும் ''குஞ்சிதாங்கிரிம்'' என்னும் முடிபோடு இருப்பது எண்ணத்தக்கது. தமிழ் உரையுடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.[72]

2. சதரத்தின ஸங்கிரஹம்

இது சைவசித்தாந்தக் கொள்கையை விளக்கும் நூல் ஆகும். இதற்கு வடமொழியில் உரை ஒன்றும் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் பதி, பசு, பாச முப்பொருள் இயல்புகளும் பதியின் வரம்பிலாற்றலும் பசுவைப் பாசத்தினின்று விடுவித்துப் பரமுத்தியை அடைவிக்கச் செய்யும் சிவதீக்கைத் தன்மைகளும் விளக்கப்பெற்றுள்ளன. இந்நூல் 261 சூத்திரங்களைக் கொண்டுள்ளது.

''அடக்கமும் அமைதியும் அமைந்த இடையறாச் சிவபக்தி உடையவர்களுக்கு இச்சாத்திரம் உபதேசிக்கதக்கது. எவன் உண்மையை அறிந்த ஆச்சாரிய மூர்த்தியைச் சிவபெருமானாகவே நினைக்கின்றானோ, எவனுக்கு ஆச்சாரிய மூர்த்தியினிடத்தில் சிவபெருமானைக் காட்டிலும் அதிகமான பக்தி இருக்கின்றதோ அவனுக்கு இச்சாத்திரம் உபதேசிக்கத்தக்கது''[73] என்றும்,

''உயர்ந்த இந்த சித்தாந்த சாத்திரம் அறிவிலிகளுக்கும் துஷ்டர்களுக்கும் கொடிய எண்ண முடையவர்க்கும் தகாத வழியில் செல்லுகின்றவர்களுக்கும் உபதேசிக்கதக்கதன்று. சீடரல்லாதவர்களுக்கும் மகப்பேறு இல்லாதவர்களுக்கும் உபதே சிக்கத்தக்கதன்று''[74] என்றும் இந்நூலிறுதியில் குறிப்பிடப்பட்டி ருப்பது கருதற்குரியது.

3. பௌஷ்கர பாஷ்யம்

இது பௌஷ்கர ஆகமத்துக்கு உமாபதிசிவனார் இயற்றிய உரையாகும். சிவப்பிரகாசம் என்னும் தத்துவ நூற் கருத்துக்கள்

இவ்வுரையில் மிகுதியும் இடம்பெற்றுள்ளன. பின்னர் எழுந்த வடமொழி உரைநூல்களுக்கு இந்நூல் சிறந்த வழிகாட்டியாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவர் இயற்றியனவாகக் காணப்படும் வடமொழி மூலஉரை நூல்கள் தனித்து ஆராய்வதற்கு உரியவை.

V. மறைவும் மடம் அமைதலும்

சிதம்பரம் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே முத்தையா தொழில்நுட்பக் கல்லூரியின் பின்புறம் அமைந்துள்ள மடம் உமாபதிசிவனார் வாழ்ந்த மடமாகும். இப்பகுதியைக் கொற்றவன்குடி என அழைப்பர். இதற்குப் பௌத்திர மாணிக்கம் என்னும் பெயருமுண்டு.[75] இங்கு, தங்கியுள்ள காலத்துப் பல நூல்களை இயற்றியதோடு மாணவர்களுக்குப் பாடங்கூறும் வழக்கமுடையவராக அவர் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.[76] இவருடைய மாணாக்கர் பலருள் அருள் நமச்சிவாயர் தலைமாணாக்கராகக் கருதத்தக்கவர். உமாபதிசிவனார் வழிபட்டு வந்த தில்லை அம்பலவர் திருமேனி இவரிடம் கொடுக்கப் பட்டதாகக் காணும் குறிப்பினால் இதனை உணரலாம்.[77]

உமாபதிசிவனாரின் சீடர்களுள் ஒருவர் ஆசிரியரின் வழி பாட்டிற்காக மலர்பறித்துக் கொண்டிருந்தார். அவரது தவ ஒளியைக்கண்ட முனிவர் ஒருவர், தாம் கேட்பவனவற்றிற்கு விடைகூறிச் செல்லுமாறு தடுத்தார். விடை கூறாமல் சென்றால் அவர் அரவந்தீண்டி இறந்துபடுவர் எனச் சபித்தார். அம்மாணவர் வழிபாட்டிற்குரிய மலர்களைக் காலத்தொடு கொண்டு செல்ல வேண்டுமென்ற கருத்தினால், அம்முனிவர் இட்ட சாபத்தையும் மதியாமல் கொண்டு சென்றார். வழிபாட்டிற்குரிய மலர்களைக் கொண்டுவந்து சேர்த்ததுடன் அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சியை உமாபதிசிவனாரிடம் கூறினார். உமாபதிசிவனார் புன் முறுவலுடன், ''உன்னை அரவந்தீண்டி இறக்கக்கடவது எனக் கூறினார். அவரிட்ட சாபப்படி ஓர் அரவு வந்து அம்மாணவரைத் தீண்டி உயிர் நீத்தது'' என்றார். அது ஒரு முனிவராகமாறித் தான்பெற்ற சாபத்தைக் கூறி அவருடைய அருள்பெற்றுச் சென்றதாக ஓர் மரபுவழிச் செய்தி காணப்படுகிறது.[78]

மற்றொரு காலத்தில் கோயிலில் நடக்கவிருந்த குடமுழக் கினை நிறுத்த நினைத்த மந்திரவாதி ஒருவரின் ஆற்றலைப் போக்கி குடமுழக்கு நடத்தி வைத்தார் என்ற செய்தி காணப் படுகின்றது.[79]

ஓர் அரசகுமரனின் அலித்தன்மையை நீக்கினார் என்ற செய்தியும் மரபுவழியில் கூறப்பட்டு வருகின்றது.[80]

கொற்றவன்குடியில் இருந்தவாறே மேலைக் கோபுரவாயில் கற்பகவிநாயகருக்கு எதிரில் ஒரு வில்வமரத்தை வைத்து வளர்த் துள்ளார். வடக்குக் கோபுரத்தில் தீயவர்களை அடக்கக்கூடிய ''சடாதரர்'' என்னும் முனிவர் ஒருவரின் பிரதிமத்தைத் தோற்று வித்தார். தெற்குக் கோபுரவாயிலில் நடராசரைத் தரிசிக்கவரும் இரு கழுகுகளின் நிலைய மண்டபத்தைப் புதுப்பித்தார் என்னும் குறிப்பும் மரபுவழி வரலாற்றில் காணப்படுகின்ற செய்தி களாகும்.[81]

இவர் காசுமீரம் வரை சென்று திரும்பினார் என்ற ஒரு குறிப்புக் காணப்படுகின்றது.[82] காசுமீரத்தில் வடமொழி வல்லார் நிரம்ப வாழ்ந்திருந்தனர். இவருடைய, வடமொழிப் புலமையைப் பெருக்கிக் கொள்வதற்குக் காசுமீரம் சென்றமை ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இச்செய்தி பரவலாகப் பேசப்படாமல் ஒருவரால் மட்டுமே சுட்டப்பட்டுள்ளமையும் ஆராயத்தக்கது. எழுபத்தாறு ஆண்டுகள் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்ற இவர், ஒரு சித்திரைத் திங்கள் அத்தநாளில் பரிபூரணம் எய்தினர் என்பர்.[83] இவர் அடக்கம் பெற்ற இடத்தில், இவருடைய சமாதியோடு இவரால் முத்தி அளிக்கப்பெற்ற பெற்றான் சாம்பானின் சமாதியும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உமாபதி சிவாசாரியாரின் வாழ்க்கை வரலாறு பற்றி இரண்டு நூல்கள் உள்ளன.[84] வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய புலவர்புராணத்தில் 42 விருத்தங்களில் இவர் வரலாறு இடம்பெற்றுள்ளது. சாமிநாத தேசிகர் இயற்றிய புராணத்தில் 59 செய்யுட்களில் இவர் வரலாறு உள்ளது. இந்நூல்களை அடியொற்றியே சந்தானாசாரியர் வரலாறு அறியப்பட்டு வருவது மரபாக உள்ளமை ஈண்டு உணரத்தக்கது.

தொகுப்புரை

உமாபதிசிவனார் தில்லைவாழ் அந்தணர்கள் குலத்தில் சீவத்சம் கோத்திரத்தில் தோன்றியவர். இளமை வயதில் தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். தம்குல வழக்கப்படி தில்லைப் பெருமானை வழிபடுவதற்கு உரிய விதிமுறைச் சடங்குகளை எடுத்துக் கொண்டவர்.

மறைஞானசம்பந்தரை ஆசிரியராக ஏற்றுக்கொண்டு சித்தாந்த நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். தில்லைவாழ் அந்தணர்களுடன் கருத்து வேறுபாடு தோன்றிய காலத்துக் கொற்றவன்குடி என்னும் பகுதிக்கு வந்து வாழத் தொடங்கினார்.

உமாபதிசிவனாரால் சங்கற்ப நிராகரணம் என்னும் நூல் எழுதப்பெற்ற காலம் கி.பி. 1313 எனக் கொள்ளும்படியான குறிப்பு அந்நூலில் காணப்படுகின்றது. உமாபதிசிவனாருடைய காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனலாம்.

சித்தாந்த சாத்திர நூல்களில் எட்டு நூல்களை இவர் இயற்றியுள்ளார். இலக்கிய நூல்கள் பலவற்றையும் இவர் இயற்றியுள்ளார் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. வடமொழி நூல்கள் பலவற்றையும் இவர் எழுதியுள்ளார் என்பது அறியத் தக்கது.

பெற்றான் சாம்பானுடைய வரலாறு இவ்வாசிரியருடைய வரலாற்றோடு இணைந்து காணப்படுகிறது. மன்னர்களும் வியந்து போற்றும் வண்ணம் இவர் ஆற்றலைப் பெற்றிருந்தார் என்னும் குறிப்பு உளங்கொளத்தக்கது. சந்தானகுரவர்களில் நான்காம வராக இவர் கூறப்படுகின்றார். இவருடைய மாணக்கர்களில் அருள்நமச்சிவாயர் குறிப்பிடத்தக்கவர். இவருக்குப்பின் ஆசிரிய மரபு அபிடேக மரபாக மாறிவிட்டது.

———

அடிக்குறிப்புகள்

1. நேர்காணல், சி. சிவராசதீட்சிதர், சிதம்பரம், 2—10—1990.
2. சி. சிவராசதீட்சிதர், **சைவ சமய சந்தானாசாரியர் புராணச் சுருக்கம்,** ப. 16.
3. சே. சீனிவாசசர்மா (க.ஆ), 'குஞ்சிதாங்கிரித்தவம்', **சிதம்பரம் சபாநாயகர் கோயில் கும்பாபிடேக மலர்,** ப. 34.
4. திருமூலர், **திருமந்திரம்,** பா. 640.
5. அட்டமாசித்திகளாவன: அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. சான்று: பாண்டிப்பெருமாள் விருத்தி, **சிவஞானபோதம்,** ப. 40.
6. சே. சீனிவாசசர்மா (க.ஆ), 'குஞ்சிதாங் கிரித்தவம்'', **சிதம்பரம் சபாநாயகர் கோயில் கும்பாபிடேக மலர்,** ப. 34.
7. "Child Marriage involving boys below twelve years and girls below seven years are a common phenomenon in the community. This practice seems to have had a remarkable continuity as Thurston has made the same observation as early as 1909.

   V. Gomathinayagam, *A Sociological Study of the Dikshitar Community of Chidhambaram,* (Thesis), Annamalai Uni. 1979, p. 19.
8. சி. சிவராசதீட்சிதர், **சைவசமய சந்தானாசாரியர் புராணச் சுருக்கம்,** ப. 17.
9. தி. பொன்னம்பலம் (க.ஆ.), 'தில்லைத் திருமடங்கள்', **சிதம்பரம் சபாநாயகர் கோயில் கும்பாபிடேக மலர்,** ப. 258.
10. சுந்தரர் தேவாரம், **திருத்தொண்டத்தொகை,** செய். 1.
11. "All married Dikshitars, except widowers are the members of general body of their caste association known as 'potu Dikshitars usually called 'potu', which manages the affairs of the temple. The names of all members are contained in a list, which is kept upto date by adding the

names of those who may get married and deleting the deceased, the widowed and those expelled. The first nine from the list of names serially ordered from executive committee. They elect one among themselves as secretary and hold office for a period of one year. In the subsequent year, the next nine constitute the executive committee and this goes on till all the members get an opportunity to serve on the executive committee. But however the treasurer who holds office by the same procedure is changed. Once in twenty days to avoid possible mismanagement of funds. A common man gives oral message to members regarding the meetings of "potu" held periodically in the premises of the temple. All matters relating to the temple are decided by a vote of the majority yet any one member can put a vote on the execution of any business. They framed eleborate rules for efficient management as early as 1849.

V. Gomathinayagam, *A Sociological Study of the Dikshitar Community of Chidhambarm*, (Thesis), Annamalai Uni. 1979, p. 98–99.

12. நேர்காணல்: சி. சிவராசதீட்சிதர், சிதம்பரம். 2—10—1990.
13. Every married male member has a voice and control in the management of the temble. The right of management does not go by succession; yet it is ascribed in the sense that it is inherent in every member by virtue of his death. Therefore in a particular family and at a given time, father and son will have equal voice in the temple management. But a married Dikshitar is not considered to be qualified for performing the prinicipal rituals in the temple untill he is initiated into a ceremony called 'Diksha'.

V. Gomathinayagam, *A Sociological Study of the Dikshitar Community of Chidhambaram*, (Thesis), Annamalai University, 1979, p.97.

14. சி. சிவராசதீட்சதர், **சைவசமய சந்தானாசாரியர் புராணச் சுருக்கம்**, பக். 17-18.
15. நேர்காணல், சி. சிவராசதீட்சிதர், சிதம்பரம், 10—5—1991.
16. உமாபதிசிவம், **சங்கற்ப நிராகரணம்**, அடி. 26–27.
"ஏழஞ் சிருநூ றெடுத்த வாயிரம்
வாழுநற் சகன மருவா நிற்ப"
17. தி. வை. சதாசிவபண்டாரத்தார், **தமிழ் இலக்கிய வரலாறு** (13, 14, 15 ஆம் நூற்றாண்டு), ப. 59.
17அ. மு. அருணாசலம், **தமிழிலக்கிய வரலாறு - பதினான்காம் நூற்றாண்டு**, ப 160.
18. உமாபதிசிவம்,க. வெள்ளைவாரணன் (உ.ஆ.) **திருவருட்பயன்**, ப. 11.
19. இரா. செல்வகணபதி, **தமிழ் வளர்க்கும் தருமபுரம்**, பக். 31-32.
20. க.மா. வேங்கடராமையா (க.ஆ) 'சைவசமய குரவர், சந்தான குரவர் காலம்', **ஞானசம்பந்தம்** – மலர் 25; இதழ். 2; பக். 18–21.
21. **அபிதான சிந்தாமணி**, ப. 245.
22. சோமசுந்தர தேசிகர், **செந்தமிழ்** – தொகுதி 27, ப. 66.
23. இரா. செல்வகணபதி, **தமிழ் வளர்க்கும் தருமபுரம்**, பக். 31–32.
24. சோமசுந்தர தேசிகர், **செந்தமிழ்** - தொகுதி 27, ப. 66.
25. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு – பதினான்காம் நூற்றாண்டு**, ப. 160.
26. அ. சுவாமிநாதன், **தமிழக வரலாறும் பண்பாடும்**, ப. 235.
27. காண்க: அட்டவணை எண்.
28. **சுந்தரர் தேவாரம்**, திருத்தொண்டத்தொகை, பா. 1, 10.
29. உமாபதிசிவம், **கோயிற்புராணம்**, 'இரணிய'., பா. 107.
30. சு. சாமிநாத தேசிகர், 'உமாபதி சிவாசாரியர் புராணம், **சந்தானாசாரிய புராண சங்கிரகம்**, பா. 4.
31. மேலது, பா. 8.
32. மேலது, பா. 12.
33. மேலது, பா. 13.
34. மேலது, பா. 14.
35. மேலது, பா. 18.
36. மேலது, பா. 31.

37. மெய்கண்டார், **சிவஞானபோதம்,** சூ. 12.

38. சு. சாமிநாத தேசிகர், 'உமாபதிசிவாசாரியர் புராணம்', பா. 21.

39. இறைவனின் ஆணை :

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியாற் கெழுதியகைச் சீட்டுப் படிமிசைப்
பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

சான்று : சுப்பிரமணியத்தம்பிரான், **குருபரம்பரை விளக்கம்,** ப. 37.

40. சு. சாமிநாததேசிகர், 'உமாபதிசிவாசாரியர் புராணம்' பா. 37.

41. சுப்பிரமணியத் தம்பிரான், **குருபரம்பரை விளக்கம்,** ப. 40.

42. க. வெள்ளைவாரணன் (உ.ஆ) **திருவருட்பயன்,** பக். 13–15.

43. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு – பதினான்காம் நூற்றாண்டு,** ப. 200.

43அ. கு. சுந்தரமூர்த்தி, 'ஆராய்ச்சி முன்னுரை', மெய்கண்ட சாத்திரம், ப. 7.

44. க. வெள்ளைவாரணன் (உ.ஆ), 'உமாபதிசிவாசாரியர் வரலாறு' **திருவருட்பயன்,** ப. 14.

45. எஸ். அனவரத விநாயகம் பிள்ளை, **சித்தாந்த சாத்திரம்,** ப. 1161.

45அ. தி. வை. சதாசிவபண்டாரத்தார், **தமிழ் இலக்கிய வரலாறு,** 13, 14, 15 நூற்றாண்டு, ப. 59.

45ஆ. டி. பி. சித்தலிங்கம், **சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும்,** பக். 141–43.

46. தனிப்பாடல் :

எண்ணும் அருள்நூல் எளிதின் அறிவாருக்கு
உண்மை நெறிவிளக்கம் ஓதினான் வண்ணமிலாத்
தண்காழித் தத்துவனார் தானே புனைந்தருளும்
நண்பாய தத்துவ நாதன்.

சான்று : க. வெள்ளைவாரணன் (உ.ஆ), **திருவருட்பயன்,** ப. 13.

47. உமாபதிசிவம்,' அவையடக்கப்பாடல்', **சிவப்பிரகாசம்,** பா. 12.

48. மேலது, பா. 7.

49. மேலது, பா. 6.

50. இலக்கணம் சிதம்பரநாதர் உரை, கே. நாகலிங்க முதலியார் (ப.ஆ.), ஆண்டு 1897.

51. நல்லசிவ தேவர் சிந்தனை உரை, சமாஜம், ஆண்டு 1934. திருஉருகமாமலை அடிகள் உரை, ஆண்டு 1908 & 1963. இலங்கை மு. திருவிளங்கம்புத்துரை, ஆண்டு 1918 & 1933.
52. H.R. Hoisington, *The Journal of American Oriental Studies*, 1854.

52 நிரம்ப அழகிய தேசிகர் உரை, க. வெள்ளைவாரணன் (ப.ஆ) நல்லசிவதேவர் சிந்தனை உரை, சமாஜம், ஆண்டு 1940.

53. தே.ஆ. சீனிவாசாசாரியர் (உ.ஆ). திருவாவடுதுறை, 1956. கா. சுப்பிரமணிய பிள்ளை (உ.ஆ.), தருமபுரம், 1962.
54. ச. மெய்யப்பன், **தில்லைத்திருக்கோயில்**, ப. 23.
56. உமாபதிசிவம், **நெஞ்சுவிடுதூது**, அடி. 111.
57. டி.பி. சித்தலிங்கம், **சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும்**, ப. 140.
58. கா. சுப்பிரமணியபிள்ளை, தருமபுர ஆதீனம், 1962.
கீ. ராமலிங்கமுதலியார், **உண்மை நெறி விளக்க ஆராய்ச்சி உரை**, காஞ்சிபுரம், 1948.
59. கு. சுந்தரமூர்த்தி, **அறுவகைச் சமயம், சைவசித்தாந்தம் ஒப்பீடு**, பக். 125-129.
60. உமாபதிசிவம், சங்கற்ப நிராகரணம், 'சைவவாதி நிராகரணம்', அடி. 66-74.
61. உமாபதிசிவனார், **திருப்பதிக்கோவை**, பா. 14.
62. காண்க: அட்டவணை எண்.
63. காண்க: அட்டவணை எண்.
64. நம்பியாண்டார் நம்பி, **திருத்தொண்டர் திருஅந்தாதி**, பா. 4.
65. உமாபதிசிவனார், **திருத்தொண்டர் புராண சாரம்**, பா. 6.
66. டி.பி. சித்தலிங்கம், **சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும்**, பக். 149-50.
67. மாணிக்கவாசகர் பாடிய திருப்பதிகள் பதினான்கு: உத்திர கோசமங்கை, ஓரியூர், கல்லாடம், காந்தம்புத்தூர், சந்திர தீபம், திருப்பெருந்துறை, நந்தம்பாடி, பஞ்சப்பள்ளி, பட்ட மங்கை, பாண்டூர், பூவலம், மகேந்திரமலை, வாதவூர், வேலம் புத்தூர் ஆகியன.
உமாபதிசிவனார், **சிவசேத்திரச் சிவநாமக் கலிவெண்பா**, கண்ணி. 291-92.

68. உமாபதிசிவம், **சிவசேத்திரச் சிவநாமக் கலிவெண்பா**, கண்ணி. 287-88.
69. காண்க : அட்டவணை எண்.
70. மேற்கோள் : ஏ. சுந்தரேச சிவாசாரியார் (உ.ஆ.) 'முகவுரை' **சதரத்தின ஸங்கிரஹம்**, ப. 2.
71. டி. பி. சித்தலிங்கம், **சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும்**, ப. 145.
72. க. மீ. ராஜகணேச தீட்சிதர் (உ.ஆ), **குஞ்சி தாங்கிரிஸ்தவம்**, (சிதம்பரம், 1958).
73. ஏ. சுந்தரேச சிவாசாரியார் (உ.ஆ.) **சதரத்தின ஸங்கிரஹம்**, ப. 345.
74. மேலது, பக். 346-47.
75. க. வெள்ளைவாரணன், **தில்லைப்பெருங்கோயில் வரலாறு**, ப. 6.
76. கா. சுப்பிரமணியபிள்ளை (க.ஆ.), 'உமாபதிசிவாசாரியர் புராணம்', **செந்தமிழ்ச் செல்வி**, தொகுதி 3, பக். 491–492.
77. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு, பதினான்காம் நூற்றாண்டு**. ப. 161.
78. சி. சிவராசதீட்சிதர் (தொ. ஆ.), **சைவ சமய சந்தானாசாரியர் புராண சுருக்கம்**, பக். 18-19.
79. மேலது, ப. 19.
80. மேலது, ப. 19.
81. மேலது, ப. 19.
82. கே. சீனிவாச சர்மா (க.ஆ.), 'குஞ்சிதாங்கிரித்தவம்', **சிதம்பரம் சபாநாயகர்கோயில் கும்பாபிஷேக மலர்**, பக். 34-35.
83. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை (ப. ஆ), **சந்தானாசாரிய புராண சங்கிரகம்**, ப. 34.
84. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், 'உமாபதி சிவாசாரியர் சருக்கம்', புலவர் புராணம், (சென்னை-1931). பக். 243-49.
84. அ. சாமிநாததேசிகர், 'உமாபதிசிவாசாரியர் புராணம்' சந்தானாசிரிய புராண சங்கிரகம் (திருவாடுதுறை, 1951), பக். 18-34.

உமாபதி சிவமும் தில்லைப் பெருங்கோயிலும்

தலம், மூர்த்தி, தீர்த்தம் என்ற மூன்று வகையாலும் முதன்மை பெற்றுத் திகழ்வது தில்லையம்பதியாகும். ''கோயில்'' என்ற சொல், இறைவன் கோயில் கொண்டுள்ள இடங்கள் அனைத்தையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகும். கோயில் என்றே தில்லையைக் குறிக்கும் வழக்கம் உடையவர்கள் சைவர்கள் என்பதைக் கோயில் புராணம் என்னும் சொல்லால் சிதம்பரத்தைப் பற்றிய புராணத்திற்குப் பெயர்சூட்டி இருப்பதால் அறியலாம். ''மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே''[1] என்பதால் கூத்தப் பெருமானின் திருமேனி முதன்மை பெறுவதை அறியலாம். ''தீர்த்தம் என்பது சிவகங்கையே''[2] என்னும் தொடரால் தீர்த்தங்களுள் குறிப்பிடத்தக்கதாகச் சிவகங்கை கருதப் பட்டுள்ளமை காணலாம்.

கூத்தன் ஆடல்புரிகின்ற தலங்கள் ஐந்து. அவை இரத்தின அம்பலம், பொன்னம்பலம், வெள்ளியம்பலம், தாமிர அம்பலம், சித்திர அம்பலம் என்பவை. திருவாலங்காடு இரத்தின அம்பல மாகவும், தில்லை பொன்னம்பலமாகவும், மதுரை வெள்ளி அம்பலமாகவும், திருநெல்வேலி தாமிர அம்பலமாகவும், திருக் குற்றாலம் சித்திர அம்பலமாகவும் கூறப்பெற்றுள்ளன.[3] பஞ்ச பூதத்தலங்களுள் காஞ்சி, திருவாரூர் மண்ணுக்குரிய தலங்களாகக் குறிப்பிடப்பெறும். திருவானைக்கா நீர்த்தலமாகும். திருவண்ணா மலை தீக்குரிய தலமாகும். திருக்காளத்தி வாயுத்தலமாகும். தில்லை ஆகாயத்தலமாகக் கொள்ளப்பெறும். அம்பலங்களில் பொன்னம்பலமாகவும், பஞ்சபூதத்தலங்களில் ஆகாயத்தலமாகவும் அமைகின்ற ஒன்றாகத் தில்லை விளங்குகின்றது. ஏனைய அம்பலங்களாக அமைந்துள்ள நான்கு தலங்களும் பஞ்சபூதத் தலங்களில் ஒன்றாக அமையவில்லை. பஞ்ச பூதத்தலங்களாகக் குறிப்பிடப்பெற்ற மண், நீர், தீ, வாயு பற்றிய நான்கு தலங்களும் அம்பலங்களுள் ஒன்றாக அமையவில்லை. அம்பலமாகவும், பஞ்ச பூதத்தலங்களுள் ஒன்றாகவும் அமைந்து விளங்கும் தன்மையைக் கொண்ட ஒரே தலம் தில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுந்தரர், கோயில் வழிபாடு நிகழ்த்தும் மரபினைரைத் திருத் தொண்டத்தொகையில் இரு நிலைகளில் சுட்டியுள்ளார். அவர்களுள் ஒருசாரார் தில்லைவாழ் அந்தணர்கள்;[4] மற்றொரு சாரார் மூப்போதும் திருமேனி தீண்டுவார்.[5] மூப்போதும் திருமேனி தீண்டுவார் எனப்படுவோர் ஆதிசைவர் அல்லது சிவாசாரியர்கள் எனப்படுவர். அத்தகைய ஆதிசைவ மரபில் தோன்றியவரே சடங்கவி சிவாசாரியார் எனச் சேக்கிழார் குறிப்பிடுவதும் கருதத்தக்கது [6] தில்லைவாழ் அந்தணர்கள் மற்றைய இடங்களுக்குச் செல்லாத இயல்பினர் என்பது "தில்லைவாழ்" என்ற அடையினால் பெறப்படும் மற்றைய இடங் களுக்குச் சென்று நிலையாகக் குடியிருக்க மாட்டார்கள் என்ற குறிப்பினையே அத்தொடர் புலப்படுத்துகின்றது. இவர்கள் காலங் காலமாகத் தில்லையிலிருந்து வழிபட்டனர் என்ற குறிப் பினை ஆழ்வார்களும்,[7] நாயன்மார்களும்[8] குறிப்பிட்டுச் செல்வதால் உணரலாம்.

கோயிற்பணிகளில் வழிபாடு செய்வோர், கோயிலை நிருவகிப்போர் என்ற இருசாரார் கோயில்களைப் பாதுகாத்து வருகின்றமையைப் பொதுவாகக் காணலாம். ஆனால் தில்லையும், தில்லைவாழ் அந்தணர்களும் இம்மரபினின்று வேறுபட்டவர்கள் என்பது அறியத்தக்கது. வழிபாடு இயற்றுகின்ற அவர்களே நிருவாகத்தையும் செய்கின்றவர்களாக இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தில்லைவாழ் அந்தணர்கள் தில்லைக் கூத்தனிடத்தும், தில்லைப்பெருங்கோயிலிடத்தும் பெரிதும் ஈடுபாடுடையவர்கள் என்பது காலங் காலமாக அறியப்பெற்ற செய்தியாகும். தில்லை மூவாயிரவர் எனச் சேக்கிழார் குறிப்பிடுவதும்,[9] அம்மூவாயிரவரில் தில்லைக் கூத்தனும் ஒருவர்[10] என்று குறிப்பிடுகின்ற வழக்கும் ஈண்டு எண்ணத்தகுவதாகும். அத்தகைய மரபில் தோன்றிய உமாபதிசிவனார் தில்லைக் கூத்தனிடத்தும் திருக்கோயிலின் பாலும் ஈடுபாடு கொண்டு வழிபட்டார் என்பது வியப்புக்குரிய ஒன்றன்று.

உமாபதிசிவனார் இயற்றிய நூல்களில் கோயிற் புராணம், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம் என்பன தில்லைப் பெருங்கோயிலுடன் தொடர்புடைய இலக்கிய

நூல்களாக அமைந்துள்ளமை கருதத்தக்கது. அம்மூன்று நூல்களும் ஈண்டு ஆராயப்படுகின்றன. அவற்றைப் பேறுபெற்ற மூவர், ஆடல்வல்லானின் நாள் வழிபாடும் சிறப்பு வழிபாடும், திருமுறைக்கருவூலம், அருண்மொழித் தேவரின் அருட்பணி என்னும் நான்கு நிலைகளில் காணலாம்.

I. பேறுபெற்ற மூவர்

தில்லையம்பலத்தை வழிபடும் பேறுபெற்றவர்களில் மூவர் குறிப்பிடத்தக்கவர். அவர்களில் புலிக்கால் முனிவர், பதஞ்சலி முனிவர், இரணியவர்மன் என்போர் வரலாறுகள் ஈண்டு ஆராயப்படுகின்றன.

புலிக்கால் முனிவர்

மத்தியந்தின முனிவர் என்ற மாமுனிக்கு ஒரு பிள்ளை தோன்றினன். முனிவரின் பெரிய தவங்காரணமாகப் பிறந்த பிள்ளையும் ஒழுக்கமுடையவனாகக் காட்சி தந்தான். இளம் வயதில் எல்லாக்கலைகளையும் கற்பித்துத் திருவைந் தெழுத்தையும் முனிவர் உபதேசித்தார். எல்லாத் தவங்களிலும் மேலான தவத்தைத் தனக்குத் தெரிவிக்க மேண்டுமென்று அப்பிள்ளை முனிவரைக் கேட்ட காலத்தில், "சிவவழிபாடே எல்லாவற்றிலும் சிறந்த தவமாகும்" என அருள் செய்தார்.[11] சிவவழிபாட்டிற்குச் சிறந்த தவம் எது என்ற வினாவிற்கு விடையாகத் தெற்கிலுள்ள தில்லைவனத்தை முனிவர் கூறுகின்றார். தில்லைவனத்தில் கோயில்கொண்டு விளங்கும் மூலட்டான ஈசனை வழிபடுமாறு அறிவுறுத்தினார். அறிவுரை பெற்ற பிள்ளை தில்லைவனம் நோக்கிப் புறப்பட்டார். பல்வேறு வளமான வழிகளைக் கடந்து மலர்கள் நிறைந்த தில்லைவனத்தை அடைந்து நீர்வாரும் கண்ணோடு மனம்மகிழ இறைவனைப் போற்றினார்.

வடக்கில் ஒரு பொய்கையும், அதனருகில் ஆலமரநிழலில் சிவலிங்கமும் இருக்கக் கண்டதாக அமைந்துள்ள குறிப்பு மனங் கொள்ளத்தக்கதாகும்.[12] இன்றைக்கு இருக்கின்ற மூலட்டான ஈசனார், அன்று ஆலின்கீழ் இருந்ததாகவே காணப்படுகின்றது. மன்றம், பொதுவில் என்பன ஆலமர நிழலினிடையே அமைக்கப் பட்டிருந்ததாகக் காணப்பெறும் சங்க இலக்கியக் குறிப்புக்கள்

ஈண்டு எண்ணத்தகுவன.[13] தில்லைவனத்தின் கீழ்ப்பகுதியில் ஆலமர நிழலில் மூலட்டான ஈசனைக் கண்டு வழிபட்ட முனிவர், மேற்கு நோக்கிச் சென்று அங்கு ஒரு குளமும் மலர்ப்பொழிலும் இருப்பதைப் பார்த்து, தில்லைச் செடி நிழலில் ஒளிவடிவமான சிவலிங்கம் ஒன்றனை நிறுவி அந்த இரண்டு இடங்களையும் வழிபடும் இடங்களாகக் கொண்டு வழிபட்டு வந்தார். இவரால் நிறுவப்பட்ட சிவலிங்கமே தில்லை மரத்தின்கீழ் அமைந்திருப்பதாகக் காணப்படுகின்ற குறிப்பு மனங்கொள்ளத்தக்கது.[14]

வழிபாட்டுக்குரியவாக உள்ள கமண்டலம், தண்டு, பூக்கூடை சமிதை, தருப்பைப்புல், அருகு, சாக மூல பலங்கள், பலாசுஇலை என்பனவற்றை முறையாக அமைத்துக்கொண்டு வழிபடுவதை இளமுனி வழக்கமாகக் கொண்டிருந்தார்.[15] ஒருநாள், மலர்களை விதிப்படி ஆராய்ந்து எடுக்குங்கால் அவருக்கு மனநிறைவாக மலர்கள் இல்லாமையால் மனம் வருந்தினார். வண்டுகள் மொய்த்த மலராக இருப்பனவற்றை வழிபாட்டிற்குரியனவாகக் கொள்வது ஏற்புடையதல்ல. வண்டு ஊதுவதற்கு முன்பாகவே பின்னிரவில் சென்று மரங்களில் மலர் எடுக்கலாமென்றால் பனி வழுக்கிவிடுகிறது என வருந்திக்கொண்டிருந்தார். இவ் வருத்தத்தைப் போக்குவதற்கு இறைவனை நோக்கித் தவம் இருந்தார். அதன் காரணமாகத் தம்முன் தோற்றமளித்த இறைவன்பால் மரங்களில் பற்றி ஏறுவதற்கு வாய்ப்பாகக் கையுங் காலும் புலிக்கால்களாகவும், இரவில் பார்ப்பதற்கு ஏதுவாக விரல் களில் கண்களையுப் வேண்டிப்பெற்றார்.[16] இவ்வாறு வரங்களால் பெற்ற தோற்றத்தால் அவருக்கு 'வியாக்ரபாதன்' என்னும் பெயர் பூத கணத்தாரால் இடப்பெற்றது என்னும் குறிப்பும் காணப்படுகின்றது.[17]

இறைவனை வழிபடுவற்குப் புட்பவிதிகள் பல கூறப் பட்டுள்ளன. புட்பவிதிகள் கூறப்பட்ட நூல்களில் பல கருத்துக்கள் காணப்படுகின்றன.[18] அவற்றுள் வண்டுமூசாமலர் இறைவனுக்கு உகந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வியாக்ரபாதர் வண்டு எழுவதற்கு முன்னாக எழுந்து பொய்கையில் நீராடி, மந்திரங் களை உச்சரித்துக் கொண்டு, கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ முதலியவற்றைக் குற்றமறத் தெரிந்தெடுத்தார் என்னும் குறிப்புக்

காணப்படுகின்றது.[19] இவற்றுள் கோட்டுப்பூ, கொடிப்பூ என்பன நிலப்பூவின் இரண்டு வகைகள் ஆதலால் நிலப்பூ எனத் தனியே சுட்டாமல் ஆசிரியர் கூறிச்சென்றுள்ளார் எனக்கருதலாம். பின்னர் எழுந்த புட்பவிதிகளுக்கெல்லாம் வடிவம் கொடுக்கின்ற நிலையில் வியாக்ரபாதரே முன்னோடியாகச் செயல்படுத்திக் காட்டினார் எனலாம். மலரை எப்பொழுது, எவ்வாறு, எப்படி எடுத்து இறைவனுக்குச் சூட்டவேண்டும் என்னும் அடிப்படைக் கருத்துக்களைச் செயற்படுத்திய முன்னோடியாக வியாக்ரபாதர் காணப்படுகிறார்.

வியாக்ரபாதமுனிவர் திருமூலட்டானத் தேவரையும், பிற் காலத்தில் மேற்கே புலீச்சரம் என்று வழங்கிய கோயிலையும் வழிபட்டார் என்னும் குறிப்பு கோயிற்புராணத்தால் அறியப் படுகிறது.[20] பொதுவாகத் தில்லைவனம் என்னும் வழக்கு சிதம்பரத்திற்கு இருப்பினும், தில்லைமரம் புலீச்சரம் கோயிலுக்கு உரியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை கருதத்தக்கது. அதனை,

> ''திடமார் தருவே நிழலா வெழிலார்
> சிவலிங் கமிருத் தியருத் தியொடங்
> கிடமா கவிரண் டிடமும் பணிவுற்று''[21]

என்பதால் அறியலாம். திருமூலட்டானத் தேவர் ஆலடி நீழலில் உறைந்ததாகக் காணப்படும் குறிப்பும் கருத்தில் கொள்ளத்தக்கது. அதனை,

> ''பேரா வகைசெல் லவொரா லநிழற்
> பிரியா தபிரா னெதிர்நேர்பட''[22]

என்னும் குறிப்பினால் ஆலமர நிழலிலே திருமூலட்டநாதர் கோயில் கொண்டிருந்த குறிப்புப்புலப்படுகின்றது. பொதுவாகத் தில்லைவனம் என்பது சிதம்பரத்திற்குப் பெயராக இருப்பினும், திருமூலட்டநாதர் ஆலமரத்துநிழலில் இருந்ததாகக் காணப் படுகின்ற குறிப்பு மனங்கொள்ளத்தக்கது. தில்லைவனத்தில் நுழைந்து ஒரு வாவியையும் அதன் கரையில் திருமூலட்ட நாதரையும் பார்த்த வியாக்ரபாதர், சரி வழியே சென்றார் என்ற குறிப்பு குறிப்பிடத்தக்கது.[23] திருமூலட்டநாதரை வணங்கி மேற்கு

நோக்கிச் சென்ற வியாக்ரபாதர் ''சரி'' வழியே சென்றார் என்ற குறிப்பும் ஈண்டு நோக்கத்தக்கது. இவ்விருவகைக் குறிப்புக்களால் வியாக்ரபாதர் இங்குவந்த காலத்து முறையான சாலைகள் இல்லாமல் ஒற்றையடிப்பாதைகளாகவே அமைந்திருந்தன என்னும் குறிப்புப் புலப்படுகின்றது. எனவே தில்லைவனம் என்னும் பெயருக்கு ஏற்பவே இஃது ஒரு பெரிய வனமாகவே காட்சியளித்திருக்க வேண்டும் எனலாம். தென்னார்க்காடு, வடார்க்காடு என்னும் பெயர்களும் இப்பகுதி காட்டுப் பகுதியாகவே இருந்தது என்பதைப் புலப்படுத்துகின்றமையைக் காணலாம். தில்லைவனத்தை அடுத்துள்ள முல்லைவனம், கதம்ப வனம் என்னும் பெயர்களும் ஈண்டு நினைக்கத் தகுவனவாகும். முல்லைவனம் என்பது விருத்தாசலத்தையும், கதம்பவனம் என்பது தில்லை - முல்லைவனங்களுக்கு இடைப்பட்ட எறும்பூரையும் குறிக்கும் வழக்குகளாக உள்ளன.[24]

வியாக்ரபாதர் தம் தந்தையார் இயற்றிக் காட்டிய வழியில் வழிபாட்டுக்கு உரிய முறைகளை மேற்கொண்டு ஒழுகினார் எனலாம். விடியற்காலை வைகறைப்போதில் நீரில் மூழ்கி நீர்ப் பூக்கள் எடுத்தலையும், பின்னர்க் கோட்டுப்பூ, கொடிப்பூக்கள் எடுத்தலையும் முறையாகச் செய்து வந்தார். தாம் நிறுவிய சோதிலிங்கத்திற்கு அண்மையில் பர்ணசாலை ஒன்று அமைத்துக் கொண்டு அதில்தங்கி மூலத்தானத்துடன் இரண்டையும் வழிபட்டு வந்தார்.[25] காலத்தோடு நியமங்களைச் செய்தல் இவருடைய வழக்கமாகும். மணமுள்ள நீரைக் கமண்டலத்தில் எடுத்தும், தண்டு கொண்டு நியதியை மேற்கொள்வதும் இவரது இயல்பாகும். பூக்கூடை நிறைந்த மலர்கள், சமிதை. தருப்பை, அருகம்புல், சாக மூலங்கள், பலாசுஇலை முதலான பொருட்களைக் கொண்டு முறைப்படி வழிபட்டதாகக் காணப்படுகின்ற குறிப்பு மனங்கொள்ளத்தக்கதாகும்.[26] வழிபாட்டிற்குரிய பொருள்களில் தருப்பை, அருகம்புல், பலாசுஇலை, சாக மூலங்கள் ஆகியவற்றில் காணப்படாத சில குற்றங்களைத் தாம் தொகுத்திருந்த மலர்களில் கண்டார். இதுவே அவருடைய தவத்திற்கு அடிகோலிய நிகழ்ச்சியாகும். இறைவனை நோக்கிப் பெருந்தவம் மேற்கொண்டார். இவருடைய மன உறுதியை நோக்கிய இறைவன் இவர்முன் தோன்றி வேண்டும் வரங்களைக் கேட்கு

மாறு கூறினார்.[27] பொன்னையோ, பொருளையோ. மண்ணை யோ, பெண்ணையோ விரும்பாமல் தம்வழிபாட்டிற்கு உகந்ததான சிறந்த மலர்களைத் தொகுக்க வேண்டும் என்னும் அவாவே இவருக்கு முந்தியது. அதனால் இறைவனை நோக்கி மலர்கள் தொகுக்குங்கால் ஏற்படுகின்ற. இரண்டு வகையான குறை களையும் போக்கி மலர் பெற வேண்டும் என்னும் விருப்பினைத் தெரிவித்தார். விடியற்காலைப் போதில் வண்டுமூசாத மலர் களை எடுப்பதற்கு விரல்களில் கண் வேண்டும் என்பது ஒரு குறிப்பு. பனி விழுந்த மரங்களில் ஏறமுடியாத நிலையை மனத்தில் கொண்டு புலியின் காலும் கையும் அமைய வேண்டும் என்பது அவரின் மற்றொரு வேண்டுதல் ஆகும்.[28]

இதனால் இறைவன் மீது வியாக்ரபாதருக்குள்ள எல்லை யற்ற அன்பு புலப்படுகின்றது. ''ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார், வீடும் வேண்டா விறலின் விளங்கினார்''[29] என்னும் இலக்கணத்திற்கு இலக்கியமாக அவர் திகழ்ந்துள்ளார் என்பதைக் காணலாம். அவர் வேண்டுகோட்படி, இறையருளால் புலிக்கால் களையும் கண்களையும் பெற்றார்.

எனவே ''புலிக்காலர்'' என்னும் பெயர் இவருக்கு வந்தது.[30] இதுவே வடமொழியில் ''வியாக்ரபாதர்'' என வழங்கப் படுகின்றது. தில்லைவனம் என்னும் பெயர் மாறிபுலியூர், பெரும்பற்றப்புலியூர் என்னும் பெயர்கள் ஏற்பட இவரின் வழி பாட்டு நிலையே காரணமாகும்.

இவர் உறுதிப்பாட்டையும், இவர் பெற்ற புலிக்காலையும் அறிந்த தந்தையார் இவரைக்கண்டு மகிழ்ந்தார். அப்பொழுது அவர் தந்தை தம்பிள்ளை இல்லறத்தில் ஈடுபடவேண்டும் என்னும் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். அவ்விருப்பத்தைப் புலிக்காலர் நிறைவேற்றினார். அவர்களுடைய இல்லற வாழ்வில் பெற்ற குழந்தைக்கு ''உபமன்னியன்'' என்னும் பெயரை இட்டனர். உபமன்னியன் குழந்தைப்பருவத்தில் மாமன் வீட்டில் வளர்க்கப் பெற்றார். வசிட்டர் அருந்ததி தம்பதியர் உபமன்னியனை உயர்ந்த நிலையில் வளர்த்தனர். குறிப்பிட்ட காலக்கட்டத் திற்குப்பின் உபமன்னியன், தந்தை வீட்டிற்கு வந்தார். மாமனான வசிட்டர் வீட்டில் கிடைத்த நல்ல பால் போன்ற உணவு இங்கே

இவருக்குக் கிடைக்கவில்லை. அதற்கு அவர்கள் ஏழ்மையே காரணமாக இருந்தது. பால்வேண்டி அழுகின்ற உபமன்னியனை மூலட்டானத் தேவரிடம் கொண்டு வந்துவிடுத்தனர். இறைவன் உபமன்னியனுக்குப் பாற்கடலையே ஈந்ததாக ஓர் குறிப்புக் காணப்படுகின்றது.[31]

"பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்"[32]

என்னும் பாடல் இத்தலத்திற்கு உரியதாக ஆனமைக்கு உபமன்னியனே காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தைக்குப் பால் கொடுப்பதற்குக் கூட இயலாத வறுமை நிலை இருந்தும், புலிக்கால் முனிவர் பொருள் வேண்டிப் பெற வில்லை. வேண்டியவற்றை வேண்டியபடியே கொடுக்கின்ற இறைவனின் அன்பைப் பெற்றிருந்தும் அவர் தமக்குப் பொருள் வேண்டுமென்று கேட்காத இயல்பு இக்கதையால் புலப்படுவதை அறியலாம். பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதபொழுதும், இறைவனிடம் சென்று தன்மகனுக்குப் பால் வேண்டும் என்று கேட்காமல் மூலட்டானத் தேவரிடம் குழந்தையைக் கொண்டு போய்விட்ட குறிப்பும் உளங்கொள்ளத்தக்கதாகும்[33] பால் வேண்டுமென்று கேட்குமளவிற்கு வளர்ச்சி பெறாதிருந்த அக் குழந்தையின் தேவையை அறிந்து பாற்கடலையே கொண்டுவந்து விட்ட இறைவனின் பெருங்கொடைத்திறம் இக்கதையால் அறியப்படும்.

இல்லறவாழ்வில் ஈடுபட்டிருந்த புலிக்காலருக்கு மனக்குறை ஒன்று இருந்தது. தாருகவனத்தில் நாற்பத்து எண்ணாயிரம் மாமுனிவர்களுக்கு இறைவன் தம் ஆடலைக்காட்டி அருள்செய்த திறத்தை நினைந்து அப்பேறு தமக்குக் கிட்டாமையை எண்ணி வருந்தினார். தந்தையார் அத்தகைய தாருகவனத்தை இறைவனை வழிபடுதற்குரிய இடமாகக் காட்டாமல், திருமூலட் டானத் தேவரை வணங்கி இருக்குமாறு கூறியதை நினைந்து வருந்தினார். மத்தியந்தனமுனிவர் தமக்குச் சரியான வழிகாட்ட வில்லையோ என்று கூட வருத்தப்பட்டார். ஒரு நெறி சரியானதா அல்லவா என்பது அது முற்ற முடிந்த பிறகே தெரிவ

தாகும். அதனைப் பொறுத்திருந்தே பார்த்தல் வேண்டும். ஆனால் முன்னவர்கள் காட்டுகின்ற நெறியில் முற்றிலும் சென்று காணாமல் அறைகுறையாக உணர்ந்து முன்னவர்களைக் குறை சொல்லுகின்ற மக்களின் இயற்கையைக் காட்டுவதாக இப்பகுதி அமைந்துள்ளமையைக் காணலாம். ஏனெனில், இறைவனின் ஆனந்தத் தாண்டவத்தைக் காண்பதற்கு இஃது ஒன்றே ஏற்ற தலம் என்ற கருத்தினைப் பின்னர் அவரே தெரிவித்துள்ளமை ஈண்டுக் கருத்தில் கொள்ளத்தக்கது.

பதஞ்சலி முனிவர்

இறைவனின் ஆனந்தத் தாண்டவத்தைக் காண்பதற்குரிய பேற்றினைப் பெற்றவராகப் பதஞ்சலிமுனிவர் கருதப்படுகின்றார். திருமாலினுடைய படுக்கையாக இருந்த ஆதிசேடனின் தோற்றமே பதஞ்சலி முனிவர் என்பது கோயில் புராணத்தால் அறியப் படுகின்றது.[34] ஒருமுறை திருமால் அறிதுயிலில் எப்பொழுதையும் விட மகிழ்ச்சியாக இருந்தார். அம்மகிழ்ச்சிக்குரிய காரணத்தை ஆதிசேடன் வினவுங்கால் அதற்குரிய காரணத்தை அவர் விவரித்தார். இறைவன் தம்மை மோகினியாக வடிவெடுக்குமாறு கூறித் தாம் பிச்சை எடுக்கும் கோலத்தோடு தாருகவனம் சென்றமையும், அங்கு முனிவர்களையும் முனிபத்தினிகளையும் செருக்கின்றிச் செய்து அவர்களுக்குத் தம் தாண்டவத்தைக் காட்டியமையும் கூறினார். முனிவர்களையும், முனிபத்தினி களையும் செருக்கு நீக்கியபின், உமாதேவியார் அங்குவர இந்நடனம் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டிருப்பது கருதத்தக்கது.[35] ஆனந்தத் தாண்டவத்தைத் தில்லையில் ஆடுங்கால், அம்மை தாம் முதலிற் கண்டு ஆன்மாக்கள் உய்யுமாறு காணச் செய்ததாகக் கூறப்படுகின்ற குறிப்பு ஈண்டு ஒப்புநோக்கத் தக்கதாகும்.[36] பால் உண்ணுகின்ற குழந்தையின் பசுங்குடல் பொறாது என்று நோய்க் குரிய மருந்தைத் தாய் உண்டு, தன் பாலைக்குழந்தைக்குக் கொடுத்து நோய் நீக்குமாறு போல, இறைவனின் தாண்டவத்தை அம்மை முதலிற்கண்டு, ஆன்மாக்களுக்குக் காட்டுகின்றார் எனக் கூறுவது குறிப்பிடத்தக்கது.[37] தாருகவனத்திலும் அம்மை கண்ட பிறகு ஆட்டம் நிகழ்வதாக அமைந்துள்ள குறிப்பும் எண்ணத் தகுவதாகும்.[38] தாருகவனத்து ஆடிய ஆட்டம் மிகவும் அச்சத்தைத்

தரத்தக்கதாக இருந்தது என்பது மோகினியாகச் சென்ற திருமாலும் அஞ்சி நடுங்கியதாகக் காணப்படுகின்ற குறிப்பால் அறியலாம்.[39] அந்நடனத்தின் இயல்பினைக் கோயிற்புராணம் விவரித்துள்ளது. இறைவனின் விரிந்த சடை திக்கெங்கும் அசைந்தது; கையில் ஏந்திய தீ கொள்ளி வட்டம் போல் சுழன்றது. எட்டுத்திக்கிலும் உள்ள இடிஓசையைத் துடிஓசை கொண்டிருந்தது சிலம்பணிந்த திருவடிகளை யாவரும் தொழுதனர். பரமேசுவரியும் நடுங்கும்படியான அச்சந்தருகின்ற ஆட்டமாக அது இருந்த மையைக் கோயிற்புராணம் குறிப்பிடுகின்றது.[40] அம்மையின் அழகில் ஈடுபட்ட இறைவன், அவள் பார்வையில் தன் பார்வையைப் பொருத்தி அதில் ஒருப்பட்ட மனமும், மன மொத்த பாவமும், பாவம் ஒத்த சுவையும் பொருந்தின தூய ஆட்டமாக அது விளங்கியது.[41] பின்னர் அம்மையுடன் இடபவாகனத்தில் ஏறித் திருமாலைப்பார்த்து நகை செய்யத் திருமாலும் இறைவனைத் தொழுது உய்ந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

திருமால் தாருகவனத்து நிகழ்ச்சிகளை மிக விரிவாக ஆதிசேடனிடத்தில் கூறினார். ஆட்டம் முடிந்த பின்னர், தாருகவனத்து முனிவர்கள் தங்கள் குற்றங்களைப் பொருத்துக் கொள்ளுமாறு இறைவனை வேண்டினர். அவர்களுடைய செருக்கிற்கு மூலகாரணமாக இருந்த ஆணவச்சக்திகளெல்லாம் முயலகனை வந்து பொருந்துமாறு இறைவன் ஆணையிட்டு, அவன்முதுகு நெறியும்படி மிதித்து நின்று அருளிய செய்தியும் ஈண்டு மனங்கொள்ளத் தக்கதாகும்.[42] இறைவன் ஆன்மாக்களின் ஆணவத்தைப்போக்கி அருள் செய்வதற்குரிய குறிப்பினை இச்செய்தி கோடிட்டுக் காட்டுகிறது. திருமாலின் கூற்றினைக் கேட்ட ஆதிசேடன் கண்ணைமூடி அச்சிவ நடனத்தை நேரில் கண்டது போன்ற உணர்வோடு மனம் ஒருப்பட்டு இறைவனை வணங்கினார். அந்நிகழ்ச்சியைக் கண்ட திருமால், சிவபெருமானுக்குரிய பக்தராக ஆதிசேடன் விளங்குவதால் தமக்குப் பாயலாக இருக்கின்ற நிலையை விடுத்து இறைவன் அடியாராகச் செல்லுக என்னும் குறிப்பினைப் புலப்படுத்தினார்.[43] திருமாலினுடைய பாயலாகும் தொண்டினை விடுத்து, ஆதிசேடன் கயிலை சென்று தவம் மேற்கொள்ளும்மாறு திருமாலால் அறிவுறுத்தப்

பட்டார். திருமாலிடம் விடைபெற்ற ஆதிசேடன், தம்முடைய பந்தபாசம் போகும்படியாகப் பெரியதவத்தினை மேற்கொண்டு, காற்றைக்கூட சுவாசிக்காமல் கடுந்தவம் செய்தார். சிவபெருமான் முதலில் அவருக்கு அன்னவாகனத்தின்மேல் பிரம்மனாகத் தோன்றிக் காட்சியளித்தார். இந்திராதி போகங்களையும், நால்வகைப்பேறுகளில் வேண்டுவனவற்றையும், அட்டமாசித்திகளையும் அருளுவதாகவும் அதனால் அவர் தவத்தினைக் கைவிட வேண்டுமென்றும் பிரம்மா கூறினார். தமக்கு அவையெல்லாம் வேண்டாம் என்றும் இறைவனின் காட்சியே வேண்டுமென்றும் தாருகவனத்தில் இறைவன் ஆடிய நடனத்தைத் தாம் கண்டு தரிசிப்பதற்கே ஆர்வம் மிகுந்ததாகவும் ஆதிசேடன் பதில் இறுத்தார்.[44] அதற்குப் பிரமன், முடியாத ஒன்றை முடிக்க வேண்டும் என்னும் மயக்கமாகிய அறிவு இன்னும் ஆதிசேடனிடத்திலிருந்து போக வில்லையென்று இகழ்ந்து கூறித் தேவதாருவனத்தில் ஆடப்பட்ட அருள்நடனம் யாருடைய வேண்டுகோளுக்கு இசைந்து ஆடப்பட்டது என்பதை நினைத்துப் பார்க்குமாறு கூறினார்.[45] அப்பொழுதும் திருநடனம் கண்டே தீருவது என்னும் ஆதிசேடனின் உறுதிப்பாடு நிலைத்து இருத்தலைக் கண்ட இறைவன், பிரம்மவடிவை நீத்துத் தம்முடைய சிவவடிவைக் காட்டினார். அதைக்கண்டு அஞ்சிய ஆதிசேடன் தமக்கு அருள் செய்யுமாறு வேண்டினார்.[46] ஆதிசேடனுடைய அன்பினை நினைந்து அவரைத் தம்பால் அணைத்து அவரின் தலைமேல் தன்கையை வைத்து இவ்வாறு தவம் செய்தாலன்றித் தம்முடைய ஆனந்த நிருத்தத்தைக் காண முடியாது என்று கூறினார்.[47] ஆதிசேடனுக்குத் தம் கூத்தின் தத்துவத்தை விளக்கித் தேவதாரு வனத்தில் செய்யப்பெற்ற நடனமானது குறிப்பிட்ட காலத்தில் முடிந்துவிட்டது எனக்கூறி என்றைக்கும் நின்று காணும்படியானதொரு கூத்தை உலகத்தின் நடுநாயகமாகிய சிறப்பிடத்தில் காட்டுவதாக உடன்பட்டார்.[48] நடுநாயகமாக உள்ள தானம் சுழுமுனைநாடி எனப்படும் இடமாக அமைந்திருக்கும். உலகத்தை ஒரு மனித வடிவில் உருவகித்தால் இடமூக்காக இலங்கையும், வலமூக்காக இமயமலையும் அமைந்திருக்கும்; இதன் இடைப்பட்ட பகுதியைச் சுழுமுனைநாடி என்று கூறுவர். யோகத்தில் சுழுமுனைநாடி குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறும் என்பது யோகநூல்கள் கூறும் உண்மையாகும்.[49]

அக்குறிப்புப்படவே ''நாடரு நடுவினாடி''[50] எனக் கோயிற்புராண ஆசிரியரும் கூறுவது கருதத்தக்கது. அத்தகைய சுழுமுனை நாடியாகத் திகழ்வது தில்லைவனமாகும். அங்கே மூலட்டானமுடைய இறைவன் உளியினால் பொள்ளப்படாத தான்தோன்றியாக அமைந்துள்ளார். அச்சிவலிங்கத்திற்குத் தெற்காக வேதங்கள் நான்கினாலும் காணமுடியாத அம்பலமொன்று அமைந்துள்ளது. அவ்விடத்தில் இடையறாத தாண்டவத்தைச் செய்வதாக இறைவன் ஆதிசேடனுக்கு அருள் செய்தார்.[51] அம்பலமென்று கூறப்பெற்ற தலங்கள் ஐந்தாகும். அவற்றுள் ஞானாகாசத் தலமாக விளங்குவது தில்லையம்பதி என்பது குறிப்பிடத்தக்கது. தில்லையம்பதியின் அழியாத்தன்மையை மகாசங்கார காலத்திலும் அழியாது என்று கூறும் குறிப்பினால் உணரலாம். தில்லையம்பதியில் ஆடுகின்ற நடனத்தைக் காண்பதற்கு முன்னரேயே தவம் செய்திருக்க வேண்டும் என்னும் குறிப்பினால் உணரலாம்.[52]

அத்தகைய நடனத்தைக் காண்பதற்கு ஆயிரந்தலைகள் கொண்ட தோற்றத்தோடு போக வேண்டாமென்று ஆதிசேடன் அறிவுறுத்தப் பெறுகிறார். அதற்கு ஒரு வழியையும் கூறி, சென்று தரிசிக்குமாறு கூறுகிறார். அத்திரி அனுசூயை ஆகிய இருவரும் தங்கட்குப் பிள்ளைப்பேறு இல்லையென்று திருமாலை நோக்கித் தவம் இருந்தனர். அவர்களுக்குப் பிள்ளையாகச் சென்று பிறக்குமாறு இறைவன் ஆதிசேடனைப் பணித்தார். பிறப்பில் கிடந்து உழலுவதற்கு அஞ்சிய ஆதிசேடன், ஐந்துதலை கொண்ட நாகமாக மாறி, அனுசூயை குளத்தில் குளித்து எழுங்கால் சிறு பாம்பாக அவள் கையில் வந்து பொருந்தியது. பயத்தினால் அந்த அம்மையார் அப்பாம்பைக் கைவிட அது பாதத்திலே விழுந்தது. அதனால் ''பதஞ்சலி'' என்னும் பெயரைப் பெற்றது.[53] அத்தகைய உருவோடு தில்லை சென்று மூலத்தான இலிங்கத்தை வழிபடுமாறு பணிக்கப்பெற்றார். அங்கு முன்பாகவே புலிக்கால் முனிவர் நடனங்காணும் விருப்போடு வழிபாடு செய்து கொண்டிருக்கிறார். அவரோடு சேர்ந்து வழிபாட்டைச் செய்து கொண்டிருந்தால் ஒரு குறிப்பிட்ட நாளில் தாம்வந்து நடனம் செய்வதாக உறுதி கூறினார். அந்நாள் தைப்பூசநாளாக வியாழக்கிழமையுடன் கூடியதாக இருக்குமெனக் கூறியது குறிப்பிடத்தக்கது.[54]

இறைவன் கூறியவாறே ஆதிசேடன் பதஞ்சலியின் உருவத்தை நீளநினைந்து பெற்றார். அது குளவி பச்சைப்புழுவை எண்ணச் செய்து குளவி வடிவம் பெறுமாறுபோலப் பெற்றார் என்ற குறிப்பு மனங்கொள்ளத்தக்கது.[55] பதஞ்சலியின் உருவம்பெற்ற ஆதிசேடனை நாகர்களும், நாகர்கள் தலைவனும் வரவேற்றனர்[56] இறைவன் குறித்த பிலத்துவாரம் வழியாகத் தில்லைவந்து அடைந்தார். வியாக்ரபாதரைச் சந்தித்தார். பதஞ்சலியைப் பலவாறாக உபசரித்து அவர் செல்லுமிடத்தையும் பெயரையும் புலிக்காலர் வினவினார். பதஞ்சலி தம்முடை வரலாற்றைக் கூறி இறைவனுடைய கூத்தைக் காண்பதற்காக அருள் செய்யப் பெற்றமையையும், இறைவனுடைய ஆடலைக் காண்பதற்குரிய வர்களாகத் தன்னையும் புலிக்காலராகிய அவரையும் குறித்து இறைவன் கூறியமையையும் கூறினார். அதனைக் கேட்டு மகிழ்ந்த புலிக்காலர் பதஞ்சலியை அணைத்து நெஞ்சமுருகினார்.[57] மூலத்தானத்திற்கு அருகிலுள்ள நீர்நிலையிலும், மேற்கிலுள்ள வாவியிலும் பதஞ்சலியை மூழ்குமாறு செய்து மூலத்தானத்து இறைவரையும் தம்மால் நிறுவப்பெற்ற சிவலிங்கத்தையும் முறைப்படி வழிபடுமாறு செய்தார்.[58] புலிக்காலர் நிறுவிய கோயிலுக்கு மேற்பால் சென்ற பதஞ்சலியார் ஒரு பொய்கை இருப்பதைப் பார்த்து அங்கே ஓர் இலிங்கத்தை நிறுவி, குளத்திற்கு வடபால் ஒரு பர்ணசாலையும் அமைத்துக் கொண்டார்.[59] புலிக்காலரும், பதஞ்சலியும் அனந்தீஸ்வரம், புலீச்சுரம், திரு மூலட்டானம் ஆகிய மூன்று இடங்களையும் முறைப்படி சென்று நாள்தோறும் வழிபட்டு வந்தனர்.[60] இவர்களுடைய முறையான வழிபாட்டினைப் பார்த்த மக்கள் பெருவாரியாக வந்து இக் கோயில்களை வழிபடுகின்ற வழக்கத்தை மேற்கொண்டனர். அங்கே, ஒருசபை இருக்கின்ற நிலையை முனிவர்கள் காட்டிய அளவில் அதனை மனக்கருத்தில் இருத்தி மக்களும் தொழுது இறைஞ்சினார்கள்.[61]

இறைவனின் நடனத்தைக் காணாமல் வருந்தி அதைக்காட்டி யருள வேண்டும் என்னும் குறிப்பேடு வேண்டிக் கொண்டிருந்தனர். ஒருநாள் ஒளிமிகுந்த மன்றில் ஞானசக்தியை இடமாகக் கொண்டு இறைவன் நடனம் செய்ய பக்திமிக்க வியாக்ரபாதரும் பதஞ்சலியும் அதனைக்கண்டு களித்தார்கள்.

அக்காட்சி மிக உயரிய காட்சி என்பதை இருவரும் உணர்ந்து வணங்கினார்கள். வியாக்ரபாதர், பதஞ்சலி ஆகிய இருவரும் கண்ட காட்சியை அரி, அயன், இந்திரன் முதலிய தேவர்களும், மூவாயிரம் முனிவர்களும் கண்டு வழிபட்டதாக உள்ள குறிப்பு கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.[62] அம்மை அவ்வாட்டத்தின் தன்மையை உலகுய்யக் கொடுத்தாள் என்ற குறிப்பும் உளங் கொள்ளத் தக்கது.[63] இறைவன் ஆடிய இடமே ''சிதாகாசப் பெருவெளி'' என்று வழங்கப்படுகின்றது.[64] ஆட்டத்தைப் பார்த்து அருள்பெற்ற புலிக்கால் முனிவர் வேண்டிக்கொண்ட வேண்டுகை கருத்தில் கொள்ளத்தக்கது. முன்பு செய்த வழிபாடுபோல மீண்டும் விதிப்படி தம்மால் செய்யப்படுகின்ற வழிபாட்டினை இறைவன் பெறவேண்டுமென்றும், அதனைத்தவிர வேறொரு குறையுமில்லை என்றும் கூறுவது குறிப்பிடத்தக்கது.[65] இறைவனையே கண்டபின்னர் அதற்குமேல் மக்களுக்கு வேண்டத்தக்கது வேறொன்றுமில்லை என்னும் குறிப்புப் புலப்பட புலிக்கால் அருளிய வேண்டுகை அமைந்துள்ளமை கருதத்தக்கது. இறைவனது அருளைப் பெறுவது ஒன்றே அவர்கள் செய்யும் வழிபாட்டின் பயன் என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது. பதஞ்சலியாரும் மக்கள் என்றும் காணுமாறு இம்மன்றத்திடத்து இறைவன் எப்பொழுதும் ஆடுதல் வேண்டும் என்னும் வேண்டு கோளையே முன்வைத்து இறைவனின் ஆட்டத்தைக் கண்டு மகிழ்ந்தார்.[66] ஞானமயமாகக் காணப்பட்ட இறைவன், மக்களும் காணுமாறு அங்கு ஆடுவதாக ஒப்புதல் அளித்துப் பதஞ்சலிக்கு அருள் செய்தார். மக்கள் எல்லோரும் கண்டு மகிழ வேண்டும் என்னும் பதஞ்சலியாரின் விருப்பத்திற்கு அவர் ஆதிசேடனாக இருந்த காலத்தில் இறைவன் ஆட்டத்தைக் காண வேண்டுமென்று எழுந்த அவரது அவாவே காரணமாகும். தாம் பெற்ற பேற்றினை இந்த உலகமும் பெற வேண்டும் என்னும் குறிப்புப் பதஞ்சலியின் வேண்டுகோளில் வெளிப்படுவதைக் காணலாம்.

புலிக்கால் முனிவர் வழிபாடு ஒன்றே நோக்கமாகக் கொண்டு இறைவனிடத்தில் நடனத்தைக் காண வேண்டும் என்னும் குறிப்பினை மூலட்டான தேவரிடத்திலும், புலீச்சுரத்திலும் வேண்டுகோள் விடுத்து வழிபட்டார். நடனத்தைக் கண்ட பிறகும் விதிப்படி வழிபடுகின்ற தம்முடைய பூசையை ஏற்குமாறு

இறைவனை வேண்டினார். வழிபாடு என்பது உலகப்பயன் கருதியது அன்று; இறையருள் ஒன்றே நோக்கமாகக் கொண்டு செய்யப்படுவது. அவ்வாறு வழிபாடு செய்வோர் இறைவனிடம் அன்பு செலுத்தும் முறை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதைப் புலிக்கால் முனிவரின் செய்கை புலப்படுத்துகின்றது. பக்தி வயிராக்கியம் என்பது எப்படி அமைதல் வேண்டும் என்பதற்குப் புலிக்கால் முனிவர் வழிகாட்டியாகத் திகழ்கிறார். அன்றியும் "பக்தி இயக்கம்" என்னும் இயக்கம் பின்னால் தோன்றுவதற்குப் புலிக்கால் முனிவர் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார் எனலாம்.

ஆதிசேடனாக இருந்த பதஞ்சலியார், திருமாலின் சொல்லினால் இறைவனிடத்தில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார். அவ்வகையில் திருமாலே அவருக்குத் தீட்சை தந்த நிலையில் குருவாகக் காட்சி தருகின்றார். திருமாலின் சொல்லால் சிவபெருமானின் நடனப் பெருமைகளை உணர்ந்த பதஞ்சலியார், தமக்குப் பத முக்திகளெல்லாம் கிடைக்கும் என்ற நிலையிலும் அவற்றையெல்லாம் வேண்டாம் எனக் கூறி நடனப்பேறு காண்பது ஒன்றே குறிக்கோளாக, அதனைக் காணும் வரம் மட்டுமே பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. எந்த ஒரு குறிக்கோளோடு ஒரு முயற்சி தொடங்கப்படுகிறதோ அதில் சிறிதும் வழுவாது மனஉறுதியோடு செயல்பட்டால் அது உறுதியாகக் கிட்டும் என்பது பதஞ்சலியாரின் செய்கையால் புலப்படுகின்றது. தாம் அரிதிற் பெற்ற அப்பேற்றினைத் தாமே முழுமையாக அனுபவிக்க வேண்டுமென்னும் எண்ணமில்லாமல் இந்த உலகவர் உய்ய இறைவன் அதனைப் பொதுவாக்க வேண்டும் என்ற அவர்தம் வேண்கோள் அவர்கொண்ட சமுதாய உணர்வைப் புலப்படுத்துகின்றது. வழிபாட்டில் புலிக்கால்முனிவருக்கு அடுத்த நிலையில் மனம்விரிந்த இவ்வழிபாட்டுநிலை ஒரு வளர்நிலை எனலாம். தனிப்பட்ட அன்பு வழிபாடும், பொதுவில் அமையும் கூட்டு வழிபாடும் இன்றியமையாதன என்னும் குறிப்பினை இவ்விருவர் தம் செயல்களாலும் அறியலாம்.

இரணியவர்மன்

தில்லையில் பேறுபெற்றவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவனாக சிங்கவர்மன் திகழ்கிறான். சூரியமரபில் தோன்றிய ஐந்தாம்

மனுவிற்கு மகனாக இவன் தோன்றியவன். ஐந்தாம் மனுவின் மனைவியர் இருவரும் மூன்று பிள்ளைகளைப் பெற்றார்கள். முதல் மனைவியின் மகனாகிய இவன் சிங்கம் போன்ற வண்ண முடையவனாக இருந்தான். எனவே ஆட்சிக்குரியவனாகத் தான் இருக்க இயலாது என உணர்ந்தான். தம்பியர் இருவரும் அரசர்களுக்கு உரிய உடல் ஒளியும், தேசும் பெற்றுத் திகழத் தான் மட்டும் இவ்வாறு குறையுடையவனாகப் பிறந்து விட்டதை நினைந்து தலங்கள் தோறும் சென்று வழிபட எண்ணுகிறான்.[68] தந்தையின் முதுமை கூட தனது செலவைத் தடுக்க இயலாத அளவிற்கு அவன் மன உறுதி கொண்டிருந்தான். காசிக்குச் சென்று கங்கையில் மூழ்கி விசுவநாதப் பெருமானைக் கண்டு வழிபட்டான்.[69] பின்னர் ஊர்தோறும் சென்று தலங்களிலேயே கோயில் கொண்டருளிய இறைவனை வழிபட்டு வந்தான். தென்னாட்டில் வருங்கால் வேடன் ஒருவனைக்கண்டு அவனிடம் அங்குள்ள நிலைபற்றி வினவி அறிந்தான்.[70] அவ்வேடன் ஸ்ரீ சைலம் போன்ற இடங்களையும், அந்தக் காட்டிலுள்ள வியப்பான செய்திகளையும் எடுத்துரைத்து இறுதியில் ஏகம்ப வாணரைச் சென்று காணுமாறு சொல்கிறான். அவ்வாறே ஏகம்பவாணரைத் தொழுது காமாட்சி அம்மையையும் கண்டு பலநாள் வழிபட்டுக் கொண்டிருக்கிறான். பின்னர் மேற்கு மலைத்தொடர் வழியாகத் தன்னுடைய திருத்தலப்பயணம் நடைபெற வேண்டும் என்னும் குறிப்பில், வேடனிடத்தில் அது பற்றி வினவுகிறான். அவ்வேட்டுவனும் தான் அறிந்த வகையில் ஒரு குறிப்பிட்ட எல்லைவரை மட்டுமே மேற்குத் தொடர்ச்சி மலை வழியாகச் செல்ல இயலும் எனக் கூறினான். சிங்கவர்மனின் வேண்டுகோளுக்கு ஏற்ப வேட்டுவனே முதலில் சென்று வழி முறைகளைக் கண்டு திரும்பினான். தில்லைவனம் என்னும் வனத் தையும் அங்கு அச்சந்தரத்தக்க தெய்வங்கள் பல வாழ்வதையும் எடுத்துரைத்தான். புலிக்காலோடு கூடிய மனித வடிவில் தவம் செய்யும் முனிவரைக் கண்டதாகக் கூறினான்.[71] வியத்தகு தோற்றத்தைக் காணும் அவாவினால் உந்தப்பெற்ற சிங்க வர்மன், புலிக்கால் முனிவரைப் பார்ப்பதற்கு வேட்டுவன் துணையோடு புறப்பட்டு வந்தான். புலிக்கால் முனிவர் யோகத்தில் அமர்ந்து இறைவனிடத்து ஈடுபட்டிருப்பதைப்

பார்த்து அவரைத் தொழுது நின்றான்.[72] அங்கு வைக்கப்பட்டிருந்த வழிபாட்டுப் பொருள்கள் பசுமை மாறாது இருப்பதைப் பார்த்து விரைவில் கண் விழிப்பார் எனக் காத்திருந்தான். முக்காலமும் உணர்வதற்குரிய தகுதிபெற்ற புலிக்கால் முனிவர் சூரிய மரபில் தோன்றிய ஐந்தாம் மனுவின் வந்திருப்பவன் மகனே என்பதை உணர்ந்து அவனுடைய பெயரையும் தம் நுண்ணுணர்வினால் உணர்ந்து அவனை அழைத்தார்.[73] சிங்கவர்மன் அவரை வணங்கி எழுந்து தனக்குப் பிறவிபோக்கும் உபாயத்தைக் கூறியருளுமாறு வேண்டினான். புலிக்கால் முனிவரோ கோயில் வழிபாடு நன்கு நடைபெற இம்மன்னனின் பொருளும் உதவியும் தேவைப்படலாம் எனக்கருதி, அவருக்கு வேறுவகையான வழியைக் காட்ட வேண்டுமென எண்ணினார். அக்குறிப்பினைத் தில்லையம்பல வாணரிடத்தில் சென்று சமயமறிந்து திருச்செவி சேர்த்தார்.[74] அம்பலவாணரின் குறிப்புப்படி சிவகணங்கள் சென்று சிங்கவர்மனை அழைத்துவர முற்பட்டன. தாமரைக் குளக் கரையில் நின்று கொண்டிருந்த அவனை அக்குளத்தில் மூழ்கி எழுமாறு செய்து அழைத்துச் செல்ல முற்பட்டன. குளத்தில் மூழ்கி எழுந்த சிங்கவர்மன் தன் சிங்கவண்ணம் மாறிப் பொன் வண்ணம் பெற்றான். பொன்வண்ணம் பெற்றெழுந்ததைப் பார்த்த மக்களும், கணங்களும் அவனை "இரணியவர்மன்" என அழைத்தனர்.[75] பொன்வண்ணம் பெற்ற அவனுடைய செவியில் புலிக்கால் முனிவர் திருவைந்தெழுத்தை ஓதித் தில்லையம் பெருமானிடத்து அழைத்துச் சென்றார். இறைவன் தன் ஆனந்த நடனத்தைக் காட்டி அருளினார். புவியில் விழுந்து வணங்கிய இரணியவர்மனிடம் இறைவன் தமக்கும், புலிக்கால் முனிவர், பதஞ்சலி, தில்லைவாழ் அந்தணர் ஆகியோர்க்கும் தொண்டு செய்யுமாறு பணித்தார் என்றும் கூறும் வரலாறு கருத்தில் கொள்ளத்தக்கது.[76]

சிங்கவர்மன் கௌடவதேசம் தொடங்கித் தில்லைவனம்வரை பல்வேறு தலங்களுக்குச் செல்லுகிறான். அங்கங்கே பல்வேறு வகையான வியப்புக்குரிய காட்சிகளைக் காணுகிறான். அவனுக்கு வழிகாட்டியாக வேடனொருவன் வந்து சேருகிறான். நாட்டுக் கரசனாகிய இவனுக்குக் காட்டுக்கரசனாகிய வேடன் காட்டில் தான் கண்ட பல அற்புதங்களை எடுத்து மொழிகிறான்.

சிங்கவர்மன் ஆட்சியில் விருப்பற்று, இறையீடுபாட்டில் விருப்புற்றுத் தலங்கள் தோறும் சென்றமையால், மிகப்பெரிய தொரு அருள் அனுபவத்தையும் உலகியல் அறிவையும் பெறுகிறான் என்பது உளங்கொள்ளத் தக்கதாகும். மக்களுக்குப் ''புனிதப் பயணம்'' என்னும் வகையில் மேற்கொள்ளுகின்ற ஊர்ச்செலவுகள் எவ்வளவு இன்றியமையாதன என்பதைச் சிங்கவர்மனின் திருத் தலப்பயணம் கோடிட்டுக் காட்டுகிறது. இன்றைய சுற்றுலாப் பயண வளர்ச்சிகளுக்குச் சிங்கவர்மன் போன்றவர்கள் முன்னோடி களாாத் திகழ்கிறார்கள் என்பது கருதத்தக்கது.

புலிக்கால் முனிவர் தில்லைவனத்தில் தங்கி மூலட்டானத் தேவரை வணங்கியதோடு புலீச்சுரம் என்னும் இடத்தில் ஒளி வடிவானதோர் இறைவனை நிறுவி வழிபட்டார். தில்லை என்னும் திருத்தலத்தில் தங்கி வழிபட்டமையால் இவருக்கு இறைவன் ஆனந்தநடனத்தைக் காட்டி அருள் புரிந்தான். எனவே தில்லை என்னும் தலம் குறிப்பிடத்தக்க ஒன்றாகக் கருதப்பட வேண்டும் என்னும் குறிப்பு, புலிக்கால் முனிவர் வரலாற்றால் அறியப்படுகின்றது.

ஆதிசேடன் - திருமாலினுடைய விளக்கத்தால் இறைவனின் ஆடல் கண்டு வழிபடவேண்டும் என்னும் உறுதிப்பாட்டால், இறைவனால் அருள் செய்யப்பெற்றுத் தில்லைக்கு வருகிறார். தில்லையம்பதியில் பலநாள் தங்கிப் புலிக்கால் முனிவரோடு இணைந்து வழிபாடு இயற்றுகிறார். புலீச்சரத்திற்கு மேற்கே இறைவன் திருமேனியை நிறுவிப்பர்ணசாலை அமைத்து வழிபட்டு வருங்கால், குறிப்பிட்ட தைப்பூச நாளிலே இறைவனுடைய ஆடலைக்கண்டு அருள் பெற்றார். ஆடுகின்ற அம்பலவாணரின் வடிவச் சிறப்பு உணர்த்தப் பெறுகின்ற நிலையில் பதஞ்சலிமுனிவர் வரலாறு அமைந்துள்ளமையைக் காணலாம். இறைவன் நேரில் தோன்றி இவருக்குக் காட்சி கொடுத்து அருள் செய்யத் தயாராக இருந்த நிலையிலும் தமக்கு இறைவனின் ஆடல்காட்சியே வேண்டுமென்ற வேண்டுகோளால் ஆடலரசின் மூர்த்தம் எவ்வளவு இன்றியமையாதது என்பதை அறியலாம். ஆடல் காண்பதற்குரிய இடமாகத் தில்லையம்பதியே உகந்தது என இறைவனால் திட்டம்

செய்யப்பெற்றமையால் தலம், மூர்த்தம் என்னும் இருநிலைகளும் குறிப்பிடத்தக்கன என்பதையும் உணரலாம்.

சிங்கவர்மன் பலதலங்களுக்குச் சென்று வழிபட்டு வருகின்ற நிலையை இவனுடைய வரலாறு உணர்த்துகின்றது. தில்லையைப் பற்றிய செய்தியை வேடன் கூறியவுடன் அதனைப் பார்க்க வேண்டும் என்னும் எழுச்சி சிங்கவர்மனுக்கு நேர்ந்தமை குறிப்பிடத் தக்கதாகும். புலிக்கால் முனிவருடைய தவநிலையைக் கேட்டபின் அவரைப் பார்த்தே ஆக வேண்டுமெனப் பதஞ்சலியார் கருதுகின்ற குறிப்பும் உளங்கொளத்தக்கதாகும். இறைவனுடைய குறிப்பறிந்து சிங்கவர்மனை அழைத்துச் செல்ல முற்படுங்கால் திருமூலட்டானத் தேவர்க்கு வடக்கிலுள்ள தாமரைக்குளத்தில் குளித்து எழுங்கால் இவன்மேனி பொன்வண்ணம் பெற்றது. இறைவனுடைய திருக்குறிப்பும் அந்நீர்நிலையின் நலமும் சேர இவன் பொன்வண்ணம் பெற்றான் என்னும் குறிப்பும் அறியற்பாலதாகும். இவனுடைய வரலாற்றால் இவன் மூழ்கி எழுந்த நீர்நிலை எவ்வளவு உயர்ந்தது என்னும் குறிப்பும் புலப்படுகின்றது. பின்னரே புலிக்கால் முனிவரின் உபதேசம் பெற்று அருள் நடனம் காணப்பெறுகிறான். அருளாளர்களும், முனிவர்களும், அந்தணர்களும் இறைவனின் அருளை முழுமையாகப் பெற்றிருப்பினும் இரணியவர்மன் போன்ற மன்னர்களின் தொண்டு அவர்களின் நாள் வழிபாட்டுக்கும் சிறப்பு வழிபாட்டுக்கும் இன்றியமையாதது என்னும் குறிப்பினை இறைவன் இரணிய வர்மனுக்குக் கூறிய குறிப்பால் உணரலாம்.

II. ஆடல்வல்லானின் நாள்வழிபாடும், சிறப்பு வழிபாடும்

கூத்தப்பெருமான் கோயில் கொண்டு விளங்கும் தில்லைப் பெருங்கோயிலில் சிற்சபை, பொற்சபை என்னும் இடம் தவிர குறிப்பிடத்தக்க சந்நிதிகள் பல உள்ளன. மூலநாதர், உமையம்மை, சிவகாமசுந்தரி ஆகிய சந்நிதிகள் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இங்கு நாள்தோறும் இருமுறை காலையிலும் மாலையிலும் வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

சுற்றுத் தெய்வங்களாக முக்குறுணிப் பிள்ளையார், கற்பக விநாயகர், பாண்டி நாயகர், மேலைக்கோபுர முருகன், தென்முகக்

கடவுள் போன்ற சந்நிதிகள் உள்ளன. இவற்றில் காலை ஒரு முறையும், மாலை ஒரு முறையும் வழிபாடுகள் நடத்தப்பெறுகின்றன.

கோயிற்புராணத்தில் நாள் வழிபாடு பற்றி விரிவான குறிப்புக்கள் காணப்படவில்லை. எனினும் திருவிழாச் சருக்கத்தில் சிறப்பு வழிபாடுகள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. நாள் வழிபாட்டில் இன்னின்ன காலத்தில் நடைபெறுகின்ற வழிபாடுகள் இன்னின்னாருக்கு உரியவை என்னும் குறிப்பு மட்டும் காணப்படுகின்றது.[77] தில்லைப்பெருங்கோயிலில் திருமூலட்டானத் தேவர் மூலவராகக் கருதப்படினும், அம்பலவாணருக்கே முதன்மை கொடுத்து வழிபாடுகள் செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கது. காலை தொடங்கி இரவு எட்டு மணியுடன் தில்லை அம்பலவாணர் சந்நிதி நீங்கலாக மற்றைய சந்நிதிகள் மூடப்பட்டு விடும் என்பது குறிப்பிடத்தக்கது.[78]

நாள் வழிபாடு

கூத்தப்பெருமானுக்கு நாள்தோறும் ஆறுகால வழிபாடுகள் நடத்தப்பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[79] உள்ளூர் மக்களும், வெளியூர், மக்களுமாக ஆறுகாலங்களிலும் கூடியிருந்து வழிபாட்டில் கலந்து கொள்ளுகிறார்கள் என்பது இத்தலத்துக் குரிய சிறப்புத் தன்மைகளில் ஒன்றாகும்.

காலை ஆறு மணிக்குப் பள்ளியறையிலிருந்து கூத்தப் பெருமான் திருவடிகளைத் தீபதூப ஆராதனை செய்து பின் பல்லக்கில் எடுத்து அம்பலத்திற்குக் கொண்டு வருகிறார்கள். இக்காட்சியைக் காண்பதற்குக் காலையில் பெருமளவில் மக்கள் கூடுகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் உள்ளூர் மக்களாகவே இருக்கின்றார்கள் என்பது கருதத்தக்கது. இதனைப் ''பால் நைவேத்தியம்'' என்றும் ''திருவனந்தல்'' என்றும் குறிப்பிடு கின்றனர். இந்நிகழ்ச்சி தவிர்த்துப் பகலில் மூன்று காலமும், இரவில் மூன்று காலமும் கூத்தப்பெருமானுக்கு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

அம்பலத்தில் மூன்றுவகை நிலையில் இறைவன் கோயில் கொண்டிருப்பது தில்லையின் தனித்தன்மையாகும். உருவம்

அருவம், அருவுருவம் என்ற மூன்று நிலைகளிலும் இங்கே இறைவன் காட்சி தருகின்றான். நடராசர் வடிவம் உருவத்திற்கு எடுத்துக் காட்டாகவும், மந்திரவடிவில் அமைந்துள்ள இரகசியம் என்னும் நிலை அருவத்திற்கு எடுத்துக்காட்டாகவும், சந்திர மௌலீஸ்வரர் என்னும் படிகலிங்கம் அருவுருவத்திற்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்கின்றன.

காலையில் 7½ மணியளவில் கும்பம் வைத்துப் பூசை செய்து அபிடேகம் நிகழ்த்தப்படுகிறது. காலை 9 மணிக்குள் தீபாராதனை செய்து முடிக்கப்பெறுகிறது. இரண்டாங்காலம் என்று சொல்லப் படுகின்ற 10½ மணி அளவில் நடைபெறும் வழிபாடு இரத்தின சபாபதியாகத் திருமேனி கொண்டுள்ள கூத்தப்பெருமானுக்குத் திருமஞ்சனமாட்டும் நிகழ்ச்சியாகும். ஆறு வேளைகளிலும் படிகலிங்கத்திற்குத் திருமஞ்சனம் ஆட்டப்பட்டாலும், காலையில் நிகழும் இரண்டாம் காலம் மட்டில் இரத்தின சபாபதிக்கும் சேர்த்து வழிபாடு நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆறு காலங்களிலும் திருமஞ்சனம் செய்விக்கப்பெறுகின்ற படிகலிங்கமும், ஒருவேளை திருமஞ்சனம் செய்விக்கப்பெறுகின்ற இரத்தின சபாபதியும் பெட்டகங்களில் வைக்கப்பெற்றபின் கூத்தப்பெருமானுக்குத் தீபதூப ஆராதனைகள் நிகழ்கின்றன. இவ்வாறான வழிபாட்டுமுறை தில்லைக்கோயிலில் மட்டுமே நடைபெறுகிறது என்பது உளங்கொள்ளத்தக்கதாகும்.

இரவில் நடைபெறுகின்ற இரண்டாங்காலத்திற்கு முன்னர் "இரகசிய பூசை" என்னும் பூசனை நடைபெறுகிறது. அதனை நடத்தி வைப்போரும், நடத்துவோரும் என்னும் இருவர் மட்டுமே அம்பலத்திற்குள் இருந்து நடத்துகின்றனர். அப்பொழுது முற்றிலுமாகச் சந்நிதி மூடப்பெற்றிருக்கும்.

ஆறுகால வழிபாடுகளில் காலை இரண்டாம் காலத்தில் நடைபெறும் வழிபாட்டினை உருவ வழிபாட்டிற்குரியதாகவும், மாலை இரண்டாம் காலத்தில் நடைபெறும் வழிபாட்டினை அருவ வழிபாட்டிற்குரியதாகவும் கருதலாம். மற்றைய நான்கு காலங்களிலும் அருவுருவ வழிபாடு இடம் பெறுகிறது.

காலையில் முதற்கால வழிபாட்டிற்கு முன்னர் ஓமம் வளர்த்த பின்னரே வழிபாட்டைத் தொடங்குவது என்பது நடை

முறையில் பின்பற்றப்படுகிறது. படிகலிங்கத்திற்குப் பல்வேறு வகையான புனித ஆட்டுக்களைச் செய்கிறார்கள். பால், எண்ணெய், திருநீறு, தயிர், இளநீர், தேன் முதலிய பல்வேறு பொருள்கள் திருமஞ்சனத்திற்குரியனவாகக் கொள்ளப்பெறுகின்றன. இரத்தினசபாபதிக்கு நடைபெறுகின்ற வழிபாட்டிலும் இவை இடம்பெறுகின்றன. அன்னத்தால் ஆறு காலங்களிலும் படிகலிங்கத்தையும் இரத்தினசபாபதியையும் ஆட்டுவிக்கின்ற தன்மை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இத்தகைய ஒருநிலை தில்லையில் தனியிடம் பெறுகிறது எனலாம்.

ஆறு காலங்களிலும் கூத்தப்பெருமானுக்குச் செய்யப்பெறும் ''சோடசோ'' உபசாரம் எனப்படும் வழிபாட்டு நிலைகளில் ஒவ்வொரு காலத்திலும் வேறுபாடு இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆறு காலங்களிலும் சாயரட்சை எனச் சொல்லப்படுகின்ற மாலைக் காலத்தில் நடைபெறும் ''சோடசோ'' உபசாரம் மிகுதியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. கூத்தப் பெருமான் எழுந்தருளியுள்ள இடத்திற்கு வாயிற்படிக்கு வெளியே நின்று தில்லைவாழ் அந்தணர் ஒருவர் முறைப்படி வழிபாடு இயற்றிய பின்னர், வடமொழியில் தோத்திரங்கள் சொல்லப் பெறுகின்றன. அதன்பின் சந்நிதியின் உள்ளே சென்று பதினான்கு கிளையுள்ள தீப ஆராதனை செய்யப்படுவது இக்கோயிலின் வழக்கமாகும். அதன் பின்னர் இரகசியத்தை மூடியிருக்கும் திரையை விலக்கிக் காண்பிக்கின்றனர்.

காலையில் முதற்காலத்திலும், மாலையில் இரண்டாங் காலத்திலும், அர்த்த சாமத்திலும் ஓதுவார் மற்றும் தில்லைவாழ் அந்தணர்கள் பஞ்சபுராணம் பாடுகின்றனர். அர்த்தசாம வழி பாட்டில் பொன்னூசல் பாடி வருகின்றனர்.

கோயிற்புராணத்தில் விடியற்காலம், உச்சிக்காலம், சாயரட்சை, இரவு என்ற நான்கு காலங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் காலையும் உச்சியும் தேவர்களுக்கும் இருடிகளுக்கும் உரியவை. சாயரட்சை தேவமாதர்களுக்கு உரியது. இரவுக் காலம் கணநாதர்க்கு உரியது. இந்த நான்கு காலங்களும் உலகிலுள்ள மக்களுக்குத் தரிசிப்பதற்கு உரியனவாகும். எவரும்

வராத மற்றைய நடுயாமக் காலங்கள் இரண்டும் இறைவன் விருப்பப்படி திருவிளையாடல் நிகழ்த்தி இருப்பதற்குரிய காலங் களாகும். தேவர்கள், இருடியர், தேவமாதர், கணநாதர் ஆகியோருக்குக் காலவரையறை செய்யப்பட்டிருந்தும் மக்கள் இவ்வெல்லாக் காலங்களிலும் சென்று தரிசிக்கலாம் என்பது கருதத்தக்கது.[80]

சிறப்பு வழிபாடு

நாள் வழிபாட்டைப் பூசனை என்றும், விழாக்களைச் சிறப்பு என்றும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.[81] நாள் வழிபாட்டைக் காட்டிலும் சிறப்பு வழிபாடு இன்றியமையாதது என்பதற்குப் பரிமேலழகர் நித்தியத்தில் நேருகின்ற குறைகள் நைமித்திகத்தில் தீர்க்கப்படுவதால் நைமித்திகத்தை முற்படக்கூறினார் என்பர்.[82] தில்லைப்பெருங்கோயிலின் சிறப்பு வழிபாடுகளெல்லாம் தேவர் களாலும் இருடிகளாலும் ஒருகாலத்தில் கொண்டாடப்பட்டவை என்றும், அவை கொண்டாடப்பெற்ற இயல்புகள் குறித்தும் வியாக்ரபாதர் இரணியவர்மனிடத்தில் எடுத்துரைக்கிறார். அத்தகைய சிறப்பு விழாக்களை இவ்விவ்வாறெல்லாம் நடத்த வேண்டுமென அரசன் அமைச்சருக்கு ஆணையிட்டதாகக் கூறப் படும் செய்தி கருத்திற் கொள்ளத் தக்கதாகும். நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடு ஆகியவற்றைக் கூறும் ''இரத்தினாவளி'' என்னும் நூலைப் பதஞ்சலி இயற்றிக் காட்டி எடுத்துச் சொன்னார்.[83] பதஞ்சலி இயற்றிய வழிபாட்டு நூல்களாக நித்தியபூசை சூத்திரம், நைமித்திய பூசை சூத்திரம், உற்சவ பூசை சூத்திரம், பிராயச்சித்த பூசை சூத்திரம், பிரதிட்டா பூசை சூத்திரம் என ஐந்து நூல்கள் வடமொழியில் கூறப்பட்டுள்ளன.[84] அவற்றிலுள்ள செய்திகளைப் பொற்சபையில் பதஞ்சலி, வியாக்ர பாதர் உள்ளிட்ட மூவாயிரவரும் மன்னனோடு உடனிருந்து கேட்டனர். பின்னர் அந்நூல் யானையின் மீது ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டுக் கோயிலினுள்ளே எடுத்துச் செல்லப் பட்டதாக ஒரு குறிப்பும் காணப்படுகின்றது.[85] எனவே இரத்தினாவளி கூறிய முறைப்படியே நாள்வழிபாடும் சிறப்பு வழிபாடுகளும் முறைப்படுத்தப்பட்டதாகக் கொள்ளலாம்.

திருவிழாச் சருக்கத்தில் ''கோயில்'' விழாக்கள் பல குறிப்பிடப்பட்டுள்ளன. சித்திரை வசந்தவிழாவும், ஆடிப்புதுப் புனல்விழாவும் திருஆண்டெழுத்துத் திருநாளும், ஐப்பசிப்பூரத் திருவிழாவும், கார்த்திகைப் பெருவிளக்குவிழாவும், மார்கழித் திருவாதிரைத் திருக்காட்சியும், தைப்பூசப் பாவாடைப் படையல் விழாவும், ஆனிஉத்தரத் திருமஞ்சனத் திருநாளும் உமாபதி சிவனார் கூறும் முக்கியத் திருவிழாக்கள் ஆகும். இவை ஈண்டு முறையே ஆராயப்பெறுகின்றன.

வசந்தோற்சவம்

சித்திரை மாதத்தில் வசந்தோற்சவம் என்னும் பெயரில் ஒருவிழா கொண்டாடப்பட்டதாகக் காணப்படுகின்றது. இம் மாதத்தில் மன்மதன் அவன் எரிவதற்கு முன்னர் தம்நகரத்தில் ''பட்டினப்பிரவேசம்'' செய்தான். அக்காலத்தில் அந்நகரம் எவ்வாறு அலங்கரிக்கப் பட்டிருந்ததோ அவ்வாறே இந்நகரத்தை அலங்கரித்து இறைவனுக்கு வசந்தோற்சவம் நிகழ்த்துமாறு பணிக்க, அதை நடத்தியதாக ஒரு குறிப்புக் காணப்படுகின்றது.[86] அவ்விழா எத்தனைநாள், எவ்வெவ்வாறு நடைபெற்றது என்னும் குறிப்பு ஒன்றும் நூலில் காணப்படவில்லை. அவ்வகை விழா இப்பொழுது நடைபெறவில்லை என்பதும் கருத்திற்கொள்ளத் தக்கது.

புதுப்புனல் விளையாட்டும், திருவாண்டெழுத்துத் திருநாளும்

இவ்விழாவினை இருடிகள் எடுக்கச் செய்யுமாறு கூற, இரண்யவர்மன் இதனைச் செய்வித்தான் என்று காணப்படு கின்றது.[87] ஆடி மாதத்தில் புதுப்புனல் விளையாட்டும் திருவாண்டு எழுத்திட்டுத் திருநாளும் நடைபெற்றன. இரணியவர்மன் சிங்கவர்மனாக இருந்து இரணியவர்மனாகப் பெயர்மாற்றம் செய்யப்பெற்றுச் சோழநாட்டிற்கு முடி சூட்டப்பட்டான். அவனுக்கு முடியும், ஆத்திமாலையும், வீரக்கட்கம், புலிக்கொடி முதலியவற்றையும் வியாக்ரபாதர் கொடுத்துச் சிங்காதனத்தில் இருத்தினார். அவன் சிங்காதனம் ஏறிய காலத்திலிருந்து ஆண்டைக் கணக்கிடும் முறையைத் திருவாண்டெழுத்து விழா வாக எடுத்துள்ளனர்.[88]

தமிழகத்தை ஆட்சிசெய்த அரசர்களுடைய பிறந்தநாள் விழாக்கள் ''வெள்ளணி'' விழா என்னும் பெயரொடு நடைபெற்று வந்துள்ளன.[89] ஆட்சி ஆண்டைக் கல்வெட்டுக்கள் கூறுவதால், அவ்வாண்டை அரசாங்க விழாவாக நடத்தி இருக்கலாம். ஆனால் அதனைக் கோயில் எடுப்பித்து இறைவனுக்கு உரிய விழாவாகக் கொண்டாடிய நிலை இரணியவர்மனுக்கே உரியது என்பது குறிப்பிடத்தக்கது. அரசமரபு பின்னாளில் தொடராத தனால் இப்பொழுது இவ்விழா நின்று விட்டது.

புதுப்புனல் விழாவாக நடைபெற்ற நீர்விழா, பின்னர் ஆடி மாதம் பதினெட்டாம் நாளில் கொள்ளிடத்தில் சென்று கல்யாணசுந்தரர் திருநீராடுகின்ற விழாவாகக் கொண்டாடப் பட்டுள்ளது. காலப்போக்கில், தொலைவு காரணமாகவும், பாது காப்புக் காரணங்களுக்காகவும் கொள்ளிடத்திற்குத் திருநீராடச் செல்வது நிறுத்தப்பட்டு இப்பொழுது சிவகங்கையிலேயே இவ்விழா கொண்டாடப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.[90]

ஆடி முதல் புரட்டாசிக்கு இடைப்பட்ட சதுர்த்தி அல்லது அட்டமி திதியில் நாள் வழிபாட்டிற்கு உரியநிலையில் பெரிது, சிறிது என்னும் வேறுபாடு இல்லாமல் ஐப்பசிப் பூரத்திருநாளை விரிவாகக் கொண்டாடுவதற்கு அடிப்படைத் தொடக்கங்களைச் செய்துள்ளதாக ஒரு குறிப்பும் ஐப்பசிப் பூரத்திருநாளைக்கு அறக்கட்டளை ஒன்றையும் ஏற்பாடு செய்தான் இரணியவர்மன் என்னும் குறிப்பும் காணப்படுகின்றது.[91]

நாட்பூசையில் ஏற்படுகின்ற குற்றங்கள் நீங்க-முந்நூல் ஒரு நூலாக அமைய ஒன்பது நூலாகிய இருபத்து ஏழு இழைகளையும் பந்தாகச் செய்து அங்குரார்ப்பணம், மண்டப பூசை, வேதிகார்ச் சனை, அக்னி காரியம், தாலிபாகம், பௌத்திராதிவாசம், விநி யோகம், சயனம், பிரார்த்தனம், பவித்ரம் முதலாக விரிந்த முறையில் நியமித்து ஐப்பசிப்பூர அறக்கட்டளையை ஏற்படுத் தினான் என்று கோயிற்புராணம் சுட்டியுள்ளது.

அவற்றுள் ''அங்குரார்ப்பணம்'' என்பது ''கால்கோள்'' செய்தல் என்னும் சடங்காகும். இதற்கு நவதானியங்களைப்

பாலிகையில் இட்டு நீர், பால் தெளித்து முளைக்கச் செய்வர். இதனிடையே வைக்கப்படுகின்ற கலசத்திற்குச் ''சோம கும்பம்'' என்பது பெயர். பாலிகைகளில் பன்னிரண்டு சூரியர்கள் இருப்ப தாகக் கருதுவர் இந்நிகழ்ச்சி, குறிப்பிடதக்கது. நவதானியங்களி லுள்ள ஒன்பது தானியங்களும் ஒன்பது கோள்களைக் குறிப்ப தாகக் கொள்ளப்படும்.[92]

''மண்டபபூசை'' என்பது மண்டபத்திற்குச் செய்யப்படும் சடங்கு முறையாகும். விழாவிற்காக அமைக்கப்படுகின்ற இடம் ''மண்டபம் எனப்பெயர் பெறும்.'' இதன் வாயில்களில் தோரணம் முதலியவை கட்டப்பட்டிருக்கும். மண்டபத்திலுள்ள இடங்கள் எட்டுயானைகள், எட்டுப் பயிரவர், எட்டு வசுக்கள், பன்னிரண்டு சூரியர் போன்ற பல்வேறு தெய்வங்களுக்கும் உரிய இடங்கள் இவையிவை என வகுத்தமைத்து மண்டபத்தை ஒழுங்கு செய்து கொள்வர்.

''வேதிகார்ச்சனை'' என்பது அமைக்கப்படும் இருக்கை களுக்கு உரிய பெயராகும். இருக்கைகள் ஐந்து வகையாக அமைக்கப்படும். இவ்விருக்கைகள் கொப்பூழுக்கு மேல் உயரங் கொண்டதாகக் இருக்கும். ஐந்து இருக்கைகளையும் அனந்தம், சிம்மம், யோகம், பத்மம். விமலம் எனக் குறிப்பிடுவர். இவற்றின் மீது கலசங்களை நிறுத்தி அவ்வத் தேவதைகளுக்குரிய மூல மந்திரங்களைக் கூறி அகத்தினால் வழிபடுவதே ''வேதிகார்ச் சனை'' யாகும். இதற்குத் தருப்பைப்புல் மிக இன்றியமை யாததாகும்.

''அக்னிகாரியம்'' என்பது வேள்வி செய்தலாகும். வேதிகைக்கு எதிரே ஒரு குண்டத்தை அமைத்து ஆகம முறைப்படி செய்யப் படுவதாகும். வேதிகை என்னும் ஐந்து இருக்கைகளில் ஆவாகணம் செய்யப்பட்ட தேவதைகளின் மந்திரங்களை உச்சரித்து நெய், சமித்து, அன்னம் முதலியவற்றால் ஆகுதி கொடுத்துச் செய்யப் படுவது ''வேள்வி செய்யும்முறை'' ஆகும்.

''தாலிபாகம்'' என்பது வேள்விக்குரிய கஞ்சி நீக்கப்படாத சோற்றினை அவ்வத்தேவதைகளுக்கு உரியநிலையில் மந்திர விதிப்படி வேள்விச் சாலையில் அமைந்த அக்கினி மூலையில் கொடுக்கப்பெறுவதாகும்.

''பௌத்திராதிவாசம்'' என்பது இறைவனை நிறுவும் பொழுது ''எல்லாம்வல்ல இறைவா! குறிப்பிட்ட காலம் வரையில் இங்கு இருக்க வேண்டும்'' என்று வேண்டிக்கொள்வது.

''விநியோகம்'' என்பது தேவதைகளுக்கு விருப்பமானவையாக எவையெவை வேதாகமங்களில் கூறப்பட்டுள்ளனவோ அவற்றைப் படைத்துப் பின்னர்ப் பிரித்துக் கொடுப்பதாகும்.

''சயனம்'' என்பது இறைவனைப் பள்ளியறையில் அமைத்துச் செய்யப்படும் உபசாரமாகும். இதன் இன்றியமையாத மந்திரங்கள் இருக்குவேதத்திலுள்ள ''ராத்ரி சூக்தம்'' ஆகும்.

''பிரார்த்தனம்'' என்பது நிவேதனத்திற்குப் படைக்கப் பட்டுள்ள பொருள்கள்யாவும் இறைவனால் தரப்பட்டவையே என்பதை நினைவு கூர்ந்து, அவற்றைப் பெற்றுக்கொண்டு ''உலகவர் அனைவரும் நலமுடன் வாழ அருள்புரிய வேண்டும்'' என்று வேண்டுவது.

''பவித்ரம்'' என்பது அக்னி காரியம் முதலிய சடங்குகளைச் செய்வோர் கைத்தூய்மைக்காக வலக்கை மோதிர விரலில் அணிந்து கொள்ளும் தர்ப்பைப் புல்லால் ஆகிய மோதிரமாகும். எப்பொழுதும் சடங்குகளைச் செய்து கொண்டிருப்பவர்கள் பவித்ரத்தைப் பொன்னால் செய்து அணிந்து கொள்வதும் உண்டு.[93]

பூரவிழா

''தில்லைப் பெருங்கோயிலில் சிவகாமியம்மைக்கு ஆண்டு தோறும் ஐப்பசிப் பூரவிழா சோழமன்னர் காலமுதல் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது. திருப்பாலி வளத்திருநாள் எனக் கல்வெட்டுகளிற் குறிக்கப்படும் திருநாள் இப்பூர விழாவை ஒட்டியதே. இரண்டாம் சீரங்கராயர் ஐப்பசிப் பூரவிழா கொண்டாடுதற்காகப் புறப்பேட்டை என்ற ஊரைத் தேவ தானமாகக் கொடுத்துள்ளார்.[94]

பதினெட்டாம் பெருக்கன்று தில்லை இறைவன் கொள்ளிடத் துக்கு எழுந்தருளித் தீர்த்தங்கொடுத்தல் உண்டு. தீர்த்தங் கொடுத்தற்கெனக் கொள்ளிடத்தின் வடகரையில் இவர் ஒரு

மண்டபம் அமைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மாசிமகத்தில் தில்லைப் பெருமான் கடலிற்கு எழுந்தருளித் தீர்த்தங் கொடுக்கும் விழாவும் விக்கிரமசோழன் காலம் முதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.[95] இவ்விழாவில் இறைவன் கடலுக்கு எழுந்தருளுதற்கு இருபக்கமும் தென்னை வளர்க்கப் பட்ட பெருவழி அமைக்கப்பெற்றது. சிதம்பரத்திலிருந்து கிள்ளைக்குச் செல்லும்வழி "விக்கிரமசோழன் தெங்குத்திருவிதி" எனக் கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ளது. வசந்தத் திருநாளில் தில்லைப் பெருமான் குலோத்துங்க சோழன் திருத் தோப்புக்கு எழுந்தருளுவான். திருக்கண் சாத்தும் திருநாளும், எதிரிலி சோழன் சிவபாதசேகரன் சித்தத் துணைப்பெருமாள் விழாவும், தைப்பூசத்துப் பாவாடையீட்டுப் பெரிய விழாவும் தில்லைப் பெருங்கோயிலில் நிகழ்ந்தனவாகக் கல்வெட்டுகளிற் குறிக்கப்பெற்றுள்ளன.[96]

திருப்பூரவிழாவில் திருவுலாவின் பொழுது சிவகாமசுந்தரியை முதலாவதாக எடுத்துச் செல்லுவார்கள். தில்லைக்கூத்தன் அதற்குப்பிறகு எடுத்துச்செல்லப்படுவார். பின்னர் விநாயகர், சுப்பிரமணியர் திருமேனிகளும் எடுத்துச் செல்லப்படும்.[97] அம்மை காஞ்சியில் முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்த நிகழ்ச்சியைக் காஞ்சிப்புராணம் விரிவாகக் குறிப்பிடுகின்றது.[98] அவ்வறங்கள் முப்பத்திரண்டையும் அம்மை வளர்த்த நிகழ்ச்சியை நினைவூட்டும் வகையில் இங்கும் விழா நடைபெறுவதாக உள்ள செய்தி அறியத் தக்கது. ஐப்பசிப்பூரம் அம்பாளுக்குரிய விழாவாக இன்றும் நடைபெற்று வருகின்றது.[99]

கார்த்திகைத் திருவிழா

அயனும் அரியும் அடிமுடி தேடியும் காணமுடியாத அழற் பிழம்பான மகாலிங்கத்தை வழிபடும் வகையில் கார்த்திகைப் பெருவிழா திருவிளக்குகள் மிகுதியாக ஏற்றப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது.

கார்த்திகைத் திருவிழா கார்த்திகை மாதம் கார்த்திகை விண்மீன் மதியோடு கூடும் நாளில் இன்றும் கொண்டாடப் படுகின்றது. அந்நாள் முழு உலா நாளாக அமைத்திருக்கும்.

அந்நாளில் பஞ்சமூர்த்திகள் வீதி உலா வரும்.[100] பின்னர்ச் சொக்கப்பனை ஏற்றி இவ்விழாவினைக் கொண்டாடுகின்றனர். கார்த்திகை மாதத்தில் உள்ள திங்கட்கிழமை தோறும் இறைவனின் புறப்பாடு நடைபெறுகிறது என்பதும் கருத்தில் கொள்ளத் தக்கது.

திருவாதிரைத் திருநாள்

மார்கழித் திருவாதிரை நாள் முனிவர்கள் எல்லாம் வந்து சிவகங்கையில் மூழ்கிச் சிதம்பர ஈசனை வழிபட்ட நாளாக வியாக்ரபாதர் இரணியவர்மனுக்கு எடுத்துச் சொல்ல, அதனை விதிப்படி நடத்துமாறு இரணியவர்மன் கூறினான். தில்லைவாழ் அந்தணர்கள் இறைவனுடைய ''திருநட்சத்திரம்'' என்று அதனை ஏற்று அதனை விருப்பமுடன் செய்தார்கள். சிவகங்கை முதலாக உள்ள மற்றைய ஒன்பது தீர்த்தங்களிலும் நீர் கொண்டுவந்து திருமஞ்சன மாட்டித் திருநாள் நடத்தினார்கள்.[101]

விண்மீன்களில் இரண்டு விண்மீன்கள் மட்டும் ''திரு'' என்னும் அடையோடு காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று திருவாதிரை: மற்றொன்று திருவோணம். திருவாதிரை சிவபெருமானுக்குரிய விண்மீன் என்பதும்[102] திருவோணம் திருமாலுக்குரிய விண்மீன் என்பதும் பண்டுதொட்டுக் கூறிவருகின்ற வழக்கமாகும்.[103] ஆதிரையான் என்பது இறைவனுக்குரிய பெயர்களுள் ஒன்று[104] மார்கழித் திருவாதிரையில் இறைவனுக்கு விழா எடுத்த நிகழ்ச்சி ''மாயிருதிங்கள் மறுநிரை ஆதிரை விரிநூல் அந்தணர் விழவு தொடங்க''[105] என்பதால் சங்ககாலத்தில் இவ்விழா நடைபெற்று வந்தமையை அறியலாம்.

இப்பொழுது மார்கழியில் பத்து நாட்கள் நடைபெற்று வருகின்ற இவ்விழா தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு பிள்ளையாருக்கு வழிபாடு நடத்தப்படுகிறது. விழாவின் தொடக்க நாளாகிய கொடியேற்றுவிழா பஞ்சமூர்த்திகள் முன்னிலையிலும், தில்லைக்கூத்தன் முன்னிலையிலும் நடைபெறுகின்றது. காளை உருவம் பொறிக்கப் பெற்ற கொடியைப் பல்லக்கில் ஊர்வலமாக எடுத்து வந்து தில்லைக் கூத்தனின் சந்நிதிக்கு முன்பாக உள்ள கொடிமரத்தில் முறைப்படி ஏற்று

கின்றனர். இந்நாளில் மக்கள் பெருந்திரளாக வந்து இவ்விழா வினைக் கண்டு மகிழ்கின்றனர். இந்நாள் தொடங்கிப் பத்து நாட்களும் காலை, மாலை இருபொழுதுகளிலும் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு நடைபெறுகிறது.

இரண்டாம் நாள் இரவு சந்திரவாகனத்திலும் மூன்றாம் நாள் இரவு சூரிய ஊர்தியிலும் சோமசுந்தரர் எழுந்தருளுகின்றார். மற்றைய மூர்த்திகள் தத்தமக்குரிய வாகனங்களில் எழுந்தருளு கின்றனர். சூரிய சந்திரர்களுடைய இயக்கத்திற்கு இறைவனே காரணம் என்பதை இவ்விழாக்கள் குறிப்பதாகக் கருதலாம்.

நான்காம் நாளில் சோமாசுகந்தர் பூதவாகனத்தில் எழுந் தருளுகின்றார். ''பூதங்கள்'' எனப்படுபவை நிலம் முதலாக ஆகாயம் ஈறாகக் கூறப்படுகின்ற ஐம்பூதங்களாகும்.[106] ஐம்பெரும் பூதங்களின் இயக்கத்திற்கு இறைவனே காரணம் என்பவை இவ் விழா புலப்படுத்துகின்றது.

ஐந்தாம் நாளில் சோமாசுகந்தரும், சிவனாந்த வல்லியும் தனித்தனியாகக் காளைவாகனத்தில் எழுந்தருளுகின்றனர். சித்தாந்த நூல்களில் ஆன்மாவைப் ''பசு'' என்று குறிப்பிடுவர். ''காளை'' என்பது ஆன்மாவின் அடையாளமாகக் கோவிலில் இடம் பெற்றுள்ளது. அஃது இடையறாது இறைவனை நோக்கிக் கொண்டிருக்கின்ற குறிப்பினையே இறைவனுக்கு முன்புள்ள நந்தி காட்டுகின்றது என்பர்.[107] ஆன்மாவினுடைய இயக்கத்திற்கு இறைவனே காரணமாவான் என்பதை இக்காளை வாகனம் காட்டுகிறது எனலாம். இறைவனுக்கு எட்டுவகையான வடிவங்கள் உண்டு என்று கூறப்பட்டுள்ளது. அவை பஞ்ச பூதங்கள், இரண்டு கதிர்கள், ஆன்மா எனப்படும் இயமானன் என்பர்.[108] இவ்வெட்டுவகை வடிவங்களையே இறைவன் தனக்கு வடிவாகக் கொண்டுள்ளான் என்ற கருத்தினை இவ்வூர்திகள் புலப்படுத்துவதாக எண்ணுவதற்கும் இடமுண்டு.

ஆறாம்நாள் விழாவில் சோமாசுகந்தர் யானைமீது ஊர் வலமாக வருகின்றார். சிவபெருமான் கயமுகனைக் கொன்று அவன்தோலை உடுத்திக்கொண்டார். மீண்டும் அவனுக்கு அருள் செய்வதற்காக உயிர்பெறச் செய்து தம் ஊர்தியாக அமர்த்திக்

கொண்டார் என்னும் குறிப்புப் புலப்பட இவ்வூர்தி அமைந்துள்ளது எனலாம். ஆணவத்தை அடக்குகின்ற நிலையைப் புலப்படுத்துவதாகவும் இவ்வூர்தி காணப்படுகின்றது.

ஏழாம் நாள் விழாவில் யாகசாலையில் குறிப்பிடத்தக்க வேள்விகள் நடைபெறுகின்றது. தில்லைக்கூத்தன் கயிலாய ஊர்தியில் எழுந்தருளுகின்றார். இராவணன் தன் ஆற்றலின் செறுக்கினால் கயிலாயத்தைப் பெயர்க்கத் தொடங்கினான். அப்பொழுது இறைவன் தன் கால்பெருவிரலை ஊன்ற அவன் பத்துத் தலைகளும் நெறிபடும் நிலையில் கதறினான். பின்னர்ச் ''சாமகானம்'' பாடிப் பேறு பெற்றான். இவ்வூர்தி இராவணனுடைய வரலாற்றை நினைப்பூட்டுகின்றது. இறைவனிடத்தில் பெரிய ஈடுபாடும் பேராற்றலும் கொண்டவனாக இராவணன் விளங்கினான். எனினும் ஆணவமுனைப்பால் செய்த தவறினைத் திருத்தும் முகமாக இறைவன் தன்னுடைய பாதம் முழுமையும் வைத்து அழுத்தாமல் பெருவிரலால் மட்டுமே வைத்து அழுத்தினார் என்னுங் குறிப்பு கருத்தில் கொள்ளத்தக்கது. இவ்விழாவினை வாணவேடிக்கையோடு நிகழ்த்துகிறார்கள்.

எட்டாம்நாள் விழாவில் காலையில் பஞ்சமூர்த்திகள் உலா வருவர். அன்றுமாலையில் பிச்சாடனர் வீதிவுலாவருகின்றார். இரவில் சோமாசுகந்தர் மட்டும் குதிரைவாகனத்தில் வீதிவுலா வருகின்றார். பிச்சாடனர் கோலம் தாருகவனத்து முனிவர்களின் செருக்கையும் அவர்களின் பத்தினிமார்களின் செருக்கையும் சிவபெருமான் அடக்கிய நிலையைக் காட்டுகிற கோலமாகும்.[109]

ஆனித்திருமஞ்சன விழாவில் எட்டாம்நாள் விழா மாணிக்கவாசகர் வாழ்வொடு இணைகின்ற சீரியபெருவிழாவாகும். ஆனியில் எட்டாவது நாள் விழா ''மகம்'' விண்மீனில் நிகழ்கிறது. அந்தநாள் மாணிக்கவாசகர் இறைவனோடு ஐக்கியமான திருநாளாகும். அதனால் அன்று பஞ்சமூர்த்திகளோடு மாணிக்கவாசகரும் திருவீதிவுலா வருவது ஒப்புநோக்கத்தக்கது. மார்கழித் திருவிழாவில் அனைத்து நாட்களிலுமே மாணிக்கவாசகர் சிறப்புப் பெறுவது குறிப்பிடத்தக்கது.[110]

ஒன்பதாம்நாள் விழா தேர்த் திருவிழாவாகக் கொண்டாடப் படுகின்றது. தில்லைக் கூத்தன், சிவகாமி அம்மை, விநாயகர்,

முருகன், சண்டேசுவரர் ஆகிய ஐவரும் தேரின் மீது ஏறி வீதிவலம் வருகின்றனர். தில்லைப்பெருமான், சிவகாமி அம்மை ஆகிய இருவரும் தங்கள் இருக்கைக்கு வந்து சேரும்வரை ஆங்காங்கு மண்டகப்படி நடைபெறுகிறது. இக்காட்சியை, ''மதிதாங்கு நீள் சடையாய் தலைவா, நல்லதேரினார் மறுகின் திருவாரணி தில்லை தன்னுள்''[111] என்பதனால் அறியலாம். ''தேருலாவிய தில்லையுட் கூத்தனை''[112] எனத் திருநாவுக்கரசர் குறிப்பிடுவதனாலும் அறியலாம். ''திருவிசைப்பா''[113] இவ்விழாவினைப்பற்றி எடுத்துக் கூறுவதும், அவ்விழாவில் திருப்பல்லாண்டு ஓதப்பெறுவதும் குறிப்பிடத்தக்கவை.

இப்பத்து நாட்களிலும் தில்லைப்பெருமான் சந்நிதியில் மாணிக்கவாசகரை எழுந்தருளச் செய்து திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மாணிக்கவாசகருக்கும் தீபதூப ஆராதனைகள் நடைபெறுகின்றன.[114] தேரிலிருந்து ஆடலரசரும், அம்பிகையும் ஆயிரக்கால் மண்டபத்தை அடைகின்றனர். கயமுகன், இராவணன், தண்டகாரண்யத்து முனிவர்கள் ஆகிய முத்திறத்தினரின் ஆணவத்தை அடக்கிய வெற்றி வலமாகத் தேர்த் திருவிழா நடைபெறுகிறது எனலாம்.

பத்தாம்நாள் விடியற்காலை மூன்று அல்லது நான்கு மணி அளவில் ஆயிரக்கால் மண்டபத்தின் முன்பாகத் தில்லைக்கூத்தப் பெருமானுக்கும், உமையம்மைக்கும் திருமஞ்சனம் ஆட்டும்விழா பெரிய அளவில் நிகழ்கிறது. தில்லையிலுள்ள குறிப்பிடத்தக்க பத்துத் தீர்த்தங்களிலிருந்தும் திருமஞ்சனத்திற்கு நீர் கொண்டு வந்து ஆட்டுவிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

நாள் வழிபாட்டில் பரமானந்த கூபம் என்று சொல்லப் படுகின்ற கிணற்று நீரையே அனைத்துத் திருமேனிகளின் திருமஞ்சனத்திற்கும் பயன் படுத்துகிறார்கள். தில்லைப் பெருங் கோயில் மூன்றாவது திருச்சுற்றில் அமைந்துள்ள தனித்தனிக் கோயில்களுக்கும் அங்கங்குள்ள கிணற்று நீரையே திருமஞ்சனத் திற்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருமஞ்சனம் ஆட்டியபின்னர் பெரிய அளவில் பூச்சொரிதல் நடைபெறுகின்றது. காலைப்பத்து மணிக்குப் பஞ்சமூர்த்திகள்

ஊர்திகளில் வீதிவலம் வருகின்றனர். ஆயிரக்கால் மண்டபத்தில் அருச்சனை, ஆராதனை தனிப்பட்ட முறையிலும், பொது நிலையிலும் மிகவிரிவாக நடைபெறுகின்றன. பின்னர்த் தில்லைக் கூத்தனும், சிவகாமி அம்மையும் "சச்சிதானந்தம்" என்னும் நடனத்தோடு ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து படியில் இறங்கு கின்றனர். இக்காட்சி "தரிசனம்" எனப்படும். பின்னர்ச் சிற்றம் பலத்திற்குக்கொண்டு சென்று உரிய இடத்தில் எழுந்தருளச் செய்கின்றனர்.

மறுநாள் நடராசப்பெருமானுக்கும் மாணிக்கவாசகருக்கும் விடையாற்றிவிழா நடைபெறுகின்றது.

தில்லைத் தீர்த்தங்கள்

தில்லையில் சிவகங்கைத் தீர்த்தம், குய்ய தீர்த்தம், புலிமடுத் தீர்த்தம், வியாக்ரபாதர் தீர்த்தம், அனந்தத்தீர்த்தம், நாகசேரித் தீர்த்தம், பிரமதீர்த்தம், சிவப்பிரியைத் தீர்த்தம், திருப்பாற்கடல், பரமானந்தகூபம் என்னும் பத்துத் தீர்த்தங்கள் இடம் பெற்றுள்ளன.[116] இவற்றைச் சிறிது வேறுபாட்டுடன் ஒரு தனிப் பாடலும் குறிப்பிடுகின்றது.

"பாம்போடை, புலிவாவி, நந்தன்குட்டம், பாளைமான்,
சிவகங்கை, பந்தன்கேணி
தேம்புனல்சேர் கொள்ளிடம், சீர்மணிமுத்தாறு
திரைஅலைக்கும் குய்யம், முதலாய் உள்ள
வாம்பயிலும் வனவாளி, யாவும்தில்லை அம்பலத்தைச்
சூழ்தல் அயன்திருமால் ஒக்கும்
பூம்புனல்சேர் புண்டரிகப் பொய்கை மன்றில்
புனித ருள்எனப் புலவர் புகன்றாரன்றே"[117]

என்பதனால் அறியலாம். இதனுள் பாம்போடை நாகசேரித் தீர்த்தம் எனவும் புலிவாவி புலிமடு தீர்த்தம் எனவும், நந்தன் குட்டம் ஓமக்குளம் எனவும், பந்தன் கேணி அனந்ததீர்த்த மாகவும் வழங்கப்படுகின்றன. பாளைமான் என்பது வழக்கில் பாலமான் என வழங்கப்படுகின்றது.

சிதம்பர எல்லைகளிலுள்ள கொள்ளிடம், மணிமுத்தாறு, பாளைமான், மேற்கே ஓடுகின்ற ஓடை ஆகிய அனைத்தும் சூழப்

பெற்றதனால் இது ஒரு குளம் போலவும், அதனிடையில் தாமரை போன்று மன்றமும் அதனில் வருகின்ற மணம் போன்று கூத்தப்பெருமானுடைய அருளும் விளங்குவதாக இப்பாடல் அமைந்துள்ளமையைக் காணலாம்.

''குய்ய தீர்த்தம்'' என்பது திருக்கோவிலுக்கு வடகிழக்கே உள்ள கடலைப் ''பாசமறுத்த துறை'' என்னும் பெயரோடு வழங்குவதாக வழக்கில் காணப்படுகின்றது. தில்லைக்கு வட மேற்கே ''பாசிபத்தான் ஓடை'' என்னும் பெயரோடு ஓர் ஆறு செல் கின்றது. இவ்வாறு, வடகிழக்கே கடல் நோக்கிப் பாய்கின்றது. இவ்வாற்றின்பெயர் ''பாசமறுத்தான் ஓடை'' என்னும் பெயரோடு ஒரு காலத்தில் வழங்கி இருக்கக்கூடும் என எண்ணத் தோன்றுகின்றது. பாசமறுத்த ஓடை சென்று கடலில் கலக்கின்ற இடமே ''பாசமறுத்த துறை'' என வழங்கியிருக்கலாம் என்பது சிந்தித்தற்குரியது.

பாடலில் காணப்படுகின்ற நந்தன் குட்டம் என்னும் புனித நீர்நிலை பின்னர்க் குறிப்பிடப்படுகின்ற பத்துத்தீர்த்தங்களிலும் காணப்படவில்லை என்னும் குறிப்பு உளங்கொள்ளத்தக்கது. ''அனந்த தீர்த்தம்'' என்னும் பெயர் முதற்குறையாக நந்தன் குட்டம் எனவும் வழங்கப்பெற்றிருக்கலாம். ''வனவாவி என்பது திருப்பாற்கடலாகலாம்.[113] ''பந்தன் கேணி'' என்னும் பெயரும் இன்னதீர்த்தம் என விளக்கமாகத் தெரியவில்லை. எனினும் தில்லையம்மன் கோவிலுக்கு வடக்கே ''பூதக்கேணி'' என்னும் பெயருடன் ஓரிடம் காணப்படுகின்றது. கேணி என்னும் சொல் ஒற்றுமையால் இவை இரண்டும் ஒன்றா அல்லது வெவ்வேறா என்று சிந்திப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

பூசத் திருநாள்

தைப்பூசநாளில் தில்லைப் பெருமானுக்குச் சோற்றைப்பாவி ''நிவேதனம்'' செய்துள்ளனர்.[119] இவ்வாறு சோற்றைப் பாவிச் செய்யப்படுகின்ற பெரிய நிவேதனம் ''பாவாடை போடுதல்'' என வழங்கப்படுகின்றது. இப்பாவாடைச் சோறு மலைபோல் குவிக்கப்பட்டிருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. பாவாடை போடும்போது பல்வேறு வகையான சோற்றினை நேர்த்திக்கடன்

செய்வோர் வேண்டுகோட்படி, எந்நாளில் வேண்டுமானாலும் இன்றும் செய்யப்படுகிறது. தைப்பூசநாளில் போடப்படுகின்ற பாவாடை, இறைவன் சிற்றம்பலத்திற்கு வந்து வியாக்ர பாதருக்கும் பதஞ்சலிக்கும் காட்சி கொடுத்த குறிப்பினை உளங் கொண்டு செய்யப்பட்டது போலக் காணப்படுகின்றது. எனவே, தனிபட்டவர் செய்யும் பாவாடையின்றும் இது வேறுபட்டது என்பதை உணரலாம்.

ஆனித் திருமஞ்சனம்

ஆனிமாதத்தில் உத்திரநாளில் மற்றோர் விழாவினைச் செய்யுமாறு இரணியவர்மன் ஆணையிட்டான் என்னும் குறிப்புக் காணப்படுகின்றது.[120] ஆனி மாதத்தில் நடைபெறும் விழா பத்துநாள் விழாவாக நடைபெறுவதை இன்றும் காணலாம். மார்கழியில் திருவாதிரைத் தரிசனம் பத்துநாள் விழாவாக நடை பெறுவது இக்கட்டுரையின் முன்பகுதியில் ஆராயப்பட்டுள்ளது. அதுபோலவே ஆனிமாதத்தில் நடைபெறும் விழாவும் பத்து நாட்களில் நடைபெறுகின்றது. ''ஆனித் திருமஞ்சனம்'' என்று இது குறிப்பிடப்படுகின்றது.

இரணியவர்மன் ஆணையை ஏற்று அம்பலவாணருடைய ஆனிப்பெருவிழா இருபத்தேழு நாட்கள் கொண்டாடியதாக ஒரு குறிப்புக் காணப்படுகின்றது.[121] இதனை மக்களும், தேவர்களும் கண்டு களித்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இருபத்தேழு நாட்கள் என்ற அளவில் கொண்டாடுகின்ற விழா ஒன்றும் இன்று நடைபெறவில்லை. ஒருகால கட்டத்தில் பதினெட்டு நாட்கள் விழா நடைபெற்றதாகக் கூறுகின்றனர்.[122] ஒன்பது, பதினெட்டு, இருபத்தேழு என்னும் தொகைகள் அவ்விழாவினை நடத்துகின்ற ஆசிரியரின் எண்ணிக்கையைப் பொறுத்து அமையும் எனக் கூறுகின்றனர். ஆசிரியர் ஒருவராக இருந்தால் ஒன்பது நாட்களும், இருவராக இருந்தால் பதினெட்டு நாட்களும், மூவராக இருந்தால் இருபத்தேழு நாட்களும் விழாக்காலமாக அமையுமென்று கூறுகின்றனர். ஆசிரியர் என்பவர் விழாவில் வேள்வி நடத்தும் ஆசாரியராகக் கொள்ளப்பெறுதல் வேண்டும்.[123] சிலப்பதிகாரத்தில் இந்திரவிழா இருபத்தேழு நாட்கள் நடை பெற்றதாகக் கூறப்படுகின்ற குறிப்பும் ஈண்டு நினைக்கத்தக்கது.[124]

மாதந்தோறும் நடைபெறும் விழாக்களுக்குத் திருநாட் படிகளை நியமங்களாக இரணியவர்மன் அமைத்துக் கொடுத்தான் என்னும் குறிப்புக் காணப்படுகிறது.[125] ஆனால், அவ்விழாக்கள் எவை என்னும் குறிப்புக் காணப்படவில்லை.

திங்கள் திருவிழாக்கள்

திருமூலநாதருக்குத் திங்கள்தோறும் முழு உலாநாளில் விழா நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு வகையான மணமுள்ள மலரையோ, பொருள்களையோ, இலையையோ பெரிய அளவில் சிவபெருமானுக்குச் சார்த்தி வழிபாடு நடத்து கின்ற நிலை இன்றும் பின்பற்றப்படுகின்றது. சித்திரையில் மருக் கொழுந்து, வைகாசியில் சந்தனம், ஆனியில் முக்கனி, ஆடியில் பசும்பால், ஆவணியில் சர்க்கரை, புரட்டாசியில் அப்பம், ஐப்பசியில் அன்னம், கார்த்திகையில் தீப அலங்காரம், மார்கழியில் பசுநெய், தையில் கருப்பஞ்சாறு, மாசியில் நெய் நிறைந்த கம்பளி, பங்குனியில் பசுந்தயிர் என்பவை இறைவனுக்கு உகந்த பொருள் களாக அர்ப்பணிக்கப்படுகின்றன.[126]

ஆறு அபிடேகங்கள்

தில்லை அம்பலவாணருக்கு ஆண்டில் ஆறுமுறை திருமஞ்சனம் ஆட்டும்விழா பெரிய அளவில் நடைபெறுகிறது. சித்திரை ஓணத்திலும், ஆனி உத்திரத்திலும், ஆவணி,புரட்டாசி சதுர்த்த சியிலும், மார்கழி திருவாதிரையிலும், மாசி சதுர்த்தசியிலும் திருமஞ்சன நீராட்டுக்குரிய நாட்களாகத் தேர்ந்து கொள்ளப் பெற்றுள்ளன.[127] மக்களுக்கு ஓராண்டு என்பது இறைவனுக்கு ஒரு நாளாகக்கருதி அதில் ஆறுகாலம் திருமஞ்சனம் ஆட்டப் படுவதாகப் பாவனை செய்து திருமஞ்சன நீராட்டினை இவ்வாறு அமைத்துள்ளனர் எனலாம். ஆறு திருமஞ்சன நீராட்டுகளில், ஆனியிலும் மார்கழியிலும் விடியலுக்கு முந்தைய பொழுதில் செய் யும் திருமஞ்சனத்தை ஆயிரங்கால் மண்டபத்தில் செய்கின்றனர்; மற்றைய நான்கு திருமஞ்சனங்களும் பொற்சபையில் மாலை நேரத்தில் நடத்துகின்றனர். ஆறு திருமஞ்சனங்களில் மூன்று விண்மீன்களை வைத்தும், மூன்று திதிகளை வைத்தும் அமைக்கப் பட்டுள்ளன என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது.

சிவராத்திரித் திருவிழா

மாசித்திங்கள் அமாவாசைக்கு முன்தினம் சிவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இரவில் நான்கு காலங்கள் வழிபாடு செய்கிறார்கள். மக்கள் பெருந்திரளாக வந்து இரவு முழுவதும் கண்விழித்து இவ்விழாவில் பங்கு கொள்கின்றனர். அந்நாளில் இறைவன் திருவீதியுலாக் காட்சியும் நடைபெறுகின்றது.

பிறவிழாக்கள்

பிரதோடம்

மாத உற்சவங்களில் குறிப்பிடத்தக்கதாக நடைபெறுகின்றவற்றில் ''பிரதோடம்'' என்று சொல்லப்படுவது மாதந்தோறும் இரண்டு நாட்கள் கொண்டாடப்படுகின்றது. வளர்பிறை பதின்மூன்றாம் நாளிலும், தேய்பிறை பதின்மூன்றாம் நாளிலும் மாலைப்பொழுதில் நடைபெறும் நாள் வழிபாடு பிரதோடம் எனப்படுகின்றது. இதில் நந்தியம் பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்து அலங்கரித்துத் தீபதூப ஆராதனை செய்கிறார்கள். காப்பரிசியை ''நிவேதனம்'' செய்கிறார்கள். அரிசியும் வெல்லமும் மாட்டிற்கு உகந்தவை என்பதால் காப்பரிசியை நிவேதனப் பொருளாகக் கொண்டுள்ளனர். இதனை மக்கள் பெருமளவில் கண்டு மகிழ்கிறார்கள்.

பிட்டுக்கு மண் சுமந்த பெருநாள்

ஆவணி மாதத்தில் மூல விண்மீன் கூடிய நாளைப் பிட்டுக்கு மண்சுமந்த விழாவாக எடுக்கிறார்கள். அன்று இறைவனுக்குப் பிட்டை நிவேதனப் பொருளாகப் படைக்கின்றனர்.

திருக்கல்யாணம்

ஐப்பசித் திங்களில் உத்திரநாளில் திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகிறது. பொன்னம்பலத்திற்கு முன்பகுதியிலுள்ள ''பேரம்பலம்'' என்னும் இடத்தில் இறைவன், இறைவியை வைத்து இவ்விழாவினை நடத்துகின்றனர். திருமணமாகாத பெண்கள் பெரும்பாலும் நேர்த்திக்கடன்களைச் செய்வதற்கு இத் திருவிழாவினைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

பண்டாசுரன் வதம்

''பண்டாசுரன் வதம்'; என்னும் விழா புரட்டாசியில் விசய தசமி அன்று கொண்டாடப்படுகின்றது. பண்டாசுரன் என்பவன்

பிரமனை நோக்கி தவம் செய்தான். பிரமன் வெளிபட்டு, அவன் வேண்டியவாறு கிருமி வடிவில் இருந்து எல்லோருடைய வீரியங் களையும் நுங்கும் வரம் தந்தான். தேவர்கள், மக்கள் யாவரும் அதனால் வீரியம் இழந்து நடைப்பிணமாயினர். எல்லோரும் சென்று சிவபெருமானிடத்தில் முறையிட்டனர். அவர் பெரிய யாகக்குண்டம் ஒன்றை நிறுவி அதில் எல்லோரையும் அவிசாகக் கொடுத்தார். பற்றுக்கோடு இழந்த பண்டாசுரன் பின்னர் வெளிப்படவே அவனையும் அதிலிட்டு அழித்தார்.[128] பின்னர் உலகத்தை மீண்டும் தோற்றுவித்தார் என்ற வரலாறு காஞ்சிப் புராணத்தில் காணப்படுகின்றது.[129] அவ்வாறு அழிக்கப்பட்ட இடம் "கச்சி மயானம்" என்னும் பெயரோடு ஒரு கோயிலாக ஏகம்பநாதர் கோயிலில் முன்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளமை ஈண்டு கருத்தில் கொள்ளத்தக்கது.

தில்லைப் பெருங்கோயிலில் சுற்றுத் தெய்வங்களாக அமைந் துள்ள முக்குறுனி விநாயகர், முருகப்பெருமான் போன்ற தெய் வங்களுக்கு நடைபெறும் விழாக்கள் பலவாகப் கொண்டாடப் படுகின்றன. கோவிந்தராசப் பெருமானுக்கும் பல்வேறு விழாக் களைப் பல்வேறு வகையிலும் எடுக்கிறார்கள். அவை ஈண்டு ஆராயப்படவில்லை.

மக்களும் வழிபாடும்

நாள்வழிபாடு தில்லையில் ஆறு காலங்களில் நடைபெறுவது நடைமுறையில் இருப்பினும், உமாபதிசிவனார் நான்கு காலங் களைக் குறித்தே பேசியிள்ளார். ஆறு காலங்களில் நான்கு காலங்கள் மட்டும் இன்னின்னார்க்கு உரியவை என்று குறிப்பிடு கின்ற நிலையில் குறிப்பிடப்பட்டனவே தவிர, காலங்கள் இத்துணை என வரையறை செய்யும் நோக்கோடு குறிப்பிடப் படவில்லை என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. எல்லாக் கால வழிபாடுகளும் மக்களுக்கு உரியவை என்று அவர் குறிப்பிடுவதால் ஆறுகால வழிபாடு என்பது எல்லோர்க்கும் வெளிப்படையாகத் தெரிந்தது என்னும் கருத்தால் கூறப்பட்டதாகும்.

நாள்வழிபாட்டில் கலந்து கொள்வதற்கு உள்ளூர் மக்கள் பெருந்திரளாக ஒவ்வொரு காலத்திலும் அவரவர்கள் விரும்பிய

காலங்களில் வந்து வழிபாடு செய்து செல்லுகின்றனர். அர்த்தயாம பூசனையைப் பார்ப்பது மிகவும் பயன்தரும் ஒன்றாகும் என்பதால் அர்த்தயாம வழிபாட்டிற்கு இன்றும் பலர் வந்து கலந்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்புவழிபாடு பல்வேறு நிலைகளில் எடுக்கப்படுகின்றது என்றாலும் ஆனியிலும், மார்கழியிலும் நடைபெறுகின்ற விழாக்கள் பத்து நாட்கள் நடைபெறுகின்றன. அவை தரிசனம் என்னும் பெயரால் வழங்குவர். இவையன்றி நடைபெறும் விழாக்களில் தில்லைக் கூத்தனுக்கும், திருமூலநாதருக்கும், சிவகாமி அம்மைக்கும் நடைபெறுகின்ற விழாக்கள் கோயிற் புராணத்தில் சுட்டப்பட்டவற்றிற்கும் நடைமுறையில் இருப்பவற்றிற்கும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனினும் கால நிலைக்கு ஏற்ப அவற்றில் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்று கூறலாமே தவிர, முற்றிலும் வேறாக அமைந்துள்ளன என்று கூறவியலாது.

புலிக்கால் முனிவர், பதஞ்சலி முனிவர் ஆகியோரை ஆன்மீக வழிபாட்டுக்குரிய அரச ஆலோசகர்களாக இரணியவர்மன் கருதியிருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் கருத்துப் படியே நாள்வழிபாட்டிற்கும், சிறப்புவழிபாட்டிற்கும் பல அறக் கட்டளைகளை ஏற்படுத்தி வழிபாடுகளை ஒழுங்கு செய்தான் என்னும் குறிப்பு கோயில் புராணத்தில் அறியப்படுகிறது.

III. திருமுறைக் கருவூலம்

திருமுறைக் கருவூலம் என்னும் பகுதி திருமுறை தொகுப்பித்தோரும், தொகுத்தோரும், மூவர் காப்பும் மூவாயிரவர் மறுப்பும், முதல் ஏழு திருமுறைகள், பின் ஐந்து திருமுறைகள் எனப்பகுத்து ஆராயப்படுகிறது.

''முறை'' என்பதற்கு நூல் என்பது பொருள்.[130] ''திருமுறை'' என்பது தெய்வப்பனுவல் என்னும் குறிப்பில் அமைந்த பெயராகும். இறைவனிடத்து முறையீடு செய்த காரணத்தால் ''திருமுறை'' என்பதாகப் பெயர் அமைந்திருப்பதற்கும் வாய்ப்பு உண்டு. திருமுறைகள் தொகுக்கப்பட்டவை என்பது தொகுப்பித்த மன்னனாலும், தொகுத்த நம்பியாண்டார் நம்பிகளாலும்

தெரிகின்ற செய்தியாகும். ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் என்னும் மூவராலும் பாடப்பெற்ற பாடல்கள் ''திருப்பதிகம்'' என்னும் பெயரால் கல்வெட்டுகளில் வழங்கப் பட்டிருந்தது என்பது திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய நியமிக்கப் பட்டவர்கள் தொகைபற்றிக் குறிப்பிடுவதால் அறியலாம்.[131]

தேவார மூவர் பாடிய திருப்பதிகங்கள் பத்துப்பத்துப் பாடல்களைக் கொண்டதாகப் பெரும்பாலும் அமைந்துள்ள காரணத்தால் பத்தகம் ''பதிகம்'' என வழங்கப்பட்டிருக்கலாம். ஞானசம்பந்தருடைய பாடல்கள் மட்டும் பதினோரு பாடல் களைக் கொண்டிருப்பது விதிவிலக்காக அமைந்துள்ளது. எனினும் பதினோராம் பாடல் இன்னாரால் இயற்றப்பெற்ற பாடல் என்னும் குறிப்புப் படவே அமைந்துள்ளமையைக் காணலாம்.

பத்துப்பத்துப் பாடல்களாகப் பாடுகின்ற அமைப்பு சங்க நூல்களிலேயே காணப்படுகின்றது. ஐங்குறு நூறு முழுமையும் பத்துப்பத்துப் பாடல்களால் அமைந்துள்ளமையைக் காணலாம். பதிற்றுப்பத்து பத்துப்பாடல்களால் அமைந்துள்ளமையும் கருதத் தக்கது. பத்துப்பாட்டு என்னும் தொகுப்பினுள் பெரும் பாடல்கள் இடம் பெற்றிருப்பினும் ''பத்து'' என்னும் தொகைச் சொல் அந்நூலின் பெயராக அமைந்திருப்பதும் ஈண்டு எண்ணத் தக்கது. பதினெண்கீழ்கணக்கு நூல்கள் பலவற்றிலும் சிறப்பாகத் திருக்குறளில் பத்துப்பத்துப் பாடல்கள் அமைந்த உட்தலைப் புக்கள் காணப்படுகின்றன.

இம்மரபு, ''பதிகம்'' என்ற பெயரால் எழுந்த சிற்றிலக் கியத்திற்குப் பின்னர்க் காரணமாயிற்று எனலாம். நாயன்மார்கள் பாடல்கள் தனிச் சிற்றிலக்கியங்களாகப் பாடப்பெறாமல் ''பதிகங்கள்'' என்னும் பெயரால் பாடப்பெற்றுள்ளமையும் கருத்தில் கொள்ளத்தக்கது. ''பத்து'' என்னும் தொகை மரபு பின்பற்றப்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை என்பது உளங் கொளத்தக்கது.

திருமுறை தொகுப்பித்தோரும், தொகுத்தோரும்

ஞானசம்பந்தர் முதலிய மூவராலும் பாடப்பெற்ற பதிகங்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பெற்றுத் தில்லைத் திருக்கோயிலில்

காப்பிடப் பெற்றிருந்தன. திருமுறைகளை வெளிக்கொணரும் வரை தில்லைப்பெருங்கோயில் திருமுறைகளுக்குக் கருவூலமாக அமைந்திருந்தது எனலாம். திருமுறைகள் எவ்வாறு தொகுக்கப் பட்டன என்னும் வரலாற்றை உணர்த்துகின்ற நூலாக "திருமுறை கண்ட புராணம்" விளங்குகிறது. இதனை இயற்றிய உமாபதிசிவனார் தாம் பழகிய பட்டறிந்த கோயில் அறிவாலும், மரபுவழிச் செய்திகளாலும் ஆராய்ந்து உணர்ந்தவற்றைத் திருமுறை கண்ட புராணமாக இயற்றியிருத்தல் வேண்டும்.

திருமுறைக் கருவூலமாக இருந்த திருக்கோயிலின் உள்அறை நீண்ட காலமாகக் காப்பிடப்பட்டிருந்ததைத் தவிர, அவற்றை எடுத்துப்பயன்படுத்தவோ தொகுத்து வெளியிடவோ யாரும் அக்காலத்தில் முற்படவில்லையெனத் தெரிகிறது. திருமுறை களைத் தொகுப்பதற்கும், தொகுப்பிப்பதற்கும் உரியவர்கள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டுவரை தோன்றாது இருந்தமை பெரியதோர் இடையீட்டை ஏற்படுத்தியிருந்தது. தேவார மூவர் பாடிய பாடல்கள் என்ன ஆயின என்பது வெளியுலகிற்குத் தெரியாது இருந்த நிலையில், நம்பியாண்டார் நம்பிகள் சோழனுடைய ஆணையின் வண்ணம் அவற்றின் இருப்பிடங்களை அறிய முற்பட்டார். திருமுறைத் தொகுப்பிற்கு அவருக்குத் தகுதி இருந்ததாக அக்காலத்தில் ஆட்சியில் இருந்த மன்னன் துணிந்தமைக்குத் திருநாரையூரில் செய்யப்பெற்ற அவரது அற்புத நிகழ்ச்சியே காரணமாக இருந்தது எனக் கூறுகின்றனர்.

பரம்பரை சிவாசாரியார் மரபில் தோன்றிய நம்பியாண்டார் நம்பிகள் சிறுவராக இருந்தபோது தந்தையார் வழிபாடு செய்து வரும் பொல்லாப் பிள்ளையாருக்கு, தந்தையாருக்குப் பதிலாக வழிபாடு இயற்றச் சென்றார். முறைப்படி திருமஞ்சனமாட்டி நிவேதனத்தை வைத்து நிவேதித்தார். நாள்தோறும் தந்தையார் கொண்டுவரும் அமுதைப் பிள்ளையார் உண்ணுவதாக இவர் கற்பனை செய்து வந்துள்ளார். அதனால் தான்கொண்டு வந்த அமுதையும் உண்ணுமாறு வேண்டினார். உண்ணாமல் போகவே பலவாறு வருந்தித் தன்னை வருத்திக்கொள்ள முற்பட்டார். அதுகண்டு பிள்ளையார் வெளிப்பட்டு அமுதை ஏற்றருளினார் என்னும் புராணவரலாறு காணப்படுகின்றது.[132]

இந்நிகழ்ச்சி நாள்தோறும் தொடர்ந்ததாகவும் அதனால் அவருடைய புகழ் நாடெங்கிலும் ஓங்கியதாகவும் ஒரு குறிப்புக் காணப்படுகின்றது.[133] மூவர் முதலிகளால் பாடப்பெற்ற பாடல்கள் கிடைக்கவில்லையே என்று கவன்று கொண்டிருந்த மன்னனுக்கு இவர் செய்த நிகழ்ச்சி பெரிதும் உவகை அளித்தது. இவருடைய துணையை நாடினால் திருமுறைகளைக் கண்டு விடலாமென மன்னன் கருதினான்.

திருப்பதிகங்களைத் தொகுத்து வெளியிட வேண்டும் என்னும் கருத்தோடு வாழ்ந்த மன்னனாக இராசராசசோழன் கருதப் படுகின்றான். இராசராச சோழன் திருமுறை தொகுப்பித்த சோழன் அல்லன் என்னும் கருத்தும் அறிஞர்களிடையே காணப் படுகின்றது.[134] வெள்ளைவாரணனார் திருமுறைகண்ட சோழனாக ஆதித்தன் என்பவனைக் குறிப்பிடுவர். பிற்காலச் சோழர் வரலாற்றில் ஆதித்தன் என்னும் பெயரோடு இருவர் காணப்படுகின்றனர். அவர்களுள் ஒருவன் விசயாலயசோழன் மகனாகிய முதல் ஆதித்த சோழன்; மற்றையோன் சுந்தரசோழனின் மூத்தமகனும் முதலாம் இராசராச சோழனின் தமையனுமாகிய இரண்டாம் ஆதித்த சோழனாவான். இவன் ஆதித்த கரிகாலன் எனவும் வழங்கப்படுகின்றான் அரசியல் காரணங்களினால் இவன் இளமையிலேயே கொல்லப்பட்டான்.

விசயாலயனின் மகனும் பராந்தக சோழனின் தந்தையுமாகிய முதல் ஆதித்தசோழன் கி.பி. 870 முதல் 907 வரையில் சோழ மண்டலத்தை ஆட்சி செய்துள்ளான். இவன் திருமுறை கண்ட வனாகக் கொள்ளப்படுவதற்குக் குறிப்பிடத்தக்க காரணங்கள் உள்ளன என்பர். பெரியபுராணம் தோன்றுவதற்கு வழிநூலாகக் கொள்ளப்பெற்ற திருத்தொண்டர் திருவந்தாதி நம்பியாண்டார் நம்பிகளால் செய்யப்பெற்ற குறிப்பிடத்தக்க நூல். அது "திருத்தொண்டர் திருவந்தாதி" என வழங்கப்படுகின்றது. அந்நூலில் மூன்று பாடல்களில் ஆதித்த சோழன் என்பவன் பாராட்டப்பெற்றுள்ளான். அவன் கொங்கு நாட்டிலிருந்து பொன் கொணர்ந்து தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்தவன் என்று கூறியுள்ளார். அவனுடைய முன்னோர்களாகக் குறிப்பிடப் பெறும் புகழ்ச்சோழர், இடங்கழியார், கோச்செங்கட்சோழன்

ஆகிய மூவரும் அடியவர் பெருமக்கள் என்னும் குறிப்பும் காணப் படுகின்றது.[135] திருத்தொண்டர் திருவந்தாதியில் மூன்று பாடல்களால் பாராட்டப்பட்ட ஆதித்தசோழன், நம்பியாண்டார் நம்பிகளின் காலத்தவன் என்பது வெள்ளைவாரணனார் கோட்பாடாகும்.[136]

நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திரு வந்தாதியில் இராசராச சோழனைக் குறிப்பிடாமை ஒன்றே நம்பியாண்டார் நம்பிகள் அவ்வேந்தன் காலத்தவர் அல்லர் என்பதைப் புலப்படுத்துவதாகக் குறித்துள்ளார்.[137] இராசராச சோழனின் ஆட்சிக்காலத்திற்கு முன்னரேயே முதல் ஆதித்த சோழன் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட கல்வெட்டுக்களில் திரு எறும்பியூர், பழுவூர் ஆகிய இடங்களில் திருப்பதிகங்கள் பாடு வதற்கு நிபந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முதற்பராந்தகன் ஆட்சியில் திருவாவடுதுறையிலும், அல்லூரிலும், திருத்தவத் துறையிலும் திருப்பதிகங்கள் ஓதுவதற்கு நிபந்தங்கள் விடப் பட்டுள்ளன.[138] உத்தமசோழன் ஆட்சியில் கோனேறிராசபுரம், அந்துவநல்லூர் ஆகிய இடங்களிலும் நிபந்தங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. நிபந்தங்கள் ஏற்படுத்தப்பட்ட காலங்கள் இராசராச சோழன் காலத்திற்கு முற்பட்டவை என்பதனால் இராசராச சோழன் திருமுறையைத் தொகுத்திருக்க இயலாது என்றும், அவன் காலத்திற்கு முற்பட்ட ஆதித்தசோழனே திருமுறையைத் தொகுப்பித்தோன் என்றும் கூறப்பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[139]

திருமுறை கண்ட புராணத்தில் ''இராசராச அபயகுல சேகரன்'' என்றதொடர் இராசராசனைக் குறிக்கின்றது என்ற கொள்கை ஏற்புடையது அன்று என்பர். இராசராசன் என்பது பிற்காலச்சோழர் வரலாற்றில் மூன்று மன்னர்களுடைய பெயராக அமைந்துள்ளமையால், அதனை முதல் இராசராசனுக் குரியதாகக் கொள்ள இயலாது என்பதும் பன்னிருதிருமுறை வரலாற்றில் காணப்படும் கருத்தாகும். பன்னிருதிருமுறை வரலாற்றில் காணப்படும் இச்செய்திகள் ஆராய்தற்குரியவை.

முதலாம் ஆதித்தசோழன் திருத்தொண்டர் திருவந்தாதியில் மூன்று இடங்களில் பாராட்டப்பட்டுள்ளான் என்பது வெள்ளை

வார்ணனார் கருதும் முதற்கருத்தாகும். எனவே ஆதித்தசோழன் நம்பியாண்டார் நம்பிகள் காலத்தவன் என்ற கோட்பாட்டை உறுதிசெய்வதற்கு இம்மூன்று பாடல்களையும் அவர் சான்றாகக் கொண்டுள்ளார். திருத்தொண்டர் திருவந்தாதியில் ஆதித்த சோழனின் முன்னவர்கள் மூவர் அடியவர் பெருமக்களாக வாழ்ந்த செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளமையை எடுத்துக் காட்டியுள்ளார். இவர்கள் மூவரும் திருத்தொண்டத்தொகையில் சுந்தரமூர்த்திகளால் நாயன்மார்களாக ஏற்றுக்கொள்ளப் பட்டவர்கள் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

ஆதித்தசோழன் கொங்குநாட்டிலிருந்து பெரும் பொன்னைக் கொண்டு வந்து சிற்றம்பலத்தில் பொன்வேய்ந்தான் என்னும் செய்தி நம்பியாண்டார் நம்பிகளுக்குப் பெரும் வியப்பைத் தந்த வரலாற்றுச் செய்தியாகும். பொன்வேய்ந்த ஆதித்தன் நாயன் மார்களுடைய பாரம்பரியத்தில் வந்ததால், தில்லைக் கூத்தனின் கூரைக்குப் பொன்வேய்ந்தான் என்பதை வியந்து பாராட்டி யுள்ளார். நாயன்மார்களுள் ஒருவனாகச் சேர்க்கத்தக்க தகுதி அவனுக்கு இருந்தும் அவனைத் தாம்பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில் நாயன்மாராக இடம்பெறச் செய்ய முடிய வில்லையே என்பதால் அவன் செய்த செயலை அவன் முன்னவர் களோடு இணைத்துப் பார்த்துப் பாராட்டியுள்ளார் என்று கருதுவதற்குப் பெரிதும் வாய்ப்பு உள்ளது. ஆதித்தசோழன் தம் காலத்தில் வாழ்ந்த மன்னனாகச் சுட்டிக்காட்டும் முறைமை அப்பாடல்களில் காணப்படவில்லை என்பதும் மனத்தில் கொள்ளத்தக்கது.

இராசராசன் காலத்திற்கு முன்னமேயே பல மன்னர்கள் காலங்களிலேயும் திருப்பதிகம் விண்ணப்பம் செய்வதற்கு நிபந்தங்கள் விடப்பட்டிருந்த குறிப்பால் இராசராசன் காலத்திற்கு முன்னரேயே திருமுறைகள் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்னும் முடிவு ஆராய்வதற்குரியதாய் உள்ளது. மூவர் பாடிய பாடல்கள் பல்வேறு இடங்களிலும் அமைந்துள்ள தலங்களில் பாடப்பெற்றவை. அவ்வத்தலங்களிலும் இப்பாடல்கள் பதிவு செய்யப்பட்டிருக்கலாம். அவ்வாறு காணப்பட்ட பதிகங்களி லிருந்துதான் அவை முழுமையும் தொகுத்து நோக்க வேண்டும்

என்னும் அவா மன்னனுக்கும் அறிஞர்களுக்கும் ஏற்பட்டிருத்தல் வேண்டும். திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய நிபந்தங்கள் ஏற்படுத்தப்பட்ட ஒன்றே இராசராசன் காலத்திற்கு முற்பட்டது திருமுறைத் தொகுப்பு என்பது பொருந்துமாறில்லை.

''நிபந்தங்கள்'' ஏற்படுத்தப்பட்ட கல்வெட்டுக்களில் எல்லாம் திருமுறை என்ற பெயர் இடம் பெறாமை நினைக்கத்தக்கது. கிடைத்த திருப்பதிகங்களைக் காப்பாற்ற வேண்டும் என்னும் நோக்கோடு அந்நிபந்தங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நிபந்தங்கள் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளைகளில் மிகப்பெரிய அறக்கட்டளையாகக் கருதப்படுவது இராசராசனால் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளையேயாகும். நாற்பத்து எட்டுப்பேர் திருப்பதிகம் ஓதுவதற்கும், இரண்டுபேர் கொடுகொட்டி மத்தளம் வாசிப்பதற்கும் தஞ்சைப் பெரியகோயிலில் ஏற்பாடு செய்தான் என்னும் குறிப்பு இவனுக்குத் திருப்பதிகங்கள்பால் இருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றது. திருமுறைத் தொகுப்பு வெளி வருவதற்கு முன்னர் ஆங்காங்கே கோயில்களில் உள்ள ஓதுவார்கள் தங்கள் முன்னோர் வழியில் எழுதாக் கிளவிகளாக இருந்து வாய்மொழியாகச் சொல்லப்பெற்றுவந்த திருப்பதிகங்களைப் பாடி வந்துள்ளனர் என்பது இவ்வரலாற்றால் அறியப்படும் உண்மையாகும். எனவே இராசராசன் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் திருப்பதிகம் ஓதுவதற்கு நிபந்தங்கள் ஏற்படுத்தப்பட்டமை ஆதித்தசோழன் தன் காலத்தில் தொகுப்பித்தான் என்னும் கொள்கைக்கு ஏற்ற சான்றாகக் கொள்ள இயலவில்லை.

இராசராசன் என்னும் பெயரோடு மூவர் வாழ்ந்தனர் என்பதால், இராசராச அபயகுலசேகரன் என்பது உமாபதி சிவனால் தெளிவின்றிக் குறிக்கப்பட்ட குறிப்பாக வெள்ளை வாரணனார் கருதுகின்ற கருத்து எண்ணுவதற்குரியதாகும். பிற்காலச்சோழர் வரலாற்றில் மூன்று மன்னர்கள் இராசராசர் என்னும் பெயரோடு இருந்து இருப்பினும் முதல் இராசராசன் பெயரே வரலாற்றில் ஏற்றம் உடையதாகக் கருதப்படுகின்றது. அதற்கு இவன் தன் ஆட்சிக்காலத்தில் செய்த இருபெரும் செயல்கள் காரணமாகும். ஒன்று, தமிழகத்திலேயே ஒப்பற்ற

கோயிலாகத் திகழும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டி முடித்ததாகும். இரண்டாவது, கிடைத்தற்கரிய அறிவுக் கருவூலமாக இருந்த திருப்பதிகங்கள் முழுமையும் தொகுப்பிக்க வேண்டும் என்னும் கருத்து பலகால் மனத்தில் ஊறி ஊறி வாய்ப்புக் கிட்டியபோது நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு தொகுக்கச் செய்ததாகும். அதனால் ''திருமுறை கண்ட சோழன்'' என்று அழைக்கப்பட்டமையும் கருத்தில் கொள்ளத்தக்கது.

விசயாலயன் பாரம்பரியத்தில் இராசராசனுடைய பெயர் வரலாற்றில் பெரிதும் இடம்பெறுவதற்கு அவனுடைய பல வெற்றிகள் காரணமாயின. எனினும் பிற்காலச்சோழ மரபு ஏற்றம் பெறுவதற்குப் பெருவுடையார் கோவில் கட்டியமையும், திருமுறை கண்டமையும் பெரிதும் காரணமாயின எனலாம். இராசராசனுடைய தமக்கையார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் கொண்டிருந்த இறை ஈடுபாடு இராசராசனுடைய செயல்களுக்குத் துணை புரிந்தது என்னுங்குறிப்பும் நினைக்கத் தகுவதாகும். இராசராசனுடைய பெயர் பின்னர் இரு மன்னர் களுக்கு வைக்கப்பட்டமைக்கு இவனுடைய பீடுமிக்க வரலாறே காரணமாகும் எனலாம்.

இராசராசனுடைய பெயர் திருத்தொண்டர் திருவந்தாதியில் இடம்பெறாமை ஒன்றே நம்பியாண்டார் நம்பிகள் இராசராசன் காலத்தவர் அல்லர் என்பதற்குப் போதுமான சான்றாகும் என்று கூறப்பட்டுள்ளது. தாம்பாடிய தெய்வப்பனுவலாகிய திருத் தொண்டர் திருவந்தாதியில் ஒரு சாதாரண மன்னனை இடம் பெறச் செய்யக் கூடாது என நம்பியாண்டார் நம்பிகள் கருதி யிருக்கலாம். இராசராசன் தன்னுடைய பெயர் அத்தகைய தெய்வப்பனுவலாகிய திருத்தொண்டர் திருவந்தாதியில் இடம் பெற விரும்பாமையும் அதற்குக் காரணமாகலாம். நாயன்மார் களோடு ஒத்தநிலையில் கருதப்பட்ட ஆதித்தசோழன் அம்பல வாணருக்குப் பொன்வேய்ந்த காரணத்தால் நம்பியாண்டார் நம்பிகள் நூலில் இடம் பெற்றுள்ளான் என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது.

உமாபதிசிவனார் தில்லைவாழ் அந்தணர் மரபில் வந்தவர். தில்லைவாழ் அந்தணர்கள் மரபாகச் சோழவேந்தர்களுக்கு

முடிசூடி வந்த பரம்பரையினர். சோழ மன்னர்களின் வரலாறு தில்லைவாழ் அந்தணர்களின் வரலாற்றோடு இணைத்துச் செவி வழியாகக் கூறிவரப்பெற்ற வரலாறாகும். சோழர்க்கு அன்றிப் பிற யாவருக்கும் முடிசூட இசையாத தில்லைவாழ் அந்தணர் களின் பெருமை பெரியபுராணத்தால் அறியப்படுகின்றது.[140] உமாபதிசிவனார் தம்மரபினர் வழிவழியாகக் கூறிவந்த வரலாற்று முறைமை கொண்டே திருமுறைகண்ட புராணத்தை இயற்றியிருக்க வேண்டும். அவரால் குறிப்பிடப்படுகின்ற இராசராசன் முதல் இராசராசன் என்பதே அறிஞர்கள் காலங் காலமாகப் போற்றி வந்த கருத்து என்பது புலனாகிறது.

மூவர் காப்பும், மூவாயிரவர் மறுப்பும்

திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாருக்கு அமுது அருத்தியதோடு நம்பியாண்டார் நம்பிக்குப் பிள்ளையார் கல்வி கற்பித்ததாகவும் ஒரு குறிப்பு காணப்படுகின்றது.[141] கோயிலி லிருந்து ஒருமைபாட்டுணர்வால் பிறர்கற்பியாது தாமே கற்ற செய்தியை இவ்வாறு உருவகப்படுத்திக் கூறியிருக்கலாம். மூவர் தமிழைக் கண்டு பிடிக்க வேண்டும் என்னும் குறிப்புடைய இராச ராசன் திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பியைக் கண்டு தம் விருப்பத்தைத் தெரிவித்தான். மூவர் தமிழின் இருப்பிடத்தைப் பொல்லாப் பிள்ளையாரிடம் தெரிந்து அவை தில்லையம்பதியில் அம்பலவாணர் கூத்து நடத்துகின்ற இடத்திற்குப் புறக்கடைப் பக்கமாக உள்ள அறையில் காப்பிடப்பட்டிருப்பதாக இராச ராசனிடம் கூறினார். அவ்வாறே மூவர்களுடைய திருக்கரங்களும் அடையாளமாக இட்டுக் காப்புச் செய்யப் பட்டிருக்கிறது என்னும் குறிப்பும் காணப்படுகின்றது.

''வண்டமிழ்க ளிருந்தவிட மன்று ளாடும்
கூர்ந்தவிருட் கண்டர்புறக் கடையின் பாங்கர்க்
கோலமலர்க் கைகளடை யாள மாக''[142]

என்னும் பாடல் அடிகளால் உணரலாம். மூவர் பாடலின் தன்மையைக் ''கண்டபெரும் மந்திரம்''[143] என்று கூறுவதால் உணரலாம். வேதங்கள் ''கை காணா மந்திரம்'' என்றும் கூறப்பெறும். மூவர்பாடல்கள் பல்வேறு அற்புத நிகழ்ச்சிகளை மக்கள் கண்முன் காணுமாறு செய்தமையால் கண்ட மந்திரம்

என்றும், வேதங்கள் இவ்வாறு வரலாற்றோடு நிகழாமையால் கைகாணாமந்திரம் என்றும் கூறினர்.

காழிநகரில் உமை முலைப்பாலுண்டு ஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் ''தோடுடைய செவியன்'' முதலாக ''கல்லூர்'' என்னும் பாடல் இறுதியாகப் பாடப்பட்ட பாடல்களின் எண்ணிக்கை பதினாயிரம் உளதாக நம்பியாண்டார் நம்பிகள் கூறியதாக ஒரு குறிப்புக் காணப்படுகின்றது.[144]

திருநாவுக்கரசர்க்குச் சூலை நோய் கொடுத்துத் திருவதிகையில் அது நீங்கப்பெற்றுப் பாடத் தொடங்கிய ''கூற்றாயினவாறு'' என்னும் பாடல் முதலாக ''ஒரு மானைத் தரிக்கும்'' என்பது ஈறாக நாற்பத்து ஒன்பதாயிரம் பதிகங்களைப் பாடியதாகவும் குறிப்புக் காணப்படுகிறது.

''கொடுங்கூற்றா யினஎன்ன எடுத்துக் கோதில்
ஒருமானைத் தரிக்கும் ஒருவரையுங் காறும்
ஒரு நாற்பத் தொன்பதினாயிரம தாகப்
பெருநாமப் புகலூரிற் பதிகங் கூறிப்
பிஞ்ஞகனா ரடியிணைகள் பெற்று ளாரே''[145]

இப்பாடலில் ''ஒரு நாற்பத் தொன்பதினாயிரம தாக'' என்னும் அடிக்கு நாலாயிரத்துத் தொள்ளாயிரம் பதிகங்கள் என்றும், நாற்பத்து ஒன்பதினாயிரம் பாடல்கள் என்றும் பொருள் கொள்ள வாய்ப்பு உள்ளது. ஆனால் இதன் அடுத்த அடியிலுள்ள பதிகம் என்பதனை நாற்பத்தொன்பதினாயிரத்தோடு இணைந்துப் பதிகம் என்றே பொருள் கொண்டுள்ளனர். திருப்புகலூரில் இறுதிப் பதிகம் பாடப்பெற்று இறைவன் அடியிணைகள் சேர்ந்தார் என்னும் குறிப்பே இறுதி அடியால் பேசப்பட்ட குறிப்பாகும். அவ்வாறு பார்க்கும்போது நாற்பத்து ஒன்பதினாயிரம் பாடல்கள் எனக்கொண்டு நாலாயிரத்துத் தொள்ளாயிரம் பதிகம் எனக் கொள்வது ஏற்புடையதாகும். இதனை,

''இணைகொள் ஏழு எழுநூறு இரும்பனுவல்
ஈன்றவன் திருநாவுக் கரையன்''[146]

என்னும் சுந்தரர் பாடல் உறுதிப்படுத்தும். இதனை பெரிய புராணமும் உறுதிசெய்கிறது.[147]

நம்பியாரூரர் இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பெற்றுத் திருவெண்ணெய் நல்லூரில் ''பித்தா'' என்னும் பாடல் முதலாக ''ஊழி தோறும்'' என்னும் பாடல் இறுதியாக முப்பத்து எண்ணாயிரம் பாடல்கள் பாடித் திருக்கயிலை சேர்ந்தார் என்னும் குறிப்புப் புலப்படுத்தப்பட்டுள்ளது.[148] இவையனைத்தும் அம்மூவருடைய கை இலச்சினையோடும் தில்லையில் வைக்கப் பெற்ற குறிப்பையே பிள்ளையார் தம்மனத்தில் உணர்த்தினார் எனத் தம்மனத்தில் தோன்றிய குறிப்பினைப் புலப்படுத்தினார்.

சோழமன்னன், நம்பியாண்டார் நம்பியோடும் சென்று தில்லைவாழ் அந்தணர்களிடம் திருநாரையூர்ப் பிள்ளையார் தெரிவித்த கருத்தினைத் தெரிவிக்க, அவர்கள் மூவரும் வந்தால் அவ்வறை திறக்கப்படும் என்று கூறினர். அரசன் மூவருடைய திருமேனிகளுக்கும் வழிபாடு இயற்றி வீதிவலம் செய்து திருமுறைகள் வைக்கப்பட்டிருந்த அறைக்கு முன்பு கொண்டு வந்து நிறுத்தி அறையைத் திறக்குமாறு வேண்ட, தில்லைவாழ் அந்தணர்கள் அதனை ஏற்றுத் திருக்காப்பிடப்பட்டிருந்த அறையைத் திறந்து விட்டதாகப் புராணக் குறிப்பு காணப் படுகின்றது.[149]

முதல் ஏழு திருமுறைகள்

அறையினுள் கறையான்புற்று மிகப் பெரிய அளவில் வளர்ந் திருந்தமையைக் கண்டு வருந்தினர். ''வேண்டியவை போக எஞ்சியவை கறையானால் அரிக்கப்பெற்றன'' என்னும் அசரீரி கேட்டு மனந்தேர்ந்தனன் என்னும் குறிப்புக் காணப்படுகிறது.[150] எனினும் மூவரால் பாடப்பெற்ற திருப்பதிக எண்ணிக்கையில் பத்தாயிரத்து முந்நூறு என்னும் எண்ணிக்கைக்கு மாறாகப் பின்னர் எழுநூற்றுத் தொண்ணூற்றாறு பதிகங்களே கிடைத் துள்ளன என்பது வருந்துதற்குரியதாகும். தமிழர்களின் கவனக் குறைவால் ஏற்பட்டதோர் இழப்பு என்று கூறுவதே பொருத்த முடையதாகும். திருமுறை கண்ட வரலாற்றால் கூறப்பட்ட செய்தி, தமிழ் மக்களது விழிப்பின்மையால் செல்லரிக்கப்பட்டுச் சிதைவுற்று மறைந்தன என்னும் கூற்று கருத்திற் கொள்ளத் தக்கது.[151]

கறையான்புற்றினால் மூடப்பட்டிருந்த மூவர் பாடல் ஏடுகளை முறைப்படி எடுத்து ஒழுங்குபடுத்தி நம்பியாண்டார் நம்பிகள் வகுத்தமைத்தார். ஞானசம்பந்தர் பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், நாவுக்கரசர் பாடல்களை அடுத்த மூன்று திருமுறைகளாகவும், சுந்தரர் பாடல்களை ஏழாந் திருமுறையாகவும் வகுத்தனர். முதல் மூன்று திருமுறைகளில் மூந்நூற்று எண்பத்து நான்கு பதிகங்களும், அடுத்த மூன்று திரு முறைகளில் மூந்நூற்றுப் பத்துப் பதிகங்களும், ஏழாந்திருமுறையில் நூறு பதிகங்களும் வகுக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.[152]

திருமுறைகண்ட புராணத்தில் கூறப்பட்டுள்ள பதிகத் தொகைகளில் முதல் மூன்று திருமுறைகளில் மூந்நூற்று எண்பத்தினான்கிற்கு முந்நூற்று எண்பத்தி மூன்று பதிகங்களே அச்சிடப்பெற்றன. எஞ்சிய ஒரு பதிகம் திருவிடைவாய்த்திருப் பதிகம். இது கல்வெட்டு ஒன்றினால் கண்டு பிடிக்கப்பட்டுப் பின்னர்ச் சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.[153]

திருநாவுக்கரசரின் பாடல் பதிகங்களின் எண்ணிக்கை மூந்நூற்று ஏழு எனவும், மூந்நூற்றுப் பத்து எனவும் பொருள் கொள்ளுமாறு திருமுறை கண்ட புராணத்துப்பாடல் காணப் படுகின்றது. ஆறுமுகநாவலர், தலப்பதிகம் இருநூற்று எழுபத்தைந்து எனவும், பொதுப்பதிகம் முப்பத்தேழு எனவும் கூறி மூந்நூற்றுப் பன்னிரண்டு பதிகங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். சில பதிப்புக்களில் மூந்நூற்றுப் பதினொன்று என்றும், மூந்நூற்றுப் பதின்மூன்று என்றும் வேறு குறிப்புக்கள் காணப்படுகின்றன.[154]

சுந்தரருடைய பாடல்கள் நூறு பதிகங்களாக வகுக்கப் பெற்றுள்ளன. அது எந்த மாற்றமும் இல்லாமல் பதிக்கப் பெறுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மூவர் தேவாரப்பதிகங்களின் தொகை எழுநூற்றுத் தொண்நூற்றாறு ஆகவும் பாடல் தொகை எண்ணாயிரத்து நூற்று ஐம்பது ஆகவும் காணப்படுகின்றன. இவ்வேழு திரு முறைகளையும் ''அடங்கல் முறை'' என வழங்குவர். ஏழு திரு முறைகளையும் முறையாகப் பயின்று ஓதுகின்ற பெருமக்களை ''அடங்கல்முறை ஐயர்'' என்று கூறும் வழக்கமும் நிலவுகிறது.[155]

பின் ஐந்து திருமுறைகள்

திருமுறைகண்ட புராணத்தில் பதினோரு திருமுறை அளவும் வகுக்கப்பெற்ற செய்தி காணப்படுகின்றது. இவற்றை நம்பி யாண்டார் நம்பியே வகுத்தார் என்னும் செய்தி கால முரண் பாட்டோடு காணப்படும் செய்தியாகும். நம்பியாண்டார் நம்பி முதல் ஏழு திருமுறைகளை வகுத்தார் என்றும், பின்னர் வந்த சிவனடியார் யாரோ ஒருவர் மற்றைய திருமுறைகளை வகுத்துச் சேர்த்திருக்க வேண்டும் என்பதும் ஆராய்ச்சியாளர் முடிபாகும்.[156] எட்டாந்திருமுறையாக மணிவாசகரின் திருவாசகமும், திருக் கோவையாரும் இணைக்கப்பட்டுள்ளன. ஒன்பதாம் திருமுறை யாகத் திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாமாலை சேர்க்கப்பட்டுள்ளது. திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக அமைக்கப்பட்டுள்ளது. திருவாலவாய் உடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், நக்கீரதேவர், கல்லாட தேவர், கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமான் அடிகள், அதிராவடிகள், திருவெண்காட்டடிகள், நம்பியாண்டார் நம்பி என்னும் பன்னிருவர் செய்த நாற்பது நூல்கள் பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன நம்பியாண்டார் நம்பிகளுக்கு முன்னும் நம்பியாண்டார் நம்பிகளுக்கு பின்னும் வாழ்ந்த சிலருடைய நூல்கள் பதினோராம் திருமுறையில் இடம்பெற்றிருப் பதால் நம்பியாண்டார் நம்பி அத்தொகுப்பினைச் செய்திருக்க முடியாது என்பது ஏற்புடையதே.[157]

திருமுறையின் தொகை பன்னிரண்டு, இவற்றில் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேக்கிழாரின் பெரியபுராணம் இடம்பெற்றுள்ளது. திருமுறைகள் தொகுப்பில் முதல் ஏழு திருமுறைகள் பண்ணோடு கூடிய பாடல்களால் அமைந்துள்ளன என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. இன்னின்ன பண் எனவும், அவை பெற்றுவரும் கட்டளைகள் இத்தனை எனவும் விரிவாகக் கூறப்படுகின்ற திருமுறைகண்ட புராணக் குறிப்பினால் உணரலாம்.[158] திருமுறை தொகுக்கப்படுங்கால் மன்னனும், நம்பியாண்டார் நம்பியும் எருக்கத்தம் புலியூர் சென்று பண்முறை அறிந்த அம்மையாரை அழைத்து வந்து கேட்டறிந்த செய்தியால்

உணரலாம்.[159] ''அடங்கல் முறை'' என்பது முதல் ஏழு திருமுறைகள் என்பது ஈண்டு எண்ணத்தக்கதாகும். பின்னுள்ள திருமுறைகளில் திருவாசகம் பண்ணோடு பாடுவதற்கு ஏற்றதாக இருப்பினும், பண்முறையாக வகுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மணிவாசகருடைய நூல்களில் திருக் கோவையார் ஞாலப்பனுவலாயினும் சிற்றின்பத்தை வைத்துப் பேரின்பத்தை விளக்கிய நூலாகத் திகழ்வதாகும். ஒன்பதாம் திருமுறை, பதினோராம் திருமுறை ஆகிய தொகுப்பில் காணப் படுகின்ற பாடல்கள் பல பண்ணோடு பாடத்தக்கவை. ஆயினும் பண்ணோடு பாடவியலாத இலக்கிய நூல்களும் அவற்றில் இடம் பெற்றுள்ளன. திருமந்திரம் மூவாயிரம் பாடல்களால் அமைந்த ஆகமநூல் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. பெரியபுராணத்தில் 63 நாயன்மார்களின் வரலாறு இடம்பெற்றுள்ள ஒரே காரணத்தால் திருமுறைகளுள் ஒன்றாக இணைக்கப்பெற்றுள்ளது. முதல் ஏழு திருமுறைகள் வகுத்தகாலத்தில் பண்முறையோடு கூடிய தெய்வீகப்பாடல்களைத் திருமுறைகளாக வகுப்பது என்னும் கோட்பாடு இருந்துள்ளது என்பது புலனாகும். பிற்காலத்தில் தெய்வப்பனுவல்கள் எதுவாயினும் அல்லது ஆகமக் கோட்பாடுகளை வகுத்துரைக்கும் நூலாயினும் அடியார்களுடைய வரலாற்றை விரித்துரைக்கும் நூலாயினும் ''திருமுறை'' என்னும் பகுப்பில் கொண்டு வரலாம் என்னும் விதிவிலக்குத் தோன்றியிருந்தமையைக் காணலாம். எனவே, காலப்போக்கில் ஏற்பட்ட இம்மாற்றம் அடியார் பெருமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உமா பதிசிவனார் காலத்தில் தொகை நூல்களில் பதினோரு திருமுறைகள் இடம்பெற்றிருந்தமையை அறிந்திருந்தார். அக்காலத்தில் மரபு வழிவந்த செய்தி காரணமாகப் பின்னுள்ள திருமுறைகளையும் நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்தார் என்னும் கருத்தையும் உடன்பட்டுக் கூறியதாகக் கூறுவர். அத்துடன் நெடுங்காலத்திற்கு முன்நிகழ்ந்த செய்திகளைக் கூறும் போது சிறிய வேறுபாடுகள் இருப்பதும் இயல்பே என்று குறிப்பிட்டுள்ளார்.[160]

திருமுறைகண்ட புராணத்தில் மூவர் பாடல்களைத்தேடி எடுத்த பொழுது அத்திருமுறைகள் ஏற்கெனவே வகுக்கப் பட்டிருந்த முறையில் வகுக்க எண்ணினான் என்னும் குறிப்புக் காணப்படுகின்றது அதனை,

"இந்தவகைப் பெருங்களிகொள் மன்னன் றானும்
ஏழின்முறையை முன்போல வகுக்க எண்ணி"[161]

என்பதனால் உணரலாம். மன்னனும் நம்பியாண்டார் நம்பியும் முதலில் தொகுத்த திருமுறைகள் ஏழு என்பதே உமாபதியார் கோட்பாடு என்பதை,

"துன்னுவகை யேழாகத் தொகுத்துச் செய்தான்
தூயமனு வெழுகோடி யென்ப துன்னித்
தன்னிகரில் திருவருளான் மன்னன் றானும்
தாரணியோர் வீடுபெறுந் தன்மை சூழ்ந்தே"[162]

என்னும் பாடல் அடிகள் புலப்படுத்துகின்றன. மந்திரங்கள் ஏழு இறுதியை உடையன என்பதால் "ஏழுகோடி" என்று சொல்லப் பட்டன. அவற்றின் தொகை ஏழு என்பதால் திருமுறைகளின் தொகையும் ஏழாக வகுத்தனர் என்னும் குறிப்பு சிந்தித்தற் குரியது. ஏழு மந்திரங்களோடே நாலு என்னும் எண்ணிக்கை இணைக்கப்பட்டுப் பதினொன்றாக மந்திரங்கள் கூறப்படுதலும் உண்டு. அவ்வகையில் ஏழுதிருமுறைகளோடு நான்கு திருமுறைகள் சேர்க்கப்பெற்றுத் திருமுறைகள் எண்ணிக்கையைப் பதினொன் றாக்கினர் என்று குறிப்பிடுகின்றார். அதனை,

"மந்திரங்க ளெழுகோடி யாதலினான் மன்னுமவர்
இந்தவகை திருமுறைக ளேழாக வெடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினால்
அந்தமுறை நான்கினொடு முறைபதினொன் றாக்கினார்"[163]

என்னும் பாடலால் அறியப்படும். இந்தப் பாடல் உணர்த்துகின்ற செய்தியால் இரு கருத்துக்கள் விளக்கமாகின்றன. இயல்பாய் அமைந்த ஏழு திருமுறைகளோடு நான்கு திருமுறைகள் பின்னர்ச் சேர்க்கப்பெற்றன. ஏழு திருமுறைகளை மன்னன் தொகுப்பித்தான் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் முறை பதினொன்று ஆக்கினார் எனப் பன்மையால் கூறப்பட்டுள்ளமையும் எண்ணத்தக்கவை

யாகும். மந்திரங்கள் ஏழோடு நான்கு மந்திரங்களைச் சேர்த்தனர் என்பதை ''பந்தமொரு மந்திரங்கள்'' என்பதால் அறியலாம். எனவே நம்பியாண்டார் நம்பி காலத்தில் ஏழுதிருமுறைகளாக இருந்தவை பின்னர் பதினொன்றாக ஆக்கம் பெற்றன என்னும் குறிப்பு உணரத்தக்கது. உமாபதியாரும் முதலில் தொகுக்கப் பட்டவை ஏழு என்றும் பின்னர்ச் சேர்க்கப்பெற்றவை நான்கு என்றும் இதனைக் கருதியே கூறியுள்ளார் என்று உய்த்து உணரலாம். ஆனால் நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டத் தொகை கூறிய அடியார்கள் பற்றி திருத்தொண்டர் திருவந்தாதி பாடினார் என்னும் குறிப்பு முன்னர்க்கூறிய பதினோரு திரு முறைகள் என்பதினோடு இயைத்துக் கூறப்பெற்றுள்ளது. பதினொன்று என்பதை முன்னரும், திருத்தொண்டர் திருவந்தாதி எனப் பின்னரும் கூறியமையால், திருமுறைகளைத் தொகுத்ததும் திருத்தொண்டர் திருவந்தாதி பாடியதும் ஒருவரே எனப் பொருள் கொண்டுள்ளனர். எனவே நூலில் காணப்படுகின்ற சிறுமுரண் காரணமாகத் திருமுறைத் தொகுப்பில் நேர்ந்த கால முரண் பாடுகளைக் கருத்தில் கொள்ளத் தேவையில்லை. சேக்கிழார் புராணத்திலும் திருமுறைவகுத்த செய்தியைக் கூறுகின்ற உமாபதியார், முதல் ஏழு திருமுறைகளைத் தனியாகவும், எட்டாம் திருமுறை முதல் பதினோராம் திருமுறை முடிய அடுத்த நிலையிலும், பன்னிரண்டாம் திருமுறையை மூன்றாம் நிலையிலும் வைத்துக் கூறுவதால் உணரலாம்.[164]

தில்லைத் திருக்கோயிலில் காலத்தால் முற்பட்ட நிகழ்ச்சியாக நடைபெற்ற பேறுபெற்ற மூவர் வரலாற்றினைக் கோயிற் புராணத்திலும், அம்பலவாணருக்கு நடைபெறுகின்ற நாள் விழா சிறப்பு விழாக்களை கோயிற்புராணத்தில் மற்றொரு பகுதியிலும் கூறியுள்ளார். அடுத்த காலகட்டத்தில் நடைபெற்ற திருமுறைகள் தொகுப்பதற்கு வாய்பளித்த திருமுறைக் கருவூலமாகத் திகழ்ந்த தில்லைப் பெருங்கோயில் வரலாற்றைத் திருமுறைகண்ட புராணத்தில் கூறியுள்ளார். தில்லை அம்பலவாணரின் இரண்டாம் திருச்சுற்று மாளிகையில் மேற்கு வாயிலுக்கு அருகில் திருமுறை காட்டிய விநாயகர் என்னும் பெயரோடு அமைந்துள்ள விநாயகப் பெருமானை இன்றும் காணலாம். இவரே, திருமுறைகண்டப்

புராணத்தை உமாபதிசிவனார் இயற்றக்காரணமாக இருந்திருக் கலாம்.

IV. அருண்மொழித்தேவரின் அருட்பணி

அருண்மொழித்தேவரின் அருட்பணி என்பதை அநபாயனும் அருண்மொழித் தேவரும், தில்லையும் தெய்வப் பனுவலும், அரங்கேற்றம், பெரியபுராணமும் உமாபதிசிவனாரும் எனப் பகுத்துக் காணலாம்.

அநபாயனும் அருண்மொழித்தேவரும்

சேக்கிழார் பெரியபுராணம் பாடுவதற்கு அவர் முதலமைச்ச ராய் இருந்தபோது அரசாண்ட மன்னனே காரணமாயினன் என்பர்.[165] அநபாயன் என்னும் பெயருடைய அம்மன்னன் சிவகசிந்தாமணி படிப்பதில் ஆர்வம் மிகுதியுடையவனாகக் காணப்பட்டான். அதனைக்கண்ட சேக்கிழார், சீவகசிந்தாமணி இம்மைக்கும் மறுமைக்கும் ஆகாது எனக்கூறி திருத்தொண்டத் தொகையில் காணப்படுகின்ற நாயன்மார்களுடைய வரலாறு களை விரிவாக எடுத்துக் கூறினார். அதனைக் கேட்ட அநபாய சோழன் அவர்களுடைய வரலாறுகளை நூலாக இயற்றித் தருமாறு வேண்ட, அவர் தில்லைக்கு வந்து "திருத்தொண்டர் மாக்கதையை" இயற்றினார் என்பர்.[166]

சீவகசிந்தாமணி நூல் இன்பச்சுவையைப் பாடுவதற்காக எழுந்தநூல் என்னும் குறிப்பு அந்நூலில் காணப்படுகின்றது.[167] அதற்கு மணநூல் என்னும் பெயருண்மையாலும் அது சிற்றின்பத்தைப் பாடுதற்கெழுந்த நூல் என்பதை உணரலாம். சமணர்கள் தமிழகத்திற்கு வந்த பின்னர் அவர்கள் வெறுத்து ஒதுக்கியமையால் கூத்து, விறலியர் ஆட்டம், இசைக்கலை போன்றவை குன்றிவிட்டன என்று கூறுகின்றதோர் வழக்குண்மை ஈண்டு நினைக்கத்தக்கது.[168] சமணர்கள் பாடிய இலக்கிய நூல்களில் சிற்றின்பம் பற்றிய செய்திகள் மிகுதியாக இடம் பெறாமையால் அவர்களுக்குச் சிற்றின்பத்தைப் பாடத் தெரியாது என்னும் கருத்து நிலவியது. அக்கருத்தினைப் போக்குவதற்காகவே திருத்தக்கதேவர் சிற்றின்பத்தை விளக்கும் நூலாகச் சீவகசிந்தா மணியைப் பாடினார் என்று கூறுவர்.[169]

சீவகன் எண்மரை மணந்த செய்தியும், நண்பனுக்குக் கோவிந்தையாரை மணம் செய்வித்த செய்தியும் சீவகசிந்தா மணியில் இடம் பெற்றுள்ளன. அனைத்து இலம்பகங்களுக்கும் பெண்களின் பெயர்களையே பெயராகச் சூட்டியுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. எனினும் ''முத்திமகள் இலம்பகம்'' என்னும் ஓர் இலம்பகத்தை இறுதியில் அமைத்துக்கதைத் தலைவன் முத்திப்பேறு எய்தினான் என்னும் குறிப்பினையும் தேவர் புலப் படுத்தியுள்ளார்.

சமணசமய எழுச்சி ஒருகால கட்டத்தில் உயர்வாக இருந்தது. தமிழர்கள் பெரும்பாலோர் அச்சமயத்தில் ஈடுபாடு காட்டி வந்தனர். அதனால் தமிழ் இலக்கியங்களில் பல இலக்கிய நூல்களும் இலக்கண நூல்களும் தோற்றுவிக்கப்பட்டன என்பது உணரத்தக்கது. சமண சமயத்திற்கும் சைவ சமயத்திற்கும் போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன. திருநாவுக்கரசர் சைவ சமயத்திற்கு மாறிப் பல்லவமன்னனையும் சைவ சமயத்திற்கு மாற்றினார். அதனால் சமண்பாழிகளும், குகைகளும் தொண்டை நாட்டில் அழிக்கப்பட்ட செய்தியும் அறியப்படுகின்றது.[170] பாண்டிய நாட்டில் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் உதவியுடன் ஞானசம்பந்தர் சமண சமயத்தை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்றார் என்னும் குறிப்புக் காணப்படு கின்றது.[171] பாண்டிய நாட்டு மன்னன் நின்றசீர் நெடுமாறன் சமணசமயத்தினின்றும் சைவசமயத்திற்கு மாறிச் சமண சமயத்தை அகற்றுவதற்கு முற்பட்டான் என்னும் செய்தி காணப்படுகிறது.[172]

தமிழர்கள் சமண சமயத்தினின்று சைவ சமயத்திற்கு மாறினாலும் சமண இலக்கியங்களில் ஈடுபாடு காட்டி வந்தனர். ஒரு சமயமோ, கட்சியோ வேரூன்றுவதற்கு அவற்றில் தோன்றும் நூல்கள் காரணமாக உள்ளன. நூல்கள் திரிபை ஏற்படுத்தினால் அந்நூல்கள் காட்டும் வழியைப் பின்பற்றும் நிலை ஏற்படும் என்பது யாவரும் அறிந்ததே. பெருங்காப்பியங்களில் சீவக சிந்தாமணி இலக்கியச் சுவையுடைய நூலாகத் தமிழர்களால் காலங்காலமாகக் கருதப்பட்டு வந்துள்ளமையைக் காணலாம். நச்சினார்க்கினியர் அதற்கு இருமுறை உரை எழுதியுள்ள குறிப்பு,

அதன்பால் மக்களுக்கு இருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றது. சமணசமயம் நடைமுறையில் செல்வாக்கு இழந்த காலத்திலும் கருத்தளவில் வேரூன்றி இருந்த நிலையைச் சிறுகாப்பிய நூல்களும், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை போன்ற நூல்களும் காட்டுகின்றன.

கருத்தளவில் வேரூன்றியிருந்த சமணசமய உண்மைகளைக் களைந்துவிட முற்பட்ட நிகழ்ச்சிகளில் ஒன்றாக அநபாயனுடைய வரலாறு காணப்படுகிறது. உமாபதிசிவனார் இந்நிகழ்ச்சியை இரண்டிடத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.[173] முதலில் பெரிய புராணம் செய்யமுற்படுங்கால் இவ்வரலாற்றைச் சுட்டியே சேக்கிழார் புராணத்தைத் தொடங்குகிறார். திருத்தொண்டர் புராணம் அரங்கேற்றப்பட்ட காலத்தில்,

"பெரியபுரா ணங்கேட்ட வளவர்பிரான் செவிக்குப்
பிடிக்குமோ வினிச்சிந்தா மணிப்புரட்டு"[174]

என்னும் மக்கள் கூற்றாக வைத்து உரைத்துச் செல்கிறார்.

சேக்கிழார் அநபாயசோழன் வேண்டுகோளுக்கு இணங்கப் பெரியபுராணத்தை தில்லை வந்து செய்ய முற்பட்டமை சேக்கிழார் புராணத்தால் அறியப்படுகிறது. எனினும் வேறு நூல்களில் பரவலாக இந்நிகழ்ச்சி விவரிக்கப்படவில்லை. சேக்கிழார் தம்முடைய பெரியபுராணத்தில்,

"மேய இவ்வுரை கொண்டு விரும்புமாஞ்
சேய வன்திருப் பேரம் பலஞ்செய்ய
தூய பொன்னணி சோழனீ டுழிபார்
ஆய சீரந பாயன ரசவை"[175]

என்பதால் அநபாயசோழன் முன்னர்த் தில்லையில் இந்நூல் அரங்கேற்றப் பெற்ற செய்தியை உணரலாம். "கொற்றவன் அநபாயன் பொற்குடை நிழற் குளிர்வது"[176] என்று சோழ நாட்டைப் பாராட்டியிருப்பதால் சேக்கிழார் காலத்தில் அநபாயன் ஆட்சியில் இருந்த செய்தியையும் காணலாம்.

"திருத்தில்லையிலே இப்புராணம் இயற்றினார் என்பதற்கு வேறு புறச்சான்றுகள் இப்போது கிடைக்கவில்லை. ஆயினும் புராணத்தினுள்ளே எங்கெங்கே தில்லையைப் பற்றிப் பேச நேரிடு

கிறதோ ஆங்காங்கெல்லாம் சேக்கிழார் சுவாமிகள் மிகச் சிறப்பித்து வர்ணித்து விரிவாகப் பேசியுள்ளதால், அங்கே தங்கி நடராசர் தமக்குச் செய்த பேரருளினாலே புராணம் இயற்றினார் என்று உறுதியாய் யூகிக்கலாம்''[177] என்பதால் தில்லையில் அவர் தங்கிப்பெரியபுராணம் செய்தார் என்பது உறுதியாகிறது.

தில்லையும், தெய்வப் பனுவலும்

திருத்தொண்டர் மாக்கதை தொடங்குவதற்குத் தில்லை யம்பலவாணரே அடியெடுத்துக் கொடுத்தார் என்னும் செய்தி காணப்படுகின்றது[178] அதற்கு ஆதாரமாகப் பெரியபுராணத்தில் முதல் இடை இறுதி என்னும் மூன்று இடங்களிலும் ''உலகெலாம்''[179] என்னும் சொல் அமைந்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

சேக்கிழார் பெரிதும் பாராட்டுதலுக்கு உரிய நூலாசிரியராக மதிக்கப்பட்டிருந்தார் என்பதை உமாபதிசிவனாரின் பின்வரும் கூற்றால் உணரலாம். ''வான்மீகி, வியாசர், ஆதிசேடன், அகத்தியர் என்பவர்களோடு ஒப்பிட்டு அவர்களெல்லாம் கூடச் சேக்கிழாருடன் உடன்வைத்து எண்ணத்தக்கவர்கள் அல்லர்''[180] சேக்கிழாருடைய திருத்தொண்டர் புராணம் அநபாயன் முன்னிலையில் தில்லை மூவாயிரவரும், பேரறிஞர்களும் கூடி இருந்த ஆயிரக்கால் மண்டபத்தில் அரங்கேற்றப் பெற்ற செய்தி அறியப் படுகின்றது.[181]

ஒரு சித்திரைத் திங்கள் திருவாதிரை நாள் தொடங்கி எதிர்வரும் ஆண்டு சித்திரைத் திங்களில் திருத்தொண்டர் மாக்கதை ஆயிரங்கால் மண்டபத்தில் படிக்கப்பெற்று அரங்கேற்றப் பெற்றதாகக் குறிப்புக்காணப்படுகின்றது.[182] ஆனால், இதன்காலத்தை அறுதியிட்டுச் சேக்கிழார் புராணம் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அநபாய சோழனின் ஆட்சி ஆண்டில் எந்த ஆண்டில் நடந்தது என்பதும் தெரியவில்லை.

''அநபாயர்'' என்பது ஒரு மன்னனுடைய சிறப்புப் பெயர், அப்பெயர் பெற்ற மன்னர் யார் என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தது. பல்வேறு சான்றுகள் கொண்டு அறிஞர் பெருமக்கள் இரண்டாம் குலோத்துங்கனே அநபாயன்

என்ற சிறப்புப் பெயருக்கு உரியவன் என முடிவு செய்துள்ளனர். உமாபதிசிவனார் "அபயன்" எனவும் "அநபாயன்" எனவும் இச்சோழ மன்னனைக் குறித்துள்ளார். சேக்கிழார் பத்து இடங்களில் தம் காலத்து அரசனைக் குறிக்கும் நிலையில் "அநபாயன்"[183] என்ற சிறப்புப் பெயரையே குறித்துள்ளார். இரண்டு இடங்களில் "அபயன்"[184] என்று குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்து வாழ்ந்த புலவர்களில் இருவர் குறிக்கத்தக்கவர். ஒருவர் சேக்கிழார், மற்றையவர் ஒட்டக்கூத்தர். சேக்கிழார் பாடிய பெரியபுராணத்தில் பொன் வேய்ந்தமை, சிவபக்தி உடையமை, செங்கோன்மை, கொடைத் தன்மை ஆகியவற்றைப் போற்றியுள்ளார். ஒட்டக்கூத்தர் பாடிய உலா, பிள்ளைத்தமிழ், பரணி ஆகியவற்றில் பேரம்பலம் பொன் வேய்ந்தமை, சிவபக்தி உடைமை ஆகியவற்றைக் குறித்துப் போற்றியதோடு பட்டம் பெற்றவுடன் பகைவேந்தனை விடுதலை செய்து செங்கோல் செலுத்தினான் என்னும் குறிப்பும் காணப் படுகின்றது.[185] "தில்லைத் தெருவெல்லப் பொன்னின்மயம் ஆக்கினான்"[186] என்னும் பெரிய புராணச் செய்தி இன்னும் சற்று விரிவாகச் சிற்றம்பலம், பலபல மண்டபம், அம்மன்கோயில், எழு நிலைக் கோபுரம், திருச்சுற்று மாளிகை, தேர் இவற்றைப் பொன்மயமாக்கினான் எனக் கூத்தர் குறிப்பிடுகின்றார்.[187]

அநபாயன் பற்றிய இலக்கியச் செய்திகள் பல கல்வெட்டுச் செய்திகளோடு ஒத்துக் காணப்படுகின்றன. ஆதலால் இரண்டாம் குலோத்துங்கனே அநபாயன் என்ற சிறப்புப் பெயருக்கு உரியவன் என்று ஆய்வாளர்கள் முடிவு கட்டியுள்ளனர்.[188] இவன் பெயரால் "அநபாயமங்கலம்" என்னும் ஊர் இருந்தமை கல்வெட் டொன்றால் உறுதி செய்யப்பெறுகின்றது.[189] இரண்டாம் குலோத்துங்களின் காலம் கி.பி. 1123லிருந்து 1148 வரையாகும்.[190] எனவே, இக்கால எல்லையில் சேக்கிழார் வாழ்ந்தமையும், திருத் தொண்டர் மாக்கதையைச் செய்து அரங்கேற்றிய நிலையும் நிகழ்ந்துள்ளமை தெளியலாம்.

விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கள், இரண்டாம் இராசராசன் என்னும் மூன்று வேந்தர்கள் காலத்திலும் ஒட்டக்

கூத்தர் வாழ்ந்திருந்தார் என்பதும், அவைப்புலவராகவும், ஆசிரியராகவும் விளங்கிப் பல நூல்களை இயற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கன. சேக்கிழார் புலவர் என்று அறிமுகமாகாமல் முதல் அமைச்சர் எனப் பதவி வகித்தமையால் அரசவையில் புலவராக வீற்றிருந்த நிலை ஒட்டக்கூத்தருக்கே உரியதாயிற்று. இவர் முதலமைச்சராக இருந்த காரணத்தால் திருத்தொண்டத் தொகையில் இடம்பெற்ற தொண்டர்களின் வரலாற்றுக் குறிப்புக்களும், கல்வெட்டுக் குறிப்புக்களும் இவர்க்கு எளிதில் கிட்டின. அதனால் பெரிய புராணம் பாடுவதற்குத் தகுதியுடையவராக மன்னனால் கருதப்பட்டுள்ளார் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

அரங்கேற்றம்

தமிழக வரலாற்றில் திருத்தொண்டர் புராணம் அரங்கேற்றப் பெற்ற முறை, குறிக்கத் தக்க வரலாற்றுச் சிறப்பு உடையதாகும். மன்னன் ஒரு நூல் அரங்கேறும் நிலையில் ஓராண்டு முழுமையும் தன் தலைநகரைவிட்டு விட்டுத் தில்லையில் வந்து தங்கியிருந்தான் என்பது மனங்கொள்ளத் தக்கதாகும். அரங்கேற்றம் முடியும் நாளில் சேக்கிழாரை அவர் இயற்றிய திருத்தொண்டர் மாக்கதையோடு யானைமீது ஏற்றி ஊர்வலமாக வரச்செய்தான். அவரைப் பெருமைப்படுத்தும் வகையில் கவரிவீசினான் என்னும் குறிப்பு சேக்கிழார் புராணத்தில் காணப்படுகிறது.[191] சங்க காலத்தில் முரசுகட்டிலில் படுத்திருந்த தமிழ்ப் புலவனுக்குச் செய்யப்பெற்ற மரியாதை போல, கவரிவீசிய இக்குறிப்பு தமிழுக்குச் செய்த பெருமையாகத் தோன்றுகிறது.[192] பெரிய புராணம் அரங்கேற்றப் பெற்ற நிலையிலேயே பன்னிரண்டாம் திருமுறையாக முறைப்படுத்தப்பட்ட செய்தியும் அந்நூலின் தெய்வத்தன்மையை உணர்த்துவதாக உள்ளது. சேக்கிழார் புராணத்தில் காணப்படும் செய்திகள் இரண்டு மூன்று நூற்றாண்டுகள் கால இடைவீடு உள்ளவை என்றாலும் அநபாயசோழன் சிவனடி சிந்திக்கும் மனமுள்ளவன் என்பது,

"திருமனத்து ஓங்கும் திருக்கயிலாய நீள்சிலம்பு"[193]

என்பதனால் அறியலாம். அவன்மனம் திருக்கயிலாயம் போன்று இறைவன் வீற்றிருக்கத் தக்கதாக விளங்கியது என்பதைக்

காட்டுகின்றது. "அநபாயர் தமிழிலே வைத்த ஆர்வமே நமக்குப் பெரியபுராணத்தைத் தந்தது. அவரது தமிழ் ஆர்வத்தைவிட தமிழ் உலகையும், சைவ உலகையும் ஈடேற்றவல்ல அமைச்சரின் ஆற்றல் பெரிது"[194] என்னும் குறிப்பினால் அநபாயன் கொண்ட ஆர்வம் புலப்படுகின்றது. சேக்கிழாருக்கு அநபாயன் செய்த பாராட்டுகள் மிகை என்று கொள்வதற்கில்லை.

உமாபதிசிவனார் தில்லைப் பெருங்கோயிலில் ஒரு குறிப்பிட்ட காலஎல்லையில் நடைபெற்ற பெரியபுராண அரங்கேற்றத்தை விரிவாகப்பாடிச் சென்றுள்ளார். காலத்தால் முற்பட்ட செய்தியைக் கோயிற்புராணத்தாலும், இடைப்பட்ட கால நிகழ்ச்சியைத் திருமுறை கண்ட புராணத்தாலும், பிற்பட்ட கால நிகழ்ச்சியைச் சேக்கிழார் புராணத்தாலும், கூறியுள்ளார். மூன்று புராணங்களிலும் நூல்வழி உண்மைகளும் மரபுவழிச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. தில்லைவாழ் அந்தணர்களுள் இவர் ஒருவர் என்பதால் அவருடைய வாழ்க்கையில் ஒரு கால கட்டம் வரையில் கோயிலோடு கொண்டிருந்த தொடர்பு காரணமாகப் பெற்ற பட்டறிவே இதற்கு காரணம் எனலாம். சோழர்கள் கருவூர், சேய்ஞ்ஞலூர், உறையூர், காவிரிப்பூம்பட்டினம், திருவாரூர் என்ற ஐந்து ஊர்களில் இருந்து முடிசூட்டிக்கொள்வது வழக்கம்.[195] அனைத்திடங்களிலும் தில்லைவாழ் அந்தணர்களே முடியெடுத்துக் கொடுக்க முடிசூட்டிக்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.[196] எனவே, சோழமன்னர்களுக்கும், தில்லைக்கோயிலுக்கும் நீண்டகாலத் தொடர்பு இருந்து வந்துள்ளமை புலனாகும்.

பெரியபுராணமும், உமாபதிசிவனாரும்

திருத்தொண்டத்தொகை சுந்தர மூர்த்திகளால் செய்யப் பெற்ற பதினோரு பாடல்கள் அமைந்த ஒரு பதிகமாகும். அதனை அடியொற்றி நம்பியாண்டார் நம்பிகள் அதில் கூறப் பெற்ற அடியார்களை விவரித்துப் பாடிய 89 பாடல்கள் கொண்ட தொகை நூல் திருத்தொண்டர் திருவந்தாதி. இவ்விரண்டில் திருத்தொண்டத்தொகை முதல் நூலாகவும், திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு விரிவாக செய்யப்பட்ட நூல் திருத்தொண்டர் புராணமாகும். இதன்பாடல் தொகை

4286. இந்நூலைப் பதின்மூன்று சருக்கங்களால் சேக்கிழார் செய்து அமைத்துள்ளார். சருக்கங்களின் பெயர்களில் திருத் தொண்டத் தொகையின் ஒவ்வொரு பாடலின் தொடக்கங்களே பெயர்களாக அமைந்துள்ளன. சேக்கிழார் முதல் நூலைப் பெரிதும் அடியொற்றிச் செய்துள்ளார் என்பதற்கு இம்முறை சான்று பகர்கின்றது. திருமுறைச்சருக்கமும், இறுதியிலுள்ள வெள்ளானைச் சருக்கமும் அவரால் இணைத்துக் கொள்ளப் பட்டவை. இப்புராண அமைப்பினை உமாபதிசிவனார் பல்வேறு கோணங்களில் பகுத்தும் வகுத்தும் ஆராய்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[197] பெரியபுராணத்தில் தனியடியார் அறுபத்துமூவர்களின் வரலாறும், தொகையடியார் ஒன்பதின்மர் வரலாறும் திருத்தொண்டத்தொகையை அடியொற்றிச் செய்யப் பெற்றதாகும்.

வரிசை எண்	அடியார் மரபு	பெயர்
	அந்தணர்கள் (13)	
1.		தில்லை வாழ்அந்தணர்
2.		குங்கிலியக் கலயர்
3.		முருகர்
4.		பசுபதியார்
5.		சிறப்புலியார்
6.		கணநாதர்
7.		பூசலார்
8.		சண்டேசர்
9.		சோமாசிமாறர்
10.		நமிநந்தி
11.		திருஞானசம்பந்தர்
12.		அப்பூதியார்
13.		நீலநக்கர்
	ஆதிசைவர் (2)	
14.		புகழ்த்துணையார்
15.		முப்போதும் திருமேனி தீண்டுவார்

மாமாத்தியார் (1)

16. சிறுத்தொண்டர்

முடிமன்னர் (6)

17. கோச்செங்கட்சோழர்
18. புகழ்ச்சோழர்
19. இடங்கழியார்
20. நின்றசீர்நெடுமாறர்
21. மங்கையர்க்கரசியார்
22. சேரமான்பெருமாள்

குறுநில மன்னர் (5)

23. நரசிங்கமுனையர்
24. கூற்றுவர்
25. கழற்சிங்கர்
26. மெய்ப்பொருளார்
27. ஐயடிகள் காடவர்கோன்

வணிகர் (5)

28. காரைக்காலம்மையார்
29. மூர்த்தியார்
30. கலிக்கம்பர்
31. அமர்நீதியார்
32. இயற்பகையார்

வேளாளர் (13)

33. மூர்க்கர்
34. செறுத்துணையார்
35. வாயிலார்
36. கோட்புலியார்
37. சத்தியார்
38. அரிவாட்டாயர்
39. இளையான்குடி மாறர்
40. திருநாவுக்கரசர்
41. சாக்கியர்
42. மானக்கஞ்சாறர்
43. விறல்மிண்டர்
44. முனையடுவார்
45. ஏயர்கோன்கலிக்காமர்

இடையர் (2)

46. திருமூலர்
47. ஆனாயர்

குயவர் (1)

48. திருநீலகண்டர்

பாணர் (1)

49. திருநீலகண்டயாழ்ப் பாணர்

பரதவர் (1)

50. எறிபத்தர்

வேடர் (1)

51. கண்ணப்பர்

சான்றார் (1)

52. ஏனாதிநாதர்

சாலியர் (1)

53. நேசனார்

ஐந்தாம் குலத்தவர் (1)

54. திருநாளைப்போவார்

ஏகாலி (1)

55. திருக்குறிப்புத்தொண்டர்

செக்கர் (1)

56. கலியனார்

மரபு குறிக்கப்படாதோர் (13)

57. குலச்சிறையார்
58. தண்டியடிகள்
59. கணம்புல்லர்
60. எறிபத்தர்
61. காரியார்
62. குறும்பர்
63. பத்தராய்ப்பணிவார்
64. பரமனையே பாடுவார்
65. சித்தத்தைச் சிவன்பால் வைத்தார்
66. திருவாரூர்ப் பிறந்தார்கள்

67. பொய்யடிமை யில்லாத
புலவர்
68. முழுநீறு பூசுகின்ற
முனிவர்
69. அப்பாலும்
அடிச்சார்ந்தார்

தனியடியார், தொகையடியார்களாகிய 72 பேர்களில் "மரபு குறிக்கப் பெற்றோர் 56 பேர் என்றும் மரபு குறிக்கப்பெறா தோர் 13 பேர் என்றும் ஆக 69 பேர் உமாபதிசிவனாருடைய பகுப்பில் இடம் பெற்றுள்ளனர்."[198] சுந்தரமூர்த்தியார், அவரது தாயாகிய இசைஞானியார், தந்தையாகிய சடையனார் ஆகியோர் ஆதிசைவ மரபில் வந்தவர்கள். இவர்களைப் பகுப்பில் கொண்டு வராமைக்குச் சுந்தரர் திருத்தொண்டத்தொகையைப் பாடியவராகவும் ஏனையோர் அவர் பெற்றோராகவும் காணப் படுதலால், இப்பகுப்பில் உமாபதியார் விடுத்துள்ளார் எனலாம். இவர்களையும் சேர்க்க ஆதிசைவ மரபினர் ஐவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொகையடியார் ஒன்பதின்மரையும் உமாபதிசிவனார் பல்வேறு கோணங்களில் நோக்கியுள்ளார்.[199] அவர்களில் இருவர் ஊர்ப் பெயர் தெரிந்தவர்கள்; ஒருவர் தில்லைவாழ் அந்தணர், மற்றையவர் திருவாரூர்ப் பிறந்தவர். மரபு தெரிந்தவர்கள் இருவர்; ஒருவர் அந்தண மரபினர்; மற்றொருவர் ஆதிசைவ மரபினர். பேரறிந்தவர் ஒருவர்; அவர் தில்லை மூவாயிரவர். மரபு தெரியாதோர் எழுவர்; பத்தராய்ப் பணிவார், பரமனைப் பாடுவார், சித்தத்தைச் சிவன்பால் வைத்தார், ஆரூர்ப்பிறந்தார், பொய்யடிமை இல்லாதார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார் ஆகியோர் மரபு இன்னது என உணரப்படாதோர். தொகை தெரிந்தோர் ஒருவர்; அவர் தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவர். பேர் அறியாத நிலையிலும், தொகை தெரியாத நிலையிலும் கூறப்பட்ட தொகையடியார்கள் எண்மர். தொகை யடியார் பற்றிய பகுப்பாய்வினை மிக விரிவாக உமாபதிசிவனார் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தனியடியார்கள் அறுபத்து மூவருக்கும் உருவச்சிலைகள் கல்லிலோ, உலோகத்திலோ செய்து தமிழகக் கோயில்கள் பல வற்றிலும் அமைத்துள்ளனர். ஆனால், தொகையடியாராகக் குறிப்பிடப்பட்ட ஒன்பதின்மருக்குச் சிலைகள் வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தில்லைத் திருக்கோயிலில் சிவகங்கைக்கு வடக்கே ஒன்பது இலிங்கங்கள் அமைக்கப்பட்ட ஒருசிறு கோயில் உள்ளது. ''நவலிங்கர்''என்னும் பெயரால் இதனைக் குறிப்பிடுகின்றனர். வடிவமில்லாத சிலவற்றிற்கு விளக்கங்கொடுப்பதற்குக் குறியீடுகள் கையாளப்படுவதைக் காணலாம். தொகையடியார் ஒன்பதின் மருக்குக் கொடுக்கப்பட்ட குறியீட்டு விளக்கமே இவ்வொன்பது இலிங்கங்கள் என்பது உளங்கொளத் தக்கது. இக்கோயில் திருத் தொண்டத்தொகை மீச்சரம் என்ற பெயரால் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளது. இக்கோயிலை ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சிவனடியார் ஒருவர் புதுப்பித்துக் கட்டியுள்ளார்[200] என்பது கருதத்தக்கது.

உமாபதிசிவனார் மரபு முறையில் 69 பேரைப் பிரித்துக் காட்டியதோடு வேறுவகையினாலும் அடியார்கள் கூட்டத்தினைப் பகுத்து ஆய்ந்துள்ளார்.[201] தவம் புரிந்து நற்கதி அடைந்தோர், இல்லறத்திலிருந்து பேறு பெற்றோர், பிரம்மச்சாரிகள், அடியார் களுடன் சேர்ந்து சென்று பேறு பெற்றோர், சிவனடியாரைப் பகைத்துப் பேறு பெற்றோர் எனப் பேறு பெற்றவர்களை வகைப் படுத்தியுள்ளார்.[202] இன்னும் நரகு செல்வதற்குக் காரணமாக இருந்த செயல்களையும் பகுத்துக் கூறியுள்ளார்.[203] இவர்களில் பலர் பெரியபுராணத்தில் குறிப்பாக இடம் பெற்றுள் ளனர். ஞானசம்பந்தர் திருமணத்தில் எழுந்த பேரொளியில் கலந்து பேறுபெற்றவர்கள் என்றும் சுந்தரர், சேரமான் ஆகியவர் களுடன் சென்று கயிலை அடைந்தவர்கள் என்றும் காணப்படு கின்ற குறிப்புக்கள்[204] குறிப்பாய்ப் புலப்படுத்தப் பட்டனவேயன்றி வெளிப்படையாக ஊர், பெயர் முதலியன கூறி வெளிப்படுத்தப் பட்டவர்கள் அல்லர். எனவே, உமாபதிசிவனார் கொடுத்த குறிப்பு மட்டும் ஈண்டு ஆராயப் பெற்றது.

வரிசை எண்	பேறுபெற்றோர்	வழிபாடு
1.	திருஞானசம்பந்தர்	குருவழிபாடு (11)
2.	திருநாவுக்கரசர்	,,
3.	திருமூலர்	,,
4.	நெடுமாறர்	,,
5.	மங்கையர்க்கரசி	,,
6.	குலச்சிறையார்	,,
7.	யாழ்ப்பாணர்	,,
8.	குறும்பர்	,,
9.	கணநாதர்	,,
10.	அப்பூதி	,,
11.	சோமாசிமாறர்	,,
12.	எறிபத்தர்	இலிங்க வழிபாடு (30)
13.	கலயர்	,,
14.	முருகனார்	,,
15.	கண்ணப்பர்	,,
16.	ஆனாயர்	,,
17.	தாயர்	,,
18.	மூர்த்தியார்	,,
19.	சண்டேசர்	,,
20.	திருநாளைப்போவார்	,,
21.	சேரனார்	,,
22.	சாக்கியனார்	,,
23.	கூற்றுவனார்	,,
24.	தண்டி	,,
25.	சிறப்புலியார்	,,
26.	பசுபதியார்	,,
27.	கலிக்காமர்	,,
28.	கலியர்	,,
29.	காரியார்	,,
30.	அதிபத்தர்	,,
31.	நீலநக்கர்	,,

32. பூசலார் "
33. கணம்புல்லர் "
34. கோட்புலியார் "
35. நமிநந்தியடிகள் "
36. கழற்சிங்கர் "
37. வாயிலார் "
38. செருத்துணையார் "
39. புகழ்த்துணையார் "
40. ஐயடிகள் "
41. செங்கட்சோழர் "
42. திருநீலகண்டர் சங்கம வழிபாடு (19)
43. இயற்பகையார் "
44. மூர்க்கர் "
45. சிறுத்தொண்டர் "
46. திருக்குறிப்புத்தொண்டர் "
47. விறன்மிண்டர் "
48. இடங்கழியார் "
49. முனையடுவார் "
50. சத்தியார் "
51. அமர்நீதி "
52. மெய்ப்பொருளர் "
53. ஏனாதிநாதர் "
54. புகழ்ச்சோழர் "
55. கஞ்சாறர் "
56. மாறர் "
57. காரைக்காலம்மை "
58. நரசிங்கர் "
59. கலிக்கம்பர் "
60. நேசர் "

சுந்தரமூர்த்தியார், இசைஞானியார், சடையனார் என்போர் இவ்வரிசையில் இடம்பெறவில்லை.[205] சுந்தரமூர்த்தியார் குரு வழிபாட்டினால் பேறுபெற்றவராகக் கருதத்தக்கவர். இவருடைய தாய், தந்தையர் இருவரும் இலிங்க வழிபாட்டை மேற்கொண்டவர்கள்.

பெரியபுராணத் திருப்பனந்தாள் பதிப்பில் காணப்படும் அட்டவணையில் முருகர் சங்கமவழிபாட்டினர் என்னும் குறிப்புக் காணப்படுகின்றது. உமாபதிசிவனார் இலிங்கவழிபாடு செய்து பேறு பெற்றவர்களுள் ஒருவராக முருகரைக் குறித்துள்ளார். ஞானசம்பந்தரை நண்பராகப் பெற்றவர் முருகர். ஞானசம்பந்தர் வருவதற்கு முன்னாகவே இறைவனுக்கு மாலைசூட்டி வழிபட்டார் என்னும் குறிப்புக் காணப்படுகிறது.

''அரவம் அணிந்த அரையாரை யருச்சித் தவர்தங் கழனிழற்கீழ் விரவு புகலூர் முருகனார்''[206]

என்னும் பெரியபுராணக்குறிப்பு அவர் இலிங்க வழிபாட்டினர் என்பதை உறுதி செய்கிறது. முருகர் சங்கம வழிபாட்டினர் என்னும் அட்டவணைக் குறிப்பு அச்சுப் பிழையாக இருக்கலாம். ஞானசம்பந்தரை வழிபட்டவராகக் கருதிக் குறித்திருப்பார்களே யானால் அக்குறிப்பு ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று.

ஒருநூலை முழுமையாகவும், மறித்தும் எவ்வாறு காண்பது என்பதற்கு உமாபதியாரின் பகுப்பாய்வு முன்னோடியாக விளங்குகின்றது. திறனாய்வு நோக்கு ஆங்கிலேயர் காலத்திற்குப் பின்னரே தமிழகத்திற்கு வந்தது என்னும் கருத்துத் தவறுடையது என்பது இத்திறனாய்வு நோக்கினைக் காண்பார்க்கு எளிதில் புலனாகும். ஒரு நூலினை முழுமையாகக் கற்றல், பல்வேறு கோணங்களில் நோக்குதல், ஆழ்ந்த பகுப்பு முறைகளை வைத்துக் காண்டல், தொகுத்துச் சுட்டுதல் என்னும் முறைகளில் உமாபதி சிவனார் பெரியபுராணத்தை நோக்கியுள்ள திறம் போற்றுதற் குரியது எனலாம்.

ஆய்வு முடிவுகள்

அம்பலங்கள் ஐந்தனுள் தில்லை பொன்னம்பலமாக விளங்குகிறது.

பஞ்சபூதத்தலங்களுள் தில்லை ஆகாயத்தலமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

அம்பலங்களுள் ஒன்றாகவும், பஞ்சபூதத்தலங்களுள் ஒன்றாகவும் இருதன்மை பெற்று விளங்கும் தலம் தில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தில்லைவாழ் அந்தணர்கள் வழிபாடு இயற்றுகின்ற பாரம்பரிய உரிமைபெற்றுள்ளதோடு, திருக்கோயிலின் நிர்வாகத்தையும் அவர்களே செய்து வருவது இக்கோயிலின் தனித்தன்மையாகும்.

தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒரு குழுவினர் ''பொதுவார்'' என்னும் பெயருடன் திருக்கோயிலின் நிர்வாகத்தை நடத்தும் உரிமை பெறுகின்றனர்.

இவர்களில் செயலர், துணைச்செயலர், பொருளாளர் போன்ற நிர்வாகத் தலைமைப் பொறுப்பாளர்களும் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு நாளும் வழிபாட்டைச் செய்வதற்குரிய அந்தணரைக் குலுக்குச் சீட்டு முறையில் தேர்ந்து அம்பல வாணருக்குப் பூசனை செய்யும் முறையை மேற்கொண்டுள்ளனர்.

காலத்தால் முற்பட்ட நிலையில் தில்லையில் திருமூலநாதர் என்னும் சிவபெருமான் ஆலின்கீழ் அமர்ந்திருந்தவராகக் குறிப் பிடப்பட்டுள்ளார்.

திருமூலநாதருடைய இருப்பிடத்திற்கு வடக்கே ஒரு தாமரைக்குளம் அமைந்திருந்தமை இத்திருக்கோயிலின் பழைய அமைப்பாகக் காணப்படுகின்றது.

புலிக்கால் முனிவர் தம் தந்தையார் கொடுத்த அறிவுரை காரணமாக இத்தலத்தைத் தேர்ந்து இறைவனை வழிபாடு செய்கின்றார்.

புலிக்கால் முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட திருக்கோயில் புலீச்சுரம் எனப்படும் தில்லையின் மேற்குப் பகுதியிலுள்ள கோயிலாகும்.

புலிக்கால் முனிவர் வழிபடுங்கால் தில்லை ஒரு பெருங் காடாக இருந்தமையால், விடியற்காலையில் மலர் எடுப்பதற்கு வாய்ப்பாகப் புலிக்காலையும் கையில் கண்களையும் பெற்றார் என்பது புராணச் செய்தியாகும்.

ஆதிசேடனின் வேண்டுகோட்கு இணங்க, பதஞ்சலியாகத் தில்லைக்கு அனுப்பப்பட்டவர் பதஞ்சலி முனிவர்.

பாம்புருக்கொண்ட பதஞ்சலி முனிவர் தில்லையில் தோற்று வித்த திருக்கோயில் ''அனந்தீஸ்வரன்'' கோயில் எனப்படும்.

மூர்த்தியின் பெருமை விளங்குவதற்குப் புலிக்கால் முனிவரும், தலத்தின் பெருமை விளங்குவதற்குப் பதஞ்சலி முனிவரும் பாத்திரர்கள் ஆயினர் எனக் கருதலாம்.

இத்திருக்கோயிலின் வடக்கே அமைந்துள்ள வாவி சிம்மவர் மனின் தீராத நோய் தீருவதற்குக் காரணமாயிற்று.

''சிவ கங்கை'' எனப் பெயரிய வாவி சிம்மவர்மனால் இதன் தீர்த்தச் சிறப்பினை உலகுக்கு உணர்த்தப்படும் பாங்கினைப் பெற்றுள்ளது.

உருவம், அருவுருவம், அருவம் என்னும் மூன்று தன்மைகளா லும் இறைவன் கோயில் கொண்டுள்ள இடமாகச் சிற்றம்பலம் விளங்குகிறது.

சிம்மவர்வன், இரணியவர்மன் என்னும் பெயர்பெற்றபின் இப்பகுதிக்கு அரசனானான்.

சோழநாட்டுக்குத் தலைமை பூண்டமையால், தில்லைவாழ் அந்தணர்கள் முடிசூட்டப்புலிக்கால் முனிவர் பிற சின்னங்களைக் கொடுத்தார் என்பது புலனாகிறது.

இரணியவர்மனால் தில்லைப்பெருமானுக்கு வழங்கப்பட்ட அறக்கட்டளைகள் மிகப் பலவாகும்.

அறக்கட்டளைகள் அனைத்தும் நாள் வழிபாட்டுக்குரியவை, சிறப்பு வழிபாட்டுக்குரியவை என்ற நிலையில் வகுத்து வழங்கப் பெற்றுள்ளன.

தேவார மூவர்களால் காப்பிடப்பட்ட தேவாரத் திருப் பதிகங்கள் இத்திருக்கோயிலில் பாதுகாக்கப்பட்டிருந்தன.

நம்பியாண்டார் நம்பிகளின் துணைக்கொண்டு இராசராசன் திருப்பதிகங்களை எடுத்துத் திருமுறைகளாகத் தொகுத்தான் என்பது உறுதிப்படுகிறது.

அருண்மொழித்தேவர் என்னும் அநபாயச் சோழனின் முதலமைச்சர் திருத்தொண்டர் புராணத்தை இயற்றுவதற்கு இத்தலத்தைத் தேர்ந்தெடுத்தார்.

அவர் திருத்தொண்டர் புராணத்தைத் திருத்தொண்டத் தொகையின் மரபினைப் பெரிதும் பின்பற்றிப் பாடியுள்ளார்.

இத்திருக்கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தில் ஓராண்டுக் காலம் திருத்தொண்டர் புராணம் ஆசிரியராலேயே படிக்கப் பெற்று அரங்கேற்றப்பெற்றது.

அரங்கேற்ற காலத்தில் அநபாயன் முற்றிலுமாக அதனைக் கேட்டான் என்பது உளங்கொளத் தக்கதாகும்.

அரங்கேற்ற முடிவில் சேக்கிழார் யானைமீது ஏற்றப்பட்டு ஊர்வலமாகக் கொண்டுவரப்பெற்றார். அவருக்குச் சோழன் கவரி வீசினான் என்னும் குறிப்புப் பெறப்படுகின்றது.

உமாபதிசிவனார் தில்லைவாழ் அந்தணர் மரபில் தோன்றிய வராதலால் தில்லைத் திருக்கோயில் வரலாற்றைப் பல்வேறு கோணங்களில் நோக்கியுள்ளார் எனலாம்.

மூன்று வேறு காலக்கட்டங்களில் திருக்கோயிலில் நடை பெற்ற நிகழ்ச்சிகளை உமாபதிசிவனார் மூன்று புராணங்களாக இயற்றி வரலாற்றை அறிவதற்குத் துணை செய்துள்ளார்.

திருத்தொண்டர் புராணத்தைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து பகுத்தும் வகுத்தும் கூறிய நோக்கு இவர்தம் திறனாய்வுத் தன்மையைப் புலப்படுத்துகின்றது.

அடிக்குறிப்புகள்

1. குமரகுருபரர், **சிதம்பர செய்யுட்கோவை**, பா 48.
2. மேலது, பா 45.
3. என். சுப்பிரமணியன், **சிதம்பர ரகசியமும் நடராஜதத்துவமும்**, ப. 10.
4. சுந்தரர், திருத். தொகை, பா. 1 : 1.

5. மேலது, பா 10 : 5.
6. சேக்கிழார், "தடுத்தாட்கொண்ட புராணம்", பெரிய. பா. 3, 7
7. திருமங்கையாழ்வார், **பெரிய திருமொழி**, 3 : 2, 8. குலசேகர ஆழ்வார், **பெருமாள் திருமொழி**, 10 : 2.
8. சம்பந்தர், தேவா., 3 : 1 : 3.
9. சேக்கிழார், "தில்லை வாழந்தணர்புராணம்", பெரிய., பா. 8.
10. உமாபதிசிவம், "இரணியவன்மச் சருக்கம்", கோயிற்., பா. 128.
11. உமாபதிசிவம், "வியாக்ர", கோயிற்., பா. 4.
12. மேலது, பா. 12.
13. புறம். 198 : 9 ; கலி. 81 : 29 ; 83 : 14 ; திருமு. 256 ; சிறுபா. 97.
14. உமாபதிசிவம், "வியாக்ர.", கோயிற்., பா. 14.
15. மேலது, பா. 15.
16. மேலது, பா. 18.
17. மேலது, பா. 20.
18. கமலை ஞானபிரகாசர், **புட்பவிதி**, பா. 27.
19. உமாபதிசிவம், "வியாக்ர", கோயிற். பா. 21.
20. மேலது, பா. 22.
21. மேலது, பா. 14.
22. மேலது, பா. 12.
23. மேலது, பா. 14.
24. நேர்காணல் : து. தம்புசாமி, எறும்பூர், 10—7—1990.
25. உமாபதிசிவம், "வியாக்ர", கோயிற். பா. 14.
26. மேலது, பா. 15.
27. மேலது, பா. 19.
28. மேலது.
29. சேக்கிழார், "திருக்கூட்டச்சிறப்பு", பெரிய., பா. 8.
30. உமாபதிசிவம், "வியாக்ர", கோயிற்., பா. 20.
31. மேலது, பா. 23-25.
32. சேந்தனார், "திருப்பல்லாண்டு", **ஒன்பதாம் திருமுறை**, பா. 9. 71

33. உமாபதிசிவம், ''வியாக்ர'' கோயிற். பா. 25.
34. உமாபதிசிவம், ''பதஞ்சலி'', கோயிற்., பா. 2.
35. மேலது, பா. 40-41.
36. மேலது, பா. 44.
37. குமரகுருபரர், **சிதம்பர மும்மணிக்கோவை**, பா. 2: 14-21.
38. உமாபதிசிவம், ''பதஞ்சலி''., கோயிற்., பா. 39.
39. மேலது, பா. 38.
40. மேலது, பா. 40.
41. மேலது, பா. 41. உரை
42. மேலது, பா. 43.
43. மேலது. பா. 48.
44. மேலது, பா. 56.
45. மேலது, பா. 57.
46. மேலது, பா. 61.
47. மேலது, பா. 63.
48. மேலது, பா. 68.
49. திருமூலர், **திருமந்திரம்**, பா. 2747.
50. உமாபதிசிவம், ''பதஞ்சலி'', கோயிற். பா. 71.
51. மேலது, பா. 71.
52. மேலது, பா. 72.
53. மேலது, பா. 74.
54. மேலது, பா. 77.
55. மேலது, பா. 80.
56. மேலது, பா. 81.
57. மேலது, பா. 92.
58. மேலது, பா. 93.
59. மேலது, பா. 95.
60. மேலது, பா. 96.
61. மேலது, பா. 98.
62. உமாபதிசிவம், ''நடராச'', கோயிற்., பா. 24.
63. மேலது, பா. 10.
64. மேலது, பா. 23.
65. மேலது, பா. 36.
66. மேலது, பா. 38.

67. மேலது, பா. 39.
68. உமாபதிசிவம், "இரணிய.", கோயிற்., பா. 9-12.
69. மேலது, பா. 15.
70. மேலது, பா. 18.
71. மேலது, பா. 19-31.
72. மேலது, பா. 34.
73. மேலது, பா. 41.
74. மேலது, பா. 50.
75. மேலது, பா. 53.
76. மேலது, பா. 54-59.
77. உமாபதிசிவம், "நடராச.", கோயிற்., பா. 51.
78. நேர்காணல் : அ.ஆனந்தநடராச தீட்சிதர், சிதம்பரம், 21—6—1990.
79. ஆய்வாளர் நேரில் கண்டறிந்தது.
80. உமாபதிசிவம், "நடராச.", "கோயிற்., பா. 51
81. திருவள்ளுவர், **திருக்குறள்**, பா. 18
82. தி. பட்டுசாமி (ப. ஆ.), **திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால்**, பா. 21
83. உமாபதிசிவம், "திருவிழா.", கோயிற்., பா. 19.
84. சிதம்பர பதஞ்சலி பூசை சூத்திரம், ப. 2.
85. உமாபதிசிவம், "திருவிழா.", கோயிற்., பா. 19.
86. மேலது, பா. 20.
87. மேலது.
88. மேலது, பா. 21.
89. ஏ. சுவாமிநாதன், **தமிழக வரலாறும் பண்பாடும்**, ப. 208.
90. நேர்காணல் : சிவராஜதீட்சிதர், சிதம்பரம், 15—6—1990.
91. உமாபதிசிவம், "திருவிழா.", கோயிற். பா. 21.
92. நவதானியங்களும் நவக்கிரகங்களும் : நேர்காணல் : சிவராஜ தீட்சிதர், சிதம்பரம், 15-6-1990.

கோதுமை	–	ஞாயிறு
யவநெல்	–	திங்கள்
துவரை	–	செவ்வாய்
பயறு	–	புதன்
கருப்புகொண்டைக்கடலை	–	வியாழன்

மொச்சை – வெள்ளி
உளுந்து – ராகு
கொள்ளு – கேது

93. நேர்காணல்: இரா. கந்தசாமி குருக்கள், திருவேட்களம், 26—1—90.
94. அ. கந்தசாமிபிள்ளை (க. அ,) "தலங்களின் வரலாற்றுக் குறிப்பு", தேவா., மூன்றாம் திருமுறை, ப. ருஉ.
95. மேலது
96. மேலது, ப. 86-87.
97. உமாபதிசிவம், "திருவிழா.", கோயிற். பா. 22.
98. சிவஞானமுனிவர், "தழுவக் குழைந்த படலம்", காஞ்சி, பா. 138-41.
99. உமாபதிசிவம், "திருவிழா.", கோயிற், பா. 22.
100. பஞ்சமூர்த்திகள்: விநாயகர், சுப்பிரமணியர், சோமாசுகந்தர், அம்பாள், சண்டிகேசர்.
சான்று: க. வெள்ளைவாரணன், **தில்லைப்பெருங்கோயில் வரலாறு**, ப. 85.
101. உமாபதிசிவம், "திருவிழா.", கோயிற். பா. 23.
102. பரி. 8 : 6; கலி : 150 : 20.
103. மது., அடி. 591.
104. நாவுக்கரசர், தேவா. 6 : 69 : 3.
105. பரி. 11 : 77-78.
106. ஐம்பூதங்கள்: நிலம், நீர், தீ, வளி, விசும்பு ஆகியன.
சான்று: சம்பந்தர், தேவா : 2 : 55 : 6 : 1,
சேரமான்பெருமாள், "பொன்வண்ணத்தந்தாதி",
பதினோராந்திருமுறை, பா. 15 : 1-2.
107. ஆறுமுக நாவலர், **இந்து மத பாலபாடம்**, ப. 77-78.
108. இறைவனின் எட்டுவடிவங்கள்: நிலம், நீர், தீ, வளி, விசும்பு, சூரியன், சந்திரன், ஆன்மா ஆகியன
சான்று: நாவுக்கரசர், தேவா., 6 : 94 : 1 : 1-2.
அருணந்திசிவம், **இருபா இருபஃது**, பா. 2 : 14-17.
109. கோ. மு. முத்துசாமிபிள்ளை, **தில்லைச் சிற்றம்பலவன் திருக்கோயில்**. ப. 54.
சொ. சிங்காரவேலன், **சைவசமயம்**, பக். 154-155.

110. ச. மெய்யப்பன், **தில்லைத் திருக்கோயில்**, பக். 96-97.
111. சம்பந்தர், தேவா., 3 : 1 : 9.
112. அ. கந்தசாமிப் பிள்ளை (உ. ஆ.), **தேவாரம் மூன்றாம் திருமுறை**, 3 : 1 : 9., உரை.
113. சேந்தனார், "திருப்பல்லாண்டு", ஒன்பதாம் திருமுறை, பா. 12 : 3.
114, ச. மெய்யப்பன், **தில்லைத் திருக்கோயில்**, பக். 96-97.
115. நேர்காணல் : சி. சிவராஜதீட்சிதர், சிதம்பரம். 15 - 6 - 90.
116. கோ. மு. முத்துசாமிப்பிள்ளை, **தில்லைச் சிற்றம்பலவன் திருக்கோயில்**, பக். 44-47.
117. உமாபதிசிவம். கோயிற்., பா. 153 உரை.
118. நேர்காணல் : சிவராஜதீட்சிதர், சிதம்பரம், 15—6—1990.
119. உமாபதிசிவம், "திருவிழா.", கோயிற்., பா. 24.
120. மேலது
121. மேலது, பா. 25.
122. நேர்காணல் : அ. ஆனந்தநடராசதீட்சிதர், சிதம்பரம், 21—6—90.
123. நேர்காணல் : சிவராஜதீட்சிதர், சிதம்பரம், 15—6—1990.
124. சீத்தலைச்சாத்தனார் "விழாவறைகாதை", **மணிமேகலை**, அடி. 8. இளங்கோவடிகள், சிலம்பு, இந்திரவிழவூரெடுத்த காதை", அடி. 64; "கடலாடுகாதை" அடி. 6.
125. உமாபதிசிவம், "திருவிழா", கோயிற்., பா. 27.
126. சி. சிவராஜதீட்சிதர், **சிதாகாசம்**, பக். 15-16.
127. என். சுப்பிரமணிய அய்யர், **சிதம்பர ரகசியமும் நடராச தத்துவமும்**, பக் 18-19.
கோ. மு. முத்துசாமிபிள்ளை, **தில்லைச் சிற்றம்பலவனார் திருக்கோயில்**, பக். 87-88.
சி. சிவராஜ தீட்சிதர், **சிதாகாசம்**, ப. 16, மேற்கோள் பாடல்.
128. சிவஞானமுனிவர், "கச்சிமயானப்படலம்", காஞ்சி., பாக். 2-49.
129. சிவஞானமுனிவர், "திருவேகம்பப்படலம்", காஞ்சி., பாக். 2-5.

130. கோசமும் பழமையும் ஊழும் காட்டும்
ஆர்ப்பும் முறைமையும் முறையென லாகும்
பிங்கல முனிவர், **பிங்கலந்தை**, சூ. 3983.
131. க. வெள்ளைவாரணன், **பன்னிருதிருமுறை வரலாறு**, முதல் தொகுதி, ப. 28.
132. உமாபதிசிவம், திருமுறை. புராணம், ப. 4.
133. மேலது, பா. 5.
134. க. வெள்ளைவாரணன், **பன்னிருதிருமுறை வரலாறு**, முதல் தொகுதி, பக். 16-17.
135. நம்பியாண்டார்நம்பி, திருத். அந்தாதி, பாக். 50, 65, 81.
136. க. வெள்ளைவாரணன் **பன்னிருதிருமுறை வரலாறு**, முதல் தொகுதி, ப. 23.
137. மேலது
138. மேலது, ப. 24.
139. மேலது.
140. சேக்கிழார், "கூற்றுவநாயனார் புராணம்", பெரிய., பா 4.
141. உமாபதிசிவம், திருமுறை புராணம், பா. 5.
142. மேலது, பா. 12.
143. மேலது, பா. 13.
144. மேலது, பா. 14.
145. மேலது, பா. 15.
146. சுந்தரர், தேவா. 7 : 65 : 2.
147. சேக்கிழார், "ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம்", பெரிய.' பா. 150.
148. உமாபதிசிவம், திருமுறை புராணம், பா. 16.
149. மேலது, பா. 19.
150. மேலது, பா. 22.
151. க வெள்ளைவாரணன், **பன்னிருதிருமுறை வரலாறு**, முதல் தொகுதி, ப. 51.
152. உமாபதிசிவம், திருமுறை புராணம், பா. 25.
153. க. வெள்ளைவாரணன், **பன்னிருதிருமுறை வரலாறு**, முதல் தொகுதி. ப. 50.
154. மேலது.
155. நேர்காணல் : சு. சாமிஐயா, சிதம்பரம், 2—10—90.

156. க. வெள்ளைவாரணன், **பன்னிருதிருமுறை வரலாறு,** முதல்தொகுதி, ப. 34.
157. மேலது, ப. 30.
158. உமாபதிசிவம், திருமுறை. புராணம், பா. 35-43.
159. மேலது, பா. 30-34.
160. மேலது, பா. 31-32.
161. மேலது, ப. 23.
162. மேலது, பா. 24.
163. மேலது, பா. 28.
164. உமாபதிசிவம், சேக்கிழார் புராணம், பா. 96.
165. க. வெள்ளைவாரணன், **பன்னிருதிருமுறை வரலாறு** - இரண்டாம் தொகுதி, பக். 1015-16.
166. உமாபதிசிவம், சேக்கிழார் புராணம், பாக். 21, 22, 53.
167. உ.வே. சாமிநாதையர் (ப. ஆ.), ''நூலாசிரியர் வரலாறு'' **சீவகசிந்தாமணி,** ப. 17.
168. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், **தமிழ் இலக்கிய வரலாறு,** கி.பி. 250–600, பக். 14–15.
169. உ.வே. சாமிநாதையர் (ப. ஆ.), ''நூலாசிரியர் வரலாறு'', **சீவகசிந்தாமணி,** ப. 17.
170. சேக்கிழார், ''திருநாவுக்கரசு நாயனார் புராணம்'', பெரிய., பா. 146.
171. சேக்கிழார், ''திருஞானசம்பந்தர் புராணம்'' பெரிய., பாக். 791, 835-55.
172. மேலது, பாக். 857–58.
173. உமாபதிசிவம், சேக்கிழார். புராணம், பாக். 21-22.
174. மேலது, பா. 84.
175. சேக்கிழார், ''பாயிரம்'', பெரிய., பா. 8.
176. சேக்கிழார், ''திருநாட்டுச் சிறப்பு'', பெரிய., பா. 35.
177. சி.கே. சுப்பிரமணியம், **சேக்கிழார்,** ப. 8.
178. சேக்கிழார், ''பாயிரம்'', பெரிய., பா. 1.
179. சேக்கிழார், ''பாயிரம்'', பா. 1; ''வெள்ளானைச்சருக்கம்'' பா. 53; பெரியபுராணம்.
180. உமாபதிசிவம், சேக்கிழார். புராணம், பா.1.

181. மேலது, பா. 195.
182. மேலது, பா. 80.
183. சேக்கிழார், பெரிய., பக். 2, 4, 14, 16, 66, 89, 192, 430, 618, 661, திருப்பனந்தாள் வெளியீடு.
184. சேக்கிழார், "திருமலைச்சிறப்பு", பா. 12; சண்டேசுர நாயனார் புராணம்", பா. 8.
185. மா. இராசமாணிக்கம், **கால ஆராய்ச்சி**, ப. 205.
186. சேக்கிழார், "சண்டேசுரநாயனார் புராணம்", பெரிய. பா. 8.
187. மா. இராசமாணிக்கம், **கால ஆராய்ச்சி**, பக். 205-206.
188. மேலது, பக். 205-208.
189. சி. கே. சுப்பிரமணியம், **சேக்கிழார்**, ப. 14.
190. மா. இராசமாணிக்கம், **கால ஆராய்ச்சி**, ப. 210.
191. உமாபதிசிவம், சேக்கிழார், புராணம், பா. 87.
192. புறம். 50.
193. சேக்கிழார், "திருமலைச் சிறப்பு", பெரிய., பா. 12.
194. சி. கே. சுப்பிரமணியம், சேக்கிழார், ப. 32.
195. மேலது.
196. சேக்கிழார் "கூற்றுவநாயனார் புராணம்" பெரிய., பா, 4.
197. உமாபதிசிவம், சேக்கிழார், புராணம், பாக். 36-53.
198. மேலது, பாக். 36-37.
199. மேலது.
200. க. வெள்ளைவாரணன், **தில்லைப் பெருங்கோயில் வரலாறு**, ப. 41.
201. உமாபதிசிவம், சேக்கிழார் புராணம், பா. 38-41.
202. மேலது, பாக். 44-46.
203. மேலது, பா. 48.
204. மேலது, பா. 47.
205. மேலது, பாக். 42-44.
206. சேக்கிழார், "முருக நாயனார் புராணம்" பெரிய., பா. 14.

இலக்கியங்களில் சைவசித்தாந்த கருத்துக்கள்

உமாபதிசிவனார் இலக்கிய ஆசிரியராகவும், சித்தாந்த ஆசிரியராகவும், வடமொழிநூல் வல்லவராகவும் விளங்குகிறார் என்பது அவருடைய வரலாற்றை ஆராயுமிடத்துத் தெளிவுப்படுத்தக் காணலாம். சித்தாந்த நூல்களில் எட்டு நூல்கள் இவரால் இயற்றப்பட்டுள்ளன. ஆயினும் இலக்கிய நூல்களை இயற்றுங் காலத்தும் சித்தாந்தக் கருத்துக்களை வாய்ப்பு நேருமிடங்களில் அவர் கூறிச் சென்றுள்ளார் என்பது ஈண்டு எண்ணத்தக்கது. பொதுவாக இலக்கிய நூல்கள் பலவற்றிலும் சிறப்பாகக் கோயிற் புராணத்திலும் சித்தாந்தக் கருத்துக்களை மிகுதியும் அமைத்துச் சென்றுள்ளார் எனலாம்.

சித்தாந்தக் கருத்துக்களை இலக்கியங்களில் அமைத்துச் செல்லும் போக்கு இவ்வாசிரியருக்கு இயல்பு என்பதனை இவர் திரட்டிய 'தேவார அருள்முறைத் திரட்டு' என்னும் நூல் புலப் படுத்துகின்றது. தேவாரப் பாடல்களில் எவ்வெப்பாடல்கள் சித்தாந்தக் கருத்துக்களுக்கு இலக்கியமாகத் திகழ்கின்றனவோ அவற்றைத் தொகுத்து அமைத்த நூலே தேவார அருள்முறைத் திரட்டாகும். உமாபதிசிவனார் செய்த ''திருவருட்பயன்'' கருத்துக் கள் விளக்கமாவதற்குத் துணை செய்யும் பாடல்கள் மூவர் தேவாரங்களில் ஆங்காங்கு காணப்படுகின்றனவற்றைத் தெரிந் தெடுத்துத் தொகுத்து அமைத்துள்ளார் என்பது அருள்முறைத் திரட்டின் தன்மையாகும்.

இலக்கியங்களில் பல இடங்களிலும் சைவசித்தாந்தக் கருத்துக்களை அமைத்துப் போற்றியிருப்பினும் சித்தாந்த விரிவும் விளக்கமும் கொண்டிருப்பது பற்றிக் கோயிற்புராணம் இவ்வியலில் மைய ஆய்வுப்பொருளாக அமைவது குறிப்பிடத்தக்கது. எனவே கோயிற்புராணத்திலுள்ள சித்தாந்தக் கருத்துக்களை உலகத் தோற்றம், கருவி கரணங்களும் அவற்றின் மயக்கங்களும், சாதனமும் திருவடிப்பேறும் எனவும், பிற இலக்கியங்களில் சித்தாந்தக் கருத்துக்கள் எனவும் பகுத்துக் காணலாம்.

உலகத்தோற்றம்

உலகம் தோன்றி, நின்று, ஒடுங்குகிறது என்பது சித்தாந்தங் கூறும் உண்மையாகும். இம்மூன்று நிலைகளில் இவ்வுலகு இருப்பதைக் காணுகின்ற மக்கள் இரண்டு கருத்துக்களைக் கருதி உணர வேண்டியுள்ளது. அவற்றுள் ஒன்று உலகம் தோன்றியது என்பதும், மற்றொன்று ஒடுங்குகின்றது என்பதுமாகும்.

ஒரு பொருளின் இயல்பினை இரண்டாகப் பகுக்கலாம். ஒன்று முதல் என்பதும் மற்றொன்றும் அதன் கூறாகிய சினை என்பது மாகும். முதலின் தன்மை சினையிலும், சினையின் தன்மை முதலிலும் அமையும் என்பது சிந்தாந்திகள் கண்ட உண்மையாகும். உலகத்தின் சினை என்பது ஆண், பெண், அஃறிணை என்னும் மூக்கூற்றுத் தன்மையாகும். இம்மூன்று இயல்புடைய ஆன்மாக்கள் பிறந்தும், வாழ்ந்தும், மறைந்தும் அமைகின்ற நிலையை உலகிடையே காணலாம். உலகின் சினையாகிய இம்மூன்று கூறுகளும் தோன்றி, நின்று, மறைவதால் தோன்றி நின்று ஒடுங்குகின்ற தன்மை அவற்றின் முதலாகிய உலகிற்கும் உண்டு என்னும் முடிபினைச் சித்தாந்திகள் உறுதி செய்துள்ளனர்.[1] உலகம் தோன்றி, நின்று, ஒடுங்கும் இயல்பினது என்ற முடிவுக்கு வந்தமையால் அதன் தோற்ற நிலையைப் பல்வேறு வகையிலும் ஆராய்ந்து முடிவு செய்துள்ளனர். உலகத்தோற்றம் என்பதனை ஆன்மவடிவுகளும் இறைவன் கருணையும், ஆன்மாக்கள் உய்யும் வகை எனப்பகுத்துக் காணலாம்.

ஆன்ம வடிவுகளும் இறைவன் கருணையும்

'இறை' என்பது அறிவு வடிவானது. இறைவனைச் ''சித்துப் பொருள்'' எனச் சித்தாந்தம் குறிப்பிடுகின்றது.[2] அறிவு என்பது உருவமில்லாதது. உருவமில்லாத இறையைப் ''பதி'' எனக் குறிப்பிடுகின்றனர். பதி என்பது காலத்தைக் கடந்து நிற்பது; ஒன்றாக இருப்பது.[3] ஒன்றாக, அறிவொளியாக இருக்கின்ற இறை - உலகத்தோற்றத்தைச் செய்வதற்கு முதற்காரணம், துணைக் காரணமென்னும் இரு துணைகளைப் பெற்று உலகத் தோற்றத்தைச் செய்விக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. துணை

பொருந்துகின்ற பதி இச்சை, செயல் என்னும் இரு தன்மைகளை முதலிலே பெறுகிறது. அவ்விருவகை ஆற்றல்களையும் இச்சா சக்தி என்றும், ஞானாசக்தி என்றும் குறிப்பிடுவர். முதற் காரணம் என்பது பொருள் அழிகின்ற வரையில் உடன் இருப்ப தாகும். பாண்டத்திற்கு மண் முதற்காரணம்; அதுபோல உலகத் தோற்றத்திற்கு மாயை முதற்காரணம் என்பர்.[4]

''வையக மாயை யின்கண் வினைவழி வருங்க டாதி
செய்பவ ரொழியத் தோன்றாச் சீலத்த வுயிர்கள் சேர்தற்
கெவ்வகை யுணர்வுண் டென்னி லிலங்குமைந் தொழிலி யாவு
முய்வகை யாலி யற்றற் கியாமுளோ மெனவு ரைத்து''[5]

எனக் கூறியுள்ளமையால் அறியலாம். முதற்காரணத்தையும், துணைக் காரணங்களையும் கொண்டு உலகைத் தோற்று விக்குங்கால் இறைவன் தத்துவ வடிவம் கொள்ளுகிறான். அவ்வாறு கொள்ளப்படுகின்ற வடிவம் ஐந்து வகைப்படும். நாதம், விந்து, சதாசிவம், மகேஸ்வரம், சுத்தவித்தை என்னும் ஐந்து தன்மைகளைச் சிவதத்துவம் அல்லது சுத்த தத்துவம் என்று கூறுவர்.[6] நாதம், விந்து என்னும் இரண்டையும் சக்தி, சிவம் என்னும் வேறு பெயர்களாலும் குறிப்பிடுவர்.

எந்த ஒரு பொருளையும் தோற்றுவிப்பதற்கு அறிவும், செயலும் இன்றியமையாதவை. செய்கின்ற செயல்பாட்டிற்கு ஏற்ப அறிவு நிலை கூடியும் குறைந்தும், செயல்நிலை கூடியும் குறைந்தும் நிகழ்வதை உலகியலில் காணலாம். ஒரு நூலாக்கத் திற்கு அறிவு நிலை கூடுதலாக வேண்டும்; இரும்பு ஒரு கருவியாக மாறச் செயற்பாட்டுத்திறன் மிகுதியாக வேண்டும். உலகம் பல் வேறு நிலைகளில் தோற்றுவிக்கப்படுவதால் அறிவு, செயல் இவற்றின் அளவு வேறுபாட்டால் ஏற்பட்ட இறையின் தன்மை களே சிவதத்துவம் எனப்படும். அவற்றுள் ''சுத்தவித்தை'' என்பது அறிவு மிகுந்து செயல் குறைந்த தன்மை உடையதாகும். ''ஈசுவரம்'' என்பது சிவஞானம் குறைந்து செயல் கூடி இருக்கும். ''சாதாக்கியம்'' என்பது அறிவும் செயலும் ஒத்த தன்மை உடை யதாகும். சத்தி தத்துவம் செயல் வடிவமாக இருக்கும். சிவதத் துவம் ஆதாரஞானமாக இருக்கும் என்பது முன்னோர்கள் கண்ட முடிபாகும்.[7] அவ்வாறு தோன்றுகின்ற இயல்பினை,

''சத்திகளிற் கருத்திருத்தித் தாவிலரு மாமாயை
யுய்த்ததனி னாதாதி யைவகையு முதிப்பித்து''[8]

என்பதனால் உணரலாம்.

ஆன்மாக்கள் கேவலநிலையில் ஆணவமலத்தோடு கட்டுண்டு எவ்வகை அறிவுமில்லாமல் கிடக்கும். அவற்றின் அறியாமையைப் போக்கி அறிவுபெறவும், தன்னிடத்து இயைந்து திருவடிப்பேற்றின் தன்மையைப் பெறச்செய்யவும் கருதுகின்ற இறை அவற்றிற்குத் தனு, கரண, புவன, போகங்களைக் கொடுக்கிறான் என்பதை,

''நற்காலத் துடனவில்வா னால்வகைமா யையுநடத்தி''[9]

என்னும் அடியால் கூறப்பட்டிருப்பதையும் உணரலாம். தனு, கரண, புவன, போகம் என்ற நான்கும் தோற்றுவிப்பதற்கு மாயையே காரணம் என்பதை ஆசிரியர் புலப்படுத்தி உள்ளமை கருதத்தக்கது. 'தனு' என்பது உடம்பையும், 'கரணம்' என்பது உட்கருவிகளையும், 'புவனம்' என்பது உலகையும், 'போகம்' என்பது அனுபவத்தையும் குறிப்பதாகும். ஆன்மாக்களின் வினைக் கேற்ப அவற்றிற்கு உடலை இறைவன் கொடுக்கிறான். அது நினைந்த மாத்திரத்திலேயே வடிவு கொள்கிறது. இதனைவிளக்க சிவ ஞானபோதம், குளவி தான்கொண்டு வருகின்ற புழுவைத் தன் உடல் பெறச்செய்யுமாறு போல என்ற உதாரணத்தை,

''வேட்டுவனா மப்புழுப்போல் வேண்டுருவந் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து''[10]

என்று குறிப்பிடுகிறது. அக்கருத்தை அவ்வாறே கோயிற்புராணத்தில் எடுத்தாண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.[11]

ஆணவத்தோடு கட்டுண்டு கிடந்த கேவல நிலையினின்றும் நால்வகையான தன்மைகளைப் பொருந்துமாறு ஆன்மாக்களுக்கு உதவி செய்து தோற்றுவித்த நிலை இவ்வுலக வாழ்க்கை நிலையாகும். அதனைச் சகலநிலை என்று குறிப்பிடுவர். அக்கருத்தை,

''கேவல சகல சுத்தம் என்றுமூன்று அவத்தை ஆன்மா
மேவுவன் கேவ லந்தன் உண்மைமெய் பொறிகளெல்லாம்
காவலன் கொடுத்தபோது சகலனாம்''[12]

என்பதனால் அறியலாம். ஆன்மாக்களுக்கு உடல் முதலிய வற்றைத் தோற்றுவிப்பதற்கு முன், ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம் என்னும் இருவகை நிலைகளை உலகு விரிவதற்குத் தோற்றுவிக்கப்படுகிறது என்பது சித்தாந்திகளின் கருத்தாகும்.

ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு ஆகும். அவை பூதங்கள் ஐந்து, புலன் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அந்தக் கரணங்கள் நான்கு என்பவையாகும். மண், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐந்தும் ''ஐம்பூதங்கள்'' எனப்படும். இவ்வுலகமும் உலகத்து உயிர்களும், உயிரல்லனவும் தோன்றுவதற்கு இடமாக இருப்பவை இவை. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தும் ஐம்பூதங்களின் தன்மைகளாக வெளிப்படுபவை. அவை நுண் வடிவமாக இருந்து அறிகருவிகளையும், செயற்பாட்டுக் கருவிகளையும் தோற்றுவிக்கின்றன.

அறிகருவிகளை ''ஞானேந்திரியம்'' என்ற பெயரால் குறிப்பிடுவர். மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவை அறி கருவிகளாகும். செவி, ஆகாயத்தை இடமாகக் கொண்டு கேட்கச் செய்யும்; மெய், வாயுவை இடமாகக் கொண்டு தொடு உணர்ச்சியை அறியும்; தீ, கண்ணை இடமாகக் கொண்டு வடிவை அறியும்; நா, நீரை இடமாகக் கொண்டு சுவையை அறியும்; மூக்கு, மண்ணை இடமாகக் கொண்டு மணத்தை அறியும்.[13]

கன்மேந்திரியம் என்னும் செயற்பாட்டுக் கருவிகள் பேச்சுப் பொறியாகிய வாய், கால், கை, எருவிடுங்குழி, கருவிடுங்குழி என்பவை. வாக்குக்கு ஆகாயமும், நடப்பதற்குக் காற்றும், இடுதல் ஏற்றற்குரிய கைகளுக்குத் தீயும், நீர் மலங்களை வெளியிடுவதற்கு நீரும், விந்துவால் மகிழ்ச்சி அடைவதற்கு ஆகாயமும் துணை செய்கின்றன.[14]

வித்யாதத்துவங்கள் ஏழாகும். அவை காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்பவை. ''காலம்'' என்பது இறந்த காலத்து எல்லையையும், நிகழ் காலத்துப் பயனையும், எதிர்காலத்துப் புதுமையையும் பொருந்தும் தன்மையது. ''நியதி'' என்பது கன்மத்தை இவ்வளவு என்று நிச்சயம் செய்து நிறுத்தும்.

''கலை'' என்பது ஆணவத்தைச் சிறிது நீக்கி ஆன்மாவிற்குச் செயற்பாட்டை எழுப்பும். ''வித்தை'' என்பது ஆன்மாவிற்கு விரைவில் அறிவை எழுப்பும். ''அராகம்'' என்பது பெற்ற பொருளைச் சிறிதாக்கி, பெறாத பொருளில் இச்சையை உண்டாக்கும். ''புருடன்'' என்பது ஆன்மா பஞ்சேந்திரியங்கள் வாயிலாக ஒலி முதலிய பொருள்களை அனுபவிக்கின்ற நிலையில் அவற்றிலே அழுத்துவிக்கும். ''மாயை'' என்பது ஒன்றை நினைக்க வொட்டாமல் மயக்கத்தைச் செய்யும்.[15] இக்கருத்துக்களை உள்ளடக்கி,

''கலை முதலா நிலன்முடிவாக் கண்டுணர்வங் கதிற்கருதிப்
பலவுயிர்க ளிருவினையாற் பயனுலகம் பெறப்பயிற்றி''[16]

என்பதனால் ஆசிரியர் உணர்த்தியுள்ள திறம் போற்றுதற்குரியது.

மாயை முதற் காரணமாகக் காணப்படுகின்ற நிலையில் மூன்று வகையாக விரியும் என்பது சித்தாந்த நூல்களில் காணப் படும் கருத்தாகும். மாயை - சுத்தமாயை எனவும், அசுத்த மாயை எனவும், மிஸ்ரமாயை எனவும் மூன்றாக உரைக்கப் பட்டுள்ளன. ''சுத்த மாயை'' என்பது கண்ணுக்குத் தெரியாப் பொருள்களைத் தோற்றுவிப்பதற்கு முதற்காரணமாக அமைகிறது. ''அசுத்தமாயை'' என்பது கண்ணுக்குத் தெரிந்த பொருள்களைத் தோற்றுவிப்பதற்கு முதற்காரணமாக அமை கிறது. ''மிஸ்ரமாயை'' என்பது இரண்டுங்கலந்த நிலையில் அமைவதாகும். ஓரளவு புலப்பட்டு, ஓரளவு மறைந்து தோன்று கின்ற பொருள்களைத் தோற்றுவிப்பதற்கு இம்மாயை காரணமாகிறது. வன்னம், பதம், வேதாகம சாத்திரங்கள், மந்திர கலை, வாக்குகள், புவனம் என்னும் நிலை சுத்தார்த்துவா வினால் தோற்றுவிக்கப்பட்டவை எனக்கூறுவர்.[17] மெய்கண்ட நூல்களில் கூறப்பட்டுள்ள இக்கருத்தினை,

''வைத்தெழுத்து மொழிமறை நூன் மந்திரமே முதலாய
சுத்தவழி விரித்தசுத்த தத்துவங்க டொகுமுதலில்''[18]

எனச் சுருக்கி உரைத்துள்ளமையை அறியலாம்.

ஆன்மாக்கள் அவை செய்த இருவினைகளுக்கு ஏற்பவே உடம்பு முதலியன கூட்டப்படுகின்றன. அவ்வாறு கூட்டப்படுவ

தற்கு ஏற்ப இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட கடவுள்ர்களே பிரமன், திருமால் முதலிய தெய்வங்களாகும் என்பதை,

"மலரயன்மால் வரநல்கி மற்றிவைநீர் பற்றி விரித்
தலைகடலும் வடவரையு மாள்வீரென் றளித்தருளி"[19]

எனக் கூறுவதால் அறியலாம்.

ஆன்மாக்கள் மூவகைப்படும், அவை விஞ்ஞானாகலர், பிரளயாகலர், சகலர் என்பவையாகும். அவைகளுள் "விஞ்ஞானாகலர்" என்பது ஆணவமலம் ஒன்றே உடைய ஆன்மா. "பிரளயாகலர்" என்பது ஆணவம், கன்மம் என இரண்டு மலங்களை உடையது. "சகலர்" என்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் உடையது. விஞ்ஞானாகலர்க்கு இறைவன் மனத்திலே நின்று அருள் செய்வன்; பிரளயாகலர்க்கு முன்நின்று தெய்வ வடிவோடு அருள் செய்வன்; சகலர்க்குக் குருவடிவில் வந்து அருள் செய்வன் – என்பது சித்தாந்த நூல்கள் கூறும் உண்மையாகும். அதனை,

"மெய்ஞ்ஞானம் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய் – மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்தும் தான்குருவாய் முன்"[20]

என்பதனால் உணரலாம். இக்கருத்துக்களை உள்ளடக்கி உமாபதிசிவனார், இறைவனுடைய வடிவ வேறுபாடுகளை உணர்த்துமிடத்தில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.[21]

ஆன்மாக்கள் உய்யும் வகை

ஆன்மாக்கள், இவ்வுலகில் பிறந்து வாழ்வதற்குச் "சகலநிலை" என்பது பெயர். ஆன்மா உய்வதற்குரிய நிலையிலேயே இறைவனால் தோற்றுவிக்கப்படுகிறது என்பது முன்னர் ஆராயப்பட்டது. ஆணவ மலம் ஒன்றே பெற்றுக் கேவலநிலையில் இருந்த ஆன்மாக்கள் வடிவு முதலியன பெறுங்கால் கன்மம், மாயை முதலிய மலங்கள் இரண்டும் கூட்டப்படுகின்றன. அவ்வாறு கூட்டப்படுகின்ற மலங்கள் இரண்டையும் "ஆகந்துக மலம்" என்று கூறுவர். அதற்கு இடையில் சேர்க்கப்படும்

மலம் என்பது பொருளாகும். அநாதியாய் இருக்கின்ற மலம் இயற்கை மலமென்றும், அஃது ஆணவம் என்றும் கூறப்படும். ஆணவம் என்பது ஒரு பேர் இருளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை,

"ஒருபொருளும் காட்டாது இருள்உருவம் காட்டும்
இருபொருளும் காட்டாது இது"[22]

என்பதனால் உணரலாம். மும்மலம் பெற்ற சகல ஆன்மாக்கள் உய்வதற்காக இறைவன் மானுடச் சட்டை தாங்கிக் குருவடிவிலே எழுந்தருளுகிறான் என்பது சிவஞானபோதம் கூறும் கருத்தாகும்.[23] ஐம்புல இன்பங்களில் ஆழ்ந்து கிடக்கும் ஆன்மாவின் அறியாமையை நீக்குவதற்காக இறைவன் குருவடிவுகொண்டு வருகிறான் என்பதை,

"சூரிய காந்தமும் சூல்பஞ்சும் போலவே
ஆரியன் தோற்றமுன் அற்றமலங்களே"[24]

என்னும் திருமந்திரப்பாடலும் ஈண்டு எண்ணத்தக்கது. கண்ணன், உபமன்யுவைக் குருவாகக் கொண்டு உய்யும் நெறியைப் பெற்றமையை ஆசிரியர் குறிப்பிடுவதாலும் இதனை அறியலாம்.[25] சைவசமய நெறிகள் தீக்கை முறைகளால் ஆன்மாக்கள் உய்யும் நெறியை உணர்த்தியுள்ளன. தீக்கை முறைகளை ஏழுவகையாக வகுத்து உரைத்துள்ளார். அவை மானததீக்கை, நயனதீக்கை, வாக்குத்தீக்கை, தொடு தீக்கை, நூல் தீக்கை, யோக தீக்கை, ஓளத்திரி தீக்கை என்பவையாகும்.[26]

மானத தீக்கை

ஆசிரியன் மனத்தால் நினைந்து ஞானம் பெறுமாறு செய்வது மானத தீக்கையாகும். இதைப் பாவன தீக்கை எனவும் சொல்லுவர். இவ்வகைத் தீக்கையால் பதஞ்சலிக்கு இறைவன் அருள் செய்தான் என்னும் குறிப்புக் காணப்படுகிறது.[27] ஆமை, முட்டையிட்ட பின்னர் அதனை நினைந்தே குஞ்சு பொறிக்குமாறு செய்யும் நிகழ்ச்சியை இவ்வகைத் தீக்கைக்கு உதாரணம் ஆக்குவர்.

நயன தீக்கை

நயனம் என்பது கண், கண்ணால் நோக்கி மாணாக்கர் ஞானம் பெறுமாறு செய்வது நயன தீக்கை எனப்படும். மீன் தன் சினையைக் கண்ணால் பார்த்தமாத்திரத்தில் குஞ்சு பொறிக்குமாறு செய்கின்ற இயல்பினை உதாரணமாகக் காட்டுவர். உமாபதிசிவனார் கண்ணினால் நோக்கிய அளவில் முள்ளிச் செடிக்கு முத்தி கொடுத்த வரலாறு இவ்வகைத் தீக்கைக்கு உதாரணமாகும். இந்நிகழ்ச்சி அவரது வரலாற்றில் முன்னர் ஆராயப்பட்டது.

வாக்குத் தீக்கை

ஆசிரியர் மந்திரம் முதலியவற்றை முறைப்படி மாணாக்கர் செவியில் ஓதிச்சிவஞானம் பெறத் தகுதியாக்குதல் வாக்குத் தீக்கை எனப்படும். புலிக்கால் முனிவர் இரணியவன்மனுக்கு வலச்செவியில் திருவைந்தெழுத்து மந்திரத்தை ஓதித் திருச்சிற்றம்பலத்திற்குக் கொண்டு சென்றார் என்ற குறிப்பு இவ்வகைத் தீக்கையினால் அமைவதாகும்.[28]

தொடு தீக்கை

கையினால் ஆசிரியர் மாணாக்கர் தலைமீது வைத்துச் சிவஞானம் பெற அருள் செய்வது தொடு தீக்கை யாகும். பதஞ்சலி முனிவர் இறைவனிடத்தில் இத்தகைய தீக்கையைப் பெற்றார் என்பது ''கைத்தல முடிமேல் வைத்து'' என்பதனால் அறியப்பெறும்.[29]

நூல் தீக்கை

நூல் தீக்கை என்பதை ஆகமதீக்கை என்றும் கூறுவர். ஞான நூல்களை ஆசிரியர் மாணாக்கனுக்குக் கற்பித்து ஞானம் பெற வழிவகுத்தல் நூல் தீக்கையாகும். இவ்வகைத் தீக்கையை மறைஞானசம்பந்தர் உமாபதிசிவனாருக்கு சிவஞான போதம் முதலிய நூல்களை ஓதி உய்வித்தமையால் அறியலாம். உமாபதிசிவனார் வரலாற்றில் முன்னர் இது ஆராயப்பெற்றது.

யோக தீக்கை

யோகம் என்பது முறைப்படி மனத்தை ஒருமைப்படுத்தி மேற்கொள்வதாகும். அஃது எட்டுவகையாகப் பேசப்பட்டுள்ளது. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பவையாகும்.[30] பதஞ்சலி முனிவர் யோக சூத்திரம் என்னும் நூலை இயற்றி இவ்வகை யோகங்களை விவரித்துள்ளார் என்பது அவர் வரலாற்றால் அறியப்படும் நிகழ்ச்சியாகும். அந்நூல் வடமொழியில் இயற்றப் பட்டுள்ளது.[31] பதஞ்சலி முனிவரே யோகம் மேற்கொண்டு இறைவன் அருளைப்பெற்ற நிகழ்ச்சியும் ஈண்டு மனங்கொளத் தக்கது.

ஔத்திரி தீக்கை

ஔத்திரி தீக்கை என்பது குண்டம், மண்டலம் முதலியன அமைத்து விதிப்படி கூறிய சடங்கு முறையினால் செய்யப்படும் தீக்கையாகும். வாகீசனையும், வாகீஸ்வரியையும் முன்நிறுத்தி மாணாக்கன் ஆன்மாவைப் பாவனையினால் வாங்கி, வாகீஸ் வரியின் கருப்ப நாடியில் செலுத்தி மீண்டும் தோன்றுவதாகப் பாவித்துத் தூய்மை செய்து சடங்குகளால் செய்யப்படும் ஒரு வகைத் தீக்கையாகும். இவ்விதியில் சில வேறுபாடுகளும் நூல்களில் கூறப்பட்டுள்ளன என்பது மனங்கொள்ளத்தக்கது. இவ்வகையான தீக்கை முறையில் ஞானம் பெற்ற குறிப்பு இலக்கிய நூல்களில் இடம் பெறவில்லை. எனினும் சித்தாந்த நூல்களில் இத்தீக்கை முறை கூறப்பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[32]

தீக்கை பெற்ற பின்னர் நூல்களில் கூறப்பட்ட சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் தவமுறைகளால் ஆன்மாக்கள் உய்யும் நெறி கூறப்பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. அதனை,

> "சுருதிவழி யொழுதினர்கள் சுவர்க்கத்தா ராகமநூல்
> சரியைகிரி யாலோகச் சாலோக சாமீப
> உருவுவமை யினராக வுதவுதுமெம் முடனாகும்
> பெருகியஞா னிகளெம்மைப் பெற்றார்போக் கற்றாரே"[33]

என்பதனால் உணரலாம். அத்துடன் சரியை, கிரியை, யோகம், ஞானத்தில் நின்றவர்கள் என்னென்ன வகையான பயன்களைப் பெறுவர் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத் தக்கது.

சரியை

''சரியை'' என்பது இறைவனுக்கு உடல் உழைப்பினால் தொண்டு செய்தல். பூவெடுத்தல், அலகிடுதல், மெழுக்கிடுதல், நீர் எடுத்தல், உழவாரப்பணி செய்தல் போன்றவை சரியை நிலையாகும். அப்பரடிகள் சரியை நிலையில் நின்றவராகக் கருதப்படுவார்.[34] புலிக்கால் முனிவர் சரியை நெறியில் தொண்டு செய்து அருள்பெற்றவராகக் கருதத்தக்கவர். பூவெடுத்து, புறப்பூசை செய்து வழிபட்ட நிலை புலிக்கால் முனிவர் வரலாற்றில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.[35] சரியை நிலையில் நின்றார் சாலோகம் பெறுவர். ''சாலோகம்'' என்பது இறைவன் உலகில் இருப்பது எனப்பொருள்படும்.

கிரியை

''கிரியை'' என்பது விதிப்படி இறைவனைப் பூசனை செய்வ தாகும். இறைவனை மனத்தினில் நிறுத்தி அகப்பூசை செய்வதே கிரியை நெறியாகும். இவ்வகையில் வழிபட்டவர் ஞானசம்பந்தர் என்பது அருளாளர்கள் வரலாற்றால் அறியப்பெறுவதாகும்.[36] பெரிய புராணத்தில் இறைவனை முறைப்படி வழிபட்டு வீடுபேறு அடைந்தவர்கள் இன்னின்னார் எனச் சேக்கிழார் புராணம் கூறுவதால் அறியலாம்.[37] கிரியை நெறியாருக்குச் சாமீபம் என்பது கிடைக்கப்பெறும் பதமுத்தியாகும். இறைவன் அருகில் இருப்பது என்பதே சாமீபம் என்பதன் பொருளாகும். நம்பியாண்டார் நம்பிகள் கிரியை நிலையில் நின்றவர் என்பது கருத்திற்கொள்ளத்தக்கது.

யோகம்

யோகம் என்பது எட்டுவகை யோக நெறியில் நின்று இறைவனை வழிபடுதலாகும். சுந்தரர் யோகநெறியினின்று

உய்ந்தார் என்பர்.[38] யோக நெறியாருக்குச் சாரூபம் என்னும் நிலை கிடைக்கும் என்பர். ''சாரூபம்'' என்பது இறைவன் உருவை அடைதல் என்பது பொருளாகும். பதஞ்சலி முனிவர் யோகம் செய்தார் என்பதால் பின்னர் அடையப்பெற்ற பதவி சாரூபப் பதவியாக இருக்கலாம் எனக் கருதலாம்.[39] அது வெளிப்படை யாகக் கூறப்பெறவில்லை.

ஞானம்

சரியை முதலிய நிலைகளினின்று ஞான நெறியை அடைவர். ஞானநெறி நின்றார் சாயுச்சியம் என்னும் நிலையை அடைவர். ''சாயுச்சியம்'' என்பது இறைவனோடு இரண்டறக் கலத்தல் என்பதாகும். மாணிக்கவாசகர் தில்லையில் இத்தகைய முத்தியைப் பெற்றார் என்னும் வரலாறு ஈண்டு நினைவு கூரத்தக்கது.[40] சேக்கிழாருடைய வரலாறும் சாயுச்சிய நிலையை அடைந்ததைக் காட்டுகின்றது.[41]

கருவிகரணங்களும் அவற்றின் மயக்கங்களும்

ஆன்மாவிற்கு இறைவன் கருவி, கரணங்களைக் கொடுத்துப் புதுப்பிக்கிறான் என்பது இக்கட்டுரையின் முன்பகுதியில் ஆராயப் பெற்றது. ''சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு''[42] என்பதால் இவ்வைந்தும் உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகவும், மக்களின் அவாவிற்குக் காரணமாக அமைவனவாகவும் கருதலாம். அறி கருவிகள் என்ற ஞானேந்திரியங்கள் தோன்றுவதற்கு இவை நுண்வடிவாக அமைகின்றன. இவற்றின் தன்மைகள் ஞானேந்திரி யங்களின் இயல்பாக அமைவதில் வியப்பொன்றுமில்லை. இல்லது தோன்றாது, உள்ளது போகாது என்ற சற்காரியவாதம் சித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகும். எந்த ஒன்றும் நுண்வடிவாக இருந்து பருவடிவம் பெறுகின்றது என்பது இக்கோட்பாட்டின் விளக்கமாகும். அவ்வகையில் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற தன்மை ஐம்பூதங்களும் தோன்று வதற்கு நுண்வடிவாக அமைந்துள்ளன என்பது கருதத்தக்கது.

ஆன்மா பெறுகின்ற கருவிகளை மூன்று வகையாகக் கூறுவர். அவை ஞானேந்திரியம், கன்மேந்திரியம், அந்தக்கரணங்கள்

என்பவை. ஞானேந்திரியங்களால் ஈர்க்கப்பெற்ற புறத்திலுள்ள செய்திகள் அலை அலையாக உள்ளே அனுப்பப்படுகின்றன. அவற்றை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அகக் கருவிகள் உள் வாங்கியும், ஆராய்ந்தும் வேண்டுவனவற்றைத் தேர்ந்தும், பின்னர் எழுச்சி கொண்டும் அவற்றைப் பெற முயலுகின்றன. மனம் ஒன்றனைப்பற்றும் எனவும், புத்தி ஆராய்ந்து பார்க்குமெனவும், சித்தம் அடையக் கருதுமெனவும், அகங்காரம் அடையக் கருதிய பொருளை அடைவதற்கு எழுச்சி கொள்ளும் எனவும் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

ஐம்பூதங்களால் இவ்வுடம்பு ஆக்கப்பட்டுள்ளமையால், ஐம்பூத இயல்புகளும் உடம்பிலும் காணப்படுகின்றன. கால், மண்ணின் கூறு மிகுதியாகவுள்ள பகுதியாகும். வயிற்றின் அடிப்பகுதி, நீரின் கூறு மிக்குள்ள பகுதியாகும். வயிற்றின் மேற்பகுதி தீயின் கூறு மிகுதியாக அமைந்த பகுதியாகும். இதயம் முதல் மூக்குவரை காற்றின் கூறு மிகுதி உள்ள பகுதியாகும். அதற்குமேல் ஆகாயத்தின் கூறு அமைந்துள்ள பகுதியாகும். உலகம் எவ்வாறு மண்ணை அடித்தளமாகக் கொண்டு விளங்குகிறதோ அவ்வாறே மண்ணின் கூறாகிய காலை அடித்தளமாகக் கொண்டு உயிரினங்கள் வாழுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அண்டத்திலுள்ள எல்லாத் தன்மைகளும் பிண்டத்திலும் அமைந்துள்ளன எனக் கூறுவர்.[43]

அந்தக்கரணங்களின் அறிவுரைப்படி ஆன்மா செயல்படும் என்பது சித்தாந்தங்கள் கூறும் உண்மையாகும். இவ்வாறான ஆன்ம ஞானம் நீக்கத்தக்கது என்னுங் கருத்தினை,

> "கன்னலுஞ் சுவையும் போன்மெய்க் காட்சியுங் கருத்தி லின்பு
> மன்னிய மின்மை காட்டி யகம்புற மென்றி ரண்டு
> பின்னமி லருளுந் தந்த பெற்றியார்"[44]

என்னும் பகுதியில் சித்தாந்தக் கருத்துச் செறிவுடன் அமைக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கு என்பது இக் கட்டுரையின் முன்னர் ஆராயப்பெற்றது. இருபத்து நான்கு தத்துவங்களோடு பத்து வகையான காற்றும், புருடன் ஒன்றும்,

ஆன்மா ஒன்றுமாகத் தத்துவங்களை முப்பத்து ஆறு என்றும் கூறுவர். ஆன்மா முப்பத்தாறு தத்துவங்களோடு புருவநடுவில் நின்று செயல்படுவதை ''நனவுநிலை'' என்று கூறுவர். ஆன்மா அறிகருவிகள், செயற்பாட்டுக் கருவிகள் என்னும் பத்தையும் விட்டு மற்றைய கருவிகளோடு கழுத்தில் அமையுமானால் அது ''கனவுநிலை'' எனப்படும். ஆன்மா, புருடன், மனம் என்ற மூன்றோடு நெஞ்சில் அமையுமானால் அது ''உறக்கநிலை'' என்று கூறப்படும். ஆன்மா புருடன் ஒன்றோடு கொப்பூழ் இடத்துச் சென்று தங்குமானால் அது ''பேருறக்கநிலை'' எனப்படும். ஆன்மா தனித்துச் சென்று மூலாதாரத்தில் தங்குமானால் அஃது 'உயிர்ப்படங்கல்' எனப்படும். ஆன்மா என்ற ஒன்று நம் உடம்பில் இருக்கிறது என்பதை நிறுவுவதற்காக ஆன்மாவின் ஐந்து நிலைகளைத் தெளிவு படுத்தினர். இதனை ஐந்தவத்தை என்று கூறுவர்.[45]

ஆன்மா கீழ்நோக்கி அவத்தைப்படும் நிலை பிறவிக்கு வித்தாகும். கீழ்நோக்கிச் செல்வதுபோல புருவநடுவில் நின்றும் படிப்படியே மேல்நோக்கிச் செல்லும் நிலை மேலாவத்தை எனப்படும். இது யோகிகளுக்கு நிகழ்வதாகும். இந்நிலைக்கு ஆட்படாதவனாக இறைவனை ஆசிரியர் குறிப்பிடுவது கருத்தில் கொள்ளத்தக்கது. அதனை,

''சுத்தம் பரமற் புதமெய்ப் பதம்''[46]

எனக் குறித்துள்ளமையைக் காணலாம். இறைவனைச் சுத்தபரம ஆகாசம் எனவும், அதனால் அவன் சாக்கராதீதமாக நிற்கிறான் எனவும் கொள்ளுதல் வேண்டும். பரஞானம் என்பதை அவ்வாறு குறித்து அதனால் காணுந்தோறும் அற்புதம் தோன்றுவதாகக் குறித்துள்ளார். ''சாக்கராதீதம்'' என்பதற்கு நனவிற்கு அப்பாற் பட்டவன் என்பதே கருத்தாகும். ஆன்மாவின் இயல்புகளில் ஒன்றாகிய ஐந்தவத்தைப்படுதலை நினைப்பிக்கும் வகையில் சாக்கராதீதன் என்று கூறியுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[47]

ஆன்மா பெற்றிருக்கும் தத்துவங்கள் என்று கூறும்பொழுது ''தத்துவம்'' என்பதற்குக் கருவி என்பதே பொருள். கருவிகள் மாயை என்னும் முதற்காரணத்தால் செய்யப்பெற்றுள்ளமை

இக்கட்டுரையின் தொடக்கத்தில் ஆராயப்பெற்றுள்ளது. உயிரைப் பற்றியிருக்கின்ற ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றும் பொருள்களின் தன்மையை உள்ளவாறு காட்டாமல் மாற்றிக்காட்டும் இயல்புடையவை. பொறிபுலன்கள் வெளியிலிருந்து செய்திகள் அல்லது பொருள்களை அறிந்து உள்ளே அனுப்புங்கால் ஒருவகை அவாவினால் நிலை இல்லாதவற்றையும் நிலையினபோலக் காட்டுகின்ற தன்மை வாய்ந்தவை. இளமை நில்லாது, யாக்கை நில்லாது, சக்கரவர்த்தி செல்வமும் நில்லாது எனப்புலவர்கள் அடிக்கடி எடுத்துக்காட்டியமைக்கு அவையெல்லாம் நிலையினவாக உணரும் பேதைமையைப் போக்குவதற்கேயாகும்.[48] அதனை இந்திரசாலம், நீர்மேல்எழுத்து, மின்னல், நீர்க்குமிழி என்பவற்றை எடுத்துக்காட்டி வாழ்வு பொய் என்பதை ஆசிரியர் குறித்துள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது.[49]

ஆணவம் சாதாரண ஆன்மாக்களை மட்டுமின்றி ஞானிகளாக இருக்கின்றவர்களையும் கூட அறியாமையில் ஆழ்த்துகின்றது என்பது புராணங்கள் எடுத்துரைக்கும் கதைகளால் அறியலாம். தாருகாவனத்து முனிவர்கள் தவத்தில் தங்களை ஒத்தவர்கள் யாருமில்லை என்றும், தங்கள் மனைவியார் போன்று கற்புடைய பெண்டிரும் இல்லையெனச் செருக்குற்றிருந்தனர். அச்செருக்கைப் போக்குவதற்காகவே இறைவன் பிச்சை எடுக்கும் கோலத்தோடு, திருமாலை மோகினி அவதாரம் எடுக்குமாறு செய்து தாருகாவனத்துக்குச் சென்றான். முனிபத்தினிகள் இறைவன் திருமேனியழகில் ஈடுபட்டு நிலை இழந்தனர். முனிவர்களும் மோகினியின் அழகில் ஈடுபட்டு தங்கள் உறுதியினை இழந்தனர். தவத்தினால் கைவந்த ஆற்றல்களை எல்லாம் முனிவர்கள் யாகத்தைச் செய்து இழந்தனர். இங்ஙனம் கருவிகரணங்கள், மயக்கத்தைச் செய்யும் என்பதை முனிவர்கள் செயலாலும், முனிபத்தினிகள் செயலாலும் எடுத்துக் காட்டியுள்ளார் என அறியலாம்.[50] உமாபதிசிவனார் தொகுத்த அருள்முறைத்திரட்டில் இருள்மல நிலைக்கு எடுத்துக்காட்டாக உள்ள

''மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெறும் வித்தைவித்திப்
பொய்ம்மையாங் களையையவாங்கிப் பொறையெனும்
நீரைப்பாய்ச்சித்
தம்மையு நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையுமன்றே''[51]

என்னும் பாடலால் அறியலாம்.

மன்னர் குலத்தில் பிறந்தும், பொறிபுலன்களால் நேருகின்ற மயக்கங்களை அறிந்து அவற்றை நீக்குவதற்கு உரிய முயற்சிகளை மேற்கொண்டவர்களாகச் சிங்கவர்மனும், அநபாய சோழனும் அமைந்துள்ளனர். அவர்களுள் சங்கவர்மன் இயற்கையான உடற்குறைபாடுகள் காரணமாக அவற்றைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்னும் முயற்சியில் ஈடுபட்டுத் தலங்கள்தோறும் சென்று இறைவன்பால் ஈடுபாடுகாட்டினான்.[52] மயக்கந்தரும் நூல்களைப்பயின்று வாழ்நாளை வீழ்நாளாக்கிக் கொண்டிருந்த அநபாயசோழனை அருளாளர்களின் வரலாறுகளைக் கூறிச் சேக்கிழார் திருத்தினார்[53] அதனால் பொறி புலன்களை வெல்லுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளும் இயல்பு அவர்களுக்கு வளர்வதாயிற்று.

சாதனமும் திருவடிப்பேறும்

சாதனம் என்பது ஒன்றனை அடைவதற்கு உரிய வழிமுறை அல்லது கருவி என்பதாகும். திருவடிப்பேறு என்பது ஆன்மா அடைகின்ற முடிந்த முடிபான பயனைக்குறிப்பதாகும். சிவஞானம் அடைந்தாலன்றித் திருவடிப்பேறு எய்த முடியாது என்பது சித்தாந்தம் கூறும் முடிபாகும்.[54] சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று நிலைகளும் ஞானத்தை அடைவதற்குரிய படிநிலைகளாகும். ஞானத்தை அடைந்தவர்கள் திருவைந் தெழுத்தின் துணைக்கொண்டு திருவடிப்பேற்றினை அடையலாம்.

ஆன்மாக்கள் உறுதி பெறுவதற்கு இறைவனின் கருணைத் திறம் மிகமிக இன்றியமையாதது. இறைவன் கருணையினால் ஆன்மாக்களுக்கு ''சத்திநிபாதம்'' என்னும், தன்மை கிடைக்கப் பெறுகின்றது. ''சத்தி'' என்பதற்கு அருள் என்றும், ''நிபாதம்'' என்பதற்கு வீழ்ச்சி என்றும் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

ஒருவகையான அருள்வீழ்ச்சி எய்தப் பெறுமானால் ஆன்மாக்களைப் பற்றியிருக்கின்ற பந்தபாசங்கள் விலகி ஓடும். இந்த அருள்வீழ்ச்சி ஆன்மாக்களின் தன்மைகளுக்கு ஏற்பவே அமைகின்றது.

ஆன்மாக்களை மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என அதன் பக்குவ நிலைகளுக்கு ஏற்பப் பகுத்துக் கூறுவர். மந்ததரப் பக்குவர்க்குக் காற்கூறு சத்திநிபாதம் நிகழும். மந்தநிலையார்க்கு அரைக்கூறும், தீவிரத்தார்க்கு முக்காற்கூறும், தீவிரதரத்தார்க்கு முழுநிலையும் சத்திநிபாதம் நிகழும். சத்திநிபாதம் நிகழ்ந்தால் மலபரிபாகப்பட்டு இருவினையொப்பு நிகழும் என்று கூறுவர். ஓட்டையும், செம்பொன்னையும் ஒக்க நோக்குகின்ற இயல்பு அவர்களுக்கு வந்துவிடும்.[55]

அனந்தசயனமாக இருந்த ஆதிசேடன், அருள்வீழ்ச்சி நிகழ்ந்தமையால் திருமாலினுடைய படுக்கையாகத் தொடர்ந்து பணியாற்றுதலை விடுத்துத் திருவடிப்பேற்றை விரும்பிச் சென்று தவம் முயன்றமையைப் பதஞ்சலி வரலாறு புலப்படுத்துகின்றது.[56] புலிக்கால் முனிவர் தம் தந்தையின் கற்பித்தலால் ஏற்பட்ட பக்குவநிலை காரணமாகப் பந்தபாசங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இறைவனுக்குத் தொண்டு செய்வதையே தம் வாழ்நாளின் குறிக்கோளாக ஏற்றுக்கொண்டு செயல்படுவதைக் காணலாம்.[57] தன் ஒரே மகன் உபமன்யுவுக்குப் பால்வாங்கிக் கொடுப்பதற்குக்கூட வழியில்லாத நிலையிலும் தம் குடும்ப வளங்களைப்பெருக்கி உயர்த்திக்கொள்ள வேண்டும் என்று கருதாமல் அக்குழந்தையை மூலநாதருக்கு அண்மையில் கொண்டு வந்து விட்டுவிட்டுப் புலிக்கால் முனிவர் சிவ வழிபாட்டில் கவனம் செலுத்துகிறார் என்னும் குறிப்பு கருத்தில் கொள்ளத்தக்கது.[58] சிங்கவர்மன் ஐந்தாம் மனுவிற்கு முதல் மகனாக இருந்தும் தனக்குள் நிகழ்ந்த ஓர் உந்து சத்தியினால் அரசுப்பொறுப்புகளை இளவல்களிடம் ஒப்படைத்து விட்டு ஓடி வருகின்ற நிலையைப் பந்தபாசங்கள் இரிந்து ஓடுவதற்கு உதாரணமாக்கலாம்.[59] வேடன் ஒருவன் தில்லையிலுள்ள மூலநாதரையும், அதற்குப் பக்கத்திலுள்ள தாமரை வாவியையும் குறிப்பிட்டுக் கூறும்பொழுது ஒருநல்ல நிலையை எய்துவதற்கு அச்சொல் காரணமாக இருப்பது

போன்ற உள்ளுணர்வு தோற்றுவித்ததையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். அவ்வேடன் கூறிய சொற்களே சிங்கவர்மனுக்கு உபதேசமாக அமைந்தது போன்ற ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளமையை ஆசிரியர் காட்ட முயன்றுள்ளார் எனலாம்.[60]

உலகத்தில் எங்கும் உள்ள பொருள்கள் மூன்று என்பதைச் சித்தாந்த நூல்கள் கோட்பாடாகக் கூறியுள்ளன. அவை பதி, பசு, பாசம் என்பவையாகும். அதனைத் ''திரிபதார்த்த சிந்தனை'' எனக் கூறுவர்.[61] உலகில் நிலையான பொருள்களாக ஆறு பொருள்களைக் குறிப்பிடுகின்ற உமாபதிசிவனாரின் கருத்து போற்றுதற்குரியதாகும். அவை பதி, பசு, பாசம், இறைவனுடைய ஐந்தொழில், திருவைந்தெழுத்து, திருநீறு என்பனவாகக் குறித்துள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[62] ''திருநீறு'' என்பது மந்திரங்களில் ஒன்று என ஞானசம்பந்தர் தேவாரம் உணர்த்துகிறது.[63] திருநீற்றையும், உருத்திராக்கம் போன்ற வேடங்களையும் மெய்ப்பொருளாக எண்ணி வழிபட்ட நிலையை மெய்ப்பொருள் நாயனார் வரலாறு காட்டுகின்றது. அதனை,

''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்''[64]

எனத் தொழுது வென்றார் என்பதால் அறியலாம். அப்பர் தம்மைக் கொல்லவந்த யானை, நீற்றறை, கடல், விடம் போன்ற வற்றிலிருந்து மீள்வதற்குத் திருவைந்தெழுத்தையே புணையாகப் பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.[65] திருவைந்தெழுத்தின் விளக்கமே இறைவனின் ஐந்தொழிலாகும் என்பது நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்தாகும்.[66] இறைவனின் ஐந்தொழில் காரணமாக இவ்வுலகின் தோற்றமும், நிலைபேறும், ஒடுக்கமும் நிகழ்கின்றன. ஆதலால் அதனையும் நிலையான பொருள்களும் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

திருவைந்தெழுத்து

''பஞ்சாட்சரம்'' என்று சொல்லப்படுகின்ற திருவைந் தெழுத்து ''நமசிவாய'' என்பதாகும். ''சிவ'' என்பது இறைவனையும் ''ய'' என்பது ஆன்மாவையும், ''நம'' என்பது வணக்கத்தையும் குறிப்பதாகும். ''நமசிவாய'' என்பது திருவைந்

தெழுத்தின் பருவடிவமாகும். ''சிவாயநம'' என்பது திருவைந் தெழுத்தின் நுண்வடிவமாகும். உச்சரிப்பதற்கு நுண்வடிவமே உகந்தது எனக்கூறுவர். ''நமசிவாய'' என்னும் பருவடிவம் இம்மைப்பேற்றையும், ''சிவாயநம'' என்னும் நுண்வடிவம் மறுமைப் பேற்றையும் தருவதற்கு உரியன.

திருவைந்தெழுத்தைப் பற்றிய செய்திகள் கோயிற் புராணத்தில் பல்வேறு நிலைகளில் இடம் பெற்றுள்ளன. சொல்லுகின்ற ஆற்றல் உடையவர்களால் மந்திரங்கள் ஆற்றலைப் பெறுபவை ஆகின்றன. எனவே ஆசிரியரிடம் நேர்முகமாக அறிந்து கொள்ளுகின்ற ஒன்றே ''மந்திரம்'' எனப்படும். திருவைந்தெழுத்து மந்திரத்தை மத்யந்தன முனிவர் புலிக்கால் முனிவருக்கும், புலிக்கால் முனிவர் இரணியவர்மனுக்கும் மந்திரமாக் கூறுகின்ற தன்மையால் உணரலாம்.[67] தவத்திற்குத் திருவைந்தெழுத்துத் துணையாக இருக்கின்ற நிலையைப் புலிக்கால் முனிவரும், பதஞ்சலியும் தொடர்ந்து உச்சரிப்பதனால் அறியலாம்.[68]

அருள்விளக்கம் பெற்று மலபரிபாகம் பெற்ற ஆன்மாக்களும் வாசனாமலம் தாக்குதலால் மாயை வயப்படுதல் உண்டு. பலகாலும் வேப்பமரத்திலிருந்து அதனை தின்று கொண்டிருந்த புழுவை, கரும்பிற் கொண்டுபோய் விட்டாலும் அது வேப்ப மரத்தையே நோக்குவது போன்று வாசனாமலம் தாக்கும் என்று கூறப்பட்டுள்ளது.[69] அவ்வாறு மாயைவயப்படாமல் இருப்பதற்குத் திருவைந்தெழுத்தே உறுதுணையாக இருக்கின்றது என்பது சித்தாந்தம் கூறும் கருத்தாகும்.[70] அத்தகைய நிலையைப் புலிக்கால் முனிவர், பதஞ்சலி முனிவர் வரலாற்றில் ஆசிரியர் காட்டியுள்ள திறம் போற்றுதற்குரியது.

திருவடிப்பேற்றினை அடைவதற்குரிய இடமாகத் தில்லையை மத்தியந்தன முனிவர் குறிப்பிடுவது சிந்திக்கத் தக்கது.[71] ''தில்லை, தரிசிக்க முத்திதரும்'' என்னும் குறிப்பும் ஈண்டு கருத்தில் கொள்ளத்தக்கது.[72] இறைவன் இலிங்கவடிவான அருஉருவத்திலேயே பெரும்பாலான இடங்களில் கோயில் கொண்டுள்ளான். தில்லையம்பதியில் புலிக்கால் முனிவர், பதஞ்சலி முனிவர், தில்லை மூவாயிரவர் ஆகியோர் காணும்

படியாக ஆனந்தநடனத்தைச் சிறப்பாகக் காட்டி அருளினான் என்னுங் குறிப்பு மனங்கொள்ளத்தக்கது.[73] இறைவன் திருவைந் தெழுத்தின் விளக்கமாகவே ஆனந்தக்கூத்தை இயற்றி அருளினான் என்னும் சித்தாந்தக் கருத்து மனதிற் கொள்ளத்தக்கது.

இறைவன் திருவைந்தெழுத்தே திருமேனியாகக் கொண்டு ஆடுகின்றான். அவ்வாறு ஆடுங்கால் ''சிவாயநம'' என்னும் திருவைந்தெழுத்தினைத் திருமேனியாகக் கொண்டுள்ளான் என்னும் குறிப்பு உளங்கொளத்தக்கது.[74] இறைவனுடைய ''கால்கள்'' நகரமாகவும், ''வயிறு'' மகரமாகவும், ''தோள்'' சிகரமாகவும், ''முகம்'' வகர ஆகாரமாகவும், ''திருமுடி'' யகரமாகவும் அமையும் என்பர். இவ்வாறு அமைந்து ஆடுகின்ற ஆட்டத்தை ''ஊன நடனம்'' என்பர்[75]

கையிலுள்ள ''துடி'' சிகரமாகவும், ''வீசுகின்ற திருக்கை'' வகர ஆகாரமாகவும், ''அமைத்த கை'' யகரமாகவும், ''தீ ஏந்திய கை'' நகரமாகவும், ''முயலகனை மிதித்த கால்கள்'' மகாரமாகவும் கொண்டு ஆடுகிறான் எனக் கூறுவர்.[76] இவ்வாறு அமைந்து ஆடுகின்ற நடனம் ''ஞான நடனம்'' ஆகும். திருமேனிக்குப் பின்னுள்ள திருவசி ஓங்கார வடிவில் அமைந்துள்ளது; அது, பிரணவத்தை விட்டு நீங்காத திருவைந்தெழுத்து உள்ளொளி யாகத் திகழ்கிறது. சங்கினுடைய ஒலியைக்கூட ஆசிரியர் பிரணவ ஒலியாகவே குறிப்பிடுகிறார் என்பது கருதத்தக்கது. ஆணவம் அற்றார் ஆடல் காண்பர் எனவும், ஆடல் கண்டார் பிறப்பு அற்றார் எனவும் கூறப்பட்டுள்ள செய்திகள் ஈண்டு நினைக்கத் தக்கவை.[77] திருவைந்தெழுத்து ''ஞானசாதனம்'' என்பதால் திருவைந்தெழுத்தின் விளக்கமாக அமைந்த திருநடனத்தை வீடுபேறு அடைவதற்குரிய சாதனமாகக் கூறியதில் வியப் பொன்றுமில்லை.

இறைவனுக்கு ஐந்தொழில் கூறப்பட்டுள்ளமை ஈண்டு நினைவு கூரத்தக்கது. அதில் ஒன்று ஆக்கம், அதனை உணர்த்தும் வகையில் அவனுடைய கையில் உடுக்கை அமைந்துள்ளது. அவனுடைய அமைத்த கை, இவ்வுலகத்தின் நிலைபேற்றினைக் குறிக்கின்றது. மற்றொரு கையிலுள்ள தீ, மல அழிவைக் குறிக்

கிறது. அவனுடைய ஊன்றிய கால், மறைக்கும் தொழிலைக் குறிக்கிறது.[78] இவ்வாறு ஐந்தொழிலின் விருத்தமாகவும், திருவைந்தெழுத்தின் காட்சியாகவும் உருவகிக்கப்பட்ட நிலையே ஆனந்தக் கூத்தின் உள்ளீடாக அமைந்துள்ள உண்மைப் பொருளாம்.

புலிக்கால் முனிவரும், பதஞ்சலியும் காண இறைவன் ஞான சக்தியை அதிட்டித்து நின்ற திருக்கூத்தை ஆடி அருளினான் என்னுங் குறிப்பு கோயிற்புராணத்தில் காணப்படுகிறது.[79] ஞானசக்தியை அதிட்டித்து ஆடுகின்ற ஆட்டத்தின் இயல்பைக் கூறுங்கால், ஆடுகின்ற அம்பலவாணரை வருணனையோடு கூட, ஐந்தொழிலின் இயல்புகளை ஆசிரியர் கூறியுள்ள திறம் போற்றுதற்குரியது. இறைவன் ஆடிய கூத்தின் இயல்புகளைக் கோயிற்புராணம் பலபடியாக விரித்துரைக்கிறது.[80] ஊன்றிய கால், வீசிய கால், வீசிய கை, அமைத்த கை, துடி, தோள் என்னும் திருவைந்தொழிலுக்குரிய உறுப்புக்கள் உள்ளீடாகச் சுட்டப்பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. புலிக்கால் முனிவரும், பதஞ்சலியும் தாங்கள் கண்ட காட்சியை யாவரும் காணுமாறு இறைவன் ஆனந்தநடனத்தைச் செய்து கொண்டிருக்க வேண்டுமென்னும் வேண்டுகோட்கு இணங்கக் கூத்தப்பெருமான் கூத்தியற்றிக் கொண்டிருப்பதாகக் கூறப்படு கின்ற கருத்தும் உளங்கொள்ளத் தக்கது.[81]

திருவடிப்பேறு

ஞானசாதனம் பெற்றோர் திருவடிப்பேறு எய்துவர். திருவடிப்பேற்றினை நான்கு நிலைகளில் தவம் செய்து அடைய லாம் என்னும் படிநிலைகள் - சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை. அவை பற்றிய கருத்துக்கள் இக்கட்டுரையின் முற்பகுதியில் ஆராயப்பெற்றன. திருவடிப்பேறு அடையும்நிலை இரண்டு வகையாகக் கூறப்பெற்றுள்ளன. ஆன்மா இவ்வுலக வாழ்வில் மேற்கொள்ளுகின்ற முயற்சிகளினால் அருள் வீழ்ச்சி பெற்று மலபரிபாகமுற்று, இருவினையொப்பு அடைந்து இறுதியில் ஆன்மா தனித்துச் சென்று இறைவனுடைய திருவடி களை அடையும் என்பது ஒருவகை.[82] அடியவர் பெருமக்கள் இடையறாது இறைவனைச் சிந்தித்து அவனுடைய நினைவு

என்றும் எப்பொழுதும் தம்மை அகலாத நிலையில் இவ்வுலகில் வாழும் நிலை மற்றொரு நிலையாகும். இதனைச் "சீவன் முத்தி" என்பர்.[83] அடியார்களுடைய வேடப் பொலிவையும், கோயிலையும் காணுங்கால் இறைவனாகவே கருதி, வழிபடும் இயல்பு இவர்களுக்கு உரியதாகச் சிவஞானபோதம் கூறுகிறது[84] இத்தகைய சீவன் முத்தர் நிலையிலேயே புலிக்கால் முனிவர், பதஞ்சலி முனிவர், இரணிய வர்மன், தில்லை மூவாயிரவர் என்போர் வாழ்வதாக ஆசிரியர் கூறிச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.[85]

திருத்தொண்டத் தொகையில் தில்லைவாழ் அந்தணர். திருநீல கண்டக் குயவனார், திருநாளைப்போவார், கூற்றுவ நாயனார், கணம்புல்லர், கோச்செங்கட்சோழன் ஆகியோர் தில்லையம்பதியோடு தொடர்புடைய சீவன் முத்தர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.[86] தேவார மூவர்களும் தில்லையம் பதிக்கு வந்து இறைவனைப் போற்றிப் பரவியுள்ளனர். திருஞான சம்பந்தர் இரண்டு பதிகங்களையும், திருநாவுக்கரசர் எட்டுப் பதிகங்களையும், சுந்தரர் ஒரு பதிகத்தையும் பாடியுள்ளனர். தில்லையில் அவர்கள் கொண்ட ஈடுபாட்டினை அப்பாடல்கள் வாயிலாக அறியலாம்.

மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் கீர்த்தித் திரு அகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திரு அகவல், திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோள் நோக்கம், திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம், கோயில் மூத்த திருப்பதிகம், கண்டபத்து, அச்சப்பத்து, குலாப்பத்து, எண்ணப் பதிகம், யாத்திரைப் பத்து, திருப்படை எழுச்சி, திருப்படை ஆட்சி, ஆனந்தமாலை, அச்சோப்பதிகம் என்னும் பகுதிகளில் குறிப்பாகவோ, விளக்கமாகவோ தில்லையம்பதி இடம் பெற்றிருப்பதைக் காணலாம். திருக்கோவையார் முழுமையும் தில்லையம்பதியை நோக்கியே செய்யப்பெற்றுள்ளது எனலாம்.

தில்லையில் இறைவனை வழிபட்டுத் திருவடிப்பேறு அடைந்த வர்கள் வரிசையில் திருத்தொண்டத்தொகையில் கூறப் பட்டவர்கள் அல்லாமல் மாணிக்கவாசகர், சேக்கிழார், முதல்

வர்குணபாண்டியன், வெள்ளியம்பலவாணர், முத்துத்தாண்டவர், பாம்பன் குமரகுருதாசசுவாமிகள் ஆகியோர் கருதப்படுகின்றனர்.[87]

இலங்கையிலிருந்து பௌத்தர் ஒருவர் கூத்தப்பெருமானைக் கோயிலிலிருந்து அகற்றிவிட வேண்டுமென்னும் நோக்கோடு வந்த காலத்து மாணிக்கவாசகர் அவருடன் வாதிட்டுத் தில்லையம் பெருமானுக்கும் ஊறு நேராவண்ணம் செய்த தன்மை குறிப்பிடத் தக்கது.[88] இவர் தங்கியிருந்த இடமே இப்பொழுது பிச்சாவரம் என வழங்கப்படுகின்றது. இவருடைய தொடர்பு காரணமாகவும், இவர் ஆற்றிய அருஞ்செயல் காரணமாகவும் மார்கழி திருவாதிரை கொண்டாடப்படுகின்ற பத்துநாள் விழாவிலும் மாணிக்கவாசகர் திருமேனியைத் தில்லைக்கூத்தன் முன்பாக நிறுத்தி வழிபாடு செய்கின்ற மரபு போற்றப்பட்டு வருகின்றது.

மணிவாசகர் திருவடிப்பேறு அடைந்த இடமாகத் தில்லை யம்பதி குறிப்பிடப்படுகிறது.[89] எனினும் உமாபதிசிவனாருடைய நூல்களில் யாண்டும் இவர் பற்றிய குறிப்பு இடம் பெறாமை வியப்புக்குரியதாக உள்ளது. உமாபதிசிவனார் இயற்றியுள்ள நூல்களில் கோயிற்புராணம் காலத்தால் மிக முற்பட்ட நிலையில் இயற்றப்பெற்ற நூலாதலால், அதில் மாணிக்கவாசகருடைய நிகழ்ச்சிகள் இடம் பெறாததில் வியப்பொன்றுமில்லை. திருமுறை கண்ட புராணம் நம்பியாண்டார் நம்பிகளையும் அவர் காலத்து மன்னனாகிய இராசராச சோழனையும் பற்றிய செய்தியாக இருத்தலால் மாணிக்கவாசகருடைய நிலையைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பில்லாமல் போயிற்று. சேக்கிழார் புராணத்தில் திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத் தொண்டர் வரலாறு ஆகியனபற்றிப் பேசுங்கால் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்திகளை அடியொற்றியே செய்திகள் அமைந்து விட்டமையால் மாணிக்கவாசகரைப் பற்றிப் பேசுகின்ற வாய்ப்பு ஏற்படவில்லை. இவர் செய்த மற்றைய இலக்கிய நூல்களிலும் மாணிக்கவாசகர் பற்றிய செய்தியை அமைப்பதற்கு அவ்வவற்றின் தலைப்புக்கள் இடந்தரவில்லை எனக் கருதலாம். எனினும் மாணிக்கவாசகர் வரலாற்றை அல்லது

தில்லையம்பதியோடு தொடர்புடைய மாணிக்கவாசகர் வரலாற்றை உமாபதிசிவனார் இயற்றி இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இயல்பானதேயாகும். என்ன காரணத்தால் உமாபதிசிவனார் அதனைச் செய்யவில்லை என்பது ஆராயத் தக்கது ஆகும். மணிவாசகர் தில்லையில் திருவடிப்பேறு அடைந்தவர்களில் இடைக்காலத்தில் குறிப்பிடத்தக்கவர் என்பது மனங்கொளத்தக்கது.

காலத்தால் முற்பட்ட நிலையில் திருமூலர் தம்யோக முடிவில் தில்லையில் திருவடிப்பேறு அடைந்தார் எனக் குறிப்பிடப் படுகின்ற செய்தி உளங்கொளத்தக்கது.[90] பெரும்பாலான தமிழகக் கோயில்களில் சித்தர் ஒருவர் அல்லது பலர் அடக்கமா யுள்ள நிலைமை காணப்படுகின்றது. புள்ளிருக்கு வேளூரில் தன்வந்திரியும், பழநியில் போகரும் அடக்கமான செய்திகள் சித்தர்கள் கோயில்களில் அடக்கமானதற்கு உதாரணமாகலாம். திருமூலர், புலிக்கால் முனிவர், பதஞ்சலியோடு ஆனந்தநடனம் கண்டதாகத் தம் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.[91] உமாபதி சிவனார் நூல்களில் அத்தகைய குறிப்பு ஒன்றும் காணப்பட வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மன்னர்களில் சோழ மன்னர்கள் பலரும், பாண்டியர்கள் சிலரும் தில்லைகூத்தன்பால் பெரிதும் ஈடுபாடு உடையவர்களாக இருந்துள்ளனர். தில்லைப் பெருமான் கோயிலைப் பலமுறை பொன்வேய்ந்துள்ளனர். தில்லைப்பெருமாளுக்குப் பல்வேறு நிவந்தங்களையும் அளித் துள்ளனர். அவர்களெல்லாம் தில்லைப்பெருமான் திருவடியில் ஐக்கியமாவதற்கு முயன்றுள்ளனர் என்னும் செய்தி கருத்தில் கொள்ளத்தக்கது.

சித்தாந்தக் கருத்துக்களை உமாபதிசிவனார் கோட்பாட்டு அளவிலே குறித்துள்ள இடங்கள் பலவாகும். கோட்பாடுகளை நடைமுறைப் படுத்தும் நிலையில் அறிமுகப்படுத்துகின்ற இடங்களும் ஈண்டு எண்ணத்தக்கவை. சித்தாந்தக் கோட் பாடுகளைப் பெற்றுள்ள உறுப்பினர்கள் வாயிலாக வெளிப் படுத்தும் இடங்களும் மனத்தில் கொள்ளத்தக்கவை.

பிற இலக்கியங்களில் சித்தாந்தக் கருத்துக்களைக் காணுதல்

சித்தாந்த நூல்கள் எட்டினைச் செய்த ஆசிரியராக உமாபதி சிவனார் விளங்குகிறார் என்னும் குறிப்பு அவருடைய வரலாற்றில் முன்பு ஆராயப்பெற்றது. சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், திருவுந்தியார், திருக் களிற்றுப்படியார் என்னும் நூல்கள் ஆசிரியருக்குக் காலத்தால் முற்பட்ட சித்தாந்த நூல்களாகும். அவற்றிற்கு விளக்கமாகவும், சில கோட்பாடுகளை அமைத்துக் காட்டுவதாகவும் எட்டு வகை யான நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

சித்தாந்தக் கருத்துக்கள் கோட்பாடுகளாக உருவாகத் தொடங்கிய காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே என்பது மெய்கண்டார் முதலியோருடைய நூல்களால் அறியப் படும் கருத்தாகும். எனினும் தேவாரம், திருவாசகம் போன்ற திருமுறைகளில் சித்தாந்தக் கோட்பாடுகள் உருவாகத் தொடங்கி விட்டன என்பது உமாபதிசிவனாரின் கருத்தாகும். சித்தாந்தக் கோட்பாடுகள் தேவாரங்களில் உருப்பெற்ற நிலைகளை அவர் ஆராய்ந்து பார்த்துள்ளார். தாம் செய்த திருவருட்பயன் நூலில் உள்ள கருத்துக்கள் எவ்வாறு தேவாரப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன என்பதனைத் தொகுத்து அமைத்துள்ளார். அதனால் திருவருட்பயனில் கூறப்பட்ட சித்தாந்தக் கோட்பாடுகள் எளிதில் விளக்கமாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு தொகுக்கப்பட்ட நூலே தேவார அருள்முறைத் திரட்டாகும். இந்நூலின் முதலில் இறைவனின் பழமையை உணர்த்துகின்ற நிலையில் அமைந்த தலைப்பு பதிமுது நிலை என்பதாகும். பதிமுது நிலையில் அமைந்த கருத்துக்களுக்கு விளக்கமாக ஞான சம்பந்தர் தேவாரத்தில் எட்டுப் பாடல்களையும், அப்பர் தேவாரத்தில் ஆறு பாடல்களையும், சுந்தரர் தேவாரத்தில் ஒரு பாடலையும் தொகுத்து விளக்கியுள்ள திறம் போற்றுதற்குரிய தாகும். இவ்வாறே திருவருட்பயனிலுள்ள பத்துத் தலைப்புக் களுக்கும் தேவாரப் பாடல்கள் தொண்ணூற்றொன்பதைத் தொகுத்து அமைத்துள்ளார்.[92]

திருவருட்பயன்	திருஞானசம்பந்தர்	திருநாவுக்கரசர்	சுந்தரர்
1 பதிமுது நிலை (15)	8	6	1
	தோடுடைய	உருவமும்	மாயமாய
	ஏதுக்கள்	அண்டம்	
	வெந்த	பாதம்	
	ஆட்பாலவர்	இருநிலனாய்த்	
	பழுதில	மின்னுருவை	
	தாங்கரும்	விரிகதிர்	
	புவம்வளிகனலி		
	மலைபல வளர்		
2 உயிரவை நிலை (12)		9	3
		கருவாகி	கருவுற்றி
		கரல்கொடுத்து	பந்தித்த
		பொக்கமாய்	கூசநீங்கி
		ஐவகைய	
		வரைகிலேன்	
		கழித்திலேன்	
		மாட்டினேன்	
		பழியுடை	
		குலம்பொல்லேன்	

3 இருண்மல நிலை (6)	1	5
	வெள்ளமெல்லாம்	மெய்ம்மையாம்
		உடம்பெனு
		வானமிதுவெல்லாம்
		ஊனாகி உயிராகி
		விள்ளத்தான்
4 அருளது நிலை (8)	2	6
	நெறிதீர்மையர்	நஞ்சடைந்த
	வேறுயர்	கொள்ளைக்குழை
		மூற்றொருவர்
		வெள்ளநீர்
		சரணமாம்
		இருளாய
5 அருளுரு நிலை (7)		7
		ஏவியிடர்
		வெறியார்
		குலங் கொடுத்து
		நில்லாத
		ஆட்டுவித்தால்
		எல்லியும்
		துஞ்சும்

6 அறியும்நெறி (14)	4 பத்திப்பேர் அகனமர் மேனியில் துஞ்சவருவாரும்	9 செஞ்சுடர் உன்மக்தகமலர் புள்ளுவர் உயிராவணம் அருந்துணையை புலன்களை பொறிபுலன் கள்ளனேன்	1 நிலையார்ய்	
7 உயிர்விளக்கம் (12)	2 எம்பிரான் வன்னாக	6 முன்னம் துன்னாகத்தேன் என்னதெழில் ஈசன் ஊனினுள் யாதே	4 நிலனொடுவானும் ஒப்பாயின் கார்க்குன்றம் ஆக்குமழிவும்	
8 இன்புறு நிலை (5)	1 அறிவிலார்தவன்	3 அளைவாயில் உருகுமனத்து உறுகயிறு	1 மானவயுரித்து	

9	அஞ்செழுத்தருணிலை (4)		4	
			வீண்ணினார்	
			கருவாய்	
			வைத்தபொருள்	
			ஏதுமொன்று	
10	அணைந்தோர் தன்மை (16)	5	9	2
		அடையலார்புரம்	நிலைபெறுமா	மறிசேர்
		நறைமலிதரும்	தெள்ளத்தேறி	இங்ஙனம்வந்து
		சினமலியறுபகை	உன்னுருவில்	
		சுருதிகள்பல	நாமார்க்கும்	
		கடலினஞ்சமும்	வெம்பவரு	
			எடுத்தவெல்	
			விடையான்	
			எவரேனும்	
			கருவனே	

சித்தாந்தக் கருத்துக்களுக்கு விளக்கமாகச் சித்தாந்த உரையாசிரியர்கள் சில எடுத்துக்காட்டுக்களை இலக்கிய நூல்களிலிருந்து எடுத்துக்காட்டியுள்ளனர். உமாபதிசிவனார் தாம் செய்த திருவருட்பயன் முழுமைக்கும் தேவாரங்களிலிருந்து எடுத்துக் காட்டுகளைத் திரட்டித்தொகுத்து அவற்றைத் தனியொரு நூலாக அமைத்துள்ள திறம் போற்றுதற்குரியது. எனவே ''தேவார அருள்முறைத் திரட்டு'' உமாபதிசிவனாரின் தனித்தன்மையை விளக்கும் ஒரு நூலாகும் எனக் கருதலாம். இத்தகைய முறையில் இவர்க்கு முன்னரும் பின்னரும் யாரும் நூல்களைச் செய்துள்ளனர் என்று கருத இயலவில்லை.

ஆய்வு முடிவுகள்

உலகிற்கு நிமித்தகாரணமாக இறைவன் குறிப்பிடப் படுகின்றான்.

உலகம் தோன்றுதற்கு இச்சை, ஞான சக்திகளைத் துணைக் காரணமாகக் கொள்ளுகிறான் என்பது குறிப்பிடத்தக்கது.

மாயை இவ்வுலகத் தோற்றத்திற்கு முதற் காரணமாக விளங்குகிறது என்பதும், அது மூன்று தன்மையால் விரிந்து உலகப் பொருள்கள் தோன்றுவதற்குக் காரணமாக விளங்குகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அறிவு வடிவாய் இருக்கின்ற இறைவன், தத்துவ உலகத்தைத் தோற்றுவிப்பதற்குப் படிப்படியே மேற்கொள்ளப்படுகின்ற நிலைகளைச் சிவதத்துவம் என்பர்.

மண் முதலாக இருபத்து நான்கு தத்துவங்கள் ஆன்மா என்னும் புவன தத்துவமெனக் கூறப்பட்டுள்ளன. இடைப்பட்ட நிலையில் அறிவு முதலியவை செயல்கொள்ளுவதற்கு வித்தை முதலிய ஏழு தத்துவங்கள் வித்யா தத்துவங்களாக விரிந்துள்ளன.

கேவலநிலையிலுள்ள ஆன்மாக்கள் உய்தி பெறுதற்காக இறைவன் தனு, கரண, புவன, போகங்களைத் தந்து உதவுகின்றான்.

ஆன்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும்; மூன்று வகை ஆன்மாக்களுக்கும் மூன்று

வகையான நிலைகளில் இறைவன் அருள்செய்கிறான் என்பது சித்தாந்த நூல் துணிபாகும்.

சகலர் என்பவர் மூவகை மலங்களையும் பெற்ற தன்மையினர்; அவர்களுக்கு அருள் செய்யுங்கால் இறைவன் குருவடிவில் வந்து அருள் செய்கின்றான் என்பது குறிப்பிடத்தக்கது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நிலைகளும் தவநிலைகளாகச் சுட்டப்பட்டுள்ளன. அவற்றுள் முதல் மூன்றும் ஞானத்தை அடைவதற்குக் காரணமாக அமைகின்றன.

உமாபதிசிவனார் வாய்ப்பு நேரும் இடங்களிலெல்லாம் சித்தாந்தக் கருத்துக்களைத் தாம் இயற்றிய இலக்கிய நூலில் அமைத்துச் சென்றுள்ளார்.

காலத்தால் முற்பட்ட நூலாகிய கோயிற்புராணம், தில்லையில் முத்தி பெற்ற முன்னோர்களை முதன்மையிட்டுப் பாடியிருப்பினும் அந்நூலில் சித்தாந்தக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.

சித்தாந்தக் கருத்துக்களைச் சேர்த்தமையால், புராண நூல்-பழங்கதை நூல் என்று சொல்ல முடியாத அளவிற்குக் ''கோயிற் புராணம்'' ஆக்கம் பெற்றுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.

சரியை நிலையில் நின்று பேறுபெற்றவராகப் புலிக்கால் முனிவரை அமைத்துள்ள நிலை குறிப்பிடத்தக்கது.

யோக நிலைக்குப் பதஞ்சலி முனிவரை உதாரணமாக அமைத்துள்ள திறம் கருதத்தக்கது.

கருவி கரணங்கள் மாயையை முதற் காரணமாகக்கொண்டு செய்யப் பெற்றுள்ளமையால், மயக்கத்தைத்தரும் இயல்பு ஆன்மாவின் இயற்கையாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

சித்தாந்தக் கருத்துக்கள் சிலவற்றைக் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். ஆன்மா ஐந்தவத்தைப் படுவது இயல்பாகும் என்பது அவ்வாறு புலப்படுத்தப்பட்ட கருத்துகள் ஒன்றாகும்.

பதி, பசு, பாசம், திருவைந்தெழுத்து, ஐந்தொழில், திருநீறு என்பவை என்றும் நிலைத்த பொருள்களாக ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.

ஞானசாதனமாகிய திருவைந்தெழுத்தை உபதேசிக்கின்ற நிலையை நிகழ்ச்சிகளில் அமைத்துக் காட்டியுள்ளார்.

தில்லையில் திருவடிப்பேறு அடைந்தவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

மணிவாசகர் தில்லைக்கோயிலில் பெரும் பங்கு ஆற்றியிருந்தும், அவர் பற்றிய வரலாறு உமாபதிசிவனாரால் எழுதப் பெறாமைக்குரிய காரணம் ஆராய்வதற்குரியது.

திருவருட்பயனுக்கு விளக்கமாக அமைந்த தேவார அருள் முறைத்திரட்டு நூல் முறை உமாபதிசிவனாரின் அறிவுக் கொடையாக விளங்குகின்றது என்பது கருத்தில் கொள்ளத் தக்கது.

அடிக்குறிப்புகள்

1. மெய்கண்டார், **சிவ. போதம்,** சூ: 1.
2. உமாபதிசிவம், **திருவருட்பயன்,** பா. 1.
3. சிவஞானமுனிவர், 'தழுவக்குழைந்த படலம்; **காஞ்சி.,** பா. 59
4. பவணந்தியார், **நன்னூல்,** நூ. 320.
5. உமாபதிசிவம், "பதஞ்ச.", கோயிற்., பா. 64.
6. அருணந்திசிவம், சிவ. சித்தி., சுபக்கம், பா. 164.
7. மனவாசகங்கடந்தார், **உண்மை விளக்கம்,** பாக். 20, 21.
8. உமாபதிசிவம், "இரணிய", கோயிற். பா. 2.
9. மேலது, பா. 1.
10. மெய்கண்டார், சிவ. போதம், சூ: 1, உதாரணப்பா. 2.
11. உமாபதிசிவம், "பதஞ்ச", கோயிற். பா 80.
12. அருணந்திசிவம், சிவ. சித்தி., சுபக்கம், பா. 37.
13. மேலது, பா. 151.
14. மேலது, பா. 152.
15. மனவாசகங்கடந்தார், **உண்மை விளக்கம்,** பாக். 18, 19.

16. உமாபதிசிவம், "இரணிய", கோயிற்., பா. 3.
17. அருணந்திசிவம், சிவ. சித்தி, சுபக்கம், பா. 211.
18. உமாபதிசிவம், "இரணிய", கோயிற். பா. 2.
19. மேலது, பா. 3.
20. மெய்கண்டார், சிவ. போதம், சூ. 8, அதிகரணம் 2; வெண்பா. 3.
21. உமாபதிசிவம், "பதஞ்ச", கோயிற். பா. 65 உரை.
22. உமாபதிசிவம், திருவரு., பா. 23.
23. மெய்கண்டார், சிவ. போதம், சூ: 8.
24. திருமூலர், **திருமந்திரம்**, பா. 117.
25. உமாபதிசிவம், "இரணிய" கோயிற்., பா. 79.
26. ப. அருணாசலம், **சைவசமயம்**, ப. 50.

26அ. பொன். சுப்பிரமணியபிள்ளை, **கந்தபுராண நவநிதியம்**, பக். 14-16.

27. உமாபதிசிவம், "இரணிய", கோயிற்., பா. 62.
28. மேலது, பா. 54
29. மேலது, பா. 62.
30. கு. திருஞானசம்பந்தசாமி, **சித்தாந்த சைவ வினாவிடை**, ப. 146.
31. உமாபதிசிவம், "திருவிழா.", கோயிற். ப. 19.
32. சிவஞான முனிவர், "தழுவக்குழைந்தபடலம்", காஞ்சி, பா. 53.
33. உமாபதிசிவம், "இரணிய", கோயிற்., பா. 5.
34. சேக்கிழார், திருநாவுக்கரசுநாயனார் புராணம்" பெரிய., பா. 427.
35. உமாபதிசிவம், "வியாக்ர", கோயிற்., பா. 21.
36. சேக்கிழார், "திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம்" பெரிய., பா. 1249.
37. உமாபதிசிவம், சேக்கிழார். புராணம், பா. 44.
38. சேக்கிழார், "வெள்ளானைச் சருக்கம்", பெரிய. பா. 43.
39. உமாபதிசிவம், "பதஞ்ச." கோயிற்., பா. 52.
40. ப. அருணாசலம், **சைவசமயம்**, பக். 126-27.
41. உமாபதிசிவம், சேக்கிழார். புராணம், பா. 100.
42. திருக்குறள், பா. 27.

43. உமாபதிசிவம், ''பதஞ்ச.'', கோயிற்., பா. 70.
44. உமாபதிசிவம், ''இரணிய.'', கோயிற்., பா. 85.
45. மெய்கண்டார், சிவ. போதம், சூ. 4.
46. உமாபதிசிவம், ''வியாக்ர'', கோயிற்., பா. 29.
47. மேலது.
48. தொல். சொல்., கிளவியாக்கம், நூ. 34.
திருக்குறள், பா. 331.
49. உமாபதிசிவம், ''இரணிய'', கோயிற். பா. 105.
50. உமாபதிசிவம் ''பதஞ்ச.'', கோயிற்., பா. 10-33.
51. உமாபதிசிவம், **தேவார அருள்முறைத் திரட்டு,** பா. 12.
52. உமாபதிசிவம், ''இரணிய.'', கோயிற். பாக். 12-15.
53. உமாபதிசிவம், சேக்கிழார். புராணம், பா. 21.
54. மெய்கண்டார், சிவ. போதம், சூ. 9.
55. சேக்கிழார், ''திருக்கூட்டச்சிறப்பு'', பெரிய., பா. 8.
56. உமாபதிசிவம், ''பதஞ்ச'', கோயிற்., பாக். 51-52.
57. உமாபதிசிவம், ''வியாக்ர'' கோயிற்., பா. 21.
58. மேலது, பா. 25.
59. உமாபதிசிவம், ''திருவிழா.'' கோயிற்., பா. 11.
60. உமாபதிசிவம், ''இரணிய.'', கோயிற். பாக். 30-32.
61. சிவ. பிருந்தாதேவி, **இந்துமதம்,** ப. 40.
62. உமாபதிசிவம், ''பாயிரம்'', கோயிற்., பா. 20.
63. ஞானசம்பந்தர், தேவா., 2: 66: 1.
64. சேக்கிழார், மெய்ப்பொருள் நாயனார் புராணம்'', பெரிய. பா. 15.
65. நாவுக்கரசர், தேவா. 4: 11: 104.
66. மனவாசகங்கடந்தார், **உண்மை விளக்கம்,** பா. 35.
67. உமாபதிசிவம், ''வியாக்ர'', கோயிற். பா. 2.
68. உமாபதிசிவம், ''நடராசர்'', கோயிற்., பா. 1.
69. மெய்கண்டார், சிவ. போதம், சூ. 9.
70. மேலது
71. உமாபதிசிவம், ''வியாக்ர'' கோயிற். பா. 8.
72. உமாபதிசிவம், ''இரணிய'' கோயிற்., பா. 67.
73. உமாபதிசிவம், ''நடராச''. கோயிற்., பாக். 17, 18, 45.

74. மனவாசகங்கடந்தார், **உண்மை விளக்கம்,** பாக். 32, 34.
75. மேலது.
76. மேலது, பா. 33.
77. உமாபதிசிவம், "நடராச.", கோயிற்., பா. 4,
78. மு. அருணாசலம், **இந்து சமயம்,** பா. 53.
79. உமாபதிசிவம், "நடராச", கோயிற்., பா. 10.
80. உமாபதிசிவம், "வியாக்ர", கோயிற்., பாக். 11 - 17.
81. மேலது
82. ப. அருணாசலம், **சைவசமயம் ஓர் அறிமுகம்,** பக். 135 - 137.
83. கு. திருஞானசம்பந்தசாமி, **சித்தாந்த சைவ வினாவிடை,** ப. 164.
84. மெய்கண்டார், சிவ. போதம், சூ. 12.
85. உமாபதிசிவம், "நடராச.", கோயிற்., பா. 70.
86. கோ. மு. முத்துசாமிப் பிள்ளை, **தில்லைச்சிற்றம்பலவனார் திருக்கோயில்,** பக். 9 - 12.
87. க. வெள்ளைவாரணன், **தில்லைப் பெருங்கோயில் வரலாறு,** பக். 58–83.
88. க. வெள்ளைவாரணன், **பன்னிரு திருமுறை வரலாறு-** இரண்டாம் தொகுதி, பக். 93-94.
89. மேலது, பக். 97 - 98.
90. க. வெள்ளைவாரணன், **தில்லைப் பெருங்கோயில் வரலாறு,** பக். 54 - 57.
91. க. வெள்ளைவாரணன், **பன்னிருதிருமுறை வரலாறு-** இரண்டாம் தொகுதி, பக். 528.
92. காண்க: அட்டவணை எண். 4.

திருத்தொண்டர்புராண சாரம் - ஒப்பீடு

ஒன்றோடு மற்றொன்றை ஒப்பீடு செய்து ஒற்றுமை வேற்றுமைகளைக் காண்பது மக்களின் இயல்பாகும். உவமை அணி இவ்வகையில் தோன்றிய செய்யுள் நலமாகும் என்பது ''ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை''[1] என்ற தொடரால் அறியலாம். மொழிகளிற் காணப்படுகின்ற ஒற்றுமைக் கூறுகளை ஆராய்ந்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தைக் கால்டுவெல் செய்துள்ளார். அதுபோலவே ஒருமொழி இலக்கியங்களை ஒப்பிட்டுக் காண்பதும், ஒரு மொழியிலுள்ள இலக்கியங்களைப் பிற மொழிகளிலுள்ள இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காண்பதும் என்ற நிலையில் ஒப்பீட்டு ஆராய்ச்சி இன்று வளர்ந்துள்ளது. ஒரு சமய இலக்கியத்தோடு மற்றொரு சமய இலக்கியத்தை ஒப்பிட்டுக் காணும் போக்கும் வளர்ந்துள்ளது. திருப்பாவையையும், திருவெம்பாவையையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற இயல்பு பண்டைய உரையாசிரியர்களிடத்திலேயே காணப்படுகின்றது. ''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின், என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட் கொண்டருளி''[2] என்னும் திருவாசகப் பகுதியில் அன்பை ஒப்பிட்டுக் கண்டுள்ள நிலை ஈண்டு எண்ணத் தக்கது. தமிழ் இலக்கண அமைப்போடு வடமொழி இலக்கண அமைப்பை ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து சிவஞான முனிவர் பல கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.[3] பண்டுதொட்டு இருந்து வருகின்ற ஒப்பீட்டு ஆராய்ச்சி இன்று வளர்ந்து வந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை.

உமாபதிசிவனார் பல்வேறு தத்துவ நூல்களை ஆராய்ந்து அயல் சமயக் கொள்கைகளுக்கு மறுப்புக் கூறியுள்ள நூல் ''சங்கற்ப நிராகரணம்'' என்னும் நூல் என்பது முன்னர் ஆராயப்பட்டது. உமாபதிசிவனாரின் நூல்களில் திருத்தொண்டர் புராண சாரம் முந்து நூல்களின் விரிவாகவும், சுருக்கமாகவும் இயற்றப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

''முதல் வழி சார்பென நூல் மூன்றாகும்'' என்னும் இலக்கண வகைப்பாட்டிற்கு ஏற்ப அமைந்த இலக்கண நூல்களும் இலக்கிய

நூல்களும் தமிழில் வழிவழியாகத் தோன்றியுள்ளன. சுந்தரரால் பாடப்பெற்ற திருத்தொண்டத்தொகைக்கு நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி சற்று விளக்கமாக அமைந்த நூலாகும். இவ்விரு நூல்களையும் அடியொற்றி, சேக்கிழார் செய்த திருத்தொண்டர் புராணம் மிக விளக்கமாக அமைந்த நூலாகும். திருத்தொண்டர் புராணத்தை அடியொற்றி உமாபதியார் செய்த ''திருத்தொண்டர் புராணசாரம்'' முதல்-வழி-சார்பு என்ற மூன்று நிலைக்குமேல் வளர்ந்துள்ள வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கதாகும். திருத்தொண்டர் புராணத்தை விரிவாகக் கற்க இயலாதவர்கள் அதன் சுருங்கிய வடிவமாகிய திருத்தொண்டர் புராண சாரத்தைக் கற்றால்போதும் என்னும் அளவிற்குத் திருத்தொண்டர் புராணத்தின் பிழிவாக இஃது இயற்றப்பட்டுள்ளது. பிற்காலத்தில் சிவஞானமுனிவர் ''திருத் தொண்டர் திருநாமக்கோவை'' என்னும் பெயரால் மேற்சுட்டிய நூல்களை அடியொற்றி நூல் ஒன்றும் செய்துள்ளார் என்பது ஈண்டு நினைக்கத் தகுவதாகும்.

திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் இருநூல்களும் முதலில் ஒப்பிடத்தக்கவை. அதன்பின் திருத்தொண்டர் புராணமும் திருத்தொண்டர் புராண சாரமும் ஒப்பிடப்பெற்றுத் திருத்தொண்டர் பற்றிய நூல் வரிசைகள் வளர்நிலை பெற்றுள்ள போக்கு ஆராயத்தக்கது.

திருத்தொண்டத் தொகையில் அடியார்களின் பெயர்களை மட்டுமே அறிமுகப்படுத்திய நிலை ஒன்று. அடியார்களுடைய பெயரோடு ஊர்ப்பெயரையும் சேர்த்து அறிமுகப்படுத்திய நிலை இரண்டாவது நிலையாகும். அடியார் பெயர், அவர்தம் தொண்டு ஆகியவற்றை இணைத்து அறிமுகப்படுத்திய நிலை மூன்றாவது நிலையாகும். குலத்தோடு சேர்த்து அறிமுகப்படுத்தியிருப்பது நான்காம் நிலையாகும். பேறு பெற்ற ஊருடன் பெயர் காணப் படும் நிலை ஐந்தாவதாகும். பெயருடன் ஊரும் குலமும் தெரிந்த அடியார் இறுதியான ஆறாவது நிலையாகும்.

ஊர்ப்பெயர் இல்லாமல் அறிமுகப்படுத்தப்பட்ட அடியார் களின் ஊர்களை ஆராய்ந்து நம்பியாண்டார் நம்பிகள்

அவ்வடியார்களின் ஊர்களைக் குறித்துச் சென்றுள்ளார். அடியார்களின் தொண்டு நிலை விளக்கப்படாத திருத்தொண்டத் தொகை அறிமுகத்தினின்றும், அவர்தம் தொண்டு சுருங்க வெளிப்படுத்திய நிலை நம்பியாண்டார் நம்பிகளின் அரிய முயற்சியால் நேர்ந்ததாகும். திருத்தொண்டர் திருவந்தாதியி னின்றும் சேக்கிழார் காட்டிய வளர்நிலையும் உமாபதிசிவனாரின் பிழிந்தெடுத்த சாரமும் ஒப்பிட்டு நினைக்கத் தக்கவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெயர் நிலையில் அறிந்த அடியார்கள்

அமர்நீதியார், எறிபத்தர், ஏனாதிநாதர், கண்ணப்பர், அரிவாட்டாயர், முருகர், உருத்திரபசுபதியார், திருநாளைப் போவார், திருக்குறிப்புத்தொண்டர், குலச்சிறையார், பேயார், அப்பூதியடிகள், நமிநந்தியார், ஏயர்கோன் கலிக்காமர், திருமூலர், தண்டியடிகள், மூர்க்கர், நரசிங்க முனையரைசர், கலியர், காரியார், இடங்கழியார், மங்கையர்க்கரசியார், நேசனார், சடையனார், இசைஞானியார் எனப் பெயரளவில் அறிமுகமான அடியார்கள் இருபத்தைந்துபேர் திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றுள்ளனர். தொகையடியார்களிலும் பத்தராய்ப் பணிவார்கள், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பால் வைத்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறுபூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார், பொய்யடிமை இல்லாப் புலவர் என எழுவர் ஊர்ப்பெயர் இல்லாமல் அவரவர் சிறப்புப் பண்போடு திருத்தொண்டத் தொகையில் சுட்டப்பெற்றுள்ளனர். தொகையடியார்களில் தில்லைவாழ் அந்தணர், திருவாரூர்ப் பிறந்தார் என இருசாரார் மட்டுமே ஊர்ப்பெயருடன் இணைந்து காணப்படுகின்றனர்.

1. அமர்நீதியார்

அமர்நீதியார் திருத்தொண்டர் திருவந்தாதியில் (7) பழை யாரை மாநகரத்தைச் சேர்ந்த நல்லூரினர் என்பது முதன் முதல் இடம் பெற்றுள்ள செய்தியாகும். அமர்நீதியார் அடியார்க்குச் செய்த தொண்டும், இறைவனுடைய கோவணத்திற்கு நிகராகத் தன் செல்வத்தையும் மனையாளையும் தன்னையும் இறைவன்

பால் ஈந்தவர் என்னும் குறிப்பும் திருவந்தாதியில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருத்தொண்டர் புராணம் அமர்நீதியார் செய்த தொண்டினை விளக்கமாகக் கூறுவதோடு இறைவன் செய்த செயல்களை நாடகப் பாங்கில் விரித்துரைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.[4] அமர்நீதி நாயனார் புராணம் 49 பாடல் களால் சேக்கிழாரால் விரிவாகச் செய்யப்பட்டுள்ளது என்பது எண்ணத்தகுவதாகும்.

பழையாறையில் வணிகர் குலத்தில் வந்தவர் அமர்நீதியார். இறைவன் சிறு முனிவடிவாய் வந்தார் என்பதும், தராசில் பொன், பொருள், மனைவி, பிள்ளை, தாம் என எல்லோரும் ஏறிய நிகழ்ச்சியையும் திருத்தொண்டர் புராணசாரம் புலப் படுத்துகின்றது.[5] அந்தாதியைக் காட்டிலும் வணிகர் மரபினர் என்ற செய்தியும் இளங்குழந்தையையும் தராசில் ஏற்றிய நிகழ்ச்சியும் புராண சாரத்தில் காணப்படும் மிகுதியான செய்தி களாகும். இச்செய்திகளுக்கு மூலமாகத் திருத்தொண்டர் புராணம் விளங்குகிறது. எனினும், ஒரே பாடலில் செய்திகள் முழுமையும் வாங்கிக் கொடுக்கின்ற உமாபதிசிவனாரின் இயல்பு நினைக்கத் தகுவதாகும்.

2. எறிபத்தர்

எறிபத்தரை "இலை மலிந்த வேல்நம்பி"[6] என அடை கொடுத்துத் திருத்தொண்டத்தொகை குறிப்பிடுகின்றது. இத் தொடரில் எறிபத்தர் வேலுடையவர் என்னும் குறிப்பு மட்டுமே காணப்படுகின்றது. இவர் கருவூரைச் சேர்ந்தவர் என்றும், நாள்தோறும் இறைவனுக்கு மலரெடுத்துச் சாத்தும் உயர்ந்த தவமுடைய ஒருவர்க்காக யானையையும் யானைப் பாகரையும் உடல் துண்டாகுமாறு வெட்டி வீழ்த்தினார் என்னும் குறிப்புப் படவும் திருவந்தாதி எறிபத்தரின் வரலாற்றைக் குறிப் பிட்டுள்ளது.[7]

எறிபத்த நாயனாரின் வரலாற்றில் குறிப்பிடப்பட்ட உயர் தவத்தார் 'சிவகாமி ஆண்டார்' என்னும் பெயரினர் என்பது

பெரியபுராணத்தால் விளங்குகிறது. கருவூர் ஆனிலை என்னும் கோயிலுக்கு மலர் பறித்துக் கொடுக்கும் வழக்கம் உடையவர் அவர் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது. இச்செய்தியைக் கேள்வியுற்ற மன்னன் தம்மையும் வெட்டுமாறு கூறிப் படையை எறிபத்தர் கையில் கொடுத்தார். அதனை வாங்கிய எறிபத்தர் தம்மையே அரிந்து கொள்ள முற்பட்டார் என்னும் செய்தி எறிபத்தர் வரலாற்றை முழுமையாக்கியுள்ளது. யானைப்பாகர் இறைவனருளால் உயிர் பெற்று எழுந்து கணநாதர் ஆகும் பேறு பெற்றார் என்னும் செய்திகள் புராணசாரத்தில் திருத்தொண்டர் புராணத்தை அடியொற்றிக் கூறப்பெற்றுள்ளன என்பது கருத்திற் கொள்ளத்தக்கது.[8]

3. ஏனாதிநாதர்

ஏனாதிநாதனார் எயினை என்னும் ஊரினர் என்பதும் தம்முடைய பகைவரோடு வாட்போரில் ஈடுபட்டிருக்குங்கால் அவருடைய நெற்றியில் திருநீறுகண்டு வாள்வீச்சினை நிறுத்திப் போர் செய்வது போல நின்று உயிர் நீத்தார் என்பதும் இவர் ஈழக்குலத்தில் தோன்றியவர் என்னும் செய்தியும் திருவந்தாதியில் காணப்படுகின்றன.[9]

ஈழக்குலத்தில் உதித்து எயினனூரில் வாழ்ந்த ஏனாதி நாதனார் திருநீற்றையே இறைவனாகக் கண்டு தொழும் வழக்க முடையவர். இவருடைய பகைவனாகிய அதிசூரன் போரில் தோற்று மீண்டும் இவருடன் போரிட வருங்கால் திருநீறு இட்டிருக்கக் கண்டு தம் கையிலுள்ள படையைப் போர் செய்வது போல் பாவனை செய்து யாக்கை விடுத்துச் சிவனருள் மேவினார் என்னும் செய்திகள் புராண சாரத்தில் காணப்படுகின்றன.[10] ஏனாதிநாதரின் பகைவன் பெயர் அதிசூரன் என்பது அந்தாதியைக் காட்டிலும் கூடுதலான செய்தியாகும். ''எயினனூர்'' என்பதை ''எயினை'' என அந்தாதி ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

4. கண்ணப்பர்

''கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கும் அடியேன்''[11] எனத் திருத்தொண்டத்தொகை கண்ணப்பரைக் குறிப்பிடுகின்றது.

கண்ணப்பர் படிப்பறிவேயில்லாத வேட்டுவர் குலத்தில் தோன்றியவர் எனினும் ''கலை மலிந்த'' என்னும் அடையினைத் திருத்தொண்டத்தொகை கொடுத்துள்ளமை நினைக்கத் தக்கதாகும்.

கண்ணப்பருக்கு ஊர் திருக்காளத்தி என்பதாகும். காளத்தியப்பருடைய நெற்றிக் கண்ணில் குருதி கண்டு உள் நடுங்கினார் கண்ணப்பர்; கையிலுள்ள அம்பினால் கண்ணை இடந்து அப்பினார். வேட்டுவர் குலத்தில் பிறந்தவர் என்னும் குறிப்புக்கள் நம்பியாண்டார் நம்பிகளால் ஆராய்ந்து தொகுக்கப்பட்டுள்ள செய்திகளாகும்.[12]

வேட்டுவத் தலைவன் நாகன் என்பவன் உடுப்பூர் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். அவன் பிள்ளை திண்ணனார் என்னும் பெயருடையவர். முதன்முதல் வேட்டைக்குச் சென்றார். காளத்தியார் கோயிலைக் கண்டவுடன் வாயில் மஞ்சனமும், தலையில் சூடிச் சென்ற மலரும், காய்ச்சி மென்ற தசையும் காளத்தியாருக்கு நிவேதித்து ஆறு நாட்கள் வழிபாடு செய்தார். இதனைக் கண்டு கோபமுற்ற சிவகோசரியார் தெளிவடைவதற்காகக், காளத்தியார் கண்ணில் புண்ணீர் காட்ட, ஒருகண் இடந்து அப்பினார், மற்றொரு கண்ணிலும் புண்ணீர் வரத் தனது மற்றொரு கண்ணையும் தோண்ட முற்படுங்கால் இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பெற்றதோடு அருகில் இருக்குமாறு செய்யப் பெற்றதாகப் புராணசாரம் குறிப்பிடுகின்றது. உடுப்பூரில் கன்னி வேட்டைக்குச் செல்லுங்கால் வேடர்கள் பின்பற்றுகின்ற மரபும், பன்றியைத் துரத்திச் சென்ற நிலையும், நாணன் காடன் என்னும் இரு தோழர்களுடன் சென்றார் என்பதும் பெரியபுராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாள் நிகழ்ச்சியையும் கண்முன் காட்டுமாறு சேக்கிழார் விரிவாகக் கூறியுள்ளார். பொன்முகலி ஆற்றின் பின்னணி நன்கு தோன்றுமாறு எடுத்து இயம்பியுள்ளார்.[13] இச்செய்திகளை வாங்கிச் சுருக்கமாக ஒரு பாடலில் புராணசார ஆசிரியர் குறித்துச் சென்றுள்ளமை கருதத்தக்கது.[14]

5. அரிவாட்டாயர்

''எஞ்சாத வாட்டாயன்''[15] எனத் திருத்தொண்டத்தொகை அரிவாட்டாயரைக் குறிப்பிடுகின்றது. அரிவாட்டாயர் கண்

மங்கலம் என்னும் ஊரினார். இறைவனுக்கு நாள் தோறும் உணவு கொண்டு செல்பவர். ஒருநாள் உணவு கீழே வயலில் சிந்திவிட, இறைவன் அமுது செய்யவில்லையேல் தன் தலையை வாளினால் வெட்டிக் கொள்வேன் என வெட்டிக் கொள்ள முற்பட்டவர்[16] என்னும் செய்திகள் அந்தாதியில் காணப் படுகின்றன.

கண்மங்கலத்தில் வேளாண்மைத் தொழில் செய்து நல்ல நெல்லை விளைவிக்கும் இயல்புடையவர் வாட்டாயர். இறை வனுக்காகவே செந்நெல்லை உணவாக்கி வடுமாங்காயுடன் கீரை வகைகளையும் ஆக்கி, ஆன் ஐந்துடன் கொண்டு வந்தார். அவை ஒரு நிலப் பிளப்பில் சிந்திப்போயின. அதனால் வருந்திய வாட்டாயர் தம் கழுத்தை அரிந்து கொள்ள முற்பட்டார். அப் பொழுது மாவடுவினைத் தின்னும் ஒலியும், இறைவன் கரமும் தோன்றி அவர் செயலை விலக்க, தேவர்கள் எல்லாம் தொழத் தக்கவராக ஆயினார் என்னும் செய்தி புராணசாரத்தில் காணப் படுகின்றது.[17] பெரியபுராணத்தில் அடியாருடைய செயல் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளதுடன் உணவு சிந்திய நிகழ்ச்சி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. படிப்படியே அரிவாட்டாயருடைய உணர்ச்சி நலங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. வளமான வாழ்வு சென்றுவிட கூலிக்கு நெல் அறுத்து இறைவனுக்கு நிவேதிக்கும் இயல்பும், அவருடன் தொண்டு செய்த மனைவியார் இயல்பும் கூறப்பட்டுள்ளன என்பது நினைக்கத்தக்கதாகும்.

6. முருகநாயனார்

முருக நாயனார் பற்றிய பெயர் ஒன்று மட்டுமே திருத் தொண்டத்தொகையில் உருத்திர பசுபதியாருடன் இணைந்து காணப்படுகின்றது.[18]

இறைவனைப் பற்றிய பாடல்களைப் பாடுவதும், திருவைந் தெழுத்தை ஓதுவதும் முருகனாரின் இயல்பாகும். நாள்தோறும் உச்சிக் காலத்திற்கு மலரெடுத்துத் தொடுத்து இறைவனுக்குச் சாத்தி மகிழ்வார். ஞானசம்பந்தருக்குத் தோழராக அமைந் தவர். திருப்புகலூர் என்னும் ஊரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். திருப்புகலூரைக் குறிப்பிடுங்கால் அந்தாதி

ஆசிரியர், ''அம்பொன் அதிகம்பெறும் புகலூர்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.[19] இச்செய்தி சுந்தரர் வரலாற்றில் காணப்படும் செய்தியாகும். செங்கற்கள் பொன்கற்களான வியத்தகு நிகழ்ச்சி திருப்புகலூரில் நிகழ்ந்ததாகும்.

முருகனார் கோவர்த்த மானீச்சரத்தார் என்பது புராண சாரம் தரும் புதிய செய்தியாகும். தம் நண்பராகிய ஞான சம்பந்தரின் திருமணத்தைக் காணும் அவாவினால் நல்லூர்ப் பெருமணத்தைச் சென்றடைந்தார். திருமணவிழாவில் கலந்து கொண்ட அனைவரும் இறைவனடி சேருங்கால் இவரும் இறைவனடி சேர்ந்தார் என்னும் செய்திகள் புராணசாரத்தில் காணப்படுகின்றன.[20] ஞானசம்பந்தரின் திருமணத்தைக்காண முருகனார் சென்ற செய்தியைச் சேக்கிழார் ஆராய்ந்து கண்டு கூறியுள்ளார் எனலாம்.

7. உருத்திரபசுபதியார்

''உருத்திர பசுபதிக்கும் அடியேன்''[21] எனத் திருத்தொண்டத் தொகை இவரைக் குறிப்பிடுகின்றது. அவருடைய ஊர் திருத்தலையூர் என்பதை அந்தாதி சுட்டிக் காட்டுகின்றது.[22] எப்பொழுதும் நீரில் நின்று நீங்காத விருப்பத்தோடு உருத்திர மந்திரத்தைச் சொல்லும் இயல்புடையவர் என்று அவ்வடியாரின் தொண்டினையும் குறிப்பிட்டுக் கூறியுள்ளமையும் கருதத்தக்கது.

பசுபதியார் என்பது அவர் இயற் பெயர் என்பதும், மறையோர் குலத்தில் வந்தவர் என்பதும் புராண சாரத்தில் காணப்படும் செய்திகளாகும். திருவைந்தெழுத்தும், உருத்திரமும் ஓதுகின்ற இயல்பினர் என்பதும் இறைவனருளால் மேலுலகம் எய்தினார் என்னும் செய்தியும் திருத்தொண்டர் புராணத்தின் சாரமாகக் கூறப்பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[23] பசுபதியார், இடையறாது உருத்திரம் ஓதினமையால் உருத்திர பசுபதியார் என்னும் பெயர் பெற்றார் என்னும் குறிப்பு மனங்கொள்ளத் தக்கது.

8. திருநாளைப்போவார்

''செம்மையே திருநாளைப் போவார்''[24]

எனத் திருத்தொண்டத்தொகை திருநாளைப் போவாரை

அறிமுகப்படுத்துகின்றது. திருநாளைப்போவாரின் ஊர் ஆதனூர் என்பதும், தில்லை அம்பலவர்பால் அருள் பெற்று நாளைப் போவேன் என்று கூறுகின்ற குறிப்பும், புறத்தொண்டாக அவர் செய்த தொண்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. தில்லை மூவாயிரவர் கைகூப்பித் தொழ முனியாக மாறிய செய்தியும் அந்தாதியால் அறியப்படுகின்றது.[25]

ஆதனூர் மேற்கா நாட்டில் உள்ளது என்பதும், நந்தனார் என்பது அவருடைய பெயர் என்பதும் புராணசாரத்தால் அறியப் படும் புதிய செய்திகளாகும். திருப்புன்கூரில் பொய்கை அமைத்த செய்தியும், நந்திவிலகிய செய்தியும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தில்லைக் கூத்தன் அருளால் தோன்றிய தழலில் இடைமூழ்கி மறையோர் போற்றச் செஞ்சடை முனியாய் எழுந்து இறைவன் கூத்தியற்றும் மன்றினுள் மேவினார் என்னும் செய்தி திருத்தொண்டர் புராணத்தின் சாரமாகக் கூறப் பட்டுள்ளது.[26] திருநாளைப்போவார் பெயர் நந்தன் என்பதும், திருப்புன்கூர் நிகழ்ச்சிகளும் அந்தாதியில் காணப்படாத நிகழ்ச்சிகளாகும்.

9. திருக்குறிப்புத்தொண்டர்

திருக்குறிப்புத் தொண்டர் கச்சிநகர்ப்பதியினர் என்பதும், ஏகாலியர் குலத்தினர் என்பதும், அடியார்களுக்குத் துணி துவைத்துக் கொடுக்கும் தொண்டினைச் செய்தவர் என்பதும் குறித்தபடி துணியைக் காயவைத்துக் கொடுக்க முடியாத அளவிற்கு மழை பெய்தமையால் தம் தலையைப் பாறையில் முட்டித் தம்மை அழித்துக் கொள்ள முற்பட்டவர் என்பதும் ஆகிய செய்திகள் அந்தாதியால் அறியப்படுகின்றன.[27]

அந்தாதியில் அமைந்த செய்திகளோடு, கல்மேல் தலையை மோதிக்கொள்ளுங்கால் ஏகம்பநாதர் தம் திருக்கையால் அவரைப் பிடித்து உயர்த்தி மேல் உலகத்தில் சேர்ப்பித்தார் என்னும் செய்தி சாரத்தில் காணப்படுகிறது.[28]

10. குலச்சிறையார்

"பெருநம்பி குலச்சிறை" எனத் திருத்தொண்டத்தொகை குலச்சிறையாரைக் குறிப்பிட்டுள்ளது.[29] குலச்சிறையாரின் ஊர்

மணமேல்குடியாகும். ஞானசம்பந்தர் சமணர்களை வாதில் வென்று சமணர்களைக் கழுவேற்றினார் என்றும் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியனின் அதிகாரி அவர் என்றும் அந்தாதி குறிப்பிட்டுச் செல்கிறது.[30]

பாண்டியர் குல அமைச்சர் எனவும், பாண்டிமாதேவிக்குப் பாதுகாப்பாக இருந்தவரெனவும், ஆலவாய் அப்பர் அடி சேர்ந்தவர் எனவும், குற்றமற்றவர் எனவும் புராணசாரம் குறிப்பிடும் செய்திகள் திருத்தொண்டர் புராணத்தின் சுருக்க மாகவே அமைந்துள்ளன.[31]

11. பேயார் (காரைக்காலம்மையார்)

''பேயார்'' என்ற பெயர் அளவில் திருத்தொண்டத் தொகை குறிப்பிடுகின்றது.[32] பேயாரின் ஊர் காரைக்கால், இறை வனுடைய திருமலையாகிய கயிலையை மிதிக்க மாட்டேன் எனத் தம் இரண்டு கால்களையும் மேலே தூக்கிக் கொண்டு நடந்தவர். அதனைப் பார்த்து உமையம்மை நகைசெய்தபொழுது இறைவன் ''தம் அம்மை'' என்று கூறப் பெற்றவர் என்பது அந்தாதியால் கிடைக்கும் செய்திகளாகும்.[33]

காரைக்காலில் வணிகர் குலத்தில் தனதத்தன் என்பவருக்குப் புனிதவதியார் என்னும் பெயரோடு பெண்ணாகத் தோன்றியவர் அவர். இறைவனுடைய அருளால் மாம்பழங்களை வர வழைத்தமை கண்டு கணவன் வியந்து வேற்றுநாட்டிற்குச் சென்றான். பின்னர் அவனை நீங்கி உடல் இழந்து தலையால் நடந்து ''அம்மையே'' என இறைவனால் அழைக்கப்பெற்று வட கயிலை பணிந்து திருவாலங்காட்டில் இறைவனுடைய நடனத்தை எப்பொழுதும் காணும்பேறு பெற்றார் என்னும் விரிவான செய்திகள் திருத்தொண்டர் புராணத்தின் சாரமாகக் கொடுக்கப் பட்டுள்ளன.[34] அம்மையாரின் இளமைப்பெயர், தந்தையார் பெயர், மாம்பழம் பெற்ற செய்தி, திருவாலங்காட்டில் நடனப் பேறு காணும்பேறு ஆகியவை சேக்கிழார் தரும் புதிய செய்தி களாகும் என்பது குறிப்பிடத்தக்கது.[35]

12. அப்பூதியடிகள்

''ஒரு நம்பி அப்பூதியடியார்'' எனத் திருத்தொண்டத்தொகை குறிப்பிடுகின்றது.[36] இவர் வேதியர் குலத்தில் தோன்றித்

திங்களூரில் வாழ்ந்தவர். திருநாவுக்கரசரின் பாதங்களையே பொருள் எனக்கருதியவர். தண்ணீர்ப் பந்தரில் நாவுக்கரசரின் பெயரை இடம்பெறச் செய்து, நாவுக்கரசர் பாடலில் தம் பெயரை இடம்பெறச் செய்தவர் என்னும் செய்திகள் அந்தாதியால் அறியப்படுகின்றன.[37]

நாவுக்கரசர் தம் பெயர் தண்ணீர் பந்தலில் எழுதப்பட்டிருப் பதைப் பார்த்து அப்பூதியாரிடம் சென்றார். அவர் உண்ணு வதற்குரிய பரிகலமாகத் தோட்டத்திலுள்ள இலையை மைந்தன் கொண்டு வரச் சென்றான். வாழை இலைமேல் துஞ்சிய அரவு அவன் உயிரைக் கவர்ந்தது. அவனுடைய உடல் மறைக்கப் பட்டது. அதனைக் கேட்ட நாவுக்கரசர் பதிக மருந்தால் விடத்தைத் தீர்த்துத் திருஅமுது செய்தார் என்னும் செய்திகள் திருத்தொண்டர் புராணத்தின் சாரமாகக் கொடுக்கப் பட்டுள்ளன.[38]

நம்பியாண்டார் நம்பிகள் காலதிற்குப்பின் அப்பூதி அடிகள் வரலாற்றில் பல செய்திகள் சேக்கிழாருக்குக் கிடைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

13. நமிநந்தியடிகள்

''அருநம்பி நமிநந்தி'' என்பது திருத்தொண்டத் தொகையால் அறியப்படும் அடியார் பெயராகும்.[39]

நமிநந்தியடிகளார் ஏமப்பேறூர் என்னும் ஊரினர். திருவாரூர் இறைவர்க்கு விளக்கு எரிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதனைத் தடுக்க முற்பட்ட சமணர்கள் தீங்கு செய்தனர். நீரையே விளக்கிட்டு எரித்ததோடு ஏதம் உறுக எனக்கூறிவெற்றி கண்டவர் என்னும் குறிப்புகள் திருத்தொண்டர் திருவந்தா தியால் அறியப்பெறுவனவாகும்.[40]

ஏமப்பேறூர் மறையோர்கள் வாழும் ஊர். நமிநந்தியடிகள் அந்தணர்கள் குலத்தில் தோன்றிய சைவநெறி நின்ற மரபில் வந்தவர். ஆரூரில் மாலை நேரத்தில் இறைவனுக்கு விளக்கு எரிக்க வேண்டும் என நினைந்து அருகிலுள்ள வீட்டில் நெய் தருமாறு கேட்டார். ஆனால் அனல் ஏந்தும் பெருமானுக்கு

விளக்கு எதற்கு என அவ்வீட்டிலிருந்த சமணர்கள் எள்ளி நகையாடினர். மீண்டும் கோயிலுக்கு வந்து நீரையே விட்டு விளக்கெரித்தார். அதனால் சமணர்கள் கண் கெடவும், தண்டியடிகள் கண் பெறவும் நேர்ந்தது. அரசன் பல நிபந்தங் களைக் கோயிலுக்கு விடுவதற்கு நமிநந்தியடிகள் காரணமாக இருந்தார் என்னும் செய்திகள் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன.[41] பெரியபுராணத்தில் சமுதாயத்தில் தீண்டா மையை ஒழித்து எல்லோரும் சமம் என்னும் நிலைக்கு நமி நந்தியடிகள் காரணமானார் என ஒரு குறிப்புக் காணப்படு கின்றது.[42] அக்குறிப்புப்பற்றிய செய்தி புராணசாரத்தில் இடம் பெறவில்லை. நமிநந்தியடிகளுடைய புராணத்தோடு தண்டியடி களுடைய வரலாறும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

14. கலிக்காமர்

"ஏயர்கோன் கலிக் காமன்" என்னும் தொடர் திருத் தொண்டத் தொகையில் இடம் பெற்றுள்ளது.[43] கலிக்காமர் ஏயர் குடியில் பிறந்தவர். கலிக்காமர் பரம்பரை பரம்பரையாகச் சிவனடித் தொண்டு செய்து வாழ்பவர். அவருக்கு ஏற்பட்ட நோயைச் சுந்தரர் வந்தால் தவிர்ப்பார் எனக் கூறக்கேட்டுத் தம் உடை வாளை உருவி உயிரை மாய்த்துக் கொண்டார் என்னும் செய்திகள் திருவந்தாதியில் இடம் பெற்றுள்ளன.[44] நம்பியாண்டார் நம்பிகளுக்கு ஏயர்கோன் வாழ்ந்த ஊரைப் பற்றிய குறிப்புக் கிடைக்கவில்லை போலும். அதனால் அவர் ஊர் பற்றிய குறிப்பை அந்தாதியில் காண இயலவில்லை.

ஏயர்கோன் கலிக்காமர் பெருமங்கலத்தில் வேளாளர் குடியில் தோன்றியவர். இறைவனைச் சுந்தரர் தூது அனுப்பியமையால், சுந்தரரை வெறுத்தவர். இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட சூலை நோய் சுந்தரர் வந்தால் நீங்கும் எனக் கூறக்கேட்டு, உடலைத் தன்வாளால் குத்திக்கொண்டு இறந்தார். அதைக் கேள்வியுற்ற சுந்தரர் தாமும் இறக்க முற்படுங்கால், இறைவ னருளால் கலிக்காமர் உயிர் பெற்று எழுந்தார் என்னும் செய்திகள் திருத்தொண்டர் புராணத்தின் சாரமாக உமாபதி சிவனாரால் கூறப்பெற்றுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[45]

கலிக்காமரின் ஊர், குலம், சுந்தரரோடு முரண்பட்டமைக்கான காரணம் போன்ற குறிப்புக்கள் பெரியபுராணத்தில் கூடுதலான செய்திகளாகக் காணப்படுகின்றன.[46]

15. திருமூலர்

"நம்பிரான் திருமூலன்"[47] எனத் திருத்தொண்டத் தொகை திருமூலரைக் குறிப்பிடுகின்றது.

சாத்தனூர் என்னும் ஊரில் மாடுமேய்க்கும் ஒருவன் உடலில் புகுந்து இறைவனைத் தமிழால் வேதத்தில் சொல்லியபடியே பரவித் தம் உச்சியில் அடிவைத்த பிரான் எனத் திருமூலரை நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிட்டு உரைத்துள்ளார்.[48]

கயிலாயத்திலிருந்து வந்த சித்தர் ஒருவர் பொதியமலைக்குச் செல்லுகின்ற வழியில் காவிரி சூழ்ந்த சாத்தனூர் என்ற ஊரில், மூலன் என்னும் இடையன் உயிர்விட அதனால் வருந்திய பசுக்களைக் கண்டு அவனுடலில் புகுந்தார். பண்டு வாழ்ந்த அவருடைய உடல் மறைந்து போக மூலனுடைய உடலிலேயே திருவாவடுதுறையைச் சென்று சேர்ந்தார். ஆண்டுக்கு ஒரு பாவாக அரசமரத்து அடியிலிருந்து நூல் செய்து வடகயிலைக்குச் சென்றார் என்னும் குறிப்புக்கள் புராண சாரத்தில் இடம் பெற்றுள்ளன.[49] திருமூலர் ஆவடுதுறைக்குச் சென்றதும், அரசடியில் இருந்ததும், ஆண்டிற்கு ஒரு பாடல் பாடியதும் கயிலாயத்திலிருந்து வந்ததும் ஆகிய செய்திகள் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.

16. தண்டியடிகள்

"நாட்டமிகு தண்டி"[50] என்பது திருத்தொண்டத் தொகையில் தண்டியடிகளைக் குறிக்கும் தொடராகும்.

தண்டியடிகள் ஆரூரில் பிறந்தவர் என்பதும், பிறவிக் குருடர் என்பதும், குளம் வெட்டும் தொண்டினைச் செய்தவர் என்பதும், அதனால் எள்ளி நகையாடிய அமணர்களின் கண்போக இறைவனியம் கண்பெற்றவர் என்பது அந்தாதியில் காணப்படும் செய்திகளாகும்.[51] தண்டியடிகளுடைய சுருங்கிய வரலாறே அந்தாதியில் காணப்படுகின்றது. குருடராகையால் அடையாளம்

தெரிவதற்காக நடப்பட்ட குறித்தறியை அமணர்கள் பறித்து எறிந்தனர். அத்துடன் அவர் குருடர் மட்டுமல்ல, செவிடரும் ஆவார் என்று கூறினர். அதனால் வெகுண்ட அடிகள் அவர்களை எல்லாம் குருடராகுமாறு செய்தார். குளத்திற்கருகிலிருந்த பாழிகளை அழிவுறச் செய்து குளத்திற்குக் கரை கட்டினார். பின்னர் இறைவன் அருளால் அமரருலகம் சேர்ந்தார் என்னும் குறிப்புக்கள் புராணசாரத்தில் காணப்படுகின்றன.[52] அந்தாதியி லுள்ள செய்திகளின் விளக்கமாகவே பெரிய புராணத்தில் தண்டியடிகள் வரலாறு காணப்படுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது. நம்பியாண்டார் நம்பிகள் தண்டியடிகள் வரலாற்றை ஆராய்ந்து முழுமையாக எடுத்துரைத்துள்ளார் எனலாம்.

17. மூர்க்கனார்

"மூர்க்கர்க்கும் அடியேன்" என்பது மூர்க்க நாயனாரைத் திருத்தொண்டத் தொகை குறிப்பிடும் தொடராகும்.[53]

மூர்க்கர் திருவேற் காட்டூரில் வாழ்ந்தவர்; சூதாடிப்பெற்ற பொருளால் அடியவர்களுக்கு வேண்டும் பொருளைக் கொடுப்பவர்; "மூர்க்கன்" என்னும் பெயருடையவர்; குடந்தையில் இறைவனடி சேர்ந்தவர் என்னும் செய்திகள் அந்தாதியில் இடம் பெற்றுள்ளன.[54]

தொண்டைவள நாட்டில் உள்ளது திருவேற்காட்டூர். அங்கு உழவர் குடியில் தோன்றியவர் மூர்க்கர். சூதாடுவதில் வல்லவர். சூதுப்போரில் தவறு செய்தால் அவர்களைக் கொல்லும் இயல்பினர். அதனால் "மூர்க்கர்" என்னும் பெயரைப் பெற்றார். அவருடைய பெயர் எட்டுத் திக்கிலும் பரவிவந்தது. தேவரும் போற்ற இறைவனடி சேர்ந்தார் என்னும் குறிப்புக்கள் புராண சாரத்தில் இடம் பெற்றுள்ளன.[55] ஊருடன் நாடும் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. வேளாண்குடியினர் என்னும் குறிப்பும் மூர்க்கர் என்று பெயர் பெற்றமைக்குக் காரணமும் புராண சாரத்தில் குறிப்பிட்டுள்ளமை கருத்தில் கொள்ளதக்கது.

18. நரசிங்கமுனையரையர்

"மெய்யடியான் நரசிங்க முனையரையர்க்கு"[56] என்று திருத்தொண்டத்தொகை நரசிங்க முனையரைக் கூறியுள்ளது.

நரசிங்கமுனையரையர் ஒரு சிற்றரசர். இவர் சிவனடியார்களுக்குப் பொன்னைக் கொடுத்து உதவும் இயல்பினர். ஒருவர் சிற்றின்பத்தில் மூழ்கி வந்த கோலங்கண்டும் அவருக்கு இரட்டிப்பாகப் பொன்கொடுத்து உபசரித்தார் என்னும் குறிப்பினை அந்தாதி கூறியுள்ளது.[57]

நரசிங்கமுனையரையர் தினமுனைப்பாடி நாட்டைச் சார்ந்தவர். இறைவனுடைய நாளாகிய ஆதிரை நாளன்று அடியார்க்குப் பொன்னும் அமுதும் அளிப்பார். அவ்வாறு வழங்கி வரும் நாளில் ஒருநாள் வெண்ணீறு அணிந்த தூர்த்தனொருவனுக்கு இரட்டிப்பாகப் பொன் ஈந்து புரந்தார். ஆலயங்கள் எல்லாவற்றையும் விளங்கச்செய்தார் என்னும் செய்திகள் புராண சாரத்தால் அறியப்படுகின்றன.[58] நரசிங்கமுனையரையர் நாடும், ஆதிரை நாளில் அவர் அடியார்களுக்குப் பொன் ஈவதும், கோவில்களை விளங்கச் செய்வதும் ஆகிய செய்திகள் கூடுதலான செய்திகளாகப் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

19. கலியனார்

"திருத்தொண்டத் தொகையால் பெயரளவில்" "கலியன்" என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார்.[59]

இவர் திருவொற்றியூரினர். இறைவர்க்குத் திருவிளக்கு ஏற்றுவதற்குப் பொருள் இல்லாதவராக இருந்தார். எண்ணெய்க்குடத்தைத் தலையில் சுமந்து விற்கின்ற கூலியைக் கொண்டும், செக்கு ஓட்டி அதனால் வரும் கூலியைக் கொண்டும் விளக்கேற்றும் தொண்டினைச் செய்தார் என்னும் செய்திகள் அந்தாதியால் அறியப்படுவனவாகும்.[60]

இவர் சக்கரப்பாடியர் குலத்தில் தோன்றியவர். இறைவனுக்கு விளக்கெரிக்கும் தொண்டைக் கூலிவேலை செய்து, அக்கூலியினால் விளக்கெரித்து வந்தார். அதற்கும் முட்டுப்பாடு நேர்ந்தபோது மனைவியையே விற்க முற்பட்டார். வாங்குவார் இல்லாமையால், தம் கழுத்தை அரிந்து இரத்தத்தால் விளக்கெரிக்க முற்பட்டார். ஒற்றியூர் இறைவன் அவர் கையைப்

பிடித்து நிறுத்தி அருள் செய்தார் என்னும் குறிப்பும் புராண சாரத்தால் அறியப்படுவதாகும்.[61] பெரியபுராணம், அந்தாதிக்கு மேல் ஒருசில செய்திகளைக் கூடுதலாக ஆராய்ந்து வெளிப்படுத்தி யுள்ளமை அறியத்தக்கதாகும்.

20. காரியார்

"காரிக்கும் அடியேன்"[62] எனத் திருத்தொண்டத்தொகை கூறுகின்றது.

காரியார் திருக்கடவூரினர். இவர் தாம் கூறுகின்ற நூல் அற்பமாகா வண்ணம் நயமாகக் கூறுபவர். நூல்களுக்கு உரை கூறுமிடத்தும் யாவரும் கேட்குமாறு நயம்படச் சொல்லும் இயல்பினர். இத்தகைய விரிவுரைகளால் இறைவனை வாழ்த்தி இறைபதம் அடைந்தவர் என அந்தாதி கூறுகின்றது.[63]

தமிழ் நூல்களைத் திருந்த ஓதியும், தம் பெயரால் பாக்களைச் செய்தும், மூன்று வேந்தர்களிடத்தும் சென்று அவர்கள்பால் பொருள் பெற்றும் ஆலயங்களை ஓங்கச் செய்தார். அடியவர்கள் கூறுகின்ற பணிகளை நிறைவேற்றும் இயல்புடையவராக வாழ்ந்தார் என்னும் குறிப்புக்கள் புராணசாரத்தில் காணப்படு கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.[64]

21. இடங்கழியார்

இடங்கழியார் "மடல் சூழ்ந்த தார்நம்பி" என்னும் தொடரடுத்துத் திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றுள்ளார். இத்தொடர் மாலை அணிந்தவர் என்னும் குறிப்பில் வந்துள்ளமையால் இடங்கழியார் ஒரு தலைவர் என்பது மட்டில் தெரிகிறது. இடங்கழியார் வேளிர்குல முதல்வராகச் சோழர் குலத்தில் வந்தவர்; தம் செல்வமெல்லாம் இறைவனுடைய அடியார்களுக்கென்று பறையறிவித்தவர்; இச்செய்திகள் திரு வந்தாதியில் இடம்பெற்றுள்ளன.[65]

இடங்கழியார் கோணாடு என்னும் நாட்டிலுள்ள கொடும் பாளூரைச் சார்ந்தவர். வேளிர்குலத்தில் அரசனாக இருந்தவர். இக்குலம் சோழர் குலத்திற்கு முதற்குடியாகக் கருதப்படுவது.

ஒருவர்க்குத் தொண்டுக்கு முட்டுப்பாடு ஏற்பட்டபொழுது அரசனுக்குரிய நெற்களஞ்சியத்தைச் சூறையாடினார். அவரைப் பிடித்துக் கேட்டபொழுது அடியவர்களுக்கு உணவு கொடுப்பதற் காக எடுத்ததாகக் கூறினார். இடங்கழியார் தம்முடைய கருவூலத்தைத் திறந்துவிட்டு இறையடியார்கள் அவற்றை எடுத்துக்கொள்ளலாமெனப் பறையறிவித்து அரசாண்டவர் என்னும் செய்திகள் திருத்தொண்டர் புராணத்தில் இடம் பெற்றுள்ளன.[66] புராணசாரத்தில் இச்செய்தியின் சுருக்கம் இடம்பெற்றுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[67]

22. மங்கையர்க்கரசியார்

''வரிவளையாள் மானி'' எனத் திருத்தொண்டத் தொகை மங்கையர்க்கரசியாரைக் குறிப்பிடுகின்றது.[68]

மங்கையர்க்கரசியார் பாண்டிமாதேவியார் என்பதும், தம் கணவரின் வெப்பு நோயை ஞானசம்பந்தருக்கு அறிவுறுத்தி அவரால் அருக்கர்களை அழித்தார் என்பதும் அந்தாதியில் காணப்படும் செய்திகளாகும்.[69]

பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசி, சோழர் குலத்தில் தோன்றியவர்; சமண சமயத்தைச் சாடவல்ல ஞானசம்பந்தரை மதுரைக்கு அழைத்தவர்; அவரால் பதிகத்தில் பாடப்பெற்றவர்; நின்றசீர் நெடுமாறனுக்கு அருள்கிடைக்குமாறு செய்தவர் என்னும் குறிப்புக்கள் புராண சாரத்தில் இடம்பெற்றுள்ளன.[70]

அமைச்சராகிய குலச்சிறையார், மங்கையர்க்கரசியாருக்கு உறுதுணையாக இருந்து பாண்டிய நாட்டைச் சைவசமயம் சார்ந்த நாடாக ஆக்கிய செய்தி பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ளது. எனினும் புராண சாரம் அதனைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

23. நேசனார்

''நேசனுக்கும் அடியேன்'' எனத் திருத்தொண்டத்தொகை நேசரை அறிமுகப்படுத்தியுள்ளது.[71]

நேசனார் காம்பீலி நகரத்தைச் சார்ந்தவர்; சாலிய வகுப்பினர்; அடியார்களுக்கு ஆடைநெய்து கொடுக்கும் வழக்க முடையவர்.[72]

இச்செய்திகளுடன் அடியவர்களுக்குப் பெரும்பொருள் கொடுத்தும், உடையும் கோவணமும் ஈந்தும் வாழ்ந்து இறுதியில் இறைவனடி சேர்ந்தவரெனப் புராணசாரம் குறிப்பிடுகின்றது.[73]

24, 25, சடையனார், இசைஞானியார்

இறுதியில் சடையன், இசைஞானி என்ற இருவர் பெயரும் அரனடியை அடைந்திட்ட குறிப்போடு திருத்தொண்டத் தொகையில் இடம்பெற்றுள்ளன.[74]

சடையனார், இசைஞானியார் இருவரும் சுந்தரமூர்த்தி யாரைப் பெற்றெடுத்த பேறுடையவர்கள்; திருநாவலூர் என்னும் ஊரினர் என்னும் செய்திகள் அந்தாதியில் இருபாடல்களில் கூறப்பட்டுள்ளன.[75]

நாவலூரர் பெருமைகளைச் சுட்டி அப்படிப்பட்ட ஒருவரைப் பெற்றெடுக்கும் வாய்ப்புப் பெற்றமையால் இவர்கள் முன்பே தவம் செய்தவர்களாவர். அதனால் இறைவனடியில் இருக்கும் பேற்றினைச் சடையனாரும் இசைஞானியாரும் பெற்றனர் என்னும் குறிப்புப் புராணசாரத்தில் கிடைக்கின்றது.[76]

பெயருடன் ஊரும் தெரிந்த அடியார்கள்

திருத்தொண்டத் தொகையில் தொண்டர்களுடைய பெயர் களை அறிமுகப்படுத்தும் பொழுதே ஊர்ப் பெயரும் சேர்த்துப் பல தொண்டர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் இளையான்குடி மாறன், குன்றையார் விறல்மிண்டர், கடவூரிற் கலயன், புனல்மங்கை ஆனாயர், பெருமிழலைக் குறும்பர், சாத்தமங்கை நீலநக்கர், அம்பறான் சோமாசிமாறர், செங் காட்டன்குடி சிறுத் தொண்டர், காழி கணநாதர், கடல்நாகை அதிபத்தர், கடற்சக்தி விரிஞ்சையர்கோன், மயிலை வாயிலார், தஞ்சை மன்னவனாம் செருத்துனை, நம்பி ஆரூரர் என்ற பதினான்கு அடியார்கள் ஆவர்.

1. இளையான்குடிமாறன்

''இளையான்தன் குடிமாறன்''[77] என்னும் தொடரில் இளையான்குடி என்பது மாறன் வாழ்ந்த ஊராகும்.

நேரமில்லாத நேரத்தில் உணவுக்காக வந்த அடியவர்க்குத் தாம் விதைத்த நெல்லை எடுத்து, வீட்டில் வேயப்பட்டு இருந்த அலகால் வறுத்து உணவு ஆக்குமாறு கூறினார். இளம்முளையாக வந்த கீரையைப் பறித்துக் கறியாக்குமாறு கூறினார். இளையான் குடியை ஊராகக் கொண்டமாறர் என்னும் குறிப்புகள் அந்தாதியால் (4) அறியப்படுகின்றன.

திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறப்பட்ட செய்திகளின் விளக்கமாகவே திருத்தொண்டர் புராணத்தில் செய்திகள் இடம் பெற்றுள்ளன. அடியவர் வந்த நேரம் நள்ளிரவு என்பதும், மழைக்கால இருளாக இருந்தது என்பதும், உணவு கொள்வதற்காக வந்தவர் இறைவனே என்பதும் பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள விரிவான செய்திகளாகும்.[78]

நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்த செய்திகள் சேக்கிழாருக்குச் செல்வதற்குரிய பாதையை எளிதாக்கி உள்ளன எனலாம்.

2. விறல்மிண்டர்

"குன்றையார் விறல்மிண்டர்" என்ற தொடரில் குன்றையார் என்பது திருச்செங்குன்றூரை ஊராகக் கொண்டவர் என்னும் குறிப்புப்பட நின்றது.[79]

விறல்மிண்டர் திருச்செங்குன்றூரைச் சேர்ந்தவர்; ஆரூரையும் அவருக்குத் துணைநின்ற ஈசரையும் அடியாரை மதிக்காததனால் புறம்பானவர்கள் என்று ஒதுக்கியவர் என்னும் செய்திகள் அந்தாதியில் அறியப்படுகின்றன.[80]

விறல்மிண்டர் வேளான்குடியைச் சார்ந்தவர். திருவாரூரில் சென்றகாலத்து அடியார்களை மதிக்காத வன்தொண்டரையும், அவரது வலிய ஆட்கொண்ட இறைவனையும் ஒதுக்கி வைத்தவர். இவரைச் சமாதானப் படுத்துவதற்காகவே இறைவன் திருத் தொண்டத் தொகையைச் சுந்தரர் பாடுமாறு பணித்தார். அதனால் மகிழ்ந்த விறல்மிண்டர் சிவகணங்களுள் ஒருவராக ஆகும் பேறுபெற்றார் என்னும் செய்திகள் புராணசாரத்தில்

இடம் பெற்றுள்ளன.[81] பெரியபுராணத்தில் விளக்கமாகக் கூறப்பட்ட செய்திகள் புராணசாரத்தில் சுருக்கமாகக் இடம் பெற்றுள்ளன.

3. கலயனார்

''கடவூரிற் கலயன்'' எனத் திருத்தொண்டத்தொகையால் அறியப்படும் அடியவர் திருக்கடவூரினர்.[82]

திருக்கடவூரில் குங்கிலியப் புகையிடும் தொண்டினை இறைவர்க்குச் செய்து வந்தவர். அதனால் வறுமையுற்ற இவர், மனைவியின் தாலியையே விற்றுப் பெற்ற பணத்தில் குங்கிலியம் வாங்கித் தொண்டாற்றியவர். திருப்பனந்தாளில் இறைவன் ஒருபக்கம் சாய்ந்து, சாய்ந்த திருமேனியுடையவராக இருந்ததைப் பார்த்து, கயிற்றைத் தம் கண்டத்தில் கட்டிக் கலயர் இழுக்கத் திருமேனி நிமிர்ந்தது என்று கூறுவர். இச்செய்திகள் அந்தாதியில் இடம்பெற்றுள்ளன.[83]

கலயர் திருக்கடவூரில் மறையோர் குலத்தில் தோன்றியவர். நெல் கொள்வதற்காக மனைவியின் தாலியை விற்றவர், குங்கிலியத்தை வாங்கினார். திருப்பனந்தாளில் இறைவனை நேர் நிறுத்தியபொழுது அரசனும் போற்றும் பேறுபெற்றார். ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் இவர் இல்லத்தில் எய்தி உணவு கொண்டனர் என்னும் செய்திகள் புராணசாரத்தில் காணப்படும் திருத்தொண்டர் புராணச் செய்திகளாகும்.[84] இறைவனை நேர் நிறுத்தியமையால் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அன்போடு இவருடைய இல்லத்திற்கு வந்து விருந்துண்டனர் என்னும் செய்தி வரலாற்று நிகழ்ச்சியாகும். இவ்வரலாற்று நிகழ்ச்சியைச் சேக்கிழார் ஆராய்ந்தெடுத்துக் கூறியமை போற்றுதற்குரியதாகும்.

4. ஆனாயர்

''அலைமலிந்த புனல் மங்கை ஆனாயர்'' என்னும் தொடரால் திருத்தொண்டத்தொகை அறிமுகப்படுத்துகின்றது.[85] ''மங்கை'' என்பது திருமங்கலம் என்னும் ஊர். மரூஉமொழியாக மங்கை என அமைந்துள்ளது.

திருமங்கலம் மேல்மழ நாட்டில் அமைந்துள்ளது. ஆனாயர் ஆயர் குடியில் பிறந்தவர். இவர் இறைவரின் தொல்புகழைக் குழலிசையில் பாடிப் பரப்பும் இயல்புடையவர் என்பதும் திருவந்தாதியால் விளங்கும் செய்திகளாகும்.[86]

திருத்தொண்டர் திருவந்தாதியில் இடம்பெற்ற செய்திகளோடு, இவர் ஆநிரை மேய்க்கும் தொழிலினர் என்பது பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ளது. இவர் ஊதுகின்ற குழல் ''கொன்றையங்குழல்'' என்பதும் விளக்கப்பட்டுள்ளது. நாள் தோறும் இறைவன் இவர் ஊதும் இசைகேட்டு மகிழ்ந்து, என்றும் அந்த இசைபாடும் தொண்டினைச் செய்ய வருமாறு அழைத்துச் சென்றார் என்ற குறிப்பும் புலப்படுத்தப்பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. புராணசாரத்தில் பெரியபுராணச் செய்திகள் சுருங்க உரைக்கப்பட்டுள்ளன.[87]

5. பெருமிழலைக் குறும்பர்

''பெருமிழலைக் குறும்பர்'' எனத் திருத்தொண்டத்தொகை குறும்பருக்கு உரிய மிழலை என்பதைப் புலப்படுத்தியுள்ளது.[88]

சுந்தரர் கயிலைக்குச் செல்லப்போவதைக்குறும்பர் அறிந்தார். அவருக்கு முன்பே தாம் இறைவன் அடியை அடைந்துவிட வேண்டும் என நினைந்து உயிர் நீத்தார் எனும் செய்தி திருத்தொண்டத் தொகைக்குக் கூடுதலாகத் திருத்தொண்டர் திருவந்தாதியில் இடம் பெற்றுள்ள செய்தியாகும்.[89]

இறைவனுடைய அடியாராக வாழ்ந்த வன்தொண்டருக்கு ஆளானவர் மிழலைக் குறும்பர். உலகத்திலுள்ளார் தொழும் படியான எண்வகைச் சித்திகளையும் பெற்று வாழ்ந்தவர்.[90] வன்தொண்டர் வடகயிலை செல்வதை அறிந்த குறும்பர், அவருக்குப்பின் இவ்வுலகில் வாழக்கூடாது என நினைந்து யோக சித்தியால் உடலைவிட்டுச் சென்றவர் என்னும் குறிப்புக்கள் புராணசாரத்தில் பெரியபுராணத்தின் சுருக்கமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.[91] எண்வகைச் சித்திகளைப் பெற்று யோகநிலையில் வாழ்ந்தவர் என்னுங் குறிப்புச் சேக்கிழாரால் தரப்பெற்ற புதிய செய்தி என்பது குறிப்பிடத்தக்கது.[92]

6. நீலநக்கர்

''ஒலிபுனல் சூழ் சாத்தமங்கை நீலநக்கர்'' என்பது திருத் தொண்டத் தொகையில் நீலநக்கனார் அறிமுகப்படுத்தப்பட்ட தொடராகும்.[93] இதில் ''சாத்தமங்கை'' என்பது இவர் வாழ்ந்த ஊராகும்.

இறைவனுடைய திருமேனியில் சிலந்தி ஒன்று விழுந்தது. அதனைக்கண்டு அஞ்சிய இவருடைய மனைவியார், தம்முடைய வாயால் ஊதிச் சிலந்தி விழுந்த இடத்தைத் தூய்மையாக்கினார். அதனால் வெகுண்ட நீலநக்கர் மனைவியைத் தள்ளி வைத்தார். இறைவன் நீலநக்கருக்கு அவருடைய மனைவியார் ஊதிய இடம் நீங்கலாக மற்றைய இடங்களெல்லாம் இயல்பு வேறு பட்டிருப்பதைக் காட்ட, மனைவியின் அன்பின் திறத்தை உணர்ந்தார். இவர் வேதியர் குலத்தில் தோன்றியவர். இத்தகைய செய்திகள் அந்தாதியால் அறியப்படுகின்றன.[94]

நீலநக்கர் புராணத்தில் சேக்கிழார், நம்பியின் அந்தாதியில் கூறப்பட்ட செய்திகளோடு இரு செய்திகளை இணைத்துள்ளார். ஞானசம்பந்தர் இவருடைய இல்லத்திற்கு வந்து உணவு கொண்டார் என்பது ஒரு செய்தி. திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு நடுமனையிலுள்ள திண்ணையில் தங்க இடம் கொடுத்து வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியைச் செய்தார் என்பது பெரிய புராணத்தால் அறியப்படும் மற்றொரு செய்தியாகும். அதனால் எவ்விதக் குற்றமுமில்லை என்பதை விளக்க, வேள்வித் தீ மேலும் கொழுந்து விட்டு எரிந்ததாகச் சேக்கிழார் குறித்துள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. நீலகண்ட யாழ்ப்பாணர்க்குக் கொடுத்த இடம் வேள்வி செய்யும் இடமாகும் என்பதும் கருதத் தக்கது. சாத்தமங்கை இறைவர் அயவந்தி என்னும் பெயருடையவர் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தரின் திருமண விழாவில் கலந்து சிவத்தை மேவிய அடியார்களுள் இவரும் ஒருவர் என்பது பெரியபுராணத்தால் அறியப்படும் செய்தியாகும்.[95]

புராணசாரம் இச்செய்திகளைச் சுருக்கிக் கூறியுள்ளமை கருதத்தக்கது.[96]

7. சோமாசிமாறன்

''அம்பரான் சோமாசிமாறன்'' என்னும் தொடர் திருத்தொண்டத்தொகையில் சோமாசிமாறரைக் குறிக்கும் இடமாகும்.[97] அம்பரான் என்பது திரு அம்பர் என்னும் பதியைக் குறிக்கும்.

சோமாசிமாறர் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர். வேதத்தையும், திருவைந்தெழுத்தையும் இடையறாமல் சொல்லுகின்ற இயல்பினை உடையவர். சுந்தரமூர்த்தி நாயனாரை வழிபடும் தெய்வமாகக் கருதி வணங்கியவர் என்னும் செய்திகள் அந்தாதியில் அறியப்படுகின்றன.[98]

சோமாசிமாறர் அடியார்களுக்கு அமுதளிக்கும் இயல்பினர். யாகம் பலவும் செய்யும் இயல்பினர். நாவலூரரை அடிபரவியமையால் மேல் உலகங்களையும் ஆளும் பேறுபெற்றார் என்னும் செய்திகள் புராணசாரத்தில் திருத்தொண்டர் புராணத்தின் சாரமாக இடம்பெற்றுள்ளன.[99]

8. சிறுத்தொண்டர்

''செங்காட்டங்குடி மேவிய சிறுத்தொண்டன்'' என்பது திருத்தொண்டத் தொகை சிறுத்தொண்டரைக் குறிக்கும் தொடராகும்.[100] சிறுத்தொண்டரின் ஊர் செங்காட்டங்குடி என்பது இவ்வடியால் விளங்குகிறது.

அடியாராக வந்த இறைவர்க்குத் தம் மழலைப் பிள்ளையை உடல் துணித்து அமுதளித்து அஞ்ஞானம் நீங்கிப் புகழ் கொண்டவர் என்னும் செய்தி அந்தாதியில் இடம் பெற்றுள்ளமை அடுத்த வளர் நிலையாகும்.[101]

பரஞ்ஜோதி என்பது இவருடைய முன்னைப் பெயர். படைத்தலைவராக இருந்தவர்; மருத்துவத்தில் தலைமை பூண்டவர். இவருடைய மகன் சீராளன் என்னும் பெயரினன்; மனைவியார் திருவெண்காட்டு நங்கை என்னும் பெயரினர். பிள்ளையைக் கறி சமைத்த பொழுது கறிக்கு உதவாதென்று தலையை ஒதுக்கி வைத்துவிட அதனைச் சந்தனத்தாதி எடுத்துக் கறி சமைத்து வேண்டும்போது உதவினாள். வயிரவராக வந்த இறைவன்

மனம் மகிழ்ந்து மகனை உயிரோடு எழுப்பி அருள் புரிந்தார். ஞானசம்பந்தர் திருச்செங்காட்டங்குடிக்கு வந்தபொழுது அவரை வரவேற்றுப் போற்றினார் என்னும் செய்திகள் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன. சேக்கிழார் சிறுத்தொண்டர் வரலாற்றைத் தெளிவாக ஆராய்ந்து பல செய்திகளைக் கூறியுள்ளார் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.[102]

9. கணநாதர்

''கடற்காழிக் கணநாதன்'' என்னும் தொடரில் கணநாதரைக் குறிக்குங்கால் கடல்காழி என்பதைக் கணநாதருடைய ஊராகத் திருத்தொண்டத் தொகை குறித்துள்ளது.[103] கணநாதன் என்னும் பெயரால் கணங்களுக்குத் தலைவராக ஆனவர் என்னுங் குறிப்பு திருத்தொண்டத் தொகையினாலேயே விளங்குகிறது.

கணநாதர் தொண்டர்களைக் கண்டால் அவரவர்க்கு ஏற்ற தொழில்களைச் செய்யுமாறு நெறிப்படுத்துவார். தேவ கணங்களுக்குத் தலைமை பூண்டவர். கடற்காழி என்னும் ஊரினர் என்னும் செய்திகள் அந்தாதியில் இடம்பெற்றுள்ளன.[104] கடற் காழி என்பது கடலை அணித்தாக உடைய சீர்காழிப் பகுதியைக் குறிக்கும்.

இவர் மறையவர் குலத்தவர். திருத்தோணி அப்பருக்குப் பல நந்தவனங்களை அமைத்து மலர் கொய்து மாலை தொடுத்து அணிவிப்பதோடு சொல்மாலையும் சாத்துகின்றவர். தொண்டர் களை நெறிப்படுத்தித் தொண்டில் ஈடுபடுத்துபவர். சமணர்களை வாதில் வென்ற ஞானசம்பந்தரை மகிழ்ந்து வாழ்த்தியவர். அரன் அருளால் இறைவனடி சேர்ந்தவர் என்னும் செய்திகள் சேக்கிழாருடைய கருத்துக்களாகப் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன.[105]

10. அதிபத்தர்

''விரிதிரை சூழ் கடல்நாகை அதிபத்தன்'' என்னும் தொடர் திருத்தொண்டத்தொகையில் அதிபத்தரைக் குறிப்பதற்கு எழுந்த தொடராகும்.[106] நாகை கடற்கரையை அடுத்த ஊர் என்று அடைகொடுத்துக் கூறப்பட்டுள்ளது. கடலில் மீன்பிடித்தல்

அதிபத்தர் தொழிலாதலால் ''விரிதிரை சூழ்கடல்'' என நம்பி ஆரூரர் அதிபத்தரின் தொழிலைக் குறிப்பாகச் சுட்டியுள்ளார் எனலாம்.

அதிபத்தர் மீன் பிடிக்கும்பொழுது ஒரு மீனை எடுத்துச் சிவனுக்கு என்று கூறிக் கடலிலே விட்டுவிடுவார். ஒருநாள் ஒரே ஒரு மீன் பொன் நிறத்தில் கிடைக்க, அதனையும் இறைவனுக்கு என்று சொல்லி விடுத்தவர். எனவே இவரைப் ''பொய்யிலி'' என்று அந்தாதி நூல் போற்றுகின்றது.[107]

அதிபத்தர் பரதவர்கள் தலைவர், கடலில் மீன்பிடிக்குங்கால் தலை மீனாகக் காணப்படுகின்ற ஒன்றனை ஈசனுக்கு என்று விடும் இயல்பினர். பலநாள் தலைமீன் ஒன்றுமட்டுமே கிடைக்க ஈசனுக்குக் கொடுத்து வறுமையுற்றார். இறைவன் ஒருநாள் இவருக்குப் பொன்மீன் ஒன்று கிடைக்குமாறு செய்ய வழக்கம் போல் அதனையும் கடலில் விடுத்து இறைவனடி சேர்ந்தார் என்னும் செய்திகள் புராணசாரத்தில் இடம்பெற்றுள்ளன.[108] அந்தாதியின் விளக்கமாகச் சில செய்திகளைச் சேக்கிழார் அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

11. சத்தியார்

''கழற்சத்தி வரிஞ்சையர்கோன்'' எனத் திருத்தொண்டத் தொகை சத்தி நாயனாரைக் குறிப்பிடுகின்றது.[109] வரிஞ்சை என்பது இவருடைய ஊர்ப்பெயர். வீரமிக்கவர் என்பது ''கழற் சத்தி'' என்னும் அடையால் புலப்படுகின்றது.

அடியவர்களை இழித்துக் கூறும் இயல்புள்ளவர்களை, அவர் தம் நாவை அரியும் இயல்பினர். பகைவரை வெல்லும் வில்லைக் கையில் ஏந்தியவர். வரிஞ்சைப் பதியில் விளங்கும் சத்தியார் என அந்தாதி இவரைக் குறிப்பிடுகின்றது.[110]

வரிஞ்சைப் பதி காவிரி நாட்டில் உள்ளதோர் ஊர், சத்தியார் வேளாளர் மரபினர். அடியவர்களை வழிபடும் ஒருமைப்பாட்டு உணர்வினர். இடையறாது திருவைந்தெழுத்தை ஓதுவார் என்னும் செய்திகள் திருவந்தாதியில் கூறப்பட்ட செய்திகளோடு சேர்ந்து புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன.[111] அடியவரை

இகழ்வார் தம் நாவினைப் பற்றுக்குறடால் இடுக்கி வாங்கி அரியும் இயல்புள்ளவர் என்பது பெரியபுராணத்தில் விவரிக்கப் பட்ட செய்தியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

12. வாயிலார்

"துறைக் கொண்ட செம்பவளம் இருள் அகற்றும் சோதித் தொன் மயிலை வாயிலான்" என்னும் தொடர் திருத்தொண்டத் தொகையில் வாயிலாரை அறிமுகப்படுத்தும் நெடுந் தொடராகும்.[112] "மயிலை" என்பது மயிலாப்பூரைக் குறிக்கும். "செம்பவளம் இருளகற்றும் சோதி" என்பது செம்பவளம் போன்ற இறைவன் ஒளிவடிவில் மன இருளை அகற்றும் என்னும் கருத்து அமைய, திருத்தொண்டத் தொகை குறிப்பிட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.

வாயிலார் இறைவனை மனமென்னும் ஆலயத்தில் இருத்தி அறிவையே ஒளிவிளக்காக ஏற்றி அகமலரையே அருச்சித்து அன்பென்னும் உண்மையான அமுதம் கொடுத்து வாழ்ந்தவர் என்னும் செய்திகள் அந்தாதியில் இடம்பெற்றுள்ளமை கருத்திற் கொள்ளத் தக்கது.[113]

மயிலாபுரி தொண்டைநாட்டில் உள்ள ஊராகும்; வேளாளர் மரபில் வந்தவர் வாயிலார் என்னும் செய்திகள் அந்தாதியில் கூறப்பட்ட செய்திகளோடு புராணசாரத்தில் சேர்ந்து இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.[114]

13. செருத்துணையார்

"தஞ்சை மன்னவனாம் செருத்துணை" என்னும் தொடர் திருத்தொண்டத்தொகையில் செருத்துணையாரைக் குறிப்பிடு கின்றது.[115] தஞ்சையைச் சேர்ந்தவர் என்பது "தஞ்சை மன்னவனாம்" என்னும் தொடரால் அறியப்படுகின்றது.

செருத்துணையார் மருகல் நாட்டவர் என்பதும், தஞ்சைச் செருத்துணை என்றே வழங்கப்பட்டவர் என்பதும் அந்தாதியில் காணப்படும் விளக்கமாகும். கழற்சிங்கன் என்னும் பல்லவ

வேந்தனின் தேவி இறைவனுக்கு வைத்திருந்த மணமலரை முகந்து பார்க்க, அவ்வம்மையாரின் மூக்கை அரிந்த செய்தி அந்தாதியில் இடம் பெற்றுள்ளது.[116]

காவிரி சூழ்ந்த மருகல் நாட்டில் வாழும் தஞ்சை நகர் உழவர்கள் பாராட்டும் செருத்துணையார் என இவர் குறிக்கப் பட்டுள்ளார். இவர் திருவாரூரில் வாழும்பொழுது, பல்லவர்கோன் தேவி இறைவனுக்கு வைத்திருந்த மலரை எடுத்து முகர்ந்து பார்த்ததால் அவள் மூக்கை அரிந்தார். அரசமாதேவி என்று அஞ்சித் தயங்காமல் வீரம்மிக்க திருத்தொண்டினைச் செய்து மேலுலகம் அடைந்தவர் என்பது புராணசாரத்தில் கிடைக்கும் செய்திகளாகும்.[117] அந்தாதியின் விளக்கமாகவே சேக்கிழார் சில செய்திகளைக் குறித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

14. ஆரூரர்

ஆரூரர் அடியவர்களுடைய பெயர்களையெல்லாம் கூறியபின் அவர்களுக்கு அடிமை என்று கூறும் வகையில் திருத்தொண்டத் தொகையில் ஒவ்வொரு பாடல் இறுதியிலும் தம் பெயரை இடம்பெறச் செய்துள்ளார்.[118] இவருடைய ஊர் திருநாவலூர், அதனை ''திருநாவலூர்க்கோன் அன்னவனாம் ஆரூரன்'' என்னும் தொடரால் கூறியுள்ளார்.[119] இவருடைய சிறப்புப்பெயரான ஆரூரன் என்பது ஊரினால் பெற்ற பெயர். ''கோன்'' என்பது அரசனைக் குறிப்பினும் வளர்ந்த இடத்தால் மன்னவர் ஆவாரே தவிரப் பிறந்த இடத்தால் இவர் ஆதிசைவ குலத்தில் தோன்றியவர் என்பதே கருத்தாகும்.

ஆரூரர் பற்றிய செய்திகளைத் திருவந்தாதி பதினொரு பாடல்களில் மிக விரிவாகக் குறிப்பிடுகிறது. சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகையில் பதினொரு பாடல்களிலும் தம்மைக் குறிப்பிட்டுள்ளார். திருத்தொண்டத்தொகையின் ஒவ்வோர் அடிக்கும் விளக்கம் தரும் நோக்கமுடையவர் நம்பியாண்டார் நம்பி. அதனால் சுந்தரர் வரலாற்றைப் பதினொரு பாடல்களில் விரிவாகப் பாடும் வாய்ப்பினை அமைத்துக் கொண்டுள்ளார் என்பது உளங்கொளத்தக்கது.

நம்பியாரூரர் என்னும் பெயருடைய இவர், வெண்ணெய் நல்லூர் இறைவனால் தமிழ்ப் பழ ஆவணங்காட்டித் தனக்கு, அவர் குடி முழுதும் வந்து ஆட்படும் படியாக வழக்கிட்டு 'வன்தொண்டர்' என்று ஏற்கப் பெற்றவர்.[120] திருவருட்டுறை இறைவனுக்கு ஆட்பட்டமையால் பொருள் பற்றில்லாதவராக ஆகியவர்.

இறைவனை அடைந்தோர்க்கு மயக்க நிலையை நீக்கி உயர்ந்த வழியைக்காட்ட வல்லவர்.[121]

இவர் திருப்பூந்துருத்தி, வேள்விக்குடி முதலிய இடங்களுக்குச் சென்று இறைவன் மீது பதிகம் பாடியவர்.[122]

திருவாரூரில் இறைவன் திருவடியைப் புகழ்ந்துபாடி ''தம்பிரான் தோழர்'' என்னும் பெயரைப் பெற்றவர்.[123]

இறைவனையே பற்றுக் கோடாகக் கொண்ட சங்கிலி நாச்சியாரைத் திருமணம் செய்து கொண்டவர்.[124]

பரவையார் இல்லத்தில் ஆரூரருக்கு மாலையும் அடைக் காயும் தந்த கூனனும் குருடனும் கூன்நீங்கவும், கண் பெறவும் ஆகிய அற்புதங்களை நிகழச்செய்தவர். இக்குறிப்பால் இவர் பரவையைத் திருமணம் செய்து கொண்ட செய்தி விளங்கு கின்றமை குறிப்பிடத்தக்கது.[125]

ஆரூரர் திருப்புகலூரில் செங்கற்களைச் செம்பொன்னாக இறைவனால் மாற்றிக் கொடுக்கப்பெற்றவர். திருநாட்டியத் தான்குடி இறைவனைப் போற்றியவர்.[126]

திருப்புக்கொளியூரில் முதலையுண்ட பிள்ளையை உயிர்பெற்று எழச்செய்தார். அவினாசியில் இறைவனைப் பாடிப்பரவி, திருமுருகன் பூண்டியில் வேடர்களை வெற்றி கொண்டார்.[127]

திருவொற்றியூரில் சங்கிலியை மணந்து ஒற்றியூர் இறைவனைப் பணிந்து பாடிப்பரவியவர்.[128]

திருமுதுகுன்றில் இறைவனால் கொடுக்கப்பட்ட பொற் காசுகளை அங்கே கைக்கொள்ளாமல் திருவாரூரில் பெற்றுக் கொண்டார்.[129]

ஆரூரரையும், சேரமான் பெருமாள் நாயனாரையும் தவிர்த்து இறைவனை நேரடியாகக் கயிலையில் சென்று கண்டவர்கள் யாரும் இல்லை.[130]

இங்ஙனம் சுந்தரர் வரலாற்றுச் செய்திகள் திருவந்தாதியில் பரவலாக இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. நம்பியாண்டார் நம்பிகள் நம்பியாரூரர்க்கே மிகுதியான பாடல்களைப் பாடியுள்ளார் என்பதும் கருதத்தக்கனவாகும்.

சுந்தரருடைய வரலாறு பெரியபுராணத்தில் தொடக்கம் முதல் இறுதிவரை பல இடங்களிலும் கூறப்பட்டுள்ளது. ஆரூரராக இவ்வுலகில் பிறந்த சுந்தரர், அதற்கு முன்பு கயிலாயத்தில் ஆலால சுந்தரராக இறைவனுக்குத் தொண்டு செய்தவர்; இறைவியின் பணிப்பெண்களாகிய கமலினி, அணிந்திதை ஆகியோரிடத்து மனம் போக்கியமையால் இறைவனருளால் இவ்வுலகில் தோன்றியவர் என்னும் குறிப்புப்பெரிய புராணப் பாயிரத்தால் அறியப்படுகின்றது.[131]

திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில் சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் நம்பியாரூரர் மகனாகத் தோன்றினார். நரசிங்கமுனையரையர் என்னும் குறுநில மன்னரால் வளர்க்கப் பெற்றார். ஆரூரர், சடங்கவி சிவாசாரியார் மகளைத் திருமணம் முடிப்பதாக உறுதிசெய்து திருமணச் சடங்குகளை நிகழ்த்திக் கொண்டிருந்தார். இறைவன் முதியவேடத்தில் வந்து தடுத்தாட் கொள்ளப் பெற்றார். திருவெண்ணெய்நல்லூரில் ஆவணங்காட்டி ஆட்கொள்ளப்பெற்றார்.[132] திருவதிகையில் திருவடி தீக்கை பெற்றார்.[133] பல தலங்களையும் பாடிப்பரவிய பின் திருவாரூர் வந்தார். திருவாரூரில் விறன்மிண்டர் கொண்ட சினத்தை மாற்றத் திருத்தொண்டத் தொகைபாடினார். பரவையாரைத் திருமணம் செய்து கொண்டார்.

பரவையாருக்கு அளிப்பதற்காகக் குண்டையூர் கிழார் வாயிலாக நெல்பெற்றார்.[134]

கோட்புலியார் இல்லத்தில் விருந்துண்டு சிங்கடி, வனப்பகை என்னும் அவர்தம் மக்களைத் தம்மக்களாகப் போற்றினார்.[135]

திருப்புகலூரில் பங்குனி உத்திரத்திருநாளில் செங்கல் பொன்கல்லாக அருளப்பெற்றார்.[136]

திருபாச்சிலாச்சிராமத்தில் பொன் பெற்றார்.[137] இறைவனால் கூடலையாற்றூருக்கு வழிகாட்டப்பட்டார். திருமுதுகுன்றத்தில் பெற்ற பொன்னை மணிமுத்தாற்றில் இட்டு ஆரூர்க் கமலாலயத்தில் பெற்று மகிழ்ந்தார்.[138]

திருக்குருகாவூரில் இறைவன் அளித்த பொதிசோறு உண்டார்.[139] திருக்கச்சூரில் இறைவன் இரந்து அளித்த பிச்சைச் சோறு உண்டார்.[140] திருவொற்றியூரில் சங்கிலியாரை இறைவன் உதவியால் மணம் செய்து கொண்டார்[141] இறைவனுக்குச் செய்து கொடுத்த சூளுரையை மீறியதனால் கண்களை இழந்தார்.[142] திருவெண்பாக்கத்தில் ஊன்று கோள் அருளப் பெற்றார். ஏகம்பத்தில் இடக்கண் பெற்றார்.[143] திருவாரூரில் வலக்கண்ணையும் பெற்றார்.[144] பரவையார் புலவிதீரச் சிவபெருமானைத் தூதுவிட்டார்.[145] தூதுவிட்டமையைக் கேள்வியுற்ற கலிக்காமர் என்னும் அடியவர் நம்பியாரூரரைச் சினந்து நம்பியாரூரரைக் காண நேரிட்டால் உயிர் துறப்பது என உறுதிபூண்டார். இறைவன் ஏயர்கோனுக்குச் சூலைநோயைக் கொடுத்து நம்பியாரூரரைக்காண வழிவகுத்தபோது, ஏயர்கோன் உயிரைப்போக்கிக் கொண்டார்.[146] பின்னர் இறைவனருளால் உயிர்பெற்று நம்பியாரூரரைக் கண்டு நட்பாயினார்[147]

மலைநாட்டுக்குச் செல்லும் வழியில் திருப்புக்கொளியூரில் முதலையுண்ட பாலகனை மீட்டார்.[148] சேரமான் பெருமான் நாயனார் இவரைத் திருவஞ்சைக்களத்தில் இருக்குமாறு செய்து பல தலங்களை இருவரும் வழிபட்டனர். பின்னர் இறைவன் அருளால் வெள்ளானையின் மீது ஏறித் திருக்கயிலை சென்றடைந்தார். அவருடன் சேரமான் பெருமானும் குதிரை மீது அமர்ந்து கயிலை சென்றார் என்னும் விரிவான செய்திகள் பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ளன.[149]

பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள சுந்தரரின் விரிவான வரலாற்றைப் புராணசாரம்,

"தண்கயிலை யதுநீங்கி நாவலூர் வாழ்
சைவனார் சடையனார் தனயராய்

மண்புகழ அருட்டுறையான் ஓலைகாட்டி
மணம்விலக்க வன்தொண்டர் அதிகைசேர்ந்து
நண்பினுடன் அருள்புரிய ஆரூர்மேவி
நலங்கிளரும் பரவைதோள் நயந்துவைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண்டேத்தும்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பினாரே

செப்பலரும் குண்டையூர் நெல்லழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாச்செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருள் ஆற்றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்துநாதன்
ஒப்பில்தனித் தூதுவந்தா றூடுகீறி
உறுமுதலை சிறுமதலை உமிழநல்கி
மெய்ப்பெரிய களிறேறி அருளால்சேர
வேந்தருடன் வடகயிலை மேவினாரே''[150]

என்னும் இருபாடல்களால் (2,3) சுருக்கிக் கூறியுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.

திருத்தொண்டர் திருவந்தாதியில் குறிப்பிடப்பட்ட கூனன், குருடன் ஆகியவர்கள் பற்றிய செய்திகள் திருத்தொண்டர் புராணத்தில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. திருத்தொண்டர் திருவந்தாதியில் சுந்தரருடைய வரலாறு விரிவாக இடம்பெற்றுள்ளது. சேக்கிழார் மேலும் முயன்று பலசெய்திகளைத் திரட்டிச் சுந்தரருடைய வரலாற்றை ஆராய்ந்து கூறியுள்ளார் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

தொண்டும் விளங்கத் தோன்றும் அடியார்கள்

திருத்தொண்டத் தொகையில் தொண்டர்களுடைய பெயரோடு குறிப்பாக அவர்களுடைய தொண்டும் கூறப் பெற்றுள்ள அடியார் பலர் காணப்படுகின்றனர். இல்லையே என்னாத இயற்பகை, வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருள், மலைமலிந்த தோள் வள்ளல் மானக்கஞ்சாறன், மும்மையால் உலகாண்ட மூர்த்தி, மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க வெகுண்டெழுந்த தாதையை மழுவினால் எறிந்த அம்மையான் அடிச்சண்டிப் பெருமான், திருநின்ற செம்மையே செம்மையாகக்

கொண்ட திருநாவுக்கரையன், வம்பறா வரிவண்டு மணநாற மலரு மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா வெம்பிரான் சம்பந்தன், வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே மறவாது கல்லெறிந்த சாக்கியன், சீர்கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலி, கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவான், கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன், கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த கணம்புல்லநம்பி, நிறைகொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன், நறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார், கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன், பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணை, அடல் சூழ்ந்த வேனம்பி கோட்புலி, தென்னவனாய் உலகாண்ட செங்கணான் என்னும் பதினெண்மர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1. இயற்பகையார்

இயற்பகையார் அடியார்கள் கேட்பதை இல்லை என்னாது கொடுக்கும் இயல்புடையவர் என்பது திருத்தொண்டத் தொகையில் கூறப்பட்டுள்ளது[151] இல்லையே என்பதற்குத் தம்மனைவியையே கொடுக்க மாட்டேன் என்று மறுத்துக்கூற இயலாத இயற்பகை எனவும் பொருள் கொள்ளுவதற்குத் திருத் தொண்டத் தொகைத் தொடர் இடந்தருகிறது. இதனைச் சிவஞான சுவாமிகள் தமது திருநாமக் கோவையில் ''இல்லை அளித்த இயற்பகையார்''[152] எனக் கூறுவதால் அறியலாம்.

இயற்பகையார் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்தவர். அடியார்கள் கேட்கின்ற எந்தப் பொருளையும் இல்லை என்னாது கொடுக்கும் இயல்பினர். சிவபெருமான் அடியவர் கோலத்தில் வந்து அவர் மனைவியைக் கேட்குங்காலத்தும் மறுக்காது கொடுத்துப் புகழ் கொண்டவர்.[153]

இவர் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்தவர். இறைவன் மறையவர் வடிவத்தில் வந்து இயற்பகையார் மனைவியை வேண்ட இயற்பகையார் மனமுவந்து கொடுத்தார். அதனால் வெகுண்டெழுந்த சுற்றத்தாருடன் குலத்தோடு போரிட்டு அவர்களையும் வெட்டி வீழ்த்தினார். இறுதியில்

இறைவனால் அழைத்துக்கொள்ளப்பெற்றார். நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறறிந்து புராணமாகப் பாடிய சேக்கிழாருடைய இக்கருத்துக்கள் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.[154]

2. மெய்ப்பொருளார்

மெய்ப்பொருளார் வெற்றி மிகவுடைய வல்லரசரென்று திருத்தொண்டத்தொகை சிறப்பிட்டுக் காட்டியுள்ளது [155]

இவர் சேதிநாட்டு மன்னர், மெய்த்தவமுடையான்போல வந்த ஒரு பொய்த்தவன் சினந்து இவரை வஞ்சமாகக் கொல்ல முற்பட்டான். அவனைக் கொல்லுக என்று ஆணையிட வேண்டியவர். அவருடைய பாதுகாவலனாகிய தத்தனைப் பார்த்து ''நம்மவர்'' என்று கூறி வானுலகம் சேர்ந்தார் என்பவை அந்தாதியால் அறியப்படும் செய்திகளாகும்.[156]

இவர் சேதிநாட்டைச் சேர்ந்த திருக்கோவிலூரைத் தலை நகராகக்கொண்டு ஆண்டவர் மலாடர் மரபில் வந்த மன்னர். பொய்யாயினும் வேடப்பொலிவையும் மெய்ப்பொருள் என்று தெளிந்த சிந்தையர். இவருடைய பகைவன் இவர்முன் தோற்றோடி, மாதவர்போல் வேடம்பூண்டு இவரை நெருங்கி வந்து வாளால் வன்மை புரிந்தான். அவனை அழிக்க வந்த தத்தனைப் பார்த்து, தத்தனுடைய பகையழிக்கும் செயலைத் தடுத்ததோடு வஞ்சனை செய்தவர்க்கு வாழ்வளித்து இறைவன் அருளைப் பெற்றவர்.[157] மெய்ப்பொருளார், தவவேடத்தையே மெய்ப்பொருள் என்று நினைந்து வணங்கியவர். ''மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே''[158] என்ற கருத்துக்கு ஏற்ப வேடப்பொலிவு ஒன்றே இவர் வணங்கிய தெய்வமாக இருந்தது. அக்கொள்கையில் தாம் இறக்கும் வரையில் இடைவிடாது நின்று வெற்றி பெற்றவர் என்னும் குறிப்பினையே திருத்தொண்டத்தொகை ''வெல்லுமா மிகவல்ல'' எனக் கூறியுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.

3. மானக்கஞ்சாறர்

மானக்கஞ்சாறரை இரு அடைகளுடன் திருத்தொண்டத் தொகை குறிப்பிடுகின்றது. ஒன்று அவருடைய வெற்றிக்குரிய

தோள்; மற்றொன்று அவருடைய வள்ளன்மை. யாரும் கொடுப்பதற்கு முன்வராத பொருளை அடியார் கேட்டார் என்பதற்காக உடனே கொடுத்துப் புகழ் எய்தியவர் என்னும் குறிப்புப்பட "வள்ளல் மானக்கஞ்சாறன்" எனத் திருதொண்டத் தொகை கூறியுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[159]

மானக்கஞ்சாறனார் தஞ்சாவூர் என்னும் பகுதியினர். தவவடிவோடு வந்த ஒருவர் தம்முடைய பூணூலுக்கு ஆகும் என மானக்கஞ்சாறரின் மகள்தம் கூந்தலைக்கேட்க எவ்வகைச் சலனமும் இல்லாமல் அதனை அரிந்து கொடுத்தார் என்னும் செய்திகள் அந்தாதியில் இடம்பெற்றுள்ளன.[160]

மானக்கஞ்சாறர் தம் மகளை ஏயர்கோன் கலிக்காமருக்கு மணமுடிக்கத் தொடங்கினார். அதுபொழுது மாவிரத சமயத் தலைவராக ஒரு பெரியவர் அங்கு வந்து சேர்ந்தார். மானக் கஞ்சாறரின் மகளுடைய கூந்தலைப் பார்த்து, அது தம்முடைய பூணூலுக்கு ஆகும் எனக் கூறினார். உடனேயே மணமகளாக அமரவிருக்கும் தம் அருமை மகளின் கூந்தலை அரிந்து மானக் கஞ்சாறர் அப்பெரியவருக்கு அளித்தார். இறைவனே அவ்வாறு வந்தார் என்பது அவர் மறைந்து கூந்தல் வளருமாறு செய்தமையால் தெரிந்தது. குறிப்பிட்டபடி ஏயர்கோன் கலிக்காமர் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்தார் என்னும் விரிவான செய்திகள் திருத்தொண்டர் புராணத்தில் காணப் படுகின்றன.[161]

அடியவர் வடிவில் வந்தவர் மாவிரதத் தலைவனேபோல் வந்தார் என்பதும், மணமகன் ஏயர்கோன் கலிக்காமர் என்பதும் திருத்தொண்டர் புராணத்தில் காணப்படும் விரிவான செய்திகள். இவை புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.[162]

4. மூர்த்தியார்

மூர்த்தியார் உலகாளும் பேற்றினைப் பெற்றவர் எனினும் திருநீறு, உருத்திராக்கம், சடாமுடி என்ற மூன்றையுமே கொண்டு ஆட்சி நடத்தியவர் என்னும் குறிப்புப் புலப்படத் திருத் தொண்டத் தொகை இவரைக் கூறியுள்ளது.[163]

மூர்த்தியார் மதுரையை ஊராகக் கொண்டவர். நாள் தோறும் ஆலவாய்ச்சொக்கன் ஆலயத்தில் சந்தனம் அரைத்துக் கொடுக்கும் இயல்பினர். இவருக்குச் சந்தனக் கட்டைகள் கிடைக்காத வண்ணம் அமணர்கள் சூழ்ச்சி செய்தனர். அதனால் தம்முடைய முழங்கையையே சந்தனக்கட்டையாக நினைந்து பாறையில் தேய்த்தவர். அதனால் அரன் உலகாளும் பேறு பெற்றவர் என்னும் செய்திகள் அந்தாதியால் அறியப் படுகின்றது.[164]

மூர்த்தியார் மதுரையில் வணிகர் குலத்தில் தோன்றியவர். ஆலவாயருக்கு முழங்கையையே சந்தனமாகத் தேய்த்துக் கொடுக்க முற்பட்டனர். அத்தகைய துன்பமும், அமணர்தம் வஞ்சனையும் தவிர மன்னன் உயிர் இழந்த நிலையில் இறைவனால் ஆட்சி நல்கப் பெற்றவர். தம் சடாமுடியையே முடியாகவும், உருத்திராக்கம் போன்ற சிவ வேடத்தையே அணியாகவும், திருநீற்றையே மணப்பொருளாகவும் பூசி உலகு ஆண்டவர் என்னும் செய்திகள் பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றை உமாபதிசிவனார் சுருக்கி உரைத்துள்ளார்.[165] ''மும்மை'' என்ற சொல்லுக்கு மூன்று எனவும், அவை சடை, உருத்திராக்கம், திருநீறு எனவும் விளக்கம் செய்த சேக்கிழார் போற்றுதற்கு உரியவர் ஆவார்.

5. சண்டீசர்

சண்டீசர் இறைவனுடைய திருமேனியை உண்மை அன்போடு வழிபடுங்கால் அதற்கு இடையூறாக வந்த தந்தையை மழுவினால் வெட்டிய செயல் திருத்தொண்டத் தொகையினால் அறியப் படுகின்றது.[168]

சண்டீசர் சேய்ஞலூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் தம் தந்தையார் காலிரண்டையும் மழுவால் எறிந்து துணித்தார், ஈசனுடைய முடிமேல் பால் சொரிந்து, மலர் சூட்டி வழிபட்டார் என்னும் செய்திகள் அந்தாதியில் இடம் பெற்றுள்ளன.[167]

சேய்ஞலூரில் எச்ச தத்தன் என்பவரின் மகன் விசாரசருமன் என்னும் பெயரினர். அந்தணர் குலத்தில் தோன்றியவர்.

விசாரசருமர் நாள்தோறும் மாடுமேய்க்கும் தொழிலை மேற் கொண்டவர். அவ்வூரில் ஓடுகின்ற மண்ணியாற்றின் தென்கரையில் ஆத்திமரத்தின்கீழ் மணலால் இலிங்கம் அமைத்து அதற்குப் பாலாபிடேகம் செய்து வந்தார். ஒவ்வொருநாளும் பாலின்றி வீட்டிற்கு வருகின்ற மாடுகளைப்பற்றிக் கேள்வியுற்ற தந்தையார், மறைந்திருந்து மகனின் செயலைக் கண்காணிக்கின்றார். இலிங்கத்திற்கு வைத்திருந்த பாலினைக் காலால் இடறினார். அக்கால்கள் துணிப்புண்டு விழுமாறு மழுவினால் விசாரசருமர் எறிந்தார். இறைவன் காட்சி தந்து சண்டீசர்பதம் அருளி ஆட்கொண்டார் என்னும் செய்திகள் பெரியபுராணத்தின் சுருக்கமாகப் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன.[168]

சேக்கிழார் சண்டீசருடைய முன்னைப்பெயர் விசார சருமர் என்பதும், அவருடைய தந்தையார் பெயர் எச்சதத்தன் என்பதும், இலிங்கம் அமைத்து வழிபட்ட இடம் இன்னது என்பதும் ஆராய்ந்து கண்டு வெளிப்படுத்தியுள்ளமை போற்றுதற்குரிய தாகும்.

6. திருநாவுக்கரசர்

இறைவன் அருள்வழி ஒழுகும் இயல்புடையவர் நாவுக்கரசர் என்னும் சிறப்பினைத் திருத்தொண்டத் தொகை குறிப்பிடு கின்றது.[169]

இவர் திருவாமூரினர். நல்லூரில் சிவபெருமாள் திருப் பாதங்கள் சென்னியில் வைக்கப்பெற்றவர். இப்பிறப்பு அறுவதற்காக வீரட்டான இறைவர் பதம்தொழுதார். பகைவர் களுடைய விடம் அடையாமல் அமுதாகக் கொள்ளப்பெற்றவர். மறைக்காட்டில் கதவு திறக்கப்பாடியவர். கடலில் கல்மிதப்பில் கரையேறியவர். சைவ சமயத்திற்கு அணியாகத் திகழும்படியான அருந்தமிழைத் தந்தவர் என்னும் குறிப்புக்கள் அந்தாதியில் கிடைக்கின்றன.[170]

திருவாமூரில் வேளாளர்குலத்தில் குறுக்கையர் குடியில் புகழனார் என்பவருக்கு மகனாகத் தோன்றியவர். திலகவதி யாருக்கு இளவலாக "மருள் நீக்கியார்" என்னும் பெயரோடு தோன்றினார். சமணசமயஞ் சார்ந்து சூலை நோயால் ஏற்பட்ட

துயரம் நீங்கத் தமக்கையாரிடம் திருநீறு பெறுவதற்காகப் பாடலிபுத்திரத்தை விடுத்துத் திருவதிகை வந்தார். தமக்கையார் அளித்த திருநீற்றினாலும், வண்டமிழாலும் நோய் தீர்ந்தார். வாக்கின் மன்னர் என்னும் சிறப்புப் பெற்றார். சமணர்கள் சூழ்ச்சியோடு செய்த நீற்றறை, விடம், யானை, கடல் இவற்றின் கொடுமைகளிலிருந்து நீங்கினார். சூலமும் இடபக்கொடியும் தம் கைகளில் பொறிக்கப் பெற்றார். அப்பூதியாரின் மகனின் பாம்புவிடத்தை நீக்கினார். திருவீழிமிழலையில் காசுபெற்றார். திருமறைக் காட்டில் கதவு திறப்பித்தார். ஐயாற்றில் கயிலைக் காட்சி கண்டார். திருப்புகலூரில் இறைவன் பாதங்களை அடைந்தார் என்பவை சேக்கிழார் ஆராய்ந்து கண்ட திருநாவுக் கரசர்தம் வரலாற்றுச் செய்திகளாகும்.[171]

புராணசாரத்தில் நாவுக்கரசர் வரலாற்றின் சுருக்கத்தைக் காண இயல்கின்றது.[172] நாவுக்கரசரின் வரலாறு பற்றி நாவுக் கரசரின் தேவாரப் பாடல்களில் குறிப்பாகவும், வெளிப்படை யாகவும் காணப்படுகின்ற குறிப்புக்கள் புராணத்திலும், புராண சாரத்திலும் தொகுக்கப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

7. ஞானசம்பந்தர்

ஞானசம்பந்தர் கொன்றையணிந்த சிவபெருமான் அடியல் லாமல் பிற தெய்வங்களை வழிபடாத இயல்புடையவர் என்னும் குறிப்புப் புலப்படத் திருத்தொண்டத்தொகை இவரை அறிமுகப் படுத்துகின்றது.[173] ஞானசம்பந்தர் ''பரசமய கோளரி'' என்று சேக்கிழாரால் கூறப்பட்டுள்ளார். அக்குறிப்பினைத் திருத் தொண்டத்தொகை கொண்டிருப்பதைக் காணலாம்.

ஞானசம்பந்தர் சீகாழிப் பகுதியினர், குழந்தைப் பருவத்தில் அம்மையின் அருள் பெற்றமையால் பாடும் தகுதிபெற்றார். சமணர்கள் வலி தொலைத்தவர். மங்கையர்க்கரசியார், குலச் சிறையார், கோச்செங்கட்சோழர், முருகநாயனார், நீலநக்கர் என்பவர்கள் பெயர்களைத் தம் பதிகத்தில் இடம்பெறச் செய்துள்ளார். நம்பியாண்டார் நம்பிகளின் அந்தாதியிலும் பிற

இலக்கியங்களிலும் இடம் பெற்றவர்.[174] ஆளுடைய பிள்ளையார் பற்றி நம்பி சில தனி நூல்களையும் இயற்றியுள்ளார் என்பது கருதற்குரியது.

சீகாழிப்பதியில் கௌணியர் குலத்தில் தோன்றிய சிவபாத இருதயருக்கு மகனாகத் தோன்றியவர் ஞானசம்பந்தர். அழுது உள்ளம் கவர்ந்து உமையம்மையால் ஊட்டப்பெற்ற ஏழிசையின் அமுதுண்டவர். இறைவனால் கொடுக்கப்பெற்ற தாளம், முத்துச் சிவிகை, முத்துப்பந்தர் பெற்றவர். ஒரு பெண்ணிற்கு ஏற்பட்ட முயலகன் நோயை அகற்றினார். தந்தையாருக்காகப் பொற்கிழி பெற்றார். திருமருகல் என்னும் இடத்தில் வணிகனுடைய பாம்புவிடத்தை நீக்கினார். திருவீழிமிழலையில் காசு பெற்றார். திருமறைக்காட்டில் கதவம் மூடப்பாடினார். பாண்டியன் வெப்புநோய் நீர்த்தார். தீயில் ஏட்டினை இட்டு மலர்போன்று மீட்டார். ஆற்றில் எதிரேறும்படியாக ஏட்டினைச் செய்தார். சமணர்களைக் கழுவில் ஏற்றினார். பதிகம் பாடி ஓடத்தை அக்கரையில் சேரும்படியாகச் செய்தார். புத்தன் தலையில் இடிவிழுமாறு செய்தார். மலட்டுப் பனையைக் காய்க்குமாறு செய்தார். எலும்பைப் பூம்பாவையாக உயிர்பெறச் செய்தார். மணவிழா நாளில் இறைவனடி சேர்ந்தார் என்னும் செய்திகள் பெரியபுராணத்தின் சுருக்கமாகப் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன.[175]

திருஞானசம்பந்தர்புராணம் பெரியபுராணத்தில் பெரிய அளவில் இடம்பெற்றுள்ள புராணமாகும். 1256 பாடல்களால் ஞானசம்பந்தர் புராணத்தை விரிவாகச் சேக்கிழார் பாடியுள்ளார். அதனால் ''பிள்ளைபாதி புராணம்பாதி'' என்னும் வழக்கும் ஈண்டு நினைக்கத்தக்கது. அத்தகைய விரிவான செய்திகளை முழுமையாக நினைவில் கொணரும்வகையில் இருபாடல்களில் அமைத்துள்ள உமாபதிசிவனாரின் சுருக்கி உரைக்குந்திறம் போற்றுதற்குரியது.

8. சாக்கியனார்

''உமையொருபாகனாக அமைந்துள்ள இறைவனை ஒருபொழுதும் மறவாமல் கல்லால் அருச்சித்த சாக்கியன்''

எனத் திருத்தொண்டத்தொகை சாக்கிய நாயனாரைக் குறிப் பிடுகிறது.[176] இவருடைய ஊர் சங்கமங்கை என்பதாகும். காஞ்சிபுரத்தில் ஏகம்பநாதரைச் செங்கல்லால் எறிந்து வழி பட்டவர் என்பதும், காவியுடையுடுத்த துறவி என்பதும் அந்தாதியால் அறியப்படும் செய்திகளாகும்.[177] ''சாக்கியன்'' என்ற சொல்லால் இவர் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர் என்பது விளங்குகின்றது.

சங்கமங்கையில் வேளாண் குடியில் வந்தவர் சாக்கியர். காஞ்சியில் பௌத்தத்தில் இருந்து கொண்டே பௌத்த நெறியி லுள்ள தவறுகளையும், சைவத்தினுடைய உயர்வுகளையும் உணர்ந்தவர். இருப்பினும் பௌத்த வேடத்தைத் துறவாமல் சிவபெருமானை நாள்தோறும் செங்கல்லால் எறிந்து வழிபட்டுக் கொண்டு வந்தார். ஒருநாள் மறந்து விட்டிருக்கவும் உணவு கொள்ளாது மீண்டும் சென்று செங்கல் எறிகின்ற நிலையில் இறைவன் மகிழ்ந்து காட்சிதந்த செய்தியைப் பெரியபுராணம் கூறுகின்ற செய்தியாகப் புராணசாரம் குறிப்பிடுகின்றமை கருத்தில் கொள்ளத்தக்கது.[178]

9. சிறப்புலியார்

சிறப்புலியார் புகழ்பூத்த வள்ளலாக இருந்தவர் என்னும் குறிப்புத் திருத்தொண்டத்தொகையால் அறியப்படுகின்றது.[179]

சிறப்புலியார் ஆக்கூரில் மறையவர் மரபில் வந்தவர். திருநீறும், உருத்திராக்கம் முதலிய சாதனங்களும் வணங்கும் தவநியம முடையோர்க்கு வரிசைகள் பலவற்றையும் கொடுத்து உதவுகின்றவர். அதனால் புகழ் மிக்கவர் என்னும் செய்திகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் இடம் பெற்றுள்ளன.[180]

திருத்தொண்டர் திருவந்தாதியில் இடம்பெற்றுள்ள செய்தி களோடு வேதத்தையும் யாகத்தையும் போற்றும் இயல்பினர் என்பதும், திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுகின்றவர் என்பதும் பெரியபுராணச் செய்திகளாகப் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன.[181] நம்பியாண்டார் நம்பிகள் சிறப்புலியாரின் வரலாற்றில் இன்றியமையாத குறிப்புக்களை முழுமையாகத் தொகுத்துள்ளார் என்று கருதுதல் வேண்டும்.

10. கழறிற்றறிவார்

கழறிற்றறிவார் சேரமான் பெருமாள் நாயனார் என அறியப்பெற்றவர். எனினும் இவரைச் சுந்தரமூர்த்தியார், சேரமான் பெருமாள் நாயனார் என அறிமுகப்படுத்தாமல் "கழறிற்றறிவார்" என அறிமுகப்படுத்தியுள்ளார்.[182] அஃறிணை உயிர்கள் பேசுகின்ற குறிப்புரைகளையும் உணரக்கூடிய ஆற்றலுடையவர் என்னும் பொருளில் "கழறிற்று அறிவார்" எனக் கூறப்பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. இவர் பெரும் கொடைஞர் என்பது "கார் கொண்ட கொடை"[183] என்னும் தொகைநூல் அடையால் விளங்குகின்றது.

கழறிற்றறிவார் மன்னராகத் தோன்றியவர் என்பதும் பாண்டியனும் வணங்கத்தக்க மன்னர் மன்னனாக வாழ்ந்தார் என்பதும் அறியத்தக்கன. வண்ணான் ஒருவன் உவர்மண் தன் மீது நீறுபோலப் பொலிய எதிர்ப்பட்ட, அவனைச் சிவனடியராக நினைந்து வணங்கினார். அவன் தன்னை வண்ணான் எனக் கூறவும் அவனுக்கும் தாம் அடிமை எனக் கூறிக் கொண்டவர். சுந்தரருக்குத் தோழராக இருந்தவர். சுந்தரர் இறைவனால் கொடுக்கப்பட்ட யானையின் மீது செல்லுங்கால், இவர் குதிரை மீது ஏறி அதனை உடன் செலுத்தினார் என்னும் குறிப்புக்கள் அந்தாதியால் பெறப்படுகின்றன.[184]

கழறிற்றறிவாராகிய சேரமன்னர் கொடுங்கோளூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர். அஃறிணை உயிர்கள் பேசுகின்றவற்றையும் அறியும் இயல்பினர்; இறைவனுடைய சிலம்போசையைக் கேட்டவர்; சுந்தரருக்கு நண்பர்; வண்ணானையும் அடியவராக எண்ணியவர். இறைவனால் கொடுக்கப்பட்ட திருமுகப்பாசுரத்தைப் பாணபத்திரன் வாயிலாகப் பெற்றவர். சுந்தரருடன் கயிலைக்கு யானையோடு ஒத்த நிலையில் குதிரையைச் செலுத்தியவர். இத்தகைய திருத்தொண்டர் புராணச் செய்திகள் புராண சாரத்தில் இடம் பெற்றுள்ளன.[185] இவர் தலைநகர் கொடுங்கோளூர் என்பதும், இறைவனுடைய சிலம்போசையைக் கேட்டவர் என்பதும், திருமுகப்பாசுரம் வாங்கியவர் என்பதும் பெரியபுராணத்தில் காணப்படும் புதிய செய்திகளாகும்.[186]

11. கலிக்கம்பர்

கலிக்கம்பர் ''கைதடிந்த வரிசிலையான்''[187] என்னும் தொடருடன் அறிமுகப்படுத்தப்பட்ட அடியவர். தொண்டு செய்யத் தயங்கிய தம் மனைவியின் கையை வெட்டியமை கலிக் கம்பரின் உயர்ந்த உள்ளத்து உணர்வை வெளிப்படுத்தி அவரின் தொண்டு நெறியைப் புலப்படுத்துகின்றது. கையை வெட்டுகின்ற அளவிற்கு வீரமிக்கவராகவும் கலிக்கம்பர் விளங்கினார் என்னும் குறிப்புப் புலப்பட ''வரிசிலையான்'' என்னும் தொடர் காணப் படுகின்றது.

கலிக்கம்பர் பெண்ணாகடத்தில் வாழ்ந்தவர். அடியார்களுக்கு அமுதூட்டுகின்ற தொண்டினைச் செய்தவர். அவரிடத்தில் பணி செய்த ஒரு பணியாளர் துறவுபூண்டுத் தொண்டராக வந்தார். தொண்டர்களின் அடிகளை நீரால் விளக்கி அமுதுகொடுக்க முற்படும்நிலையில், கலிக்கம்பர், அவருக்கும் அடிகளைக் கழுவ முனைந்தார். மனைவியார் நீர்வார்க்காமல் வெட்கப்பட்டு நின்றார். அவருடைய கைகளைக் கலிக்கம்பர் வெட்டி வீழ்த்தினார் என்னும் செய்திகள் அந்தாதியால் அறியப்படுகின்றன.[188]

அந்தாதியில் கூறப்படுகின்ற செய்திகளோடு திருத்தொண்டர் புராணத்தில் கலிக்கம்பர் தம்மனைவியின் கைகளை வெட்டிய பிறகு அவள் செய்கின்ற பணியையும் தாமே செய்து அரன் அருள் பெற்றார் என்னும் செய்தி இடம்பெற்றுள்ளது.[189] சேக்கிழார் அந்தாதியில் கூறப்பட்ட செய்திகளை விரித்துக் கூறியுள்ளார் எனலாம். புராணசார ஆசிரியர் அவற்றைச் சுருக்கிக் கூறியுள்ளார்.[190]

12. கணம்புல்லநம்பி

''கணம்புல்ல நம்பி இறைவனுடைய கழலடியையே தமக்குக் காப்பாகக் கொண்டிருந்தவர் என்னும் குறிப்பு திருத்தொண்டத் தொகையில் இடம்பெற்றுள்ளது.[191]

கணம்புல்லர் இருக்குவேளூர் என்னும் ஊரில் வளமான குடும்பத்தில் தோன்றிக் காலப்போக்கில் வறுமையுற்றவர். தில்லையில் 'புலீச்சரம்' என வழங்கும் இளமையாக்கினார் கோயிலில் புல்லால் விளக்கெரித்தவர். இச்செய்திகள் அந்தாதியில்

காணப்படுகின்றன.[192] இவருடைய பெயரே ''கணம்புல்லர்'' என்று இருப்பதால் ''கணம்'' என்னும் ஒருவகைப் புல்லால் இவர் பெயர் அமைந்துள்ளமையைக் காணலாம். எனவே இவருடைய பெயரளவினாலேயே இவருடைய செயலும் தோன்றுகிறது எனலாம்.

இருக்குவேளூர் என்பது வட வெள்ளாற்றுக்குத் தென்பால் அமைந்த நகராகும். தில்லையில் புலீச்சரத்தில் நாள்தோறும் ''கணம்புல்'' என்னும் ஒருவகைப் புல்லைக்கொண்டு விளக்கெரித்து வந்தார். ஒருநாள் அந்தப் புல்லும் கிடைக்காமல் போகவே தம்முடைய முடியைத் திரியாக அமைத்து விளக்கேற்றினார். அவருக்கு இறைவன் காட்சிதந்து அருள் செய்தான் என்னும் குறிப்பு, திருத்தொண்டர்புராணத்தால் அறியப்படும் செய்திகளாகப் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன என்பது கருதத் தக்கது.[193]

13. நெடுமாறர்

''நெடுமாறன்'' என்பது கூன் நிமிர்ந்தமையால் கூன் பாண்டியன் பெற்ற காரணப்பெயர். ''நின்றசீர்'' என்ற அடையால் நிலைபேறுடைய புகழ் இவனுக்கு உரியது என்னுங் குறிப்புப் புலப்படுகிறது. நெல்வேலியை வென்ற வரலாற்றுப் புகழ் உடையவன் என்னும் குறிப்புப் புலப்படத் திருத்தொண்டத் தொகை நெடுமாறனைக் குறிப்பிடுகின்றது.[194]

ஞானசம்பந்தரை எதிர்த்து நின்று சமணர்கள் தோற்றுப் போயினர். அதனைக் கண்ட பாண்டியன் அவர்களைக் கழுவில் ஏற்றினான் என்னும் செய்திகள் அந்தாதியில் இடம் பெற்றுள்ளன.[195]

சமணர்களால் ஏற்பட்ட கலக்கமெல்லாம் ஞானசம்பந்தர் வந்தமையால் பாண்டிய நாட்டில் தீர்ந்தன. பாண்டியன் திருநீறு அணிந்து இறைவனைப் போற்றினான். மங்கையர்க் கரசியாரைத் துணைவியாகப் பெற்றமையால் மகிழ்ந்தான்; மாற்றாரைப் புறங்கண்ட இவன், ஞானசம்பந்தர் அருளைப் பெற்று விளங்கினான் என்னும் குறிப்புக்கள் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன.[196]

ஞானசம்பந்தர் மதுரையில் தங்கியிருந்தபொழுது அவருடைய மடத்திற்குச் சமணர்கள் தீ இட்டனர். அத்தீ ''பையவே சென்று பாண்டியர்க்கு ஆகவே''[197] என்னும் ஞானசம்பந்தர் வாய் மொழியால், பாண்டியன் வெப்பு நோயால் துன்புற்றான். ஞானசம்பந்தர் திருநீற்றையே மருந்தாகவும் மந்திரமாகவும் கொடுத்து அந்நோய்த் துன்பத்தை மாற்றினார். சமணர்கள் வெகுண்டு ஞானசம்பந்தரை வாதுக்கழைத்தபோது நெருப்பு வாதம், நீர்வாதம் செய்து அவர்களைத் தோற்கடித்தார். கூன் மாறனை நெடு மாறனாக மாற்றியதோடு சைவனாகவும் மாற்றி மங்கையர்க்கரசியார்க்குப் பெருமை அளித்தார் என்னும் விரிவான செய்திகள் திருத்தொண்டர் புராணத்தில் இடம் பெற்றுள்ளமை ஈண்டு கருதத்தக்கது.[198]

இச்செய்திகள் ஞானசம்பந்தர் வரலாற்றில் இடம் பெற்றிருப்பதால் நின்றசீர் நெடுமாறன் வரலாற்றில் விரிவாகக் குறிப்பிடப்படவில்லை. புராணசார ஆசிரியர் ஞானசம்பந்தர் வரலாறு கூறும்பொழுது இந்நிகழ்ச்சிகளைச் சுருக்கி உரைத்தமையால் ஈண்டுக் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

14. முனையடுவார்

முனையடுவார் ''அறைக்கொண்ட வேல்நம்பி'' என்னும் தொடரோடு திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றுள்ள அடியவராவார்.[199] இவருடைய பெயர் காரணப்பெயராகத் தோன்றுகிறது. போர் முனையில் பகைவரை அழிப்பவர் என்னும் பொருள்பட ''முனையடுவார்'' என்னும் பெயர் இவருக்கு அமைந்தது எனலாம். பகைப்புலத்திற்கு ஏற்ற அடையாக ''அறைக்கொண்ட வேல்நம்பி'' என்பதும் காணப்படுகிறது. வேலால் கொண்ட பொருளை அடியவர்கட்குச் செலவிட்டார் என்னும் செய்தி பின்னர் எழுந்துள்ள நூல்களில் காணப்படுகிறது. அடியவர்க்குத் தொண்டு செய்வதற்கு அடிப்படையாகவே இவருடைய போர்த்திறம் அமைந்துள்ளது. இதனை அறிவிக்கும் முகமாக முனையடுவார் என்னும் பெயரால் திருத்தொண்டத் தொகையில் இவர் இடம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

முனையடுவார் நீடூரில் வாழ்ந்தவர். கூலிக்காகப் போர் முனைக்குச் செல்லும் இயல்பினர். அதனால்பெற்ற பெருஞ் செல்வத்தை அடியவர்க்குக் கொடுப்பவர் என்னும் செய்திகள் திருவந்தாதியில் இடம் பெற்றுள்ளன.[200]

நீடூர் சோழநாட்டில் உள்ளது என்பதும், அடியவர்க்கு அன்னம் கொடுப்பதும் அடியவர் துன்பத்தைப் போக்குவதும் இவர் இயல்பாகும் என்பதும் திருத்தொண்டர்புராணத்தில் திருத்தொண்டத் தொகைக்கு மேலும் மிகுதியாக இடம் பெற்றுள்ள செய்திகளாகும்.[201] இவை புராணசாரத்தில் சுருக்கி உரைக்கப்பெற்றுள்ளன.[202]

15. கழற்சிங்கர்

கழற்சிங்கன் பல்லவ அரசன் என்பதும், விரிவானநாட்டை ஆண்டவன் என்பதும் ''கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர் கோன்''[203] என்னும் தொடரால் விளங்குகின்றது.

கழற்சிங்கர் தன் மனைவியோடு திருவாரூர்ப் பெருங் கோயிலுக்கு வழிபடச் சென்றிருந்தபொழுது இறைவனுக்கு வைக்கப்பெற்ற பூவினை அவர் மனைவி முகர்ந்து பார்த்தாள். அதுகண்ட ஓர் அடியவர் தேவியின் மூக்கை அரிந்துவிடவே, அவளுடைய கையன்றோ பூவை எடுத்தது என்று கூறிக் கையைத் தடிந்து அருஞ்செயல்புரிந்து அடியவர் வரிசையில் இடம் பெற்றவர் கழற்சிங்கர் என்னும் செய்திகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் இடம் பெற்றுள்ளன.[204]

திருத்தொண்டர் திருவந்தாதியில், இடம்பெற்ற செய்திகளோடு மூக்கை அரிந்த அடியவர் செறுத்துணையார் என்பது பெரியபுராணத்தில் இடம் பெற்ற செய்தியாகும்[205] இக்கருத்துக்களைச் சுருக்கமாகப் புராணசாரம் கூறியுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது.[206]

16. புகழ்த்துணையார்

புகழ்த்துணையார் இறைவனுடைய திருவடிகளில் மனத்தை எப்பொழுதும் வைத்தவர் என்று போற்றப்படுகிறார்.[207]

புகழ்த்துணையார் செருவிலிப்புத்தூரில் வாழ்ந்தவர். இவர் வாழ்ந்த காலத்தில் வறுமை மீதூர உடல்வலிமை குன்றி உணவு குறைந்து இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்யும் பொழுது தண்ணீர்க்கலசத்தைத் தவற விட்டுவிட்டார். அதனால் வருந்திய அடியாருக்கு இறைவன் நிதியம் கொடுத்து அருள்செய்தார் என்னும் குறிப்புக்கள் அந்தாதியால் அறியப்படுகின்றன.[208]

செருவிலிப்புத்தூர் என்பதை அழகர் திருப்புத்தூர் எனப் பெரியபுராணம் குறிப்பிடுகின்றது.[209] திருத்தொண்டர் திருவந்தாதி கூறும் செய்திகளோடு இறைவன் கொடுத்த நிதியத்தின் விளக்கத்தையும் பெரியபுராணம் சுட்டியுள்ளது.[210] நாள்தோறும் ஒரு படிக்காசு பெற்றதாக அக்குறிப்பில் காணப்படுகின்றது. திருத்தொண்டர் புராணக்குறிப்புக்களைப் புராணசாரம் சுருக்கி உரைத்துள்ளது.[211]

17. கோட்புலியார்

கோட்புலியார் பெயரளவினாலேயே வீரம்மிக்கவர் என்று விளங்குகின்றது. பகையை வெற்றி கொள்ளும் இயல்பினர் என்பதும், வேலை ஏந்தியவர் என்னும் குறிப்பும் திருத்தொண்டத் தொகையில் காணப்படுகின்றன.[212]

திருநாட்டியத்தான்குடி என்பது கோட்புலியார் வாழ்ந்த ஊராகும். இறைவன் அடியார்க்கென்று சேமித்து வைத்த பொருளைச் சுற்றத்தினர் வறுமை காரணமாக எடுத்துவிடவே சினங்கொண்ட கோட்புலியார் அவர்களையெல்லாம் அழித்தார். சுந்தர மூர்த்திகளின் அருள்பெற்றவர். ''அருளாளர்'' என உலகு போற்றும் தன்மை வாய்ந்தவர் என்னும் குறிப்புக்கள் திருத் தொண்டர் திருவந்தாதியால் பெறப்படுகின்றன.[213]

கோட்புலியார் வேளாளர் மரபினர். இவர் ஒரு நெற்கூடு அமைத்து மிகுதியான நெல்லைச் சேமித்து வைத்துவிட்டு அரசன் ஆணையை ஏற்றுப் போருக்குச் சென்றார். இறைவனுக் காகச் சேமிக்கப்பட்ட பொருளை யாரும் எடுக்கக்கூடாது என ஓர் ஆணையும் பிறப்பித்துச் சென்றார். ஆணையை மீறி, வறுமைத் துன்பத்திலிருந்து மீளும் பொருட்டு அதனை எடுத்த

சுற்றத்தினரைப் பலபடியாகக் கொன்று வீழ்த்தினார். அவ்வுணவை உண்ட தாயிடம் பாலருந்திய ஒரு குழந்தையையும் அவர் வாளால் அறிந்தார் எனும் குறிப்புக்கள் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன.[214]

கோட்புலியார் கொன்றவர்களைச் "சுற்றத்தார்" என்று சுருக்கமாகப் புராணசாரம் குறிப்பிடுகின்றது. தந்தையார், தாயார் மற்றும் உடன்பிறந்தார், தாரங்கள், சுற்றத்தார், அந்நெல்லையெடுத்து உண்டவர்கள் அத்துணைப்பேரையும் கொன்று ஒழித்தார். ஒரு பிள்ளையைக் கொல்ல முற்படும் பொழுது, கோட்புலியாரின் பேரன், அக்குழந்தை அந்நெல்லை உண்ணவில்லை என்று கூறினான். அந்நெல்லை உண்டவளின் பாலை உண்ட குழந்தை என அதனையும் வெட்டி வீழ்த்தினார் என்னும் குறிப்புக்கள் விரிவாகப் பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.[215]

18. செங்கணார்

செங்கணார் மன்னர் என்பது "உலகாண்ட"[216] என்னும் அடையால் விளங்குகின்றது. தென்னாட்டவராக இருந்து பரந்துபட்ட நிலப்பரப்பை ஆட்சி செய்தவர் என்ற குறிப்பும் திருத்தொண்டத் தொகையால் புலப்படுகின்றது.[217]

செங்கண் என்கின்ற குறிப்பினால் இவர் பிறப்புப்பற்றிய அரிய குறிப்பு ஒன்றும் புலப்படுகின்றது. அக்குறிப்பு திருத் தொண்டத் தொகையில் வெளிப்படையாக இடம் பெறவில்லை.

செங்கணான் சோழர்குடியில் பிறந்தவன். சிவநெறியன்றி மற்றோர் நெறியை மனத்தாலும் கருதாதவன். முற்பிறப்பில் சிலந்தியாய் இருந்து நூலால் பந்தர் அமைத்து மறுபிறப்பில் ஆலயங்கள் பலவற்றையும் கட்டியவன். திருச்சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்த சோழர் குலத்தில் வந்த இவன், தில்லையில் ஈசனைச் சூழ மறைவளர்த்தான் என்னும் குறிப்புக்கள் அந்தாதியில் இடம்பெற்றுள்ளன.[218] வேப்பந்தாரை அணிந்தவன் என்னும் குறிப்பினால் பாண்டியனை வெற்றிபெற்ற குறிப்பினையும் அந்தாதி தருகின்றது.[219]

கோச்செங்கணான் முற்பிறப்பில் வெண்ணாவல் மரத்தின் கீழிருந்து திருவானைக்கா இறைவர்க்குச் சிலந்தி வடிவிலிருந்து நூலால் பந்தர் செய்தமைக்கும் இயல்பினர். அதனை அழித்த வெள்ளையானையின் துதிக்கையினுள்புகுந்து அதனை அழித்துத் தாமும் அழிந்தார். பின்னர் சோழர்குலத்தில் சுபதேவன் மனைவி கமலவதி வயிற்றில் இருந்து காலந்தாழ்த்திப் பிறந்தார். அதனால் அவருடைய கண் செங்கண்ணாக ஆயிற்று. பாண்டிய நாட்டையும் வெற்றி கொண்ட செங்கணான் பல கோயில் களையும் கட்டுவித்ததோடு, தில்லைவாழ் அந்தணர்களுக்கு மனைகளைக் கட்டிக்கொடுத்து அருள்பெற்றார் என்னும் குறிப்புக்கள் புராணசாரத்தில் இடம்பெற்றுள்ளன.[220]

திருத்தொண்டர் திருவந்தாதி கோச்செங்கணானைப் பற்றிய செய்திகள் கூறிய நிலையிலிருந்து வளர்நிலையாகப் பெரிய புராணத்தில் இடம்பெற்றுள்ள செய்திகள் மனங்கொள்ளத் தக்கவை. முற்பிறப்பில் திருவானைக்காவில் சிலந்தியாய் இருந்தார் என்னும் குறிப்பும், யானையின் துதிக்கையினுள் புகுந்து அழித்த செய்திகளும் இடம்பெற்றுள்ளன. கோச் செங்கணான் தாய் தந்தையர் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தாதியில் காணப்படும். ''மறைவளர்த்தான்'' என்னும் செய்திக்கு விளக்கமாகத் தில்லைவாழ் அந்தணர்களுக்கு உறையுள் அமைத்தான் என்னும் செய்தி காணப்படுகின்றது.[221]

திருத்தொண்டத் தொகையில் அடியார்கள் பெயரும் செயலும் இணைந்து அறிமுகமானவர்கள் பதினெட்டுப் பேர் காணப்படுகின்றனர். அடியார்களுடைய தொண்டுகளைத் திருத் தொண்டத் தொகை குறிப்பாகச் சுட்டிச் சென்றமையால், திருவந்தாதி ஆசிரியர்க்கும் திருத்தொண்டர் புராண ஆசிரி யர்க்கும் அவ்வடியார்கள் பற்றிய செய்திகளைத் திரட்டுவது எளிதாக இருந்திருக்க வேண்டும் எனக் கருதலாம்.

குலப்பெயர் இணைந்தமைந்த அடியார்கள்

திருத்தொண்டத் தொகையில் அடியார் சிலர் குலப் பெயருடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள்

திருநீலகண்டத்துக் குயவனார், ஐயடிகள் காடவர்கோன், மறை நாவன் நின்றவூர் பூசல், திருநீலகண்டத்துப் பாணனார் என்னும் நால்வர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1. திருநீலகண்டத்துக் குயவனார்

திருநீலகண்டரை அவருடைய குலமாகிய வேட்கோவர் குலம் என்பது விளங்கத் திருத்தொண்டத்தொகை "திருநீலகண்டத்துக் குயவனார்" எனக் குறிப்பிட்டுள்ளது.[222]

திருநீலகண்டர் தில்லையில் வாழ்ந்தவர்; குயவர் வகுப்பில் தோன்றியவர். இறைவன் மீது இடப்பட்ட ஆணையின் காரணமாக மனைவியைத் துறந்து முதுமை அடைந்தவர். பின் இறைவன் அருளால், மனைவியோடு இளமை மீளப்பெற்று இன்பம் மிகப்பெற்றவர் என்னும் செய்திகள் அந்தாதியில் இடம் பெற்றுள்ளன.[223] அந்தாதியில் குறிப்பிட்ட ஆணை காரணமாக மனைவியைத் துறந்த செய்தியும் மூத்துப்பின் இளமை எய்திய செய்தியும் நம்பியாண்டார் நம்பிகளால் குறிக்கப்பெற்றுள்ளன.

திருநீலகண்டர் தவறான ஒழுக்கமுடையவராக இருந்தார். அவருடைய குறைபாடான ஒழுக்கத்தைத் திருத்த வேண்டும் என்னும் கருத்தோடு இவர் மனைவியார் "தீண்டில் எமைத் திருநீலகண்டம்" என்று இறைவன்மீது ஆணையிட்டார். அவ்வாணையில் உள்ள "எமை" என்னும் சொல் பெண்டிர் அனைவரையும் குறிப்பதாகக் கருதி மனைவியை மட்டுமல்லாமல் எந்தப் பெண்ணையும் தொடாமல் இருப்பது என்று உறுதி பூண்டார். காலம் செல்லச் செல்ல வயது முதிர்ந்தார். இறைவன், ஓடு ஒன்றை இவர்பால் வைத்துப் பின்னர்வந்து தருமாறு கேட்டார். அது காணாமல் போகவே மனைவியோடு வந்து எடுக்கவில்லையெனப் பொய்கையில் மூழ்கி உறுதி கூறுமாறு கூறினார். மூழ்கி எழுந்திருக்குங்கால் புலீச்சரத்துத் திருக் குளத்தில் இளமை எய்தினார் என்னும் செய்திகள் திருத் தொண்டர் புராணச் செய்திகளாகப் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.[224] நம்பியாண்டார் நம்பிகள் கூறிய செய்திகளுக்கு மேலாகப் பல குறிப்புக்களைத் திருநீலகண்ட நாயனார் வரலாற்றில் சேக்கிழார் ஆராய்ந்து இணைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

2. ஐயடிகள் காடவர்கோன்

காடவர்கோன் என்னும் தொடர் பின் தொடர அறிமுகப் படுத்தப்பட்ட அடியவர் ஐயடிகள் ஆவார்.[225] "ஐயடிகள்" -அடிகள் என இணைந்த நிலையில் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. காடவர்கோன் என்பதால் இவர் பல்லவர் குல அரசன் என்பது புலப்படுகிறது. எனவே, இவர் அரசமரபினர் என்பதும் பல்லவர் இனத்தவர் என்பதும் விளங்கும் வண்ணம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார் எனலாம்.

ஐயடிகள் பல்லவர் மரபில் தோன்றிய மன்னன். இறைவன் வீற்றிருக்கின்ற தலங்களுக்குச் சென்று ஒவ்வொரு வெண்பா பாடி இறைவனை வழிபட்டார். இறைவனுக்காகப் பொருளை யாசித்தல், மணிமுடிகவித்து வாழ்வதைக் காட்டிலும் மும்மடங்கு மேலானது எனக் கருதியவர் என்னும் செய்திகள் திருத் தொண்டர் திருவந்தாதியில் இடம்பெற்றுள்ளன.[226]

திருத்தொண்டர்புராணத்தில் திருவந்தாதியில் கூறப்பட்ட செய்திகளுக்கு மேலாக இரு செய்திகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. காடவர்கோன் தன் மகனிடத்தில் அரசாட்சியை ஒப்படைத்து விட்டு, வடநூல் - தென்தமிழ் முதலிய கலைகளைக் கற்றறிந்து காப்பதற்காக ஊரூராகச் செல்லத் தொடங்கினார் என்பது ஒரு செய்தி; இவருடைய பாடல்களில் முதல் பாடல் தில்லையைப் பற்றியது என்பது மற்றொரு செய்தி.[227]

திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறப்பட்ட செய்திகள் பெரியபுராணத்தில் சற்று விரிவாகக் கூறப்பெற்றுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. தென்தமிழ், வடமொழி ஆகிய கலைகளை வளர்ப்பதற்கு அரசாட்சி இடையூறாக இருக்கிறது எனக் கருதி மகனிடம் ஒப்படைத்தார் என்னும் செய்தி புராண சாரத்தில் வெளிப்படையாக இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.[228]

3. பூசலார்

"மன்னியசீர் மறைநாவன் நின்றவூர் பூசல்" எனத் திருத் தொண்டத்தொகையில் குறிப்பிடப்படுகின்றார்.[229] பூசலார்

ஊர்ப் பெயருடன் குலப்பெயரும் இணைந்த நிலையில் குறிப்பிடப் பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. "மறைநாவன்" என்ற அடையினால் இவர் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர் என்பது விளங்குகின்றது.

இறைவனுக்கு ஒருகோயிலை இயற்ற வேண்டும் என்னும் எண்ணத்தோடு பலகால் கண்துயிலாது கவலைகொண்டவர். அதனால் இறைவன் அருளைப் பெற்றார் என்பது அந்தாதியில் கூறப்பட்டுள்ளது.[230] ஊர்ப்பெயரும் அந்தாதியில் இடம் பெற்றுள்ளது; எனினும் அந்தணர்குலத்தில் தோன்றியவர் என்பது அந்தாதியில் இடம் பெறவில்லை.

பூசலார் அந்தணர் குலத்தில் தோன்றியவர் என்பது புராண சாரத்தில் இடம்பெற்றுள்ளது.[231] பூசலார் கற்பனையிலேயே பொருளைச் சேகரித்து இறைவனுக்கு ஆலயத்தை எழுப்பி இறைவனைக் கோயில் கொள்ளும்படியாக எண்ணுங்கால், இறைவன் பல்லவ மன்னனுக்கு அச்செய்தியை உணர்த்தினார். மன்னவன் பூசலார் வாழும் நகரம் சென்று அவரைத்தேடிப் பணிந்தான். அதனால் இறைவனருள் இருவர்க்கும் கிட்டியது என்னும் செய்திகள் திருத்தொண்டர் புராணச் செய்திகளாகப் புராணசாரத்தில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.[232]

4. திருநீலகண்டப் பாணனார்

திருநீலகண்டர் பாணர் குடியில் பிறந்தவர் என்னும் குறிப்பு திருத்தொண்டத்தொகையில் இடம்பெற்றுள்ளது.[233]

திருநீலகண்ட யாழ்ப்பாணர் எருக்கத்தம் புலியூரைச் சேர்ந்தவர். ஞானசம்பந்தர் பாடல்களுக்கு இசை அமைத்துப் பாடுவதையே தம் குறிக்கோளாகக் கொண்டவர். அதனால் இறைவன் அருளைப் பெற்றவர் என அந்தாதி திருநீலகண்ட யாழ்ப்பாணரைப் பற்றிய குறிப்புக்களைத் தொகுத்துச் சுட்டியுள்ளது.[234]

திருநீலகண்டர் பேரியாழை வாசிக்கும் பெரும்பாணர் குலத்தில் தோன்றியவர். மதுரையில் பொற்பலகையின் மீதிருந்து

இசைக்கும் பேறு பெற்றார். ஆரூர்க்கு வந்து கோயிலின் வடவாயிலில் நிற்க, சிவனருளால் திறக்கப்பெற்று அதன் வழியாகச் சென்று இறைவனைப் போற்றினார். ஞானசம்பந் தருடைய பதிகங்களுக்கு இசையமைத்து யாழில் வாசித்தார். நல்லூர்ப் பெருமணத்தில் ஞானசம்பந்தருடன் இணைந்து இறைவன் அருள்பெற்றார் என்னும் குறிப்புக்கள் புராண சாரத்தில் சுருக்கமாக இடம்பெற்றுள்ளன.[235]

குலப்பெயரோடு இணைத்துக் கூறப்பட்ட அடியார்களின் தொண்டுச் செயல்களை உணர்த்துமாறு உள்ள குலப்பெயர்கள் மட்டிலுமே குலப்பெயர்களோடு காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. வேட்கோவராகிய திருநீலகண்டர் வரை வோட்டினால் அருள் பெற்றார் என்பது நினைக்கத்தக்கது. பூசலார் அந்தணர் குலத்திற்கேற்ப மனக்கற்பனையில் கோயிலை ஆக்குவித்தார் என்பது கருதத்தக்கது. யாழை முதன்மையாகக் கொண்டு அருள்பெற்றவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பது குறிப்பிடத்தக்கது.

பேறுபெற்ற ஊருடன் பெயர் சுட்டப்பெற்ற அடியார்

திருத்தொண்ட தொகையில் வீடுபேறு அடைந்த ஊருடன் பெயர் கூறப்பெற்ற அடியவராகப் புகழ்ச்சோழர் என்னும் அரச அடியாரே காணப்படுகிறார். திருத்தொண்டத்தொகையில் ஊருடன் பேருமாகக் கூறப்பெற்ற அடியார்களில் பலர் தாங்கள் வாழ்ந்த ஊரிலேயே வீடு பெற்றுள்ளனர். எனினும் வீடுபேறு அடைந்த குறிப்போடு கூறப்பெற்ற அடியார் புகழ்ச்சோழர் ஒருவர் மட்டுமே காணப்படுகிறார். அதனை,

''பொழில் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்''[236]

என்னும் திருத்தொண்டத்தொகை அடியால் அறியலாம்.

புகழ்ச்சோழர்

புகழ்ச்சோழர் சோழர் பரம்பரையில் தோன்றிவர். அயல் நாடுகளையும் வென்று பெரும்பொருளைத் திரையாகக் கொணர்ந்த சோழர் எனப் புகழ்ச்சோழரின் முன்னவர் குறிக்கப் பட்டுள்ளார். புகழ்ச்சோழர், எறிபத்தர் என்ற அடியாரிடம்

தம்மையும் கொல்லுமாறு வாளினைக்கொடுத்துப் பெரும்புகழ் கொண்டார் என்னும் செய்திகள் திருத்தொண்டர் திருவந் தாதியில் இடம்பெற்றுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[237]

புகழ்ச்சோழர் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர். பட்டத்துயானை அடியாருக்குத் தீங்கு செய்ததைப் பொறுக்க முடியாமல் கொன்ற எறிபத்தரிடம், புகழ்ச்சோழர் தம்மையும் கொல்லுமாறு வாளை எடுத்துக்கொடுத்தவர். போர்முனையில் வெட்டப்பட்ட வீரன் ஒருவனின் தலை அடியார்க்குரிய சடைமுடியோடு இருப்பதைப் பார்த்து, தம் முடியில் அச்சடைமுடித்தலையை ஏந்தித் தீயில் முழ்கி இறைவனடி சேர்ந்தார் என்னும் குறிப்புக்கள் திருத்தொண்டர் புராணத்தின் செய்திகளாகப் புராணசாரத்தில் இடம்பெற்றுள் ளமை கருதத்தக்கது.[238] போர்முனையில் சடை முடியை ஏந்தித் தீயில் மூழ்கியசெய்தி புகழ்ச்சோழர் வரலாற்றில் திருத்தொண்டர் புராணத்தில் புதியதாகச் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.[239] ''பொழில் கருவூர்த் துஞ்சிய'' என்ற திருத்தொண்டத்தொகை அடிக்கு விளக்கமாகப் புராணசார ஆசிரியர் ''பொழில் மருவு கருவூர் வாழ்''[240] என்று கூறியிருப்பது மனங்கொள்ளத் தக்கது. கருவூர் நிரந்தரமான திருவடிப் பேற்றிற்குக் காரணமாகியமை பற்றிச் சேக்கிழார் அவ்வாறு கூறியுள்ளார் எனலாம்.

பெயருடன் ஊரும் குலமும் கொண்ட அடியார்

திருத்தொண்டத்தொகையில் பெயர் - ஊர் - குலம் ஆகிய மூன்றும் இணைந்த நிலையில் காணப்படும் அடியவராகக் கூற்றுவ நாயனார் ஒருவரே திகழ்கின்றார்.

கூற்றுவ நாயனார்

''ஆர் கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன்''[241] என்று சுந்தரர் கூற்றுவரின் வீரம் விளங்கும் சிறப்பினைச் சுட்டியுள்ளார்.

நாதன் திருவடியை முடியாகக் கவித்து நல்ல ஞானம் செறிந்தவராய் வாழ்ந்ததால் ஞாலம்யாவும் கூற்றுவர் கோல் வழிப்பட்டது என்றும் அவர் களப்பாளர் மரபினர் என்றும் நம்பியாண்டார் நம்பி அறிந்து கூறியுள்ளார்.[242]

களந்தைநாட்டு முதல்வர் என்றும் யானை, குதிரை, தேர், காலாள் ஆகிய நால்வகைப் படைகளையும் பெற்று வீரச்செருக் கோடு வாழ்ந்தவர் என்றும் சேக்கிழார் விளக்கமளித்தார். மணிமுடி நீங்கலாக ஏனைய அரசச் செல்வங்களையெல்லாம் கூற்றுவர் பெற்று வாழ்ந்தார். மணிமுடியைச் சோழர் மரபினர்க் கன்றிப் பிறர்க்குச் சூட்டோம் என்று தில்லைவாழந்தணர் மறுத்தமையால், இறைவன் மலர்ப்பாதங்களை முடிமேல் தாங்கி உலகம் காத்து வாழ்ந்தார் என்று சேக்கிழார் அந்நாயனார் வரலாற்றிற்கு விளக்கம் தந்திருப்பது குறிப்பிடத்தக்கது.[243]

முதல் நூல்கள் தந்த செய்திகளையெல்லாம் மனத்துக் கொண்டே உமாபதி சிவனார் – குன்றாத புகழாளர் களந்தை வேந்தர் என்று கூற்றுவரையும் புலியூர்வாழும் பூசுரர்கள் என்று தில்லைவாழந்தணரையும் புனிதனீந்த மன்றாடும் திருவடியே முடியாகக் கொண்டு வாழ்ந்தார் என்று இறையருட்செயலையும் தம் அந்தாதியில் வனப்புடன் தொகுத்திருப்பது அறிதற்குரியது.[244]

ஆய்வு முடிவுகள்

பெயர் தோன்றும் அடியார், ஊரும் பெயரும் தோன்றும் அடியார், தொண்டும் பெயரும் தோன்றும் அடியார், குலமும் பெயரும் தோன்றும் அடியார் என்னும் முறையில் தனியடியார் களின் வரலாறு ஆராயப்பெற்றுள்ளது.

சுந்தரர் பெயரளவில் அறிமுகப்படுத்திய அடியவர்களுக்கும் ஊர் முதலான குறிப்புகளைத் தேடிக்கண்டு நம்பியாண்டார் நம்பி அந்தாதியில் பாடியுள்ளார். அடியார் பலர் வாழ்வில் நிகழ்ந்த வியத்தகு நிகழ்ச்சிகளையும் கண்டறிந்து வரலாற்றறிவு சான்ற முறையில் முதன்முதல் நூலியற்றிய பெருமையாளர் அவர் என்று கூறலாம்.

நம்பியாண்டாரின் திருவந்தாதியில் ஒரு பாட்டளவில் அமைந்த தனி அடியவர்களின் எண்ணிக்கை ஐம்பத்தெட்டு; இரண்டு பாடல்களில் அமைந்தவர்கள் நாவுக்கரசர், ஞான சம்பந்தர், சேரமான் பெருமான், கோச்செங்கட்சோழர் ஆகிய நால்வரேயாவார்; சுந்தரர் பற்றிப் பதினொரு பாடல்கள் உள்ளன.

நம்பியாரூரரின் திருத்தொண்டத் தொகைப் பதிகத்திற்கு நம்பியாண்டார் தந்த சிறப்பிடத்தையறிந்து சேக்கிழார் தாமும் அவ்வச் சருக்க முடிவில் சுந்தரருக்குப் பாட்டியற்றியுள்ளார். அதனால் காப்பியம் முழுவதும் சுந்தரர் நினைவு கால்கொள்ளும் வகையில் உள்ளது.

சேக்கிழார் திருத்தொண்டத்தொகையை அடிப்படையாகவும் திருவந்தாதியைப் படிநிலையாகவும் கொண்டுள்ளார் என்பது இதனால் விளக்கம் பெறுகிறது.

அடியார்களின் ஊர்கள் பல இன்னின்ன இடங்களில் அமைந் திருந்தன என்பதைச் சேக்கிழார் தெளிவுபடுத்தியதோடு, அவற் றிற்குத் தம் காலத்தில் வழங்கிவந்துள்ள பெயரையும் குறித் துள்ளார்.

அடியார்கள் வாழ்ந்த பகுதிகள் எவ்வாறு இருந்திருக்கக்கூடும் என்பதைக் கற்பனைக் கண்ணோட்டத்தோடு வருணித்துள்ளார்.

சேக்கிழாருடைய வருணனையைப் பெற்ற நிலைகள் இன்றுங்கூட அவ்வாறே காணப்படும் நிலை வியந்து போற்றுதற் குரியதாகும்.

வரலாற்றுச் செய்திகள் பலவற்றை அடியார்கள் வரலாற்றில் நம்பியாண்டார் நம்பிகளுக்குமேல் சேக்கிழார் தொகுத் துள்ளமையும் காணப்படுகின்றது.

பெரியபுராணத்தின் வளர்நிலைகள் முற்றிலும் இடம் பெறும் வகையில் உமாபதி சிவாசாரியர் தம் "புராணசாரம்" நூலை அமைத்துள்ளார்.

விரிவான பெரியபுராணத்தைப் பயில முடியாதவர்கள் புராணசாரத்தைப் பயின்று பெரியபுராணச் செய்திகளை அறிந்து கொள்ளவியலும் என்று குறிப்பிடும் அளவிற்கு உமாபதியாரின் புராணசாரம் அமைந்துள்ளது என்பது போற்றுதற்குரியதாகும்.

அடிக்குறிப்புக்கள்

1. தண்டி , சூ. 1.
2. மாணிக்கவாசகர், "திருக்கோத்தும்பி", திருவா. பா. 4.
3. சிவஞானமுனிவர், **தொல்காப்பியச் சூத்திரவிருத்தி,** "பாயிரவிருத்தி", பக். 6, 17, 19, 22.
4. பெரிய., 'அமர்நீதிநாயனார் புராணம், பா. 19-48.
5. திருத். சாரம், பா. 10.
6. திருத். தொகை., பா. 2 : 1.
7. திருத். அந்தாதி, பா. 9.
8. திருத். சாரம், பா. 11.
9. திருத். அந்தாதி, பா. 10.
10. திருத். சாரம், பா. 12.
11. திருத். தொகை, பா. 2 : 3.
12. திருத். அந்தாதி, பா. 11.
13. பெரிய., 'கண்ணப்பநாயனார் புராணம், பா. 94-95.
14. திருத். சாரம், பா. 13.
15. திருத். தொகை, பா. 2 : 6.
16. திருத். அந்தாதி, பா. 14.
17. திருத். சாரம், பா. 16.
18. திருத். தொகை, பா. 3.
19. திருத். அந்தாதி, பா. 18.
20. திருத். சாரம், பா. 17.
21. திருத். தொகை, பா. 3 : 2.
22. திருத். அந்தாதி, பா. 19.
23. திருத். சாரம், பா. 20.
24. திருத். தொகை. பா. 3 : 3.
25. திருத். அந்தாதி, பா. 20.
26. திருத். சாரம், பா. 19.
27. திருத். அந்தாதி, பா. 21.
28. திருத். சாரம், பா. 20.
29. திருத். தொகை, பா. 4 : 3.
30. திருத். அந்தாதி, பா. 36.
31. திருத். சாரம், பா. 26.
32. திருத். தொகை, பா 4 : 4.

33. திருத். அந்தாதி, பா. 28.
34. திருத். சாரம், பா. 25.
35. பெரிய., "காரைக்காலம்மையார்புராணம்", பா.2, 8, 21-28, 43.
36. திருத். தொகை, பா. 4 : 5.
37. திருத். அந்தாதி, பா. 29.
38. திருத். சாரம், பா. 29.
39. திருத். தொகை, பா. 4 : 7.
40. திருத். அந்தாதி, பா. 31.
41. திருத். சாரம், பா. 28.
42. பெரிய., 'நமிநந்தியடிகள் புராணம், பா. 22.
43. திருத். தொகை, பா. 5 : 4.
44. திருத். அந்தாதி, பா. 35.
45. திருத். சாரம், பா. 34.
46. பெரிய., 'ஏயர்கோன் கலிக்காமநாயனார்புராணம்', பா- 383-97.
47. திருத். தொகை பா. 5 : 5.
48. திருத். அந்தாதி, பா. 36.
49. திருத். சாரம், பா. 31.
50. திருத். தொகை.பா. 5 : 6.
51. திருத். அந்தாதி, பா. 37.
52. திருத். சாரம், பா. 36.
53. திருத். தொகை, பா. 5 : 6.
54. திருத். அந்தாதி, பா. 38.
55. திருத். சாரம், பா. 37.
56. திருத். தொகை, பா. 7 : 3
57. திருத். அந்தாதி, பா. 51.
58. திருத். சாரம். பா. 47.
59. திருத். தொகை, பா. 7 : 5.
60. திருத். அந்தாதி, பா. 54.
61. திருத். சாரம், பா. 46.
62. திருத். தொகை, பா. 8 : 2.
63. திருத். அந்தாதி, பா. 39.
64. திருத். சாரம், பா. 54.

65. திருத். அந்தாதி, பா. 65.
66. பெரிய. 'இடங்கழிநாயனார்புராணம்', பா. 9.
67. திருத். சாரம், பா. 59.
68. திருத். தொகை, பா. 11.
69. திருத். அந்தாதி, பா. 79.
70. திருத். சாரம், பா. 71.
71. திருத். தொகை, பா. 11 : 2.
72. திருத். அந்தாதி, பா. 80.
73. திருத். சாரம், பா. 72.
74. திருத். அந்தாதி, பா. 11 : 6-7.
75. திருத். அந்தாதி, பா. 84, 85.
76. திருத். சாரம், பா. 75, 76.
77. திருத். தொகை, பா. 1 : 4.
78. பெரிய. 'இளையான்குடிமாற நாயனார் புராணம்', பா. 9-10.
79. திருத். தொகை, பா. 1 : 6.
80. திருத். அந்தாதி, பா. 6.
81. திருத். சாரம், பா. 9.
82. திருத். தொகை, பா. 2 : 4.
83. திருத். அந்தாதி, பா. 12.
84. திருத். சாரம், பா. 14.
85. திருத். தொகை, பா. 2 : 7.
86. திருத். அந்தாதி, பா. 15.
87. திருத். சாரம், பா. 17.
88. திருத். தொகை, பா. 4 : 4.
89. திருத். அந்தாதி, பா. 27.
90. பெரிய. 'பெருமிழலைக் குறும்பநாயனார்புராணம்', பா. 6.
91. திருத். சாரம், பா. 27.
92. பெரிய. 'பெருமிழிலைக் குறும்பநாயனார் புராணம்', பா. 9-10.
93. திருத். தொகை, பா. 4 : 6.
94. திருத். அந்தாதி, பா. 30.
95. பெரிய. 'திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்', பா. 1250.
96. திருத். சாரம், பா. 30.

97. திருத். தொகை, பா. 5 : 7.
98. திருத். அந்தாதி, பா. 39,
99. திருத். சாரம், பா. 38.
100. திருத். தொகை, பா. 6 : 4.
101. திருத். அந்தாதி, பா. 43.
102. பெரிய. 'சிறுத்தொண்டநாயனார் புராணம்', பா. 2, 6, 11.
103. திருத். தொகை, பா 6 : 4.
104. திருத். அந்தாதி, பா. 46.
105. திருத். சாரம், பா. 43.
106. திருத். தொகை, பா. 7 : 4.
107. திருத். அந்தாதி, பா. 52.
108. திருத். சாரம், பா. 48.
109. திருத். தொகை, பா. 7 : 6.
110. திருத். அந்தாதி, பா. 55.
111. திருத். சாரம், பா. 51.
112. திருத். தொகை, பா. 8 : 6.
113. திருத். அந்தாதி, பா. 61.
114. திருத். சாரம், பா. 56.
115. திருத். தொகை, பா. 9 : 3-4.
116. திருத். அந்தாதி, பா. 66.
117. திருத். சாரம். பா. 56.
118. திருத். தொகை, பா. 11 : 5-7.
119. மேலது
120. திருத். அந்தாதி, பா. 8.
121. மேலது, பா. 16.
122. மேலது, பா. 23.
123. மேலது, பா. 32.
124. மேலது, பா. 40.
125. மேலது, பா. 48.
126. மேலது, பா. 57.
127. மேலது, பா. 63.
128. மேலது, பா. 69.
129. மேலது, பா. 77.
130. மேலது, பா. 86.

131. பெரிய. 'திருமலைச்சருக்கம்', பா. 21-27.
132. பெரிய. 'தடுத்தாட்கொண்டபுராணம்', பா. 1-8 : 28-66.
133. மேலது, பா. 87.
134. பெரிய. 'ஏயர்கோன்கலிக்காமர் புராணம்', பா. 25-26.
135. மேலது, பா. 33-39.
136. மேலது, பா. 50.
137. மேலது, பா. 78.
138. மேலது, பா. 131-37.
139. மேலது, பா. 159-61.
140. மேலது, பா. 177-80.
141. மேலது, 239, 68.
142. மேலது, பா. 274-75.
143. மேலது, பா. 286-87.
144. மேலது, பா. 310-11.
145. மேலது. பா. 329-372.
146. மேலது, பா. 396-97.
147. மேலது, பா. 403-07.
148. பெரிய. 'வெள்ளானைச் சருக்கம்', பா. 5-12.
149. மேலது, பா. 40.
150. திருத். சாரம், பா. 2-3.
151. திருத். தொகை, பா. 1 : 3.
152. சிவஞானமுனிவர், **திருத்தொண்டர்திருநாமக்கோவை,** அடி. 2.
153. திருத். அந்தாதி, பா. 3.
154. திருத். சாரம், பா. 4.
155. திருத். தொகை, பா. 1 : 5.
156. திருத். அந்தாதி, பா. 5.
157. திருத். சாரம், பா. 6.
158. சிவஞானமுனிவர் (உ.ஆ.), **சிவஞானபோதம்,** நூ. 12.
159. திருத். தொகை, பா. 2 : 5.
160. திருத். அந்தாதி, பா. 13.
161. பெரிய. 'மானக்குஞ்சாற நாயனார் புராணம்', பா. 16-36.
162. திருத். சாரம், பா. 15.
163. திருத். தொகை, பா. 3 : 1.

164. திருத். அந்தாதி, பா. 17.
165. திருத். சாரம், பா. 18.
166. திருத். தொகை, பா. 3 : 5–7.
167. திருத். அந்தாதி, பா. 22.
168. திருத். சாரம், பா. 23.
169. திருத். தொகை, பா. 4 : 1-2.
170. திருத். அந்தாதி, பா. 24–25.
171. பெரிய. 'திருநாவுக்கரசு நாயனார் புராணம்', பா. 1–420.
172. திருத். சாரம், பா. 24, 25.
173. திருத். தொகை, பா. 5 : 1–3.
174. திருத். அந்தாதி, பா. 33, 34.
175. திருத் சாரம், பா. 32, 33.
176. திருத். தொகை, பா. 6 : 1–2.
177. திருத். அந்தாதி, பா. 41.
178. திருத். சாரம், பா. 39.
179. திருத். தொகை, பா. 6 : 3.
180. திருத். அந்தாதி, பா. 42.
181. திருத். சாரம், பா. 40.
182. திருத். தொகை, பா. 6 : 5.
183. மேலது
184. திருத். அந்தாதி, பா. 44, 45.
185. திருத். சாரம், பா. 42.
186. பெரிய. 'கழறிற்றறிவார் நாயனார்புராணம்', பா. 24, 28.
187. திருத். தொகை, பா. 7 : 5.
188. திருத். அந்தாதி, பா. 53.
189. பெரிய. 'கலிக்கம்பநாயனார்புராணம்', பா. 7–8.
190. திருத். சாரம், பா. 49.
191. திருத். தொகை, பா. 8 : 1-2.
192. திருத். அந்தாதி, பா. 58.
193. திருத். சாரம், பா. 53.
194. திருத். தொகை, பா. 8 : 3-4.
195. திருத். அந்தாதி, பா. 60.
196. திருத். சாரம், பா. 55.
197. பெரிய. 'திருஞானசம்பந்தநாயனார் புராணம்', பா. 704-05.

198. பெரிய. 'நின்றசீர் நெடுமாறநாயனார் புராணம்', பா. 8-9. 'மங்கையர்க்கரசியார்புராணம்', பா. 1-3.
199. திருத். தொகை, பா. 8 : 7.
200. திருத். அந்தாதி, பா. 62.
201. பெரிய. 'முனையடுவார்நாயனார் புராணம்', பா. 1-2.
202. திருத். சாரம், பா. 57.
203. திருத். தொகை, பா. 9 : 1-2.
204. திருத். அந்தாதி, பா. 64.
205. பெரிய. 'கழற்சிங்கநாயனார் புராணம்', பா. 6.
206. திருத். சாரம், பா. 52.
207. திருத். தொகை, பா. 9 : 5-6.
208. திருத். அந்தாதி, பா. 67.
209. பெரிய. 'புகழ்த்துணைநாயனார் புராணம்', பா. 1.
210. மேலது, பா. 4-6.
211. திருத். சாரம், பா. 61.
212. திருத். தொகை, பா. 9 : 7.
213. திருத். அந்தாதி, பா. 68.
214. திருத். சாரம், பா. 62.
215. பெரிய. 'கோட்புலிநாயனார் புராணம்', பா. 9-10.
216. திருத். தொகை. பா. 11 : 3.
217. மேலது.
218. திருத். அந்தாதி, பா. 81.
219. மேலது, பா. 82.
220. திருத். சாரம், பா. 73.
221. பெரிய. 'கோச்செங்கட்சோழ நாயனார்புராணம்', பா. 16.
222. திருத். தொகை, பா. 1 : 2.
223. திருத். அந்தாதி, பா. 2.
224. திருத். சாரம், பா. 5.
225. திருத். தொகை, பா. 7 : 7.
226. திருத். அந்தாதி, பா. 56.

227. பெரிய., 'ஐயடிகள் காடவர்கோன் நாயனார்புராணம்', பா. 3.
228. திருத். சாரம், பா. 52.
229. திருத். தொகை, பா. 11 : 1.
230. திருத். அந்தாதி, பா. 78.
231. திருத். சாரம், பா. 70.
232. மேலது.
233. திருத். தொகை, பா. 11 : 4.
234. திருத். அந்தாதி, பா. 83.
235. திருத். சாரம், பா. 74.
236. திருத். தொகை, பா. 7 : 2.
237. திருத். அந்தாதி, பா. 50.
238. திருத். சாரம், பா. 46.
239. பெரிய. 'புகழ்ச்சோழநாயனார் புராணம்', பா. 36-40.
240. திருத். தொகை, பா. 7 : 2; திருத். சாரம், பா. 46.
241. திருத். தொகை, பா. 6 : 7.
242. திருத். அந்தாதி, பா. 47.
243. பெரிய. 'கூற்றுவநாயனார் புராணம்', பா. 2, 4, 6.
244. திருத். சாரம், பா. 44.

அணி நலன்

"அணிபெறச் செய்வன செய்யுள்"[1] என்னும் விதிக்கு ஏற்ப அணிகளுள் ஒன்றையோ அன்றிப் பலவற்றையோ இடம்பெறச் செய்வது செய்யுட்கு அழகினைச் சேர்க்கும் உத்திகளுள் ஒன்றாகும். எனினும் வரலாற்று அமைப்பிலும் ஊர்களையும் அடியார்களின் பெயர்களையும் தொகுத்து அமைக்கும் நூல் களிலும், இத்தகைய அணிகள் அமைவதற்குப் பெரிதும் வாய்ப் பில்லாமல் இருக்கிறது என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

உமாபதிசிவனாரின் இலக்கிய நூல்களில் திருப்பதிக்கோவை, திருப்பதிகக் கோவை, சிவ சேத்திரக் கலிவெண்பா என்னும் மூன்று நூல்களும் ஊர்ப்பெயர்களையும், பதிகத் தொகை களையும், இறைவன் இறைவி பெயர்களையும் கூறும் தொகுப்பு நூல்களாதலால் அணிநலன்கள் அமைவதற்கு வாய்ப்பில்லாத நூல்களாக அமைந்துள்ளன. இவர் தொகுத்த தேவார அருள் முறைத்திரட்டு முந்துநூல் தொகுப்பு ஆதலால் அதன்கண் அமைந்த அணிநலன்கள் ஆராயப்படவில்லை. மற்றைய நூல் களாகிய கோயிற்புராணம், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் நாயனார்புராணம், திருத்தொண்டர் புராணசாரம் என்னும் நான்கு நூல்களில் மட்டுமே அணிகள் ஆராயப்படுகின்றன.

கோயிற்புராணம், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம், மற்றும் புராணசாரம் என்னும் நூல்களில் திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம் என்னும் இரு புராணங் களும் வரலாற்று அடிப்படையில் இயற்றப்பெற்றவை என்பதும் புராணசாரம் காப்பியக் கதைச் சுருதகம் என்பதும் மனத்தில் கொள்ளத்தக்கன. இவற்றில் காணப்படுகின்ற தன்மை அணி, உவமை அணி, உருவக அணி, தற்குறிப்பேற்ற அணி, சிலேடை அணி, சொற்பொருள் பின்வருநிலையணி, வேற்றுப்பொருள் வைப்பு அணி என்னும் அணிகள் குறிப்பிடத்தக்கவை; அவை பற்றி ஈண்டுக் காணலாம்.

தன்மை அணி

தன்மையணி என்பது தன்மைநவிற்சி என்றும், இயல்புநவிற்சி என்றும், இயற்கை நவிற்சி என்றும் பல பெயர்களால் கூறப் பெறும். இலக்கியங்களில் கூறப்படும் பொருள் கற்போர்க்குக் கண்ணுள் காண்பது போலத் தோன்றுமாறு எளிதாக விளங்கச் செய்வதும், விளக்கமாகக் கூறுவதும் இவ்வணியின் தன்மை யாகும். சுருங்கக் கூறினால் உள்ளது உள்ளபடி கூறும் தன்மை இதன் இயல்பாகும் எனலாம். இவ்வணிபற்றித் தொல்காப்பியர் தனியே எடுத்து மொழியவில்லை எனினும், காலத்தால் முற்பட்ட நிலையிலிருந்தே அணி என்ற கருத்தில்லாமல் இவ்வணி கையாளப்பட்டு வந்துள்ளது என்பது சங்க இலக்கியங்கள் கொண்டு உணரலாம். பிற்கால அணி இலக்கண ஆசிரியர்கள் இதற்குத் தனியே இலக்கணம் கூறியுள்ளனர். இதனை,

> ''எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்
> சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்''[2]

என்னும் நூற்பாவால் உணரலாம். பொருள், குணம், சாதி, தொழில் என்னும் நான்கு வகைகளில் இவ்வணி வகைப்படுத்தப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.[3] ''பாடப்படும் பொருளின் இயல்பை உண்மைத்தன்மை மாறாமல் உள்ளது உள்ளவாறே சொல்வது தன்மை அணியாகும். அவ்வாறு சொல்லும்பொழுது சுவை தோன்றச் சொல்லுதல் வேண்டும். சுவை தோன்றச் சொல்வதே அணியாகும்''[4] என்பர். சுருங்கக் கூறின் தன்மையணி என்பது நிழற்படம்போல உண்மையை அழகுபெற வெளிப்படுத்துவது எனலாம்.

பொருள் தன்மை

ஒரு பொருளின் தன்மையை உள்ளவாறு எடுத்துரைப்பது பொருள் தன்மையாகும்.[5]

பொன்னம்பலத்தில் கூத்தப்பெருமானுக்கு அண்மையில் நிற்கின்ற சிவகாமசுந்தரியின் திருமேனிப் பொலிவினை ஆசிரியர் கூறியுள்ளார். மன்றின் மணிவிளக்கு என நகை பொருந்திய முகமும், மங்கலநாணின் ஒளியும் போற்றி, உலகமும் தேவர்களும்

சென்று தொழ அருள் சுரக்கும் நிலையோடு கூட நின்ற திருக் கோலத்தில் அம்மை அமைந்துள்ள திறத்தை ஆசிரியர் காட்டி யுள்ளார்.[6] பொருளின் தன்மையை உள்ளவாறு எடுத்துக் காட்டியுள்ள தன்மையுடையதாக இதனைக் கருதுதல் வேண்டும்.

மத்தியந்தின முனிவரின் மகன் விடைபெறுங்காட்சியிலும் பொருள் தன்மை அமையப் பாடியுள்ள திறம் குறிப்பிடத்தக்கது. திருநீறு நெற்றியில் அணிவித்து, உச்சிமோந்து, பிறப்பு நீங்கப் பிறந்த பிள்ளை ஆதலால் அக்குழந்தையின் முயற்சிக்கு இடையூ றில்லாமல் விடை கொடுக்கின்ற பெற்றோர்கள் விழிகளில் கண்ணீர் மல்க நிற்க, தாயையும் தந்தையையும் வணங்குகின்ற காட்சியை ஆசிரியர் அமைத்துள்ளார்.[7]

இறைவன் தாருகாவனத்திற்குச் சென்றபொழுது முனி பத்தினிகள் தம் வயம் இழந்த காட்சியை ஆசிரியர் கூறியுள்ள நிலை அறிதற்குரியது. குழல் சரிய அதனை ஓர் கையிலும், வீழும் மேகலையை மற்றொரு கையிலும் இறுகப்பிடித்துள்ளனர். கண்கள் நீர் சோர மையல் கொண்டு கலையானது நெகிழும் படியாக எதிர்சென்று பொருந்துவார் சிலர். திருவாயில் நகை விளங்குகின்றது என்பார் சிலர். தங்களுக்கு இசைந்தவனே எனக்கூறித் தழுவிக்கொண்டு அருள்செய்ய வேண்டுமெனச் சோர்ந்து விழுவார்கள் சிலர் என மையல் கொண்ட மகளிரின் இயல்புகளை உள்ளவாறு கூறியுள்ள திறம் கருத்தில் கொள்ளத் தக்கது.[8]

கூத்தப்பெருமான் ஆடுகின்ற கோலத்தை ஆசிரியர் முறை யாகக் கூறியுள்ளார். ஊன்றிய திருவடியும், தூக்கிய திருவடியும், அணிந்துள்ள சிலம்பின் ஒளியும், அழகிய தொடையும், இடுப்பில் உடுத்திய புலித்தோலாடையும், கச்சும், திருவுந்தியில் பொருந்திய உதரபந்தனம் எனச் சொல்லப்படுகின்ற அணிகளும், மார்பிலே நூலும் அணிந்துள்ளார். வீசிய திருக்கை ஒன்றும், அமைந்த திருக்கை ஒன்றும், ஒளி பொருந்திய சடாமுடியும், திரண்டெழுந்த தோளும், நீலமணி மிடறும், தோடு பொருந்திய காதும், மற்றொரு காதில் குழையும், அழகிய புன்சிரிப்பும் அமையத்

தோற்றமளிக்கிறார் என்னும் பகுதியில் கூத்தப்பெருமானின் திருமேனியின் இயல்புகள் உள்ளவாறு அமைந்துள்ளமையைக் காணலாம்.

தாமரை அனைய மலர்ந்த முகமும், உமையம்மையை நோக்கும் கண்களும், அவற்றின் அருள் ஒளியும், புருவத்தின் அழகும், அழகிய நெற்றியும், பின் தாழ்ந்து விரிந்த கற்றைச் சடையும், பாம்பும், நீங்காத கொன்றை மாலையும், கங்கையையும் சந்திரனையும் அணிந்த நிலையும், வெண்ணீறு பொலியும் மேனியும் உடையவராகக் காட்சி அளிக்கின்ற கூத்தப்பெருமானின் தோற்றம் இயல்பு நவிற்சிபட அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது.[10]

இராசராசன், தேவார மூவர் பாடிய பதிகங்களில் ஒவ்வொன்றைக் கூறக்கேட்டு அவற்றின்பால் ஈடுபாடு கொண்டான். பதிகங்களைக் கேட்குங்கால் அவனுடைய கைகளிரண்டும் உச்சி மேல் குவிந்தன. கண்ணீர் கரைந்தோடியது. மெய் முழுதும் மெய்ம்மயிர் பொடித்தது. இறைவனுடைய திருவடிகளை மனத்திற்கொண்டு திருப்பதிகங்கள் முழுமையும் தேட இயலவில்லையே என்று வருந்துகின்ற மனத்தினை உடையவனாக இருந்தான் என்கின்ற காட்சி இராசராசனின் பக்தி கொண்ட இயல்பினைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. இக்கருத்துக்கள் குளகமாக அமைந்த இரு பாடல்களில் இடம்பெற்றுள்ளமை அறியத்தக்கது.[11]

நம்பியாண்டார் நம்பிகளும் இராசராசனும் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாகத் தில்லையில் திருமுறைகள் வைத்துப் பூட்டியிருந்த அறை திறக்கப்பெற்றுப் பார்க்கப்படுங்கால் கரையான் புற்றுக்கள், ஏடுகளை மூடியிருந்தன. அதைக் கண்டு வேந்தன் அவ்வேடுகளைப் புறத்தே எடுத்து வைக்குமாறு கூறிப் புற்றுமண்குவியலை அப்புறப்படுத்தி எண்ணெய்க் குடங்களைக் கொண்டுவந்து செல்லின்மேல் ஊன்றித் திருவருளால் எடுத்து அவற்றை நோக்கினான். அவற்றில் பல ஏடுகள் பழுதாக இருப்பதைப் பார்த்து இறைவனை நினைந்து கண்ணீர் சோர நின்றான் என்னுங் காட்சி இராசராசனின் தோற்றத்தை இயல்பாக எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது. திருமுறையில்

அவன் கொண்ட ஈடுபாட்டை, அவன் உடல் வேறுபாடுகள் வெளிப்படுத்துவதை ஆசிரியர் குறித்துள்ள திறம் போற்றுதற் குரியது.[12]

சேக்கிழார் தொண்டர்சீர் பரவுகின்ற பாவலராகக் காட்சி யளித்த நிலையை உமாபதிசிவனார் கூறுகின்றமை அறியத் தக்கது. மழித்த தலை உடையவராய், காதில் குண்டலங்கள் அணிந்து அக்குழைகள் தாழ்ந்து தொங்கவும், கழுத்தில் அணிந்த கண்டமாலை தாழவும், கையிலணிந்த உருத்திராக்க மாலையும் அழகுபெறக் காட்சியளிக்கவும், சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தை விரித்துரைக்க வந்த காட்சி புலப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.[13]

உடம்பில் சிவசாதனங்கள் வெளிப்பட்டன. வெண்ணீறு எழுதிய நெற்றியோடு திகழ்ந்த கையிலே புத்தக ஏடும், மணி விளங்குகின்ற கழுத்தும், இறைவனை எண்ணி ஆழும் உள்ளமும், அதனால் வெளிப்படும் 'அரகர' ஒலியும், மக்கள்பால் ஏற்பட்ட கருணையும் கொண்டவராகச் சேக்கிழார் உலகவரெல்லாம் தொழும்படியான தோற்றப்பொலிவோடு காட்சியளித்தார் என்பதும் பொருள் தன்மையாக அமைவதைக் காணலாம்.[14]

குணத்தன்மை

குணத்தன்மை என்பது பொருளின் குண இயல்பினை உள்ளவாறு எடுத்து மொழிவதாகும்.[15]

இறைவனின் நடனத்தைக் காணவேண்டும் என்னும் கருத் தோடு கூடிய இருடிகள் பலகாலும் எதிர்நோக்கியிருந்தார்கள். எதிர்பார்ப்பு எவ்வாறு இருந்தது என்பதனை விளக்குவதற்கு மூன்று உவமைகளை ஆசிரியர் எடுத்தாண்டுள்ளார். தாய்ப் பசுவை எதிர்நோக்கும் கன்றுகள் போலவும், மேகத்தை எதிர் நோக்கும் வானம்பாடிப் பறவை போலவும், மேகத்தின் முழக்கத்தை எதிர்நோக்கும் மயில்கூட்டம் போலவும் இருடிகள் நடனத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இவ்விடத்தில் கன்றுகள், வானம்பாடி, மயில்கள் ஆகியவற்றின் குணங்களைக் குணத்தன்மைபடக் கூறியுள்ளமை கருதத்தக்கது.[16]

இரணியவர்மன் தென்னாடு செல்வதற்கு வழிகாட்டியாக ஒரு வேடனைத் தேர்ந்தெடுத்தான். வேடர்கள் காடுகளில் சென்று விலங்குகளையும், மற்றவற்றையும் வேட்டையாடும் இயல்பினர். அவ்வாறு வேட்டையாடுவதற்கு அவர்கள் விலங்குகள் சென்ற நெறிகளை அறிய முற்படுவர். விலங்குகளின் அடிகள் எதிர்முகமாக வந்திருக்குமானால் அவை வேடர் நடந்துவந்த வழியில் சென்றிருக்கிறது என உணர்வர். எதிர்த்திசையில் கால்கள் சென்றிருந்தால் தாங்கள் செல்லும் திசைகளிலே அவை சென்றிருப்பதாக உணர்வர். அதனை ஏறுகால், இறங்குகால் எனக் கூறுவர். அதனைச் சுருக்கமாக ''வேடனும் வணங்கியடியேன் மிருக நேடும்'' எனக் குறிப்பதால் உணரலாம்.[17] இவ்வாறு வேடர்களின் குணத்தினை ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ள நிலையைக் காணலாம்.

திருமுறைகளைப் புற்றுமண் மூடி மறைத்துக் கொண்டிருப் பதைப் பார்த்த மன்னன் கவலையுற்றான். வேண்டுவன போக எஞ்சியவற்றையே மண்மூடச் செய்ததாக ஓர் அசரீரி எழுந்தது. அவ்வான்மொழி கேட்ட மன்னன் ஆடினான், பாடினான், துன்பம் யாவும் ஒழிந்தான். அமுதம் கொண்டவனைப் போல நெஞ்சம் தேறினான். நம்பியாண்டார் நம்பிகளின் திருவடிகளைத் தாழ்ந்தான். ''சிவனடியார் எல்லாரும் கொள்க'' எனக் கூறிக் கருவூலத்தைத் திறந்து விட்டான். பெருமகிழ்ச்சி எய்தினான். அன்புமிகுந்து இச்செய்கைகளைச் செய்தான் என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.[18] தமிழ் மொழியிலும், தமிழ்ப் பதிகங்களிலும் அளவிலா ஈடுபாடு கொண்டவனாக மன்னன் விளங்கினான். கொடை என்பது அவனது பிறவிக்குணமாக அமைந்தது என்னும் குறிப்புக்களை அவனுடைய செய்கையால் வெளிப்படுத்தியுள்ள திறம் போற்றுதற்குரியது.

சாதித்தன்மை

ஒரு கூட்டத்தினரின் இயல்பினை உள்ளவாறு எடுத்துச் சொல்வது சாதித்தன்மை எனப்படும்.[19]

மத்தியந்தின முனிவர் தன் ஒரே புதல்வனாகிய சிறுவனை அனைத்து உச்சிமோந்து, பிள்ளைகளுக்கு நடத்தவேண்டிய

சடங்கு முறைகளை முறைப்படி நடத்தினார். வேத நூற்களைக் கையில் கொடுத்து திருவைந்தெழுத்து மந்திரத்தை முறைப்படி உபதேசித்து, மேற்கொண்டு செய்ய வேண்டுவனவற்றைக் கூறினார். மத்தியந்தின முனிவர் செய்த தனிப்பட்ட செய்கை யாக இப்பாடற் கருத்து அமைந்துள்ளது எனினும், அந்தணர் தங்கள் சிறுவர்களுக்கு செய்யும் செயல்கள் ஈண்டு ஒருவர்மேல் வைத்துச் சுட்டப்பட்டதாகக் கருதுதல் வேண்டும். எனவே சாதித்தன்மை புலப்பட மொழிந்ததாக இதனைக் கருதுதல் வேண்டும்.[20]

கௌடதேசத்தில் ஐந்தாம் மனுவாகத் தோன்றிய மன்னனுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் சிங்கவர்மன், வேதவர்மன், சுமதி வர்மன் எனப்படுவர். அம் மூவர்க்கும் உற்ற பருவம் வந்தவுடன் வேதவழியில் மன்னர் களுக்குக் கூறப்பட்ட கிரியைகளை முறையாகச் செய்து முடித்த பின் படைப்பயிற்சி, யானையேற்றம், குதிரையேற்றம், தேர் ஓட்டுதற்குரிய பயிற்சி முதலியவற்றைப் பயிற்றுவித்ததாகக் கூறப்பட்டுள்ளது. அரச மரபினர் யாவருக்கும் கூறிய தன்மை களை ஆசிரியர் ஈண்டுக் கூறியுள்ளமை கருத்தில் கொள்ளத் தக்கது.[21]

இரணியவர்மன் புலிக்கால் முனிவரை யோகத்திலிருக்கும் நிலையில் சந்திக்கின்ற காட்சியை ஆசிரியர் கூறியுள்ள நிலை அறிதற்குரியது. அவர் ஆடாமல், அசையாமல் இருக்கின்ற தோற்றம் அச்சத்தை உண்டுபண்ணுவதாக இருக்கிறது. சிறு அசைவு கூட அவருடைய யோகத்தை நீக்கி உணர்வை உண்டாக்கலாம். அவர் உடுத்தி இருக்கின்ற மரவுரி காயாது இருக்கிறது. பலாசிலையும், சிறு செடியிலுள்ள குசைப்புல்லும், சமித்தும், பூக்கூடையும், உலரப்பெறாத சடையும் அவர்மிக அணித்தான நேரத்தில்தான் யோகத்தில் அமர்ந்திருக்கிறார் என்பதைப் புலப்படுத்துகின்றது. யோகிகள் யோகத்தில் அமருகின்ற புறத்தோற்றத்தின் இயல்புகளை உணர்த்துவதாக இப்பாடல் கருத்து அமைந்துள்ளமையைக் காணலாம்.[22]

தொழில்தன்மை

ஒரு தொழிலின் இயல்பை உள்ளவாறு உணர்த்தும் நிலை தொழில்தன்மை எனக் கூறப்பெறும்.[23]

புலிக்கால் முனிவர் வண்டுகள் எழுவதற்கு முன்னெழுந்து பொய்கையில் நீராடி, நியதிகள் முடித்து, வேதங்களை உச்சரித்துக் கொண்டு மலர்களை எடுக்கச் செல்கிறார். மரங்களில் ஏறுவதற்குக் கால்களில் நகமும், பார்த்து எடுக்க விழியும் கை கால்களில் பெற்றமையால் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ முதலியவற்றைக் குற்றமில்லாமல் தேர்ந்தெடுத்து இறைவனுடைய திருப்பாதங்களில் விதிப்படி அருச்சித்து வணங்கினார். வழிபடும் நிலை எவ்வாறு அமையவேண்டும் என்பதைக் கண்முன் காட்டு வதாக இக்காட்சியை அமைத்துள்ளமை கருத்திற்கொள்ளத் தக்கது.[24]

நம்பியாண்டார் நம்பி, தந்தையின் ஏவல்படி பிள்ளையாருக்கு வழிபாடு இயற்றச் செல்லுகிறார். உள்ளன்போடு திருமஞ்சனம் ஆட்டினார். வழிபாட்டில் மேற்கொள்ள வேண்டிய செயல்களை எல்லாம் செய்தார். பிள்ளையாருக்கு முன்பாக நிவேதனத்தை வைத்து அமுதுசெய்ய வேண்டுமென வேண்டினர் என்னுங்குறிப்பு வழிபாடு இயற்றும் தொழில் திறமையைக் கூறுவதாக அமைந் துள்ளமையைக் காணலாம்.[25]

உழவர்கள் உழவுத் தொழிலால் உலகமெல்லாம் காக்கின்ற இயல்பு உடையவர்கள். கலப்பையிலுள்ள கொழுவின் மிகுதியால் வேளாண்மையைச் செய்கின்ற இயல்பும் அதனால் பெறுகின்ற புகழும் உடையவர். அம்மை கொடுக்கின்ற ஆழி நெல்லை எடுத்து விதையாகத் தூவிக் கழனியெல்லாம் விளைவித்து உலக மெல்லாம் காப்பாற்றுகின்ற இயல்பு உடையவர்கள் என்பதை ஆசிரியர் குறித்துள்ளார். வேளாளர்கள் வேளாண்தொழிலைச் செய்யும் இயல்பு இதனால் புலப்படுத்தப்பட்டுள்ளமை அறியலாம்.[26]

பொருளின் தன்மைகளை எடுத்துக் கூறும் ஆசிரியர் பல இடங்களில் இயல்புபட மொழிந்துள்ள திறம் நோக்குதற்குரியது. தன்மை அணியை ஆசிரியர் அளவோடு கையாண்டிருந்தாலும்,

கையாளப்பட்ட இடங்கள் பொருத்தமாகவும் சிறப்பாகவும் உள்ளன. தன்மை அணியின் பல்வேறு வகைகளையும் ஆசிரியர் கையாண்டுள்ள திறம் அறிதற்குரியது.

உவமை அணி

உவமை என்பது தெரியாத ஒருபொருளைத் தெரிந்த பொருளால் எடுத்துக்காட்டி விளக்குவது என்பர் பேராசிரியர்.[27] ஒரு பொருளை விளங்கவைப்பதற்கு எடுத்துக்காட்டுவதோடு ஒருவகையான இலக்கிய அழகு தோன்ற உவமை அமைந்து வரும் என்பது இளம்பூரணர் கருத்து.[28] உவமிக்கப்படும் பொருள்கள் எல்லாம் தெரியாத பொருள்கள் என்று கூற இயலாது. எனவே கவிஞர்கள் இலக்கிய நயந்தோன்றவும், தெரியாத பொருளை விளக்கவும் உவமையைக் கையாண்டனர் எனக் கொள்வதே ஏற்புடையது. இலக்கிய உத்திகளுள் எளிதாகவும், மிகுதியாகவும் பயன்படுத்தப்படுவது உவமை எனக் கொள்ளலாம். அவ்வகையில் உவமை, கவிஞன் கையிலுள்ள விளக்கமாகும். வினை, பயன், மெய், உரு என உவமையின் வகைகளை நான்காகப் பகுத்துரைப்பர் தொல்காப்பியர்.[29] உவமை தோன்றுதற்குரிய நிலைக்களங்களாக ஐந்து நிலைகளைத் தொல்காப்பியர் சுட்டி உள்ளார். சிறப்பு, நலன், காதல், வலி என்ற பொருள்களுடன் கிழக்கிடு பொருளாகிய ஒன்றனைச் சேர்த்து ஐந்து என்பர்.[30] இவ்வகை நிலைக்களங்களைப் பிற் காலத்துப் புலவர்கள் போற்றவில்லை என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

சிறப்பு, நலன், காதல், வலி என்பவை புறப்பொருளும் அகப் பொருளும் பாடப்படுவதற்கு ஏற்ற நிலைக்களங்களாக இருந்தன. எல்லா வகையான பொருள்களுக்கும் இந்நான்கு நிலைக்களங் களும் பொதுவானவை என்றாலும், இத்தன்மைகள் அமைந்த நிலைக்களக் கூறுகள் பிற்காலத்தில் வளர்ந்துள்ளன எனலாம். அவ்வகையான வளர்ச்சிக்குப் பக்தி இலக்கியங்களும், காப்பிய இலக்கியங்களும், புராண இலக்கியங்களும் காரணமாக அமைந் துள்ளன. அவ்வகை இலக்கியங்களால் தோன்றிய நிலைக்களக் கூறுகளை ஈண்டுக் காணலாம். அவை தெய்வ நலம், அருள்நலம்,

அடியார் நலம், நூல் நலம், தவநிலை, சித்தாந்தத் தெளிவு, இயற்கை இறந்த நிகழ்ச்சி என்பவையாகும். இவ்வகையில் உவமைகள் அமைந்துள்ள நிலைகள் ஈண்டு ஆராயப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தெய்வ நலம்

தெய்வங்கள் இருநிலைகளில் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. கோயில்களில் அமைந்துள்ள தெய்வத் திருமேனிகள் ஒருவகையாகவும், தெய்வங்கள் மாந்தராகி உறுப்பினர் நிலையில் இலக்கியங்களில் இடம்பெறுகின்றமை மற்றொரு வகையாகவும் கருதுதல் வேண்டும். தெய்வத்தன்மைகளை உமாபதிசிவனார் எவ்வாறு உவமைப்படுத்தி அமைத்துள்ளார் எனக் காணலாம்.

தெய்வத் திருமேனிகள்

தில்லைத் திருக்கோயிலில் மேற்குமுகம் நோக்கி மேலைக் கோபுர வாயிலில் அமைந்துள்ள கற்பகப்பிள்ளையாரின் திருவடிகள் செந்தாமரை மலர்போன்று காணப்படுகின்றன. தளிர்களினும் ஒளிமிக்கதாகக் கைகள் காணப்படுகின்றன. மின்னல் போன்று ஒளிமிக்க கொம்பும் பொருந்தியவர் என்று கற்பகப் பிள்ளையார் உவமிக்கப்பட்டுள்ள நிலை கருத்தில் கொள்ளத்தக்கது.[31]

கூத்தப்பெருமானின் திருவடியைச் சார்ந்தவர்கள் திருவருட் பேற்றிற்கு உரியவர்கள் ஆவார்கள் என்று கூறுமிடத்துத் திருவடியைச் செவ்விய தாமரை மலரோடு உவமித்துள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[32] இறைவனுடைய திருவடிகளைச் சுட்டும் போதெல்லாம் மலரோடு உவமித்தலை உமாபதிசிவனார் தொடர்ந்து பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது காப்பியங்களில் தொடர்ந்து பின்பற்றப்படுகின்ற உவமைகளைக் காப்பிய உவமைகள் என்று கூறும் வழக்கு உள்ளது.[33] கோயிற்புராணத்தில் திருவடிகளைக் கூறுமிடங்களிலெல்லாம் கமலபாதம்,[34] மலர்ப் பாதம்,[35] மலர்க்கால்,[36] பங்கயபதம்,[37] செம்மலர்க்கழல்,[38] புண்டரிகத்தாளோன்,[39] பூங்கழல்,[40] மலர்த்தாள்[41] என ஆசிரியர் கூறியுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.

சிவகாமி அம்மையார் மன்றில் இருக்கின்ற தோற்றப் பொலிவைக் கூறுங்கால் அம்மையாருடைய முகநகை இரத்தின தீபம்போல இருப்பதாகக் கூறுகின்றார். அதனை,

''மன்றின்மணி விளக்கெனலா மருவுமுக நகைபோற்றி''[42]

என்பதால் அறியலாம்.

இறைவனுடைய திருவடிகளைப் பொற்பதம் என்றும், பொன்னடி என்றும் கூறுகின்ற இடங்களும் உவமைவகையில் கூறப்பட்ட இடங்களாகும். இறைவனுடைய திருமேனி அமைப்பில் பெரும்பாலும் திருவடியே எடுத்து இயம்பப்படுகிறது. திரு வருளைச் செய்கின்ற உறுப்பு 'திருவடி' ஆதலால் அதுவே போற்றப்பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[43]

இராசராசன் திருமுறைகளைத் தேடவேண்டும் என்னும் குறிக்கோளோடு தேட முற்படுங்கால், இறைவனே மனத்தில் நினைப்பிக்கத் தேட முற்பட்டான் எனக் கூறுங்கால் ''மலர்ப்பதம்'' என்னும் சொற்களை ஆசிரியர் கையாண்டு திருவடியின் தன்மையைக் கூறுகின்றார்.[44]

சேக்கிழார் புராணத்தில் பிள்ளையாரின் திருவடிகளை மலர்த்தாள்[45] என்றும், சிவகாமி அம்மையின் திருவடிகளைப் பூங்கழல்[46] என்றும் கூறுகின்ற இடங்களும் இவண் கருதத்தக்கவை.

உறுப்பினராகக் காட்சி தருமிடங்கள்

இறைவன் நிகழ்ச்சிகளில் நேரிடையாகப் பங்கு கொள்ளுமாறு கூறப்பட்ட இடங்கள் உறுப்பினராகக் காட்சிதந்த இடங்களாகக் கருதத்தக்கவை. இறைவன் பிச்சை எடுக்கும் கோலத்தோடு தாருகாவனத்திற்குச் சென்றமை, புலிக்கால் முனிவர், பதஞ்சலி மற்றும் தேவர்கள் கணங்கள் காண ஆடியமை, பதஞ்சலிக்குக் காட்சி கொடுத்தமை, திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையார் நேரடியாக வந்து நிவேதனத்தை உண்டமை என்னும் இடங்களில் உறுப்பினராக வைத்துத் தெய்வங்களைப் பேசியுள்ளார். அந் நிலையில் உவமைப்படுத்தப்பட்ட நிலைகளை ஈண்டுக் காணலாம்.

தாருகவனத்திற்குச் செல்லுசின்ற இறைவனின் தோள்கள் உதய அத்தமன மலைகளும் ஒவ்வாநிலையில் பருத்துத் தோற்று கின்றன என்று உவமையை விளக்கிப் பொருளை உயர்த்திக் கூறியமை கருதத்தக்கது.[47] செங்கனி போன்ற வாய் எனவும், மலர்ந்த செங்கமலம் போன்ற திருமுகமும், பவளஒளியும் கருகும் படியான செவ்வொளி நிறைந்த திருமேனியும், மகளிர் மோகங் கொள்ளுமாறு போல் ஆடவர்களும் கொள்ளும் அழகின் மொத்த வடிவம் போலவும், இறைவன் காட்சி அளித்த நிலையைப் பல்வேறு உவமைகளால் உறுப்பு நலன்கள் தோன்ற ஆசிரியர் கூறியுள்ளதிறம் குறிப்பிடத்தக்கது.[48]

தாருகவனத்தில் சென்ற மோகினியின் தோற்றத்தைக் குறிப்பிடுங்கால், இரவிலே தோன்றும் நட்சத்திரங்கள் கலந்தாற் போல அகத்தில் பல மலரும் கலந்து திருகி முடித்த அளகத்தை உடையவராகக் காட்சியளித்தார்; கொடிபோன்ற உடலும், காமனை எரித்த கடவுளும் காமவிருப்பம் கொண்டவர்போலக் கொலைத் தொழில் மிக்க பார்வையால் மோகத்துடன் பார்த்து மனங்களித்தார் என மோகினியின் வடிவம் வருணிக்கப் பட்டுள்ளது.[49]

இறைவனுடைய திருமேனி செம்பவளக் குன்றுபோல் இருந்த தாகக் குறிப்பிடுகின்றார்.[50] தாருகவனத்து முனிவர்கள் காணும் படியாக அச்சந்தரத்தக்க நடனத்தை இறைவன் இயற்றினார். அப்பொழுது இறைவன் கையிலுள்ள தீ கொள்ளிவட்டம் போலச் சுழன்றது. எட்டுத்திக்கிலும் உள்ள இடி ஓசையைத் துடியோசை விழுங்கியது. செங்கமலம் போன்ற இரண்டு திருவடிகளை யாவரும் தொழுதனர் என ஆட்டத்தின் தன்மையைப் புலப்படுத்த உவமைகளைக் கையாண்டுள்ளார். இடி ஓசை போன்ற துடி ஓசை என்று கூறாமல், இடிஓசையைக் காட்டிலும் துடி ஓசை பெரியது என்னும் கருத்துப் புலப்பட ''இடிதுடி கொண்டிட'' எனக் குறிப்பிடுவது கருத்தில் கொள்ளத்தக்கது.[51]

பார்வதி தேவியின் மார்பகங்கள் ஒன்றோடொன்று ஒத்துத் திரண்ட தனங்களாகக் காணப்படுகின்றன. கயல்போன்ற

கண்களும் இறைவன் கண்கள் பொருந்தின பார்வையில் அதில் ஒருப்பட்ட மனமும், ஒப்பில்லாத புயங்களைப் பொருந்தினார் என்னும் நிலையில் இறைவனைப் பொருந்திய காட்சியைப் புலப்படுத்தியுள்ளார். ''ஒப்புமை இல்லாத புயம்'' என்று கூறுவது புயத்தை ஒவ்வொரு பொருளோடும் ஒப்பிட்டுப் பார்த்து உவமைப்பொருள்களைத் தள்ளிய நிலையைப் புலப் படுத்துவதாக அமைந்துள்ளது. இதுவும் ஒருவகையான விலக்கு உவமை எனலாம்.[52]

பதஞ்சலிக்கு இறைவன் காட்சி கொடுக்குங்கால், உமை யொருபாகனாகக் காட்சி தருகிறார். இடப்பாகத்தில் அமைந் துள்ள கொடிபோலும் தோற்றமும், பூப்போலும் குழலையும் உடைய உமை என்று இறைவனொடு உடனாயிருந்த காட்சியைப் புலப்படுத்துகின்றார்.[53]

இறைவன் ஆனந்தநடனத்தைச் செய்யுங்கால் தாமரை மலரின் அழகுபோன்ற திருமுகம் உடையவராகக் காட்சி யளித்தார்.[54] ஆயிரம் ஞாயிறு கூடி ஒன்றாக ஒளிவிட்டாற் போன்று இறைவன் ஆடுகின்ற ஞானசபை இருந்ததாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ஞானசபையின் ஒளிக்கு இறைவனே காரண மாவான் என்பது கொள்ளத்தக்க கருத்தாகும்.[55]

இருண்ட மேகம் போன்ற கூந்தலும், வில்லை ஒத்த புருவமும், வேல்போன்ற விழியும், குமிழமலர் போன்ற மூக்கும், ஆதொண்டைக் கனிபோன்ற இதழும், முத்துப்போன்ற நகையும், பச்சென்ற திருமேனியும், கழுகு போன்ற கழுத்தும், மூங்கில் போன்ற தோளும், கோங்கரும்பு போன்ற முலையும், துடியை ஒத்த இடையும், பாம்புப் படம் போன்ற நிதம்பமும் உடைய வளாய் உமையம்மை உவமை நலங்களால் காட்சிப் படுத்தப் பட்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[56]

திருப்பாற்கடலில் பாம்புப்படுக்கை அகன்ற திருமால், ''அரகரசங்கர'' என்று உச்சரித்துக் கண்கள் அருவியாகப் பாயக் காற்று அடிக்குங்காலத்தும் அணையாத சித்திர விளக்குப்போலத் தாமரை இருக்கையில் இருந்தார் எனக் கூறுகின்றார். எந்த

வகையிலும் சலனமில்லாத நிலையில் காற்றுமுன் சலியாத எழுதப்பட்ட மணிவிளக்கு எனக் கூறுகின்ற உவமை தனித் தன்மை வாய்ந்த உவமை எனலாம்.[57]

திருமால் தாமரை இருக்கையினின்றும் மனத்தில் ஆனந்தம் தோன்ற கண்விழித்த நிலை உலகில் சிவானுபவம் நீங்கி இருள் மேலிட்டது; ஆதலால் அந்தப்பேர் இருளை நீக்க வேண்டும் என்பதற்காக உதயகிரியில் இரண்டு சூரியர்கள் எழுந்தது போல இரு கண்மலர் விழித்தார் எனக் கூறுவது குறிப்பிடத்தக்கது. சிவானுபவம் நீங்கிப் பூமியில் பேரிருள் சூழ்ந்தது. அதனை நீக்க ''இரண்டு சூரியர்கள் தோன்றினாற்போல'' என்று கூறுகின்ற உவமை இல்பொருள் உவமையாக அமைந்துள்ளமை கருதத் தக்கது. இல்பொருள் உவமையோடுகூடத் தற்குறிப்பேற்றம்பட ஆசிரியர் இவ்வுவமையைக் கையாண்டிருப்பது கருதத்தக்கது. அதனை,

''பொருவிலநு பவநீங்கிப் புவிமிடைந்த திருளெனவந்
திருபரிதி யெழுகிரிபோ லிருகண்மலர் தர விருந்தாங்கு''[58]

எனக் கூறுவதால் உணரலாம்.

மிக எளிதில் செல்லுகின்ற ஒரு நிலைக்கு, வயலிலே பாய்கின்ற நீர் பள்ள மடையாக இருந்தால் செல்வதுபோல என்று உவமிப்பது வழக்கமாக உள்ளது.[59] தாருகவனத்தில் இறைவனுடைய ஆடல் கண்டு துன்பக் கடலிலிருந்து நீங்கி அளவில்லாத பேரின்ப வெள்ளத்தில் சென்று அழுந்தின சித்தம், பள்ளமடையை எடுத்தோடும் புனல்போல இருந்ததாகவும் அதனின்று மீண்டு ஞானமாகிய மேட்டுமடையில் விருப்புற்று ஏறினார் என்று திருமாலைக் குறிப்பிடுகின்றார். இதன்கண் பள்ளமடையும், மேட்டுமடையும் ஒப்பிடப்பெற்று உவமை அமைத்துள்ள திறம் போற்றுதற்குரியது[60]

திருநாரையூரில் பொல்லாப்பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி படைத்த உணவினை உண்டு மகிழ்ந்தார். நம்பியாண்டார் நம்பியின் வேண்டுகோட்படி, பிள்ளையார் அவருக்கு அனைத்துக் கலைகளையும் ஓதத் தொடங்கினார். அன்றுபோல் என்றும் தொடர்ந்து ஓதினார் என்னும் குறிப்புக் காணப்படுகின்றது.[61]

மணமக்களை ''இன்றுபோல் என்றும் வாழ்க'' என்று வாழ்த்து கின்ற மரபு இவ்வகை உவமையிலிருந்து தோன்றியதாக இருக்கலாம்.

இவ்வாறு தெய்வங்களைத் திருமேனி, உறுப்பினர் நிலைகளில் தெய்வ நலங்குன்றாத நிலையில் உவமித்துள்ள திறம் போற்றுதற் குரியது. ஒரு பாடலில் பல்வேறு உவமைகளும், இல்பொருள் அமைந்த உவமைகளும் ஆசிரியர் கையாண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. உவமை அமைக்கின்ற நிலையில் தற்குறிப் பேற்றம் படவும் அமைத்துள்ள நிலை குறிப்பிடத்தக்கது. உவமையை இருவேறு மாறுபட்ட தன்மை புலப்பட உவமித்துள்ள நிலையும் கருத்தில் கொள்ளத்தக்கது. ஒருமை உணர்வை எய்தியவர்கள் எவ்வாறு இருப்பார்கள் என்பதை உவமையில் விளக்கியுள்ளதிறம் போற்றுதற்குரியது.

அருள் நலம்

இறைவன் அடியவர்கள் உய்யும் வகையில் கருணை கொண்டு செலுத்துகின்ற அருள் நலம், உவமையின் நிலைக்களக்கூறாக அமைந்துள்ளமையைக் காணலாம். இந்நலத்தில் குருவாக இருந்து அருள்செய்த நிலையும் கருத்தில் கொள்ளத்தக்கது.

மத்தியந்தின முனிவர் மகன் பலமுறை தவமிருந்து இறைவனைக் கண்டார். இறைவனிடம் தனக்குப் புலிபோன்ற வலுவான கால் நகங்களும், அவற்றிலே கண்களும் வேண்டுமென வேண்டிப்பெற்றார். இறைவன் அவருக்குப் புலிக்கால்களையும் அவற்றின் விரல்களில் கண்களையும் அருளினான் என்னும் குறிப்பு கருதத்தக்கது.[62]

இறைவன் திருமேனி கொண்டு எழுந்தருளித் தமக்கு அருள் செய்த நிலையைப் புலிக்கால் முனிவர் எண்ணிப் பார்க்கிறார். அரி அயனுக்கும் அப்பாற்பட்ட இறைவன் தமக்குக் காட்சி கொடுத்த நிலையைப் பெரிதாக எண்ணுங்கால், அவருடைய கண்கள் ஆறுபோலப் பெருக்கெடுத்தது. இறைவனையும், இறைவியையும் பூமியில் வீழ்ந்து வணங்கினார். இறைவன் அருள்நலம், அவர் கண்ணீர்ப் பெருக்கிற்குக் காரணமாக அமைந்தமையைக் காணலாம்.[63]

பதஞ்சலி பலநாள் செய்த யோகத்தின் பலனாக இறைவனைக் காணப்பெற்றார். இறைவன் முதலில் பிரமனாகக் காட்சி தந்து அவருக்கு வேண்டிய இன்பநலன்களையெல்லாம் கொடுப்பதாகக் கூறினார். ஆனால் பதஞ்சலியோ இறைவனுடைய ஆட்டத்தைக் காண்பதே தம்முடைய குறிக்கோள் என உறுதியாகக் கூறவே இறைவன் தம்முடைய உண்மையான வடிவைக் காட்டினார். அவ்வடிவில் காளமேகத்தை ஒத்த கண்டத்தை உடையவராக அவர் காட்சி தந்தார். இறைவனின் தோற்றத்தில் சிவ பெருமானாக அடையாளம் காட்டுவதற்கு, ஆலகாலமுண்ட கண்டம் அடையாளமாக இருந்ததை உவமையால் விளக்கியுள்ள நிலை குறிப்பிடத் தக்கது.[64]

பதஞ்சலி பாம்பு உருவோடு நாக உலகத்தில் வரவேற்கப் பெற்றார். அவர்கள் மூலத்தானமுடைய இறைவன் திரு மேனியைப் பதஞ்சலி பெரியமலையாக எண்ணி வணங்குவதற்குக் காரணம் என்ன என்று வினவினர். மிக்க ஈடுபாடுடன் ஈட்டப் பட்ட பெரும் பொருளைப் பெரியோர்கண்டோர் யாவர்க்கும் பகுத்துக் கொடுக்குமாறுபோல அம்மலை பாதாளம் ஏழினும் கீழாகக் கூறப்படுகின்ற சொற்பொருள் முடிந்த இடம் தில்லை யாகப் பொருந்தும் எனக் கூறினார். கைபொருளைக் கொடுத்து அருள் ஈட்டும் பெரியவர் போல் சொற்பொருளை நீக்கி இறைவன் பாதங்களைக் காணலாம் என்னும் உவமை மிகநுட்பமான உவமைகளும் ஒன்றாகும். பொருளற்ற நிலை அருளுக்கே காரணமாவது போல, சொல்லற்ற மோனம் அருள் நிலையை அடைவதற்குக் காரணம் என்னும் குறிப்பை உள்ளடக்கியதாக இவ்வுவமையை அமைத்துள்ள திறம் போற்றுதற்குரியது.[65]

இறைவனை நாள்தோறும் பலபேர் வந்து வணங்கிச் செல் கின்றார்கள், இறைவனுடைய திருக்கால்களைத் தம் சென்னியில் சூடுகின்றனர். இறைவனுடைய அருள்பெற்றமையால் அன்பும், தசையும் நீராக உருகும் படியாக இறைவன் அருள்செய்த திறத்தைப் பதஞ்சலி முனிவர் வெளிப்படுத்திப் பாராட்டுகின்றார். அருளினால் எலும்பும் தசையும் நீராகுமாறு உருகிய நிலை

கூறப்பட்டிருப்பதைக் காணலாம். எலும்பு உருகுகின்ற நிலை என்பது அருளுக்கே உரிய நிலையாக உவமிக்கப்பட்டுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது.[66]

இறைவன் நடம்செய்து அருள் செய்யத் தொடங்கியபோது, பதஞ்சலி முனிவரும் புலிக்கால் முனிவரும் மகிழ்ச்சி மேலிட்டு ஆடினர். அங்குள்ள தேவர்களும், முனிவர்களும் செய்த ஆரவாரம் கடலேழும் ஆரவாரித்தது போலக் காணப்பட்டது. பூமி வட்டத்தில் தேவர்கள் பெய்த மலர்மாரி, மலைக்கு ஒப்பாக விளங்கியது எனக் கூறுகின்றார். அருள்காரணமாகத் தோன்றிய உணர்ச்சிப் பெருக்கினை உவமை வாயிலாக நயம்பட உரைத்துள்ளார்.[67]

இறைவன் தன் விருப்பப்படி என்றும் தங்கி அருள் செய்தற் குரிய இடமாக ஆடிய இடத்தைத் தேவர்கள் பொன்னம்பலமாகச் செய்தனர். மேருமலையை அடையும் எப்பொருளும் பொன்னானாற்போலவும், அளத்தில் போடும் பொருள் உப்பானாற் போலவும், பொற்குவையாகிய அம்பலமும் சேருகின்றவர்களுக்கு ஞானத்தைத் தானாகவே செய்யும் இயல் புடையது எனக் கூறுகின்றார். சென்று அடைகின்ற இடத்தின் தன்மை சேருகின்ற பொருளுக்கும் ஏற்படும் என்னும் கோட்பாட்டை வைத்து, அருள்நிலையமாக விளங்குகின்ற பொன்னம்பலம் தன்னைச் சார்ந்தார்க்கு ஞானத்தை இயல்பாகவே ஏற்படுத்துகின்றது என்னும் கருத்து உளங்கொளத்தக்கது.[68]

இறைவனுடைய ஆடலைக் கண்ட பதஞ்சலி முனிவர், என்றும் அவன் அந்த அம்பலத்தில் ஆடல் நிகழ்த்த வேண்டும் என்னும் வரத்தைப் பெற்றார். தங்கள் நாயகனாகிய சிவ பெருமானின் திருமேனி வருத்தத்தைக் கருதாமல் எப்பொழுதும் நடனமிட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்று வரம் பெற்றவர்களைக் குறித்துச் சிவகணங்கள் வருந்துகின்றன. ஒரு மருந்து பிணியைப் போக்கும் என்றால், நோயுற்றவன் அப்பிணிக்கு மருந்தாகிய செடியை வேருடன் பிடுங்கி நறுக்கிச் சாறு பிழிதலைப்போல இறையன்பரின் செயல் இருந்ததாகக்

குறிப்பிடுகின்றார். நோயுற்றவன் தன் நோய்தீர, மருந்துச் செடியின் நோவைப் பாராததுபோல இறைவனின் திருமேனி வருத்தத்தைப் பாராமல் அருள் ஒன்றே வேண்டியிருந்த நிலையை இவ்வுவமையால் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம்.[69]

தில்லையில் அமைந்துள்ள பத்துப் புனித நீர்நிலைகள் குறிக்கத்தக்கவை.[70] கங்கை, காளிந்தி, காவிரி முதலான புனித ஆறுகள் இந்திரன் முதலான தேவர்களுக்கே ஒப்பானவை. ஆனால் தில்லையிலுள்ள பத்து வாவிகளும் அயன், அரி, இருடிகளோடு ஒக்கும் பெருமை வாய்ந்தவை. தில்லைக் கோயிலில் அமைந்துள்ள சிவகங்கைத் தீர்த்தம், அருளே வடிவமாகக் கொண்டு விளங்குவதால் தேவர்முதல் யாவரும் வணங்கத்தக்க இறைவனைப்போல விளங்கும் தன்மையது. அருளே வடிவமாக இருக்கின்ற அந்நீர்நிலை, தம்மை வந்து அடைந்தோர் யாவர்க்கும் எளிதாய் இருக்கும் தன்மையது என்று குறிப்பிடுமிடம் கருதத்தக்கது.

சிவகங்கையை நீர்நிலையாகக் கருதாமல் சிவபெருமானின் அருள்வடிவமாகவே கருதி அருட்டன்மையை உவமை வாயிலாக விளக்கியுள்ள திறமும் சிவபெருமானுக்குரிய பரத்துவத்தையும், சிவகங்கைக்குரிய மேலான தன்மையையும் ஒப்புமை வாயிலாகக் குறித்துச் சென்றுள்ள திறமும் போற்றுதற்குரியன.[71]

இறைவனுடைய திருமேனியும் இறைவனை அனுபவிக்கின்ற ஞான அனுபவமும், சருக்கரையும் சுவையும் போல ஒன்றானவை. ஆன்ம ஞானத்தை நீக்கி அருளையே வடிவாகத் தந்த பெரும் பேற்றினை இரணியவர்மன் பெற்றதாகப் புலிக்கால் முனிவர் கூற்றில் வைத்து உணர்த்தியுள்ளார். அருள் அனுபவத்திற்குத் திருமேனி எவ்வளவு இன்றியமையாதது என்பது உவமையால் புலப்படுத்தப்பட்டுள்ளமையை அறியலாம்.[72]

ஏனாதிநாதனாருடன் கொண்ட தொழில் காழ்ப்பினால் அதிசூரன் அவரைக் கொன்றுவிட எண்ணினான். வாள்கொண்டு வெல்ல இயலாமையால் அவர் விரும்பும் திருநீற்றுக்கோலத்தோடு போரிடச் சென்றான். அடியாரைக் கொல்ல மனமில்லாத

ஏனாதிநாதர், வாளைக் கையில் பிடித்துக் கொண்டு வாளா நின்றார். அவ்வாறு நின்று உயிர்விடுத்த அத்தன்மையை "நேர்விழக் களிப்பார்போல் நின்றே யாக்கை விடுவித்துச் சிவனருளே மேவினார்"[73] என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். அதிசூரன் பகைவனாயினும் நீறணிந்த நெற்றி உடையவனாக வந்து தம்மைக் கொல்லுகின்ற நிலையைக் கருதி, ஒரு சிவனடியார் தம்மைக் கொல்லுகிறார் என்னும் மகிழ்ச்சி மிகுதியால் ஏனாதிநாதர் காட்சி அளித்தார் என்னும் குறிப்பினைப் புலப்படுத்தும் வகையில் இவ்வுவமை அமைந்துள்ளதோடு இறை வனுடைய அருட்காட்சியையும் அவர் ஒருசேரப் பெற்றார் என்னும் குறிப்பும் பாடலுள் அமைந்துள்ளமையைக் காணலாம்.

அடியார் நலம்

இறைவனிடத்தில் இடையறாத அன்பு பூண்டவரை அடியார் எனலாம். அடியார்களின் உறுதிப்பாட்டையும், வேடப்பொலிவு முதலியவற்றையும் கவிஞர்கள் அணிநலந்தோன்றக் கூறி யுள்ளனர். அவ்வகையில் வெளிப்படுத்தப்பட்ட உவமைகள் அடியாரை நிலைக்களக்கூறாகக் கொண்டனவாக அமைகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மத்தியந்தின முனிவரின் மகன் தில்லையில் திருமூல நாதரையும், புலீச்சர ஈசரையும் வழிபாடு செய்வதற்கு விடியற் காலத்தில் எழுந்து மலர் எடுப்பதில் உள்ள சங்கடங்களை நினைத்து வருந்தினார். பலகாலம் இறைவனை இடையறாது சிந்தித்து இறைகாட்சி பெற்றார். இறைவன் அருள் செய்வதாகக் கூறிய காலத்துத் தமக்குப் புலிக்காலும், கைவிரல்களில் கண்ணும் வேண்டும் என வேண்டிப்பெற்றார். விடியற்காலையில் மரங்களில் ஏறிப் பறிப்பதற்கும் பனிவழுக்காமல் இருப்பதற்கும் புலிக்காலும், குற்றமற்ற பூக்களைத் தேர்ந்தெடுக்க விரல்களில் கண்ணும் வேண்டினார். அதனை,

"என் காலும் கரமும் புலியின் மலிய"[74]

என்ற உவமையால் புலப்படுத்துகின்றார். பொன்னும் பொருளும் வேண்டாது அருள் ஒன்றே நாடும் அடியவரின் உள்ளப் பாங்கினைப்

புலப்படுத்தும் வகையில் அவர் வேண்டுகையும், அவ்வேண்டுகையில் அமைந்துள்ள உவமையும் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

பதஞ்சலி முனிவர் தில்லையில் புலிக்கால் முனிவரைக் கண்டார்; தன்னிடம் இறைவன் கூறிய செய்தியைக் கூறினார். இறைவன் ''புலிக்கால் முனிவன் என்னும் பெயரையுடைய முனிவன் தில்லைவனத்தில் இருக்கிறான். அந்த முனியும், நீயுமாகக் கூடி நம்முடைய தாண்டவத்தைக் காணக்கடவீர்''[75] என்று கூறியதாகக் கூறினார். இறைவனுடைய அருள்மிக்க அந்தச் சொற்களைப் பெற்ற புலிக்கால் முனிவர், மிக்க வறுமை யுடையவன் செல்வம் பெற்றது போலவும், ஆனந்தத் தாண்ட வத்தை நேரில் கண்டது போலவும் மகிழ்ச்சி அடைந்தார் எனக் கூறுகின்றார். இறைவன் தம்மையும் ஒரு பொருட்டாக எண்ணிக் கூறிய அருட்டிறம் அவருடைய மகிழ்ச்சிக்குக் காரணமாகியது. அதனை உவமை வாயிலாகக் கூறுங்கால் அந்த ஆனந்தத் தாண்டவத்தை நேரில் கண்டாற்போலவே மகிழ்ச்சி அடைந்தார் என்னும் உவமை குறிப்பிடத்தக்கது.[76] ஓர் அடியவரின் உள்ளப் பாங்கினைப் புலப்படுத்தும் வகையில் உவமைகள் அமைந்துள்ள திறம் போற்றுதற்குரியது.

தில்லைக் கூத்தனைக் கண்டு வழிபட்டோர் முத்தி அடைவர் என்பது, ''தில்லையைத் தரிசிக்க முத்தி'' என்று கூறும் தொடரால் விளங்கும். மறந்தாலும் இனி இங்கு வர மாட்டோம் என்று கூறி மன வேறுபாட்டுடன் செல்பவர்போலத் தில்லைக்கூத்தனை வழிபட்டவர்கள் மீண்டும் நிச்சயமாகப் பிறப்பெடுக்க மாட்டார்கள் என்றாலும் அதனால் பயனொன்று மில்லை. தில்லைக் கூத்தனை மீண்டும் கண்டு வழிபடாத நிலையில், எய்துகின்ற பேரின்பம் என்ன பயனைச் செய்து விடும் என்று கேட்கின்ற முகமாக ஆசிரியர் இவ்வுவமையை அமைத் துள்ளார்.[77] ஆசிரியரே ஓர் அடியார் உள்ளத்தோடு இப்பாடலைப் பாடியிருக்கின்ற திறம் போற்றுதற்குரியது. கூத்தப்பெருமானை வழிபடுவதைக் காட்டிலும் பெரும்பேறு வேறொன்றுமில்லை என்னும் கருத்துப்புலப்பட இஃது அமைந் துள்ளமை குறிப்பிடத் தக்கது.

திருமுறைகள் வைக்கப்பட்டிருந்த அறை மூவர் கை அடையாளங்களோடு காப்பிடப்பட்டிருந்தது. அடியார்களுடைய கையைக் குறிப்பிடுகின்ற ஆசிரியர் அழகுமிக்க மலர்போலும் கைகள் என்று குறிப்பிடுகின்றார். தேவார மூவரும் வாழ்ந்த காலத்தில் வைக்கப்பட்ட முத்திரை அவ்வறைக் காப்பில் காணப்பட்டது. அந்நிகழ்ச்சியைக் கூறுகின்ற ஆசிரியர் அதனை ஒரு வரலாறாகக் காணாமல் மூவருடைய கைகளையும் நேரில் காண்பது போலவே உவமையை அமைத்துள்ளார். ''கோல மலர்க் கைகள்''[78] என்று அடையாளச் சின்னத்திலேயே அக்கை களின் மென்மையையும், செம்மையையும் அழகையும் அடியார்க்கு அடியாராக இருந்து உணர்ந்து காணுகின்ற திறம் புலப் படுகின்றது. இவ்வுவமை வாயிலாக அவருடைய உள்ளப்பாங்கு வெளிப்படுவதைத் தெளியலாம்.

திருமுறை ஏடுகள் புற்றினால் மறைக்கப்பட்டிருந்தது கண்டு மன்னனும் மற்றையவர்களும் வருந்தியபோது, ''தேவைப் பட்டவை போக எஞ்சியவையே கரையானால் அரிக்கப்பட்டது'' என்றதோர் வான்மொழி எழுந்தது.[79] அதனைக்கேட்ட மன்னன் துன்பம்யாவும் நீங்கி ஆடிப்பாடி மகிழ்ந்தான்; அமுதம் உண்டவன் போல நெஞ்சம் தேறினான்; திருமுறைகளின் அழிவினால் மிகச் சோர்ந்து போயிருந்த அவனுள்ளத்திற்கு ''அசரீரி'' அமுதம் போன்று இருந்ததாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.[80] திருமுறை களில் அரசனுக்கு இருந்த ஈடுபாடு அவனை ஓர் அடியவர் நிலைக்கு ஆக்கியிருந்தமையை உணரலாம். தான் ஒரு மன்னன் என்பதையும் மறந்ததை ஆடியும் பாடியும் அவன்கொண்ட மகிழ்ச்சி புலப்படுத்துகிறது.

சேக்கிழார் பெரியபுராணம் இயற்றியமைக்காக யானைமீது அமர்த்தி ஊர்வலமாகக் கொண்டு வரப்பெற்றார். அநபாய சோழன் அருகில் இருந்து கவரி வீசினான். ஓராண்டு முழுமையும் இருந்து புராண அரங்கேற்றத்தைக் கேட்டான். பொன்னை வாரிக் கொடுத்தான். அடியவர்கள் கண்ணீர் பெருக்கினர். அடியவர் பெருமையைப் போற்றிய அடியவராகச் சேக்கிழார் விளங்குவதால் வான்மீகி, வியாசர், ஆதிசேடன், அகத்தியன் ஆகியோரும் அவருக்கு ஒப்பாக மாட்டார்கள் என்று குறிப்

பிடுகின்றார்.[81] ஒருவகையான விலக்கு உவமையால் அடியார் நலம் கூறிய அடியாரை உமாபதிசிவனார் பாராட்டியுள்ளார் என்பது புலனாகிறது.

மெய்ப்பொருள் நாயனாரை வெல்ல முயற்சி செய்து தோற்ற முத்தநாதன், அடியார் வேடத்தோடு வருகின்றான். அதனை,

"மாதவர் போல் ஒருமுறை கொண்டு அணுகிவாளால்
வன்மைபுரிந் திடமருண்டு வந்ததத்தன்
காதலுற நமர்த்தத்தா என்று நோக்கிக்
கடிது அகல்வித்து இறைவனடி கைக்கொண்டாரே"[82]

என்பதனால் அறியலாம். ஒரு நூலை உரைசெய்வதாகக் கூறிய பொய்வேடதாரி, கத்தி கொண்டு குத்திய பொழுதும் அவன் செயலை மெய்ப்பொருள் மன்னவன் கடியவில்லை. "தவவேடமே மெய்ப்பொருள்"[83] என வாழ்ந்தவராதலால், முத்த நாதனை விரைவாக அவ்விடத்தினின்றும் அகல்வித்தார். அதனால் அவருக்கு இறைபதம் கிடைத்தது என்னும் குறிப்புப் புலப்பட "இறைவனடி கைக் கொண்டார்"[84] என்னும் தொடர் அமைந் துள்ளமையைக் காணலாம்.

சிவகாமி ஆண்டாருக்காக எறிபத்தர் பட்டத்து யானையைக் கொன்றார். அடியவரைத் துன்புறுத்திய யானை விலங்கினத்தில் பெரியது. பட்டத்துயானை என்ற தகுதி அதன் இன்றியமை யாமையை உணர்த்துகின்றது. தோற்றத்தால் பெரிது எனவும் நினையாமல், அரசன் ஏறுதற்குரியது என்னும் தகுதியையும் நினையாமல், எறிபத்தர் யானையைக் கொன்றார். யானைக்கு உரிமைபூண்ட புகழ்ச்சோழர், அடியார்க்கு இடர்செய்த யானையைக் கொன்றது போலவே தம்மையும் கொல்லுமாறு கூறுகின்றார். "எறிபத்தரின் அன்புடைமை பெரிதா? புகழ்ச் சோழர் அன்புடைமை பெரிதா?" என்னும் கேள்விக்குறி உண்டாகியது. அடியவரிடத்து ஈடுபாடு கொண்ட, இவ்விருவர் திறத்தையும் புலப்படுத்தும் நிலையில் "யானையைக் கொன்றது போலவே" என்னும் உவமை அமைந்துள்ளமையைக் காணலாம்.[85]

அடியார்நலம் என்னும் நிலைக்களக் கூறு சங்க காலத்தில் காணப்படாத ஒன்று. சங்கத்தை அடுத்துள்ள காலத்திலும்

இக்கூறு வளர்ச்சி பெறவில்லை. பக்தி இலக்கியக் காலத்தில் தோன்றி வளர்ச்சிபெற்று, புராணங்களிலும், பக்தியை வெளிப் படுத்தும் சிற்றிலக்கியங்களிலும் அடியார் நலம் என்னும் இந் நிலைக்களக்கூறு பரந்து விரிந்துள்ளமையைக் காணலாம். உமாபதிசிவனாரின் நூல்களில் இக்கூறு நன்கு கையாளப் பட்டிருத்தலை உணரலாம்.

நூல் நலம்

நூல் நலம் என்னும் நிலைக்களக்கூறு, நூலை மக்கள் போற்றிய நிலையை உணர்த்துவதாகும். "நவில்தோறும் நூல் நயம் போலும்"[86] என வள்ளுவர் நூல்நயத்தை உவமையாகக் கூறியுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. நூலைப் போற்றியும், நூல் சார்பானவற்றையும் உவமையாக அமைத்துப் பாடியுள்ள நிலை ஈண்டு ஆராயப்பெறுகிறது.

கோயிற்புராணம் செய்ய முனைந்த உமாபதிசிவனார், தம்முடைய அறியாமையையும் புராணத்தின் பெருமையையும் நினைந்து அவையடக்கமாகக் கூறிய உவமை ஈண்டுக் கருத்தில் கொள்ளத்தக்கது. எட்டும் இரண்டும் அறியாத தாம், செய்யுள் வல்லவரைப் போல ஒரு நூலைச் செய்ய முற்பட்டிருப்பதாக நினைந்தார். நல்லோரைப் பார்த்துக் குற்றம் பொறுக்கவேண்டும் என வேண்டிக் கொள்வதுங்கூட நகையைத் தருமென்பதால் அவ்வாறு வேண்டுகோள் விடுக்க வில்லை என்று குறிப்பிடு கின்றார்.[87] எட்டு, இரண்டு என்பன முறையே அ, உ எனக் கருதப்படும். அவற்றுள் 'அ' இறைவனையும், 'உ' இறைவியையும் குறிக்கும், அதனை,

"பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும் அறி யேனையே"[88]

என்பதால் அறியலாம். இறைவனையும், இறைவியையும் அறியும் செயல் என்பது எளிதானதன்று. அத்தகைய நிலை கைகூட வில்லை என்பது ஒரு குறையுமன்று. அதனைச் சுட்டிக் கோயிற் புராணத்தை இயற்றுவதற்குத் தமக்குத் தகுதியில்லை எனக் கூறிக் கொள்வது, ஒரு தகுதிக் குறைவு என்று மதிக்கமுடியாதது.

இறைவன் புலிக்கால்முனிவர், பதஞ்சலி, சிங்கவர்மன் ஆகியோர்க்கு மன்றிலாடித் திருவருள் புரிந்த இயல்பினை அறிந்தபடி சொல்வதாக முதற்பாடலில் ஆசிரியர் குறித்துள்ளமை மனத்தில் கொள்ளத்தக்கது.[89] குறையுடையவர்கள் சொல்லுகின்ற பொருள் நிறையுடையதாக இருப்பதால் பெரியோர்கள் கைக்கொள்வர் என்னும் குறிப்புப் புலப்படத் தம்நூல் ஏற்கப்படும் என்பதைப் புலப்படுத்தியுள்ளார்.

இரணியவர்மன் தில்லைச் சிற்றம்பலத்தில் திருவிழாக்களை நடத்துவதற்கு மிக முற்பட்ட காலத்தில் கட்டளைகளை ஏற்படுத்தினான். சோழ மன்னர்கள் மக்கள் எல்லோரும் கலந்து மகிழும்படியாகத் திருவிழாக்களை விரிவாக நடத்தினர். உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் ஆகியமுப்பதும் முதலெழுத்துக்கள் என்று கூறப்படும். அவையே பலவகைக் கலைகளும் தோன்றுவதற்குக் காரணமாக ஆனாற்போலவும், காலமும் கைம்மாறும் வேண்டாது பயன்தரும் மேகத்தைப் போன்றும் உலகத்தில் உள்ளவர்களுக்கு விழாக்களைக் காணும் நன்மையை இரணியவர்மன் செய்தான் எனக் குறிப்பிடுகின்றார்.[90] இப்பாடலில் அமைந்துள்ள இரண்டு உவமைகளில் நூல் முதலிய பலகலைகளும் தோன்றுவதற்கு முப்பது முதலெழுத்துக்களும் காரணமாகின்றன என்னும் உவமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

என்றும் உள்ள உண்மைப் பொருளையும், சிவபதத்தையும் அதன் முதற் பொருளையும், அந்தமுதற் பொருளுக்குரியவன் சிவனேயன்றிப் பிற் கடவுளர்கள் இல்லை என்பதையும் பேசுகின்ற நூல்களாகத் திருமுறைகள் விளங்குகின்றன. முற்காலத்தில் யசுர் வேதத்தைச் சில சிச்சிலிப்பறவைகள் அருந்தி விட்டபொழுது அவற்றைத் தேடினது போலன்று என்று கரையான்புற்றுக்குள் இருந்தும் அழிவுறாத திருமுறைப் பாடல்களைத் தொகுத்த செயலைக் குறிப்பிடுகின்றார். எனவே, அவை தீயில் எரியா; ஆற்றெதிர் ஓடும்; என்புக்கு உயிர் கொடுக்கும்; நஞ்சைப் போக்கும்; மதயானையையும் அடக்கும்; கல்லை மிதக்கப்பண்ணும்; முதலையுண்ட பிள்ளையைத்

தோன்றச் செய்யும் என மூவர் நிகழ்த்திய வியப்பான செயல் களைச் சுட்டித் திருமுறைகளின் தன்மையை விளக்கியுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது.[91]

சேக்கிழாருடைய நூலை மதிப்பிட நினைக்கும் தம்மை இரண்டு உவமைகளால் புலப்படுத்திக் கொள்ள உமாபதிசிவனார் கருதுகிறார். அதனை,

"பாற்கடலைச் சிற்றெறும்பு பருக நினைப்பது போலும்
நீர்க்கடல்சூழ் மண்ணுலகை நிறுக்கநினைக்கு மதொக்கும்"[92]

என்பதால் அறியலாம். பாற்கடல் போலச் சேக்கிழாருடைய நூல் அளவும், சிற்றெறும்பு போல உமாபதிசிவனாரும் இருப்ப தாகக் குறிப்பிடுகின்றார். இவ்வுலகைத் தராசிலே நிறுக்க முனைவது போல அம்முயற்சியின் பெருமையையும் சுட்டியுள்ளார். அவையடக்கமாகக் கூறப்பெற்ற இவ்வுவமைகள் நினைத்தற் குரியவை.

பெரும்புலவர்கள் பாடிய பாடல்களோடு தம்முடைய பாடல்களும் விழுப்பொருளாக ஆகும். பசுக்கூட்டங்களோடு சேர்ந்து வரும் குருட்டுப்பசுவும் ஊருக்குள் வந்து சேருவது போலவும் பூவுடனே கட்டிய நார் இறைவன் திருமுடிக்கு அணியாவது போலவும் தன்முயற்சி முற்றுப்பெறுவதோடு பாராட்டவும் பெறும் என்னும் குறிப்பினைப் புலப்படுத்தியுள்ள திறம் போற்றுதற்குரியது.[93]

சிந்தாமணி பொய்க்கதையைக் கூறிய நூல் என்றும் அதனை மெய்க்கதையாக நினைந்து சிலர் கற்றனர் என்றும் கூறுகின்றார். அவ்வாறு கற்றமைக்கு உவமைகள் பலவற்றைக் கூறியுள்ளார். சிந்தாமணி பயனற்ற நூல் என்று உமாபதிசிவனார் குறிப்பிடுவது சமயக்காழ்ப்போடு கூறிய செய்தி என்பது உணரத்தகும். எனினும் பயனற்ற நூல்களைப் படிப்பது நெற்குத்தி உண்ணாமல் உமிக்குத்திக் கைவருந்துவதற்கு ஒப்பாகும்; கறவை இருக்க மலடு கறந்தது போலாகும்; சோலை வழியிருக்கச் சேற்றுவழியில் சென்று விழுந்தது போலாகும்; உயர்ந்த கரும்பு இருக்க இரும்பை மென்றது போலாகும்; விளக்கு இருக்க மின்மினி தீக்காய்ந்து

வருந்தியதுபோலாகும். பயனுள்ள நூல்கள் இருக்க பயனற்ற நூல்களைப் படித்து வீணே காலத்தைக் கடத்துகின்ற மக்களுக்கு இந்து ஐந்து உவமைகளை அடுக்கிக் கூறிய நிலை கருத்தில் கொள்ளத்தக்கது.[94]

''உவமைகளில் பொது நீங்கு உவமை என்பது, உவமையைக் கூறி மறுத்துப் பொருள் தன்னையே உவமையாக உரைப்பது''[95] ஆகும்.

கடலைக் கையால் நீந்திக் கடக்கலாம்; கடற்கரை மணலை எண்ணி விடலாம்; கடல் திரைகளை எண்ணிப் பகுத்து அமைக்கலாம்; கடல் மீனையும் அளவிடலாம்; விண்மீனையும் அளவிடலாம். ஆனால் சிவபெருமானின் அடியவர்கள் பற்றிய கதையைக் கூறும் திருத்தொண்டர் புராணத்தை அளவிடச் சேக்கிழாருக்கு எளிதாவதல்ல தேவர்க்கும் அரிதே எனக் குறிப்பிடுகின்றார்.[96] உலகத்தில் அரிதானவற்றையெல்லாம் குறிப்பிட்டு அவற்றையெல்லாம் எளிதாகச் செய்து முடித்தாலும், தொண்டர்தம் பெருமையைப் பாடுவது என்பது சேக்கிழாரால் மட்டுமே முடியும் என்று பொருளையே உவமையாக உரைத்துள்ளார். இவ்வுவமையால் அடியார் நலமும், நூல்நலமும் ஒருங்கே விளக்கமாவதைக் காணலாம். இவ்வகை உவமை அரிதான படைப்பு எனலாம். ஒரு பொருளை முன்னர்க் கூறி மறுத்துப் பின் பொருளையே உவமை ஆக்குவது பொது நீங்கு உவமையின் தன்மையாகும். இப்பாடலில் பல பொருள்களைக் கூறிப்பொது நீக்கிப் பின் பொருளை உவமையாக அமைத்துச் சென்றுள்ள திறம் போற்றுதற்குரியது.

சித்தாந்தம்

தெரியாத பொருளைத் தெரிந்த பொருளால் உவமிப்பது ஒருவகை; அரிதான பொருளை உவமையாகக் கூறி அவ்வுவமை யினாலேயே ஒரு கருத்தைப் புலப்படுத்துவது மற்றொரு வகை. கம்பர் கோதாவரி நதிக்குச் சங்கச் செய்யுளை உவமையாக அமைத்துள்ளமை இவ்வகையைச் சார்ந்ததாகும்.[97] பண்புடை யாருடைய தொடர்புக்கு நூல்நயத்தை உவமையாகக் கூறி

யுள்ளமையும் ஈண்டு கருத்தில் கொள்ளத்தக்கது. இஃது உவமையின் வளர்ச்சி நிலையாக அமைந்துள்ளது. அரிய சித்தாந்தக் கருத்துக்களை உவமையாக அமைத்து, அக்கருத்தை எளிதில் விளக்குவதை நோக்கமாகக் கொண்டிருப்பனவற்றைச் சித்தாந்த உவமைகள் எனலாம். அதற்குச் சித்தாந்தக் கருத்துக்கள் நிலைக்களாக கூறுகளாக இடம்பெறுகின்றன.

இறைவன் இவ்வுலகிடையே தங்குகிறான். அதனால் இவ்வுலகம் அமருலகமாகக் காட்சி தருகிறது. இறைவன் தங்கி இருப்பதால் அமருலகம் எனக் கூறப்படுகின்றது. உலகத்து உயிர்கள் தாங்கள் ஈட்டிய கன்ம வினைக்கு ஈடாக அனுபவத்தைப் பெறும் என்பது சித்தாந்தக் கருத்தாகும்.[98] அத்தகைய கன்மபலம் நாற்றங்கால் விளைவுக்கு ஒக்கும் என உவமையை அமைத் துள்ளார்.[99] நாற்றங்கால் பின்னர் வளருகின்ற வளர்ச்சிக் கெல்லாம் அடிகோலுமிடம்போலக் கன்மத்தை ஈட்டுகின்ற நிலையும் காணப்படுகிறது என்பது உளங்கொளத்தக்க கருத்தாகும்.

உலகத்தின் தன்மைகள் யாவும் உடலிலும் அமைந்திருக்கிறது என்பது சித்தாந்தக் கோட்பாடாகும். அண்டத்திலுள்ள தெல்லாம் பிண்டத்திலும் உள்ளது என்று கூறுவர்.[100] எனவே அண்டமும் பிண்டமும் ஒத்ததன்மை உடையன. வளி ஓடுகின்ற மூக்கு மூன்று கூறாக உள்ளது. இடகலை, பிங்கலை, சுழுமுனை என அவை கூறப்படும். இடமூக்கு, வலமூக்கு, இவற்றின் நடுவில் உள்ளே அமைந்துள்ள சுழுமுனை என்னும் இம்மூன்று பிரிவுகளும் உலகில் அமைந்துள்ள நிலையைக் குறித்துள்ளார். இடநாடி இலங்கைக்கு நேராகவும், பிங்கலை நாடி இமயமலைக்கு நேராகவும் போகும். இவ்விரண்டிற்கும் நடுவே சுழுமுனைநாடி அமைந்துள்ளது. அது தில்லை என்பது குறிப்பினால் புலப் படுவது. அண்டமும், பிண்டமும் படைப்பில் ஒக்கும் என்பது ஈண்டு உவமையாக அமைந்துள்ளமை கருதத்தக்கது.[101]

இறைவன் தங்கியுள்ள அம்பலம் ஞானம் விளங்கும் இடமாகும். இறைவனோடு எப்பொழுதும் பிரிவின்றி நிற்பவை நேயமும் ஞானமும் ஆகும். நேயம் என்பது ''சித்து'' என்று

கூறப்படும்; ஞானம் என்பது "சத்து" என்று கூறப்படும்; இறைவனை "ஆனந்தம்" என்ற பேரின்ப நிலையாகக் குறிப்பிடுவர். அதுவே "சித் சத் ஆனந்தம்" என ஒரு தொடராக வழங்கப்படும். ஞானமும் நேயமும் வெளிப்படுகின்ற இடம் நடனமிடும் இடமாகையால் சித் அம்பலம், சிதம்பரம் என வழங்கப்பட்டது. அது விளக்கமுற்ற இடத்திற்கு, உயிர் ஆன்மாவினுள்ளே தங்கியிருத்தல் போல ஞானத்திற்கு நேயமாகிய உயிராய் இறைவன் தங்குவதாகக் குறிப்பிடுகின்றார். உடலுள்பட்ட உயிர் எவ்வாறு அறிகருவிகளால் அறிதற்குரியதாக உடலுள் தங்கியிருக்கிறதோ அதுபோலத் தில்லை, இதயத் தானமாக இருந்து இறைவன் ஞானமயமாக அம்பலத்தில் தங்கியிருக்கின்ற குறிப்பு அமைந்துள்ளது.[102] உயிர் உடலுள் தங்கியிருக்கின்ற இயல்பினை 'மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா"[103] என்ற தொடர் புலப்படுத்துவதைக் காணலாம்.

"இறைவன் ஒருவனே, ஆன்மாக்கள் பல" என்பது சித்தாந்தம் கூறும் உண்மையாகும்.[104] பதி ஒன்று, பசுக்கள் பல என்று இதனைக் கூறுவர். பசுக்களைப் பதியின்பால் கூட்டு விக்கின்ற தன்மை அருட்சத்திக்கு உண்டு.

சிங்கவர்மன் வேடன்துணையோடு தில்லைவனத்தின் எல்லையை அடைகிறான். வழிகாட்டியாக அமைந்துள்ள இவ்வேடனை ஆன்மாக்களைப் பதியோடு சேர்க்கும் அருள் சக்தியோடு ஒப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.[105]

இரணியவர்மன் வாழ்வு பொய்யானது என்பதை உணர்ந்து, தனக்கு நிலைத்த பேரின்ப வாழ்வாகத் தில்லைக்கூத்தன் சந்நிதியில் செய்து வருகின்ற பணிவிடை நீங்காது தொடர்ந் தமையும் வகையில் அருள்செய்ய வேண்டும் என வேண்டுகிறான். அரசவாழ்வு, அணிமா முதலிய சித்திகள்,[106] தேவர்பதம் ஆகிய அனைத்துமே - இந்திர சாலம், நீர்மேல் எழுத்து, மின்னல், நீர்க் குமிழி போல மெய்யில்லாதவை. அத்தகைய பொய் வாழ்வை நினைக்கவும் கூடாது எனக் கூறுகின்றான். பொய்நீத்து மெய்மை உணர்த்திய அருட்டிறத்தை நினைந்து போற்றுகிறான்.

இத்தகைய நிலையாமையை உணர்த்துவது சித்தாந்த நூல்களில் காணப்படும் பொது இயல்பாகும். அதனையே

''பொய்கண்டகன்ற மெய்கண்டதேவன்''[107]

என்னும் தொடர் உணர்த்துவதால் அறியலாம்.

சித்தாந்தக் கருத்துக்கள் அங்கங்கே விளக்கம் பெறுவதோடு வாய்ப்பு நேருங்கால் உவமை வாயிலாகவும் சித்தாந்தக் கருத்துக்களை ஆசிரியர் அமைத்துள்ளதிறம் போற்றுதற்குரியது.

இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்

இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் உவமையின் நிலைக்களக் கூறாக அமைந்துள்ளனவற்றுள் ஒன்றாகும். இயற்கை என்பதும் நிலைக்களக்கூறு அமையுமிடமென்றாலும், சங்ககாலம் தொட்டு ''இயற்கை'' என்னும் நிலைக்களக்கூறு பயிலப்பட்டு வந்துள்ளமையால் ஈண்டு ஆராயப்படவில்லை, இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் காலத்தால் பிற்பட்ட இலக்கிய நூல்களில் இடம்பெற்று நிலைக்களக்கூறாக அமைந்துள்ளமையால் ஈண்டு ஆராயப்படுகின்றது.

தாருகவனத்து முனிவர்கள் பிச்சை எடுக்கும் கோலத்தோடு வந்த இறைவனை ''அபிசார ஹோமம்'' என்னும் யாகத்தைச் செய்து அதனின்றும் அவரை அழிப்பதற்குரிய கொடிய பொருள்களைத் தோற்றுவித்துத் தோற்றனர். இறைவன் பின்னர் தன்னை யாரென்று தெரியும்படியாக வெளிப்படுத்தினான். அவ்வாறு வெளிப்படுங்கால் தோன்றிய செஞ்சடை, அந்தகார இருளினின்றும் தோன்றிய மின்னலை ஒத்திருந்ததாக உவமை அமைந்துள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.[108]

தாருகவனத்து முனிவர்கள் தோற்றுவித்த குண்டத்திலிருந்து முயலகன் என்னும் அசுரன் வெளிப்படுகிறான். அவன் தீயிலிருந்து வெளிப்பட்டதைக் கூறும்போது, தீயானது அதற்குமுன் தான் விழுங்கிய இருளை எல்லாம் ஒருசேர உமிழ்ந்தாற்போல வெளிப்பட்டான் என்று ஆசிரியர் கூறுகின்றார். இருளைத் தீ விழுங்குகிறது என்னும் வழக்கினை வைத்துக் கருமையான உருவங்கொண்ட முயலகன் வெளிப்பட்டமையை உவமித்துள்ளதிறம் கருதுதற்குரியது.[109]

இறைவன் ஆடுகின்ற ஆட்டத்தைப் பார்த்துப் பக்தி வெளிப்பட நின்று கொண்டிருந்த இருடிகளும் மற்றவர்களும் எழுந்ததொரு பேரொலி கேட்டு மூர்ச்சித்து விழுந்தனர். அங்கே பானுகம்பன் என்னும் ஓர் அரக்கன் தோன்றினான். அவன் ஆயிரம் முகங்களும், இரண்டாயிரம் கைகளும் அக்கைகளால் அணைக்கப்பட்ட சங்குகளின் முழக்கமும் தோன்ற வந்தனன். அவனுடைய தோற்றத்தைக் கூறுகின்ற ஆசிரியர், ஆயிரம் சந்திரர்கள் உதித்த பெரிய மலைபோலவும், வேதம் ஆயிரம் முகமாக ஒலிப்பது போலவும் பானுகம்பர் என்கின்ற கணேசுவரர் வந்தார் என்று குறிப்பிடுகின்றார்.[110]

உவமைகளில், இல்பொருள் உவமை என்பது ஒருவகை. உலகத்தில் இல்லாத பொருள்கள் உவமையாக அமைந்து பொருளை விளக்குங்கால் அஃது இல்பொருள் உவமை எனப் படும்.[111] இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் உவமையாக அமைக்கப் படுங்கால், அதன் வளர்ச்சியாக, இயற்கை இறந்த பொருள்களை இயற்கை இறந்த நிகழ்ச்சிகளால் விளக்க முற்பட்டுள்ளமையைக் காணலாம்.

தில்லைக்கூத்தன் திருநடனத்தைக்கண்ட பூதங்கள் ஆடின; அவற்றின் நடனத்திற்கு ஏற்பப் பல பேய்கள் தாளமிட்டன. இவை எரிபோல் விரிந்த மயிரையும், ஓட்டையின் கழுத்துப் போன்ற கழுத்தையும் உடையனவாய்க் காட்சிதந்தன. அவற்றின் தோற்றப்பொலிவுக்குக் கூறப்பட்ட இவ்வுவமைகள் இயற்கை இறந்தனவாக அமைந்துள்ளமையைக் காணலாம்.[112]

சிங்கவர்மன் சிவகங்கையில் நீராடி மேலெழுந்தான். நோயுற்றிருந்த அவனுடல் நோய் நீங்கிப் பொன்னுடலாகக் காட்சி தந்தது. கடலிலிருந்து மேலெழுகின்ற சூரியனைப் போல அவனுடைய தோற்றம் குளத்திலிருந்து மேலெழும்போது இருந்ததாகக் குறிப்பிடுகிறார். இயற்கை இறந்த இந்நிகழ்ச்சியை இயற்கையான பொருள்களைக் கொண்டு உவமித்துள்ள நிலையும் ஈண்டு கருதத்தக்கது.[113]

புலிக்கால் முனிவரின் கட்டளைப்படி, தன் நாடு சென்று திரும்பும் பொழுது மூவாயிரம் பிரம்ம இருடிகளை இரணியவர்மன்

அழைத்து வந்தான். தில்லையில்வந்து பார்க்கும்பொழுது எண்ணிக்கையில் ஒருவர் குறைந்து இருப்பதைப் பார்த்து மிகவும் வருந்தினான். அப்பொழுது "அந்த இருடிகளெல்லாம் எமக்கு ஒப்பானவர்கள்; யாம் அந்த இருடிகளுக்கு ஒப்பாவோம், ஆதலால் நம்மை அவர்களுக்குள்ளே ஒருவராகக் கைகொள்" என்னும் அசரீரி எழுந்தது. அதனைத் தில்லைக்கூத்தனின் வாக்காகக் கொண்டு இரணியவர்மன் வணங்கினான்.[114] இதன்கண் இறைவன் தம்மையே உவமையாகக் கூறியுள்ள கருத்து நோக்கத்தக்கது.

உவமையின் நிலைக்களன்கள் தொல்காப்பியத்தில் ஐந்தாகக் கூறப்பெற்றுள்ளமை மிகச்செறிவாக இருப்பதால், அவற்றை உணர்ந்து கொள்வது அரிதாக உள்ளது. அந்நிலைக்களன்கள் பல்வேறு கூறுகளின் தொகைகளாக அமைந்துள்ளன. அவை விரித்துக் காணப்பெற்றால் எளிதாக அறிந்து கொள்ள ஏதுவாகும். காலத்தின் நிலைக்கு ஏற்ப நிலைக்களக் கூறுகள் வளர்ந்து வந்துள்ளன என்பது மறுக்க இயலாத உண்மையாகும். அவ்வகையில் உமாபதியாரின் இலக்கிய நூல்களில் காணப்படும் உவமைகளில் அமைந்துள்ள நிலைக்களக் கூறுகள் ஈண்டு ஆராயப் பெற்றுள்ளன. தெய்வநலம், அருள்நலம், அடியார்நலம், நூல் நலம், சித்தாந்தம், இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் என்பவை பிற்கால நூல்களில் வளர்ச்சிபெற்ற கூறுகளாகும். அதனால் அவ்வகையில் சிந்திப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு இவ்வகை முயற்சி இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டது என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

உருவகம்

உவமை, பொருள் இரண்டற்கும் உள்ள வேறுபாட்டை நீக்கி இரண்டும் ஒன்று என்று தோன்றுமாறு ஒற்றுமையை வெளிப் படுத்துவது உருவகமாகும்.[115]

உமாபதிசிவனார் உருவக அணியைப் பாடல்கள் முழுமை யிலும் அமைக்காமல் பாடல்களில் வரும் ஒருசில கருத்துக்களைப் புலப்படுத்துவதற்குப் பயன்படுத்தியுள்ளார். உவமைகளைக் கையாண்டுள்ள அளவிற்கு உருவகத்தைக் கையாண்டுள்ளார் எனக்கூற இயலவில்லை. உவமையும் பொருளும் தனித்தனியே

காணுங்கால் இடையில் உவமஉருபு அமைந்து விளங்குகிறது. இதில் உவமையும் பொருளும் பெற்றிருக்கின்ற இடைவெளி மிகுதியாகும். இவ்விடைவெளி சிறிது குறைந்து உவமத் தொகையாகக் கூறப்படுகிறது. இடையிலுள்ள உவம உருபு நீங்கியமையால் இடைவெளி குறைந்து காணப்படுகிறது. பொருள் உவமையாகவும் உவமைபொருளாகவும் மாறுகின்ற நிலையில் இடைவெளி அற்ற நிலை காணப்படுகின்றது. அவ்வகையில் இரு சொற்களாலோ மூன்று சொற்களாலோ அமைகின்ற உருவகங்களையே உமாபதிசிவனார் மிகுதியும் பயன்படுத்தி உள்ளார் எனக் கருதலாம்.

இறைவனுடைய முகம் கருணை வடிவ மலர்ச்சியோடு கூடக் காணப்படுகிறது. அது போற்றுதற்குரியதாக இருக்கின்ற நிலையில் கருணை முகமலர் என உருவகமாக அமைத்துள்ளார்.[116]

புலிக்கால் முனிவர் இறைவனை நோக்கித் தவம் இருந்த காலை, இறைவன் அம்முனிவர்க்குக் காட்சி கொடுத்து அவர் கேட்பதைக் கொடுப்பதாகக் கூறுகின்றார். பலகால் இறைவனை நோக்கி இறைவன் அருள் கிட்டுமா என ஏங்கிநின்ற முனிவர்க்கு இறைவனுடைய மொழி அமுதுபோன்று அமைந்து அவரை வாழவைத்தது. அதனால் இறைவனின் மொழியை ''அமுதாம் மொழி''[117] என்று உமாபதிசிவனார் குறித்துள்ளார். இவ்வாறு இன்றியமையாத இடங்களிலும் குறைந்த சொற்களையே உருவகமாக அமைத்துள்ள இயல்புகளை இந்நூல்களில் காணலாம்.

விற்புருவம்,[118] அலர்மழை,[119] கண்தரும் அருவி,[120] கரமலர்,[121] புருவவில்,[122] அடிமலர்,[123] இன்பக்கடல்,[124] தேருமருந்து,[125] திரையார்கரம்,[126] பாதப்போது,[127] நூற்கடல்,[128] இடர்க்கடல்[129] என ஆசிரியர் இரு சொற்களிலேயே உருவகங்களை அமைத்துள்ள நிலை கருதத்தக்கது. அவற்றுள் ''கண்தரும் அருவி'' என்று கூறியுள்ள உருவகம் கருத்திற் கொள்ளத்தக்கது. கண்ணீர் அருவி என்று கூறாமல் கண்தரும் அருவி என்று குறித்துள்ளமை உருவகங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகக் காணப்படுவதை அறியலாம்.

அதிசய அணி

புலவர் தாம் கருதிய பொருளின் அழகை உவந்து சொல்லுங்கால் உலக நடையைக் கடந்து உயர்ந்தோர் வியப்புறச் சொல்வது அதிசயம் என்னும் அணி என்பர்.[130]

உமாபதிசிவனார் இயற்றிய நூல்களில் பலவும் இறைவனைப் பற்றியதாகவும், இறையடியாருடன் தொடர்புடையதாகவும் அமைந்துள்ளமை நினைக்கத்தக்கது. இறைவன் தோன்றுகின்ற காட்சி, இறைவன் நிகழ்த்துகின்ற அற்புதங்கள் ஆகியவை வியப்புக்குரியன என்பதில் ஐயமில்லை. எனவே ஆசிரியர் பல இடங்களில் அதிசய அணி அமையப் பாடல்களைப் புனைந்து செல்லுகின்றார்.

தாருகவனத்து முனிவர்கள் இறைவனை அழிப்பதற்காகச் செய்த ''அபிசார ஓமம்'' என்னும் யாகத்திலிருந்து தோன்றிய புலி சீறிப் பாய்ந்து இறைவனிடம் வருங்கால், அதனை நகங்களால் கிழித்துப் பட்டாடை போன்று அதன் தோலை உடுத்திக் கொண்டார் என்று கூறுமிடம் கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.[131]

ஓமக்குண்டத்திலிருந்து இறைவனை அழிப்பதற்கு அனுப்பப் பட்ட பூதங்கள், தனித்துவந்த இறைவனுக்கு முனிவர்கள் அனுப்பிய ஊழியர்களைப் போலப் பணிவிடை செய்தன. மிகுந்த விடமும் சிவந்த கண்ணுமுடைய பாம்புகள் இடக்கரத்தின் முன் கைக்கடகமாக ஆயின[132] என்னும் செய்திகள் நினைக்கத்தக்கவை.

அத்திரி முனிவனும் அனுசூயையும் பிள்ளைப்பேற்றை வேண்டியமையால் திருமால், அவர்களுக்குப் பிள்ளையாகப் பிறக்குமாறு ஆதிசேடனுக்கு ஆணையிட்டார். ஆதிசேடன் யோனிவாய்ப் பிறத்தற்கு அஞ்சி ஐந்து தலையோடு சிறுபாம்பாய் அனுசூயை குளத்தில் குளித்து எழுங்கால் அவள் கையிலே விழுந்தது. பயத்தினால் அதனைக் கைவிட அது அவளுடைய பாதங்களில் விழுந்தமையால் ''பதஞ்சலி'' என்னும் பெயரைப் பெற்றது[133] என்னும் செய்தி புராணக் குறிப்புடைய அதிசய அணியாக அமைந்துள்ளமையைக் காணலாம்.

சிங்கவர்மனுக்கு வேடன் வழி கூறுங்கால், விலங்குகளின் ஏறுகால், இறங்குகால் வேடர்களால் பார்க்கப்படும் காடு இது என்றான். இந்தக் காட்டைச் சூழ்ந்து நாய் கத்திக் கொண்டிருக்கும்

படியாகக் காளையனைய ஒரு பிள்ளை இரவும் பகலும் ஓடித் திரியும்; குளித்தவர்கள் உயிரை வாங்குகின்ற நீர்க்குளம் ஒன்று உண்டு; குளித்தவர்கள் என்றும் சாகாத தன்மையைத்தரும் தண்ணீர்க்குளம் பல இடங்களிலும் உண்டு; சென்றவர்களைத் திசை தெரியாமல் மயக்கும் வழி ஒன்று உண்டு; காலையில் மேற்காகவும் மாலையில் கிழக்காகவும் நீளுதலற்ற நிழலையுடைய மரங்கள் ஒரு வழியில் உள்ளன; கூறுகின்ற சொல் எப்பொழுதும் முழங்கிக்கொண்டே இருக்கும் வழி ஒன்று உண்டு; கிணற்றினுள்ளே எட்டிப் பார்க்கும் நிலையில் நிழல் விழுகின்றதைப் போலவே பார்க்கின்றவர்களும் கிணற்றில் விழும் வழி ஒன்று உண்டு என இயற்கை அதிசயங்களைத் தொகுத்துரைக்கும் வேடனின் குறிப்பு உளங்கொளத்தக்கது.

பொல்லாப் பிள்ளையாருக்கு முன்பு வைத்த நிவேதனத்தைப் பிள்ளையார் உண்ணாமையால், நம்பியாண்டார் நம்பி தம் தலையைச் சுவரில் மோதிக்கொள்ளத் தொடங்கினார். அவரைத் தடுத்து அவ்வமுத மெல்லாம் பிள்ளையார் உட்கொண்டார்[134] என்னும் குறிப்பு வரலாற்றுக் குறிப்போடு இணைந்த அதிசயமாகக் காணப்படுகிறது.

பிள்ளையார் அமுதுண்டார் எனக் கேள்வியுற்ற மன்னன் பதினான்கு காதத்து எல்லையளவும் பல்வேறு கனிகளைக் குவித்து அவற்றை நிவேதிக்க வேண்டுமென நம்பியிடம் கூற, நம்பி உரையை ஏற்றுக் கொண்டு பிள்ளையார் அவற்றை உண்டார் என்னும் குறிப்பும் ஈண்டு கருத்தில் கொள்ளத்தக்கது,[135]

சேக்கிழார் திருத்தொண்டர் வரலாற்றினை எப்படிப்பாடுவது என இறைவனை வேண்டி நிற்க, அசரீரி வாக்காக "உலகெலாம்" என ஓர் ஓசை எழுந்து அடியார் செவியில் பட்டதோடு எங்குமாகி நிறைந்தது என்று கூறுகின்ற குறிப்பு வரலாற்றோடு இயைந்ததாகக் காணப்படுகின்றது.[136] "உலகெலாம்" என்னும் குறிப்பினைச் சேக்கிழார் தம் நூலில் முதலிலும், இடையிலும், கடையிலுமாக அமைத்துப் போற்றியுள்ளமையையும் ஈண்டு ஒப்பக் கருதலாம்.[137]

உமாபதிசிவனார் அற்புத நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுங்கால் புராணக் குறிப்போடு இணைந்ததாகவும், இயற்கையோடு

இணைந்ததாகவும், வரலாற்றுக் குறிப்போடு இணைந்ததாகவும் மூன்று வகையில் அமைத்துள்ளார் எனலாம்.

உயர்வு நவிற்சியணி

உயர்வு நவிற்சி என்பது இயல்பு நவிற்சிக்கு மாறுபட்டது. ஒரு பொருளின் தன்மையை உயர்த்தி உள்ளம் உவக்குமாறு சொல்வது உயர்வு நவிற்சி ஆகும்.[138]

தில்லை, பக்குவ ஆன்மாக்களுக்குப் புகலிடமாக விளங்குகிறது. அது சந்திரன் தவழ்கின்ற மாடகூடங்கள் நிறைந்ததாக விளங்குகிறது என்பர்.[139] மாட கூடங்களின் உயர்ச்சியைச் சந்திரன் தவழ்வதாகக் கூறியிருப்பது உயர்வு நவிற்சியின் பாற்படும்.

இரணியவர்மன் தில்லைக்கு மீண்டும் புறப்படுங்கால் அவன் நாட்டு மக்களெல்லாம் அவனைப்பாராட்டி கூறும் ஓசையும், அரசர்கள் வாழ்த்தி வணங்கும் ஓசையும், மூவாயிரம் பிரம்ம இருடிகள் தேர்க்கூட்டத்தின் ஓசையும், காலாட்படையின் ஓசையும், யானைகள் பிளிறுதலால் ஏற்படுகின்ற ஓசையும், குதிரைகள் கனைக்கும் ஓசையும் ஆகியயாவும் ஏழுகடல் ஓசையைக் காட்டிலும் மிகுதியாக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.[140]

இரணியவர்மன் கொடிப்படை வருதலால், செறிந்த காடும் பெரிய நடைபாதை வழியை உடையதாக மாறுகிறது. குதிரைகள் தாண்டிச் செல்லுதலால் மரங்கள் சாய்ந்து விழுகின்றன. யானையின் கால்களில்பட்டு அவை நசுங்குகின்றன, தேர்க்கால்கள் செல்வதால் பெருவழியாக மாறுகின்றது; பின்னே வருகின்ற படையின் பாதம் படுதலால் தூளியாக மாறுகின்றது. அந்தத் தூளி தேவலோகத்திலும், காடுகளிலும் சென்று படிந்து வழியை ஏற்படுத்துகின்றன என்று கூறுமிடம் குறிப்பிடத் தக்கதாகும்.[141] நால்வகைப் படைகளால் ஏற்படுகின்ற மாற்றத்தைக் கூறிப் படையின் மிகுதியைப் புலப்படுத்தியுள்ளார்.

இரணியவர்மன் தில்லைவந்து சேருங்கால் தில்லை வனத்தின் எல்லையிலுள்ள கடலின் புலால்நாற்றம் தாழையின் மணத்தாலும், நீறு, சோறு ஆகியவற்றின் மணத்தாலும் மாறுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.[142] தாழைகள் நிறைந்துள்ள கடலும், நீறுமணக்கும் நிலையும், சோற்றுப் பெருக்கின் அளவும் பெருக இருக்கின்ற நிலையும் இப்பாடல் குறிப்புப் புலப்படுத்துகின்றது.

தில்லையின் எல்லையாகக் கடல் குறிப்பிடப்பட்டுள்ளமை ஆராயத்தக்க ஒன்றே. தில்லையில் படித்துரைச்சந்து என்னும் பெயரோடு விளங்குமிடம் கடலில் இறங்கி நீராடும் படித்துறை யாக இருந்தது என்னும் வழக்கு உண்மையும் ஈண்டு நினைக்கத் தக்கது.[143]

தில்லையிலுள்ள நான்கு வீதிகளிலும் எழுநிலை மாளிகை களை ஏற்படுத்தி, தன்னுடன் அழைத்து வந்த அந்தணர் பெரு மக்களை அவ்வீடுகளில் குடி அமரச்செய்தான். அவ்வீடுகள் மகாமேருவை ஒத்துக்காட்சி அளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.[144]

இறைவனுடைய திரு உலாவைச் சேவித்து முன்னே சென்ற யானைகளின் அணி கடலுக்குள் நீண்ட தூரம் செல்லுகிறது. அக்காட்சி மேகங்கள் சென்று கடலிடையே படிவதைப்போலக் காணப்படுகின்றது. ஆரவாரம் மிக்க கொடிகள் கடற்கரையில் சென்று சேருவது-சங்கமமாகும் ஆறுகள் ஏற்படுத்தும் ஒலியைக் காட்டிலும் மிகுதியாக இருந்தது. மேகங்கள் தவழும் தாழைக் காட்டில் அசைகின்ற தாழை மரங்கள் பூக்களிலிருந்து உதிர்க்கும் மகரந்தப்பொடி, சுரபுன்னையின் பூங்கொத்துகளில் மேகத்தின் அசைகின்ற தன்மையால் நெகிழ்ந்து விழ, அதிலிருந்து விழுகின்ற தேன்மழையை ஒத்துப் பொழிந்து ஆறுபோல் ஓடிவருகின்ற வீதிகளை உடையது தில்லையம்பதி எனக் குறிப்பிடுகின்றார்.[145] இப்பாடலில் தற்குறிப்பேற்றமாகக் கூறப்பட்டுள்ள கருத்துக் களோடு உயர்வு நவிற்சியும் அமைந்துள்ளதைக் காணலாம்.

சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தை அரங்கேற்றி நிறைவு செய்யுங்கால் அடியவர்கள் எழுப்பிய "அர அர" என்னும் ஒலி கடல் ஒலியை விழுங்கியது; ஏழுகடல் ஒலிகளையும் கீழ்ப் படுத்தியது; அண்ட வெளியைக் கடந்து இமையவர் செவியை நிறைத்தது; அதன் மேலும் சென்று சேக்கிழாருடைய புகழை விளங்கச் செய்தது என்னும் குறிப்பு மனங்கொளத்தக்கது.[146] இதன்கண் கடல் ஒலியை விழுங்கியது. ஏழ்கடலைக் கீழ்ப் படுத்தியது எனப் படிப்படியாகப் பல்வேறு நிலைகளிலேயும் உயர்வு நவிற்சி தோன்றக் கூறியிருப்பது ஆசிரியரின் திறனை உணர்த்துவதாகும்.

சிலேடை அணி

ஒரு வகையாய் நின்ற தொடர் பலபொருள்பட மொழிவது சிலேடை என்னும் அணியாகும்.[147] சிலேடை என்னும் அணி செம்மொழிச் சிலேடை என்றும், பிரிமொழிச்சிலேடை என்றும் இருவகை நிலையில் அமையும். உமாபதிசிவனார் சிலேடை அணி அமையப் பாடல்களைப் பாடியிருப்பினும், செம்மொழிச் சிலேடை அமையவே பாடல்களை அமைத்துள்ளார்.

மலரடியும், கொழுந்தனைய ஒளிமிக்க சிவந்த கைகளும், ஒளிபொருந்திய முகத்தில் கொம்பும், மூன்று கண்களும் உடைய கற்பகப் பிள்ளையாரைப் போற்றுகின்றார். இப்பாடலில் அமைந்துள்ள சொற்கள் கற்பக மரத்தையும் குறிக்கின்ற நிலையில் அமைந்துள்ளன. பெருகி அகன்ற அடியும், தொழில் நிறைந்த பக்கக்கிளைகளும், ஒளிமிகுந்த கொம்புகளும் தேன்பொருந்திய மலர்களும் உடையதாகக் கற்பகமரம் விளங்குகிறது என்னும் பொருள் தோன்றப் பாடலை அமைத்துள்ளார்.[148]

மாணிக்கவாசகரைப் போற்றும் முறையில் அமைக்கப்பட்ட தாகக் கருதத்தக்க பாடலில் வாதவூரில் பிறந்து திருப்பெருந் துறையில் ஆனந்தக் கடலைப் பருகி, ஆன்மவிளக்கம் அருளைக் கூடி மிக்குச் செல்ல திருவைந்தெழுத்தை உச்சரிப்பதனால், ஆணவமலம் நீங்கப்பெற்று நாடெங்கிலும் மாணிக்க மழையைப் பொழியும் பெரிய முகில் போன்ற திருவாதவூரடிகளைப் போற்று வதாகப் பாடல் அமைந்துள்ளது.

அனைத்து உயிர்களும் போற்றும் வாயுமண்டபத்தில் தோன்றி, பெரிய பட்டினங்கள் சூழ்ந்த துறையினை உடைய கடலைப் பருகி, மின்னல் விளங்க இடி இடித்தலால் முழக்கம் மேலிட்டு, உலக உயிர்கள் உய்ய அனுபவம் விளையும்படியாக மழையைப் பொழியும் மேகம் என மற்றொரு பொருள்தோன்ற இப்பாடலை அமைத்துள்ள திறம் போற்றுதற்குரியது.[149]

நாரத முனிவர் தில்லைவாழ் அந்தணரையும், தேவர்களையும் தில்லையில் கண்டு, அறிவும் முத்தியும் பெறத்தக்க யாகத்தைச் செய்வதற்குப் பிரம்மா தம்மை ஏவியுள்ளதாகக் கூறி அழைத்தார். அவரைப் பார்த்துத் தேவர்கள் அக்கினியில் அவிர் யாகத்தைக் கொடுத்தால் தாங்கள் ஏற்றுக் கொள்வதாகக் கூறினர்.

'தில்லைப் பெருமானின் திருநடனத்தைப் பார்த்து மகிழும் தங்களுக்கு இனி அவிர்பாகம் கொள்ள இயலாது; எனவே அதனை நெருப்பில் போடுங்கள், தங்களுக்கு வேண்டாம்' என்று பொருள் கொள்ளும்படி இப்பாடல் அமைந்துள்ள நிலை கருத்திற் கொள்ளத்தக்கது.[150] மேலாகிய இறைவன் நடனத்தைக் கண்ட பிறகு கீழாகிய அவிர்ப்பதம் வேண்டாம் என்பது குறிப்பு.

ஆய்வு முடிவுகள்

அணிகளில் தன்மை அணி இயல்பாக அமைவது, சங்ககாலந் தொட்டுப் போற்றப்படுவது, உமாபதிசிவனார் இறைத்தன்மையை வெளிப்படுத்துவதற்குத் தன்மையணியைப் பெரிதும் கையாண்டுள்ளார் என்பது புலனாகிறது.

முனிவர்களின் வாழ்க்கை நிலையைச் சித்தரிக்குங்கால் தன்மை அணியையே பின்பற்றியுள்ளார்.

பக்திச்சுவை வெளிப்படும் இடங்களிலும் தன்மை அணியைக் கையாண்டுள்ளார் எனலாம்.

சாதித்தன்மை, தொழிற்றன்மை போன்ற தன்மை அணிகளின் வேறுபாடுகளையும் ஆசிரியர் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

உவமை தோன்றும் நிலைக்களன்கள் காலத்திற்குக்காலம் வளர்ச்சிபெற்று அவற்றின் கூறுகள் விரிந்துள்ளன என்பது பெறப்பட்டது.

நிலைக்களக் கூறுகளில் தெய்வநலம் பலநிலைகளில் விரிவாக ஆசிரியரால் உவமிக்கப்பட்டுள்ளன.

தெய்வநலக் கூறுகளைத் திருமேனி நிலையிலும், உறுப்பினர் என்ற நிலையிலும் காட்சிப்படுத்துவதற்கு உவமையைக் கையாண்டுள்ள திறம் போற்றுதற்குரியது.

நிலைக்களக் கூறுகளில் அடியார் நலம் பற்றிய கருத்துக்கள் பிற்கால நூல்களில் பெருக அமைந்துள்ளன.

இறைவன் அன்பர்களுக்கு அருள்செய்த நிலையும் பிற்கால நூல்களில் வளர்ச்சி பெற்ற நிலையாகும்.

அடியார்நலம், அருள்நலம் ஆகிய நிலைக்களக் கூறுகளில் உமாபதிசிவனார் தனித்தன்மை தோன்ற உவமித்துள்ளார் எனலாம்.

நூல்நலம் என்னும் கூறு சங்ககாலத்திலிருந்து கூறப்பெற்ற நிலையில் உள்ளதாயினும் பிற்காலத்தில் மிகுதியாக நூல்நலம் போற்றப் பட்டுள்ளமையைக் காணலாம்.

சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்தை ஆசிரியர் போற்றியுள்ள திறம் போற்றுதற்குரியது.

சித்தாந்தக் கருத்துக்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னர் நூல்வடிவம் பெற்றநிலை இலக்கிய வரலாற்றால் அறியலாம்.

அரிய சித்தாந்தக் கருத்துக்களை உவமையாக அமைத்து மக்களுக்கு எளிதில் உணர்த்தும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இயற்கை இறந்த நிகழ்ச்சிகளை உவமையாகக் காட்டுவதன் மூலம் இலக்கிய இன்பத்தைப் பெறச் செய்கிறார்.

உருவக அணியை ஆசிரியர் பாடல் முழுமையும் அமைக்காமல் இருசொற்கள் அல்லது மூன்று சொற்களில் அமைத்துக் கூறியுள்ளார்.

உருவகமாகக் கூறுகின்ற இடங்கள் தெய்வ நிலைகளை உருவகப் படுத்துவதாகவே அமைந்துள்ளன.

உமாபதிசிவனார் அற்புத நிகழ்ச்சிகள் பலவற்றை ஆங்காங்கே அமைத்துக் காட்டியுள்ளார்.

வேடன் சிங்கவர்மனுக்கு வழிகூறுங்கால் கூறப்படுகின்ற அதிசய நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை.

பொருள்களின் இயற்கைத் தன்மை இகழ்ந்து கூறப்படும் உயர்வுநவிற்சி, பிற்கால இலக்கியங்களில் வளர்ந்துள்ளன என்பதற்கு உமாபதிசிவனாரின் நூல்களும் சான்றாக விளங்குகின்றன.

சிலேடை அணியை ஆசிரியர் குறைவாகக் கையாண்டிருப்பினும் பொருத்தமான நிலையில் கையாண்டுள்ளார் எனலாம்.

அடிக்குறிப்புக்கள்

1. நன்னூல், நூ. 268.
2. தண்டி., நூ. 29.
3. மேலது, நூ. 30.
4. ச.வே. சுப்பிரமணியம், சந்திராலோகம் குவலயாநந்தம், ப. 26.
5. தண்டி., நூ. 30 உரை.
6. உமாபதிசிவம், "பாயிரம்". கோயிற்., பா. 4.
7. உமாபதிசிவம், "வியாக்ர", கோயிற்., பா. 9.
8. உமாபதிசிவம், "பதஞ்ச". கோயிற்., பா. 19.
9. உமாபதிசிவம், "நடராச"., கோயிற்., பாக். 11-12.
10. மேலது, பா. 13.
11. உமாபதிசிவம், திருமுறை. புராணம், பாக். 11-12.
12. மேலது, பா. 21.
13. உமாபதிசிவம், சேக்கிழார். புராணம், பா. 60.
14. மேலது, பா. 92.
15. தண்டி., நூ. 30 உரை.
16. உமாபதிசிவம், "நடராச", கோயிற்., பா. 3.
17. உமாபதிசிவம், "இரண்ய", கோயிற்., பா. 19.
18. உமாபதிசிவம், திருமுறை, புராணம், பா. 23.
19. தண்டி., நூ. 30 உரை.
20. உமாபதிசிவம், "வியாக்ர", கோயிற்., பா. 2.
21. உமாபதிசிவம். "இரண்ய", கோயிற்., பா. 10.
22. மேலது, பா. 36.
23. தண்டி., நூ. 30 உரை.
24. உமாபதிசிவம், "வியாக்ர", கோயிற்., பா. 21.
25. உமாபதிசிவம், திருமுறை. புராணம், பா. 3.
26. உமாபதிசிவம், சேக்கிழார். புராணம், பாக். 13-14.
27. தொல். பொருள். உவமவியல், நூ. 1, பேராசிரியர் உரை.
28. மேலது, முகப்புரை, இளம்பூரணர் உரை.
29. தொல். பொருள்., உவமவியல், நூ. 1.
30. மேலது, நூ. 5.
31. உமாபதிசிவம், "பாயிரம்", கோயிற். பா. 6.
32. உமாபதிசிவம், "இரணிய", கோயிற்., பா. 67.

33. சு. சாமிஐயா, (க. ஆ.) ''உவமைகள்'', **மணிமேகலைச் சிந்தனைகள்**, ப. 194.
34. உமாபதிசிவம், ''பாயிரம்'', கோயிற்., பா. 8.
35. மேலது, பா. 28.
36. உமாபதிசிவம், ''பதஞ்சலி'', கோயிற்., பா. 34.
37. மேலது, பா. 44.
38. உமாபதிசிவம், ''இரணிய'', கோயிற்., பா. 67.
39. உமாபதிசிவம், ''திருவிழா'', கோயிற்., பா. 2.
40. உமாபதிசிவம், சேக்கிழார் புராணம், பா. 3.
41. மேலது, பா. 4.
42. உமாபதிசிவம், ''பாயிரம்'', கோயிற்., பா. 5.
43. மேலது, பா. 4.
44. உமாபதிசிவம், திருமுறை. புராணம், பா. 2.
45. உமாபதிசிவம், சேக்கிழார் புராணம், பா. 4.
46. மேலது, பா. 3.
47. உமாபதிசிவம், ''பதஞ்சலி'', கோயிற்., பா. 11.
48. மேலது, பாக். 12–13.
49. மேலது, பாக். 14-15.
50. மேலது, பா. 16.
51. மேலது, பா. 40.
52. மேலது, பா. 41.
53. மேலது, பா. 60.
54. உமாபதிசிவம், ''நடராச'', கோயிற். பா. 13.
55. மேலது, பா. 17.
56. மேலது, பாக். 14. 16.
57. உமாபதிசிவம், ''பதஞ்சலி'', கோயிற்., பா. 2.
58. மேலது, பா. 3.
59. பெரியவாச்சான்பிள்ளை, **திருப்பாவை வியாக்யானம்**, ப. 2.
60. உமாபதிசிவம், ''பதஞ்சலி'', கோயிற்., பா. 5.
61. உமாபதிசிவம், திருமுறை. புராணம், பா. 5.
62. உமாபதிசிவம், ''வியாக்ர'', கோயிற்., பா. 19.
63. மேலது, பா. 20.
64. உமாபதிசிவம், ''பதஞ்சலி'', கோயிற்., பா. 61.
65. மேலது, பா. 82.

66. மேலது, பா. 93.
67. உமாபதிசிவம், "நடராச", கோயிற்., பா. 39.
68. மேலது, பா. 44.
69. மேலது, பா. 48.
70. க. வெள்ளைவாரணன், **தில்லைப்பெருங்கோயில் வரலாறு**, பக். 31–34.
71. உமாபதிசிவம், "இரணிய", கோயிற்., பா. 83.
72. மேலது, பா. 85.
73. உமாபதிசிவம், திருத். சாரம், பா. 12.
74. உமாபதிசிவம், "வியாக்ர", கோயிற்., பா. 19.
75. உமாபதிசிவம், "பதஞ்சலி" கோயிற்., பா. 91.
76. மேலது, பா. 93.
77. உமாபதிசிவம், "பாயிரம்", கோயிற்., பா. 15.
78. உமாபதிசிவம், திருமுறை. புராணம், பா. 12.
79. மேலது, பா. 13.
80. மேலது, பா. 23.
81. உமாபதிசிவம், சேக்கிழார். புராணம், பா. 9.
82. உமாபதிசிவம், திருத். சாரம், பா. 8.
83. மேலது.
84. மேலது.
85. மேலது, பா. 46.
86. திருக்குறள், பா. 783.
87. உமாபதிசிவம், "பாயிரம்", கோயிற். பா. 27.
88. மாணிக்கவாசகர், "திருச்சதகம்", **திருவாசகம்**, பா. 49.
89. உமாபதிசிவம், "பாயிரம்", கோயிற்., பா. 26.
90. உமாபதிசிவம், "திருவிழா", கோயிற்., பா. 50.
91. உமாபதிசிவம், திருமுறை. புராணம், பா. 17.
92. உமாபதிசிவம், சேக்கிழார். புராணம், பா. 9.
93. மேலது, பா. 10.
94. மேலது, பா. 20.
95. தண்டி, நூ. 32.
96. உமாபதிசிவம். சேக்கிழார். புராணம், பா. 51.
97. கம்பர், "சூர்ப்பனகைப்படலம்" ஆரணிய காண்டம், **இராமாயணம்**, பா. 1.

98. மெய்கண்டார், **சிவ. போதம்,** சூ. 2.
99. உமாபதிசிவம், "வியாக்ர", கோயிற்., பா. 6.
100. அ. சொக்கலிங்கம், **ஆலயங்களின் உட்பொருள் விளக்கம்,** பக். 30-58.
101. உமாபதிசிவம், "பதஞ்சலி", கோயிற்., பா. 70.
102. உமாபதிசிவம். "நடராச", கோயிற்., பா. 41.
103. மெய்கண்டார், **சிவ. போதம்,** சூ. 3.
104. மேலது, சூ: 1, அதி. 3, சூ : 2, அதி. 1; சிவ. சித்தி., சுபக்கம், சூ. 5, பா. 1; **சிவப்பிரகாசம்,** பாக் 13 ; 19
105. உமாபதிசிவம், "இரணிய", கோயிற். பா. 33.
106. ப. அருணாசலம், **இந்துசமயம்,** ப. 40.
107. மெய்கண்டர், "சிறப்புப் பாயிரம்", **சிவ. போதம்,** அடி. 9.
108. உமாபதிசிவம், "பதஞ்சலி", கோயிற். பா. 34.
109. மேலது, பா. 35.
110. உமாபதிசிவம், "நடராச", கோயிற். பா. 6.
111. வைத்தியநாத தேசிகர், **இலக்கணவிளக்கம்,** நூ. 640.
112. உமாபதிசிவம், "நடராச", கோயிற்., பா. 30.
113. உமாபதி, "இரணிய", கோயிற்., பா. 53.
114. மேலது, பா. 128.
115. தண்டி., நூ. 36.
116. உமாபதிசிவம், "பாயிரம்", கோயிற்., பா. 4.
117. உமாபதிசிவம், "வியாக்ர", கோயிற்., பா. 19.
118. உமாபதிசிவம், "பதஞ்சலி", கோயிற்., பா. 26.
119. மேலது, பா. 39.
120. மேலது, பா. 44.
121. உமாபதிசிவம், "நடராச", கோயிற். பா. 18.
122. மேலது, பா. 14.
123. மேலது, பா. 16.
124. மேலது, பா. 18.
125. மேலது, பா. 27.
126. உமாபதிசிவம், "திருவிழா", கோயிற்., பா. 46.
127. உமாபதிசிவம், திருமுறை. புராணம், பா. 11.
128. உமாபதிசிவம், சேக்கிழார். புராணம், பா. 9.

129. உமாபதிசிவம், திருமுறை. புராணம், பா. 22.
130. தண்டி., நூ. 54.
131. உமாபதிசிவம், "பதஞ்சலி", கோயிற்., பா. 32.
132. மேலது, பா. 33.
133. மேலது, பா. 74.
134. உமாபதிசிவம், திருமுறை, புராணம், பா. 4.
135. மேலது, பாக். 7-8.
136. உமாபதிசிவம், சேக்கிழார். புராணம், பா. 31.
137. சேக்கிழார், "பாயிரம்" பா. 1; "திருஞானசம்பந்தர் புராணம்", பா. 216; "வெள்ளானைச் சருக்கம், பா. 53.
138. வைத்தியநாததேசிகர், **இலக்கண விளக்கம்**, நூ. 655.
139. உமாபதிசிவம், "பாயிரம்", கோயிற்., பா. 18,
140. உமாபதிசிவம், "இரணிய", கோயிற்., பா. 121.
141. மேலது, பா. 122.
142. மேலது, பா. 124.
143. நேர்காணல்; எம். எஸ். கோவிந்தசாமி, சிதம்பரம், 19-6-90
144. உமாபதிசிவம், "திருவிழா", கோயிற்., பா. 13.
145. மேலது, பா. 42.
146. உமாபதிசிவம், சேக்கிழார். புராணம், பா. 85,
147. தண்டி., நூ. 76.
148. உமாபதிசிவம், "பாயிரம்", கோயிற்., பா. 6.
149. மேலது, பா. 9.
150. உமாபதிசிவம், "நடராச", கோயிற்., பா. 60.

முடிவுரை

இலக்கிய வரலாற்றில் சமய இலக்கியங்கள் ஒரு குறிப்பிடத் தக்க இடத்தைப் பெற்றுள்ளன. சமய இலக்கியங்கள் இறை வனுடைய புகழ் பாடுவன; தலங்களின் சிறப்பைப் பேசுவன; இறைவனுடைய இயல்பைக் கூறுவன எனப்பல்வேறு வகைப்படும். இவையனைத்தும் முன்னோர்கள் கண்ட அரும்பெரும் கருத்துக் களைத் தம்பால் பொதிந்து கொண்டுள்ளன. எனவே சமய இலக்கியங்கள் மற்றைய இலக்கியங்களைப் போலவே ஆராய் வதற்கு உரியவை.

தலபுராணங்களில் உமாபதிசிவனாரின் கோயிற்புராணமே முதலில் தோன்றியதாகும். திருமுறைகள் தொகுக்கப்படுவதற்குக் காரணமாகிய பெரியவர்களின் வரலாற்றை உணர்த்துகின்ற நூலாகத் திருமுறை கண்ட புராணம் காணப்படுகின்றது. சேக்கிழாரின் பெரியபுராணத்தை வரலாற்று முறையோடு கூறு கின்ற நூல் சேக்கிழார் புராணமாகும். தேவாரமூவர் பாடிய தலங்களையும், தலநாயகர்களையும் முறைப்படிப் பகுத்துக் கூறுகின்ற நூல்களாகத் திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை, ஸ்ரீ சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா ஆகிய நூல்கள் விளங்குகின்றன. திருவருட்பயன் என்னும் சித்தாந்த நூலுக்கு இலக்கியமாக (சித்தாந்த நூலுக்கு இலக்கியமாகத்) தொகுக்கப் பட்ட நூல் தேவார அருள்முறைத் திரட்டாகும். சேக்கிழாரின் பெரியபுராண நூலுக்குப் பிழிவாக இயற்றப்பெற்ற நூல் திருத் தொண்டர் புராணசாரமாகும். இவ்வாறு பல்வேறு நூல்களை உமாபதிசிவனார் இயற்றிச் சைவ இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளார். அத்தகை ஒருவரின் நூல்கள் ஆராயத்தக்கவை என்னும் நோக்கோடு, "கொற்றவன் குடி உமாபதிசிவாசாரியாரின் இலக்கிய நூல்கள் ஓர் ஆய்வு" என்னும் தலைப்பில் ஆய்வு நிகழ்த்தப் பெற்றுள்ளது.

இவ்வாய்வுத்தலைப்பு உமாபதிசிவாசாரியார் வாழ்வும் வாக்கும், உமாபதிசிவமும் தில்லைப் பெருங்கோயிலும், இலக்கியங் களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள், திருத்தொண்டர் புராண

சாரம் – ஒப்பீடு, அணிநலன் என ஐந்து பகுப்புக்களாகப் பகுத்து ஆராயப்பட்டுள்ளது.

உமாபதிசிவனார் தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவர், வழி வழியாகக் கூத்தப்பெருமானை வழிபாடு செய்து வந்தவர். சந்தான குரவர் நால்வரில் நான்காமவராகத் திகழ்ந்தவர். வழிவழி நூல்களாகப் பாடம் சொல்லப்பெற்றுவந்த சிவஞான போதம் முதலிய நூல்களைக் கசடறக் கற்றுத் தேர்ந்தவர். தம்முடைய ஆசிரியராகிய மறைஞான சம்பந்தரிடத்தில் அளவிலா அன்பு பூண்டவர். சித்தாந்த நூல்கள் எட்டினைச் செய்தவர். இவர் எழுதிய வடமொழி நூல்களும் பலவாகும். தமிழ் இலக்கிய நூல்களில் சமயம் சார்ந்த நூல்கள் பலவற்றை இவர் இயற்றி யுள்ளார். கொற்றவன்குடி என்னும் இடத்தில் அமர்ந்து தவம் செய்யுங்கால் சில அற்புத நிகழ்ச்சிகளையும் நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உமாபதிசிவனார் முறையாக வழிபாடு செய்யும் பேற்றினைப் பெற்றவர். தாம் பிறந்த மரபிற்கு ஏற்ப, கோயில்களில் நிகழ்ந்த அற்புதங்களைச் செவிவழியாகவும், மரபுவழியாகவும் கேட்டறிந்தவர். புலிக்கால் முனிவர் எனப் பெயரிய வியாக்ரபாதர் அக்காலத்தில் இறைவனை வழிபடுவதற்கு அடைந்த துன்பங்களை இவர் தம் நூலில் சுட்டியுள்ளார். இருளில் நடந்து செல்வதற்குப் புலிக்காலையும், விடியற்காலையில் பூ எடுப்பதற்கு விரல்களில் கண்களையும் அவர் பெற்றார் என்னும் செய்தி புராணச்செய்தி யாயினும் கோயிற்புராணத்தில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்முனிவர் வழிபட்ட தலமாகிய புலீச்சரமென்பது இப்பொழுது இளமையாக்கினார்கோயில் என வழங்குகின்றது.

பதஞ்சலியார் சிவ வழிபாடு செய்வதற்கென்று தில்லையைத் தேர்ந்து கொண்டு வந்தவர். அந்நாளில் திருமூலநாதர் ஒரு தாமரைக் குளக்கரையில் அமர்ந்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. அத்திருமூலநாதரையும், தம்மால் தோற்றுவிக்கப்பட்ட அனந்தீஸ்வரன் கோவிலையும் பதஞ்சலியார் வழிபாடு செய்தார்.

சிங்கவர்மன் என்பவன் சிங்கநிறத்தோடு விகாரத்தோற்ற மூடையவனாக இருந்தான். அதனால் தம்பியரிடம் அரசாட்சியை ஒப்படைத்துவிட்டு ஊர் ஊராக இறைவனை வழிபாடு செய்து வந்தான். ஒருவேடன் வாயிலாக அவனுக்குத் தில்லையம்பதி காட்டப்பட்டது. வியாக்ரபாதர் துணையோடு சிவகங்கைக் குளத்தில் மூழ்கி இறைவனை வழிபட்டான். அதனால் அவனது சிங்கநிறம் மாறிப் பொன்நிறமாக ஆகியது. அதனால் இரணியவர்மன் என்னும் பெயர் பெற்றான். அவனால் இக் கோயிலுக்குப் பல அறக்கட்டளைகள் நிறுவப்பட்டன.

இராசராசன் சிவன்கோயில்களில் ஓதப்பெற்ற திருப்பதிகங் களைக் கேட்டு அவை முழுமையையும் தொகுக்க வேண்டும் எனக் கருதினான். அதனைத் தொகுக்கச் செய்வதற்கு ஏற்ற ஒருவராக நம்பியாண்டார் நம்பிகளைத் தேர்ந்தெடுத்தான். நம்பியாண்டார் நம்பிகள் திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாரை வழிபடும் மரபில் வந்தவர். மூவருடைய தேவாரத் திருப்பதிகங்களும் தில்லைப் பெருங்கோயிலில் காப்பிடப் பட்டிருப்பதாக அறிந்தார். மன்னனுடைய உதவியோடு அவற்றை எடுத்துத் திருமுறைகளாகத் தொகுத்தமைத்தார் என்னும் செய்தி திருமுறைகண்ட புராணத்தால் அறியப்படுகின்றது.

அருண்மொழித்தேவர் என்னும் பெயருடைய சேக்கிழார், சோழன் அநபாயனிடத்தில் முதலமைச்சுப்பூண்டு பணி யாற்றினார். சோழனுக்கு நாயன்மார்களுடைய வரலாற்றைச் சேக்கிழார் அவ்வப்போது கூறிவந்தார். அவ்வரலாறுகளில் ஈடுபட்ட அநபாயன் அவற்றை நூலாகச் செய்து தருமாறு வேண்டினான். தில்லையம்பதியில் அமர்ந்து சேக்கிழார் திருத் தொண்டர்புராணத்தை விரிவாகச் செய்தார். ஓராண்டு காலம் மன்னனும் உடனிருக்கச் செய்யப்பெற்ற அப்புராணம், ஆயிரங் கால்மண்டபத்தில் அரங்கேற்றப்பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

உலகம் தோன்றுவதற்கு இறைவன் நிமித்தகாரணனாக அமைந்து இச்சை, ஞான சக்திகளைத் துணைக் காரணமாகக் கொள்ளுகின்றான்.

அறிவு வடிவாய் இருக்கின்ற இறைவன் தத்துவ உலகத்தைத் தோற்றுவிப்பதற்குப் படிப்படியே மேற்கொள்ளப்படுகின்ற நிலைகளைச் சிவதத்துவம் என்பர்.

மண் முதலாகிய இருபத்துநான்கு தத்துவங்கள் ஆன்மதத்துவமென்றும், புவன தத்துவமென்றும் கூறப்படும்.

கேவலநிலையிலுள்ள ஆன்மாக்கள் உய்தி பெறுவதற்காக இறைவன் தனு, கரண, புவன, போகங்களைத் தந்து உதவுகின்றான்.

ஆன்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும். மூவகை ஆன்மாக்களுக்கும் மூன்று வகையான நிலைகளில் இறைவன் அருள் செய்கிறான் என்பது சித்தாந்தநூல் துணிபாகும்.

